
# 1995 அவ்யக்த முரளி



<u>பொருளடக்கம் - 19</u>

**09.01.1995** நிச்சய புத்தியின் அடையாளங்கள் -நிச்சயமான வெற்றி மற்றும் எப்பொழுதும் கவலையற்ற நிலையின் அனுபவம்!

**18.01.1995-1** ஞானசரோவர் -திறப்பு விழாவின் மங்களமான நேரத்தில்! **(11-AM).**

**18.01.1995-2** பிரம்மாபாபாவின் அடிமேல் அடி வைத்து (ஆக்ஞாகாரி) கட்டளைப்படி நடப்பவர் ஆகுங்கள்!

**19.01.1995** பிரம்மாபாபாவிற்குச் சமமாக சர்வஸ்வ தியாகியாக (அனைத்தையும் தியாகம் செய்தவராக) ஆகுங்கள்!

**26.01.1995** அன்பின் அடையாளமாக தன்னை மாற்றிக் கொள்வதில் தன்னை சக்திசாலியானவராக ஆக்குங்கள்!

**26.02.1995** சங்கமயுகம் உற்சவங்களின் யுகம்; உற்சவம் கொண்டாடுவது என்றால் அழியாத ஊக்கம் உற்சாகத்தில் இருப்பது! (சிவ ஜெயந்தி)

**07.03.1995** பிராமணன் என்றால் தர்ம பலம் மற்றும் சுயராஜ்ய பலத்தின் அதிகாரி ஆத்மா என்பதாகும்!

**16.03.1995** அனைத்து பிராப்திகள் நிறைந்த ஆத்மாவின் அடையாளம் –திருப்தியான மற்றும் மகிழ்ச்சியான நிலை!

**25.03.1995** பிராமண வாழ்க்கையில் அனைத்தையும் விட உயர்ந்த பொக்கிஷம் -எண்ணத்தின் பொக்கிஷம்!

**31.03.1995** கிரீடம், ஆசனம் மற்றும் திலகத்தின் அடையாளத்தை எப்பொழுதும் உடன் வைத்துக் கொள்ளுங்கள்!

**06.04.1995** தூய்மையின் ஆன்மீக தனித்தன்மையின் **(Personality)** நினைவு சொரூபம் மூலம் மாயாவை வென்றவர் ஆகுக!

**07.11.1995** பாப்தாதாவின் விசேஷ விருப்பம் மற்றும் ஞானத்தின் அஸ்திவாரம் தூய்மை ஆகும்!

**16.11.1995-1** வைர விழா ஆண்டை பற்றுதலில் இருந்து விடுபட்ட ஆண்டாகக் கொண்டாடுங்கள் என்பது தான் பாப்தாதாவின் விருப்பம்!

**16.11.1995-2** கனவளவில் கூட பற்றுதலிலிருந்து விடுபட்டவர் ஆகுங்கள்!

**25.11.1995** மற்றவர்கள் கூறும் வழி, மற்றவர்களின் சிந்தனை மற்றும் மற்றவர்களைப் பார்ப்பதில் இருந்து விடுபட்டவர் ஆகுங்கள், மேலும் மற்றவர்களுக்கு உபகாரம் செய்யுங்கள்!

**04.12.1995** யதார்த்த நிச்சயம் எனும் அஸ்திவாரத்தின் மூலம் சம்பூர்ண தூய்மையை தாரணை செய்யுங்கள்!

**13.12.1995** வீணான பேச்சு, தொந்தரவு செய்யும் பேச்சிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு பேச்சில் சிக்கனத்தை கடைப்பிடியுங்கள்!

**22.12.1995** அனைத்து பிராப்திகள் நிரம்பிய வாழ்க்கையின் விசேஷம் -மகிழ்ச்சியற்ற நிலையிலிருந்து விடுபட்டு மகிழ்ச்சி நிறைந்திருப்பது!

**31.12.1995** வைர விழா ஆண்டில் பரிஷ்தாவாக பாப்தாதாவின் (பாதுகாப்பு) குடை நிழல் மற்றும் அன்பின் அனுபவத்தைச் செய்யுங்கள்!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## 09.01.1995 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நிச்சய புத்தியின் அடையாளங்கள் -நிச்சயமான வெற்றி மற்றும் எப்பொழுதும் கவலையற்ற நிலையின் அனுபவம்!

இன்று அனைத்து குழந்தைகளின் பாதுகாவலன் மற்றும் ஆசிரியர் பாப்தாதா தன்னுடைய அனைத்து பிராமண குழந்தைகளின் அஸ்திவாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். தற்சமயத்து உயர்ந்த வாழ்க்கையின் அஸ்திவாரம் நிச்சயம் என்பதை அனைவரும் தெரிந்திருக்கிறீர்கள். எவ்வளவு நிச்சயம் என்ற அஸ்திவாரம் உறுதியாக இருக்கிறதோ அவ்வளவே தொடக்கத்தில் இருந்து இது வரை சகஜயோகி, நிர்மல சுபாவம், சுபபாவனையின் உள்உணர்வு மற்றும் ஆத்மீகப் பார்வை எப்பொழுதும் இயற்கையான ரூபத்தில் அனுபவம் ஆகிறது. ஒவ்வொரு நேரமும் நடத்தை மற்றும் முகம் மூலமாக மேற்கூறியவைகளின் பொலிவு அனுபவம் ஆகிறது ஏனென்றால் பிராமண வாழ்க்கையில் 'நான் இதுவாக இருக்கிறேன் மற்றும் தந்தை இதுவாக இருக்கிறார் என்று தெரிந்து கொள்வது மட்டும் இல்லை, ஆனால் தெரிந்து கொள்வதின் அர்த்தம் என்ன தெரிந்திருக்கிறீர்களோ அதை ஏற்றுக் கொள்வது மற்றும் அதன்படி நடப்பது,

பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார் எந்தக் குழந்தை தன்னை பிராமணன் என்று கூறிக் கொள்கிறாரோ அவர்கள் அனைவரும் நான் நிச்சய புத்தி உடையவன் என்று உடனடியாகக் கூறுகிறார்கள். பாப்தாதா அனைத்து நிச்சய புத்தியுடைய குழந்தைகளிடம் கேட்கிறார், எப்பொழுது நீங்கள் அனைவரும் நாங்கள் நிச்சய புத்தியுடையவர்கள். வெற்றி அடைபவர்கள் என்று கூறுகிறீர்களோ. பின்பு சில நேரம் தோல்வி ஏன் ஏற்படுகிறது? எப்பொழுது சில நேரங்களில் கொஞ்சம் குழப்பம் ஏற்படுகிறது என்றால் அந்த நேரம் நிச்சயம் குறைந்து விடுகிறதா என்ன? எப்பொழுதுமே நிச்சய புத்தியுடையவர்களாக

இருக்கிறீர்கள் என்றால் எப்பொழுதுமே வெற்றி அடைபவர்களாக இருக்கிறீர்களா? மற்றும் இடையிடையே குழப்பம் ஏன் ஏற்படுகிறது? நிச்சயத்தின் அஸ்திவாரம் நாலா புறத்திலிருந்தும் உறுதியாக இருக்கிறதா அல்லது நான்கு புறங்களுக்கு பதிலாக சில நேரம் ஒன்று அல்லது சில நேரம் இரண்டு பக்கங்கள் பலஹீனமாகி விடுகின்றனவா? ஏதாவது ஒரு பொருளை உறுதியாக்கப்படுகிறது என்றால் நாலாபுறத் திலிருந்தும் இறுக்குவார்கள் இல்லையா. ஒருவேளை ஒரு பக்கம் கூட கொஞ்சமாவது தொய்வாக இருக்கிறது என்றால் ஆடும் இல்லையா. அப்படி நான்கு விதமான நிச்சயம் அதாவது தந்தை மேல், தன் மேல், நாடகத்தின் மேல் மற்றும் பிராமண பரிவாரத்தின் மேல் நிச்சயம். இந்த நான்கு பக்கத்தின் நிச்சயத்தை தெரிந்து கொள்வது மட்டுமின்றி ஏற்று நடந்து கொள்ளவும் வேண்டும். ஒருவேளை தெரிந்திருக்கிறீர்கள் ஆனால் நடப்பதில்லை என்றால் வெற்றி மேலே கீழே சென்று விடும். எந்த நேரம் வெற்றி குழப்பத்தில் வருகிறது என்றால் நான்கு புறத்திலிருந்தும் எந்தப் பக்கம் குழப்பத்திலிருக்கிறது என்று சோதிக்க வேண்டும். அனேக குழந்தைகளுக்கு தந்தையின் முழுமையான நிச்சயம் இருக்கிறது. இதில் தேர்ச்சி பெற்று விட்டார்கள் என்று பாப்தாதா பார்க்கிறார், ஆனால் தன் மேல் என்ன நிச்சயம் வேண்டுமோ அதில் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. தெரிந்தும் இருக்கிறார்கள், கூறவும் செய்கிறார்கள் நான் இதுவாக இருக்கிறேன், நான் இதுவாக இருக்கிறேன், ஆனால் என்ன தெரிந்திருக்கிறாரோ, ஏற்றுக் கொண்டும் இருக்கிறாரோ அந்த சொரூபத்தில், நடத்தையில், காரியத்தில் இருக்கட்டும் இதில் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. ஒரு பக்கம் நான் மாஸ்டர் சர்வ சக்திவான், உலகத்திற்கே நன்மை செய்பவன் என்று நினைக்கிறார்கள் இன்னொரு பக்கம் மிகச் சிறிய சூழ்நிலையின் மேல் வெற்றி அடைய முடியாமல் இருக்கிறார்கள். மாஸ்டர் சர்வ சக்திவானாகவோ இருக்கிறேன் ஆனால் இந்த சூழ்நிலை மிகப் பெரியது இந்த விஷயமே அப்படிப்பட்டது. அப்படியானால் தெரிந்து மட்டும் கொள்வது ஆனால் ஏற்றுக் கொண்டு நடப்பதில்லை என்பது நிச்சயமா என்ன? தான் உலகத்திற்கு நன்மை செய்பவன் என்று கூறுகிறார்கள் மற்றும் நினைக்கிறார்கள் ஆனால் உலகத்தையோ விட்டு விடுங்கள், தனக்கு நன்மை செய்வதில் கூட பலஹீனமானவர்களாக ஆகுகிறார்கள். ஒருவேளை தன்னை மாற்றம் செய்து தனக்கு நன்மை செய்பவராக ஆக முடியாதா என்று அந்த நேரம் அவர்களிடம் கேட்டால்

உலகத்திற்கு நன்மை செய்பவராகவோ இருக்கிறோம் ஆனால் தனக்கு நன்மை செய்வது மிகவும் கடினம் என்று பதில் கொடுக்கிறார்கள். இந்த விஷயத்தை மாற்றுவது கடினம் என்று கூறினால் உலகத்திற்கு நன்மை செய்பவர் என்று கூறுவோமா அல்லது பலஹீனமானவர் என்று கூறுவோமா? எனவே தன் மேலேயும் சூழ்நிலைக்கு ஏற்றபடி நேரத்திற்கு ஏற்றபடி. உறவு நெருக்கத்திற்கு ஏற்றபடி நிச்சயம் சொரூபத்தில் வரட்டும், அந்த மாதிரி நிச்சப்பத்தி உடையவருக்கு வெற்றி நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. எப்படி அனைவருக்கும் நான் உயர்ந்த ஆத்மா ஆவேன் என்ற உறுதியான நிச்சயம் இருக்கிறது, இதற்காக யாராவது உலகின் விஞ்ஞானி கூட நீங்கள் ஆத்மா இல்லை உடல் என்று உங்களை அசைப்பதற்கு முயற்சி செய்தாலும் ஏற்றுக் கொள்ளமாட்டீர்கள். இன்னும் கூடவே அவரை ஏற்றுக் கொள்ள வைப்பீர்கள். எப்படி இது உறுதியாக இருக்கிறது, நான் உடல் இல்லை, நான் ஆத்மா ஆவேன் மேலும் எப்படிப்பட்ட ஆத்மா இதுவும் உறுதியாக இருக்கிறது. அதே போல் நிச்சய புத்தி உடையவருக்கு வெற்றியும் அவ்வளவு நிச்சயமானது. தோல்வி அரம்பவமானது மற்றும் வெற்றி நிச்சய மானது. மேலும் விஷயங்கள் கடைசிவரை வரத்தான் செய்யும் என்ற இதுவும் நிச்சயமானது ஆனால் அதில் வெற்றி அடைவதற்காக ஒரே நேரத்தில் நான்கு பக்கங்களின் நிச்சயம் உறுதியாகத் தேவையாக இருக்கிறது. மூன்றில் நிச்சயம் இருக்கிறது மற்றும் ஒன்றில் இல்லை என்றால் கூட வெற்றி நிச்சயமானது இல்லை ஆனால் கடும் உழைப்பிற்கு பின்பு வெற்றி ஏற்படும். நிச்சயமாக வெற்றி அடைபவர்களுக்கு கடின உழைப்பு செய்ய வேண்டியது இருக்காது. அனேக தடவை அனேகர்கள் கூறுகிறார்கள் பாப்தாதாவோ மிகவும் நல்லவர் அவர் தந்தை மற்றும் நாம் குழந்தைகள் என்பதோ உறுதியாக இருக்கிறது. எங்களுக்கு தந்தையிடம் மட்டும் தான் சம்மந்தம், ஆனால் தெய்வீக பரிவாரத்தில் பிரச்சனை ஏற்படுகிறது அதில் நிச்சயம் மேலே கீழே சென்று விடுகிறது. எனவே பரிவாரத்தை விட்டு விடுகிறார்கள், லேசாக்கி விடுகிறார்கள். அப்படி ஒரு பக்கம் தொய்வாகி விட்டது இல்லையா. பரிவாரம் இல்லாமல் மாலையில் எப்படி வருவீர்கள். மாலை எப்பொழுது உருவாகிறது? எப்பொழுது மணி மணியோடு சேருகிறதோ மற்றும் ஒரே நூலில் உருளுகிறதோ அப்பொழுது தான். ஒருவேளை வேறு வேறு கயிறில் வேறு வேறு மணி இருக்கிறது என்றால் அதை மாலை என்று கூற மாட்டார்கள். அப்படி பரிவாரம்

மாலை ஆகும். ஒருவேளை பரிவாரத்தை விட்டு வீட்டு மூன்று நிச்சயம் உறுதியாக இருக்கிறது என்றாலும் வெற்றி நிச்சயம் இல்லை. பரிவாரத்தின் பிரச்சனையிலிருந்து ஒதுங்கி விட்டீர்கள் என்றே எடுத்துக் கொள்வோம். தந்தையின் ஆதரவு வேண்டும். பரிவாரத்திலிருந்து ஒதுங்கி விட வேண்டும் என்றால் நடக்குமா? காரியமோ தந்தையோடு இருக்கிறதா அல்லது சகோதரர்களுடன் இருக்கிறதா? தந்தையோடு தான் நமக்கு காரியம், ஆஸ்தி தந்தையிடமிருந்து கிடைக்கிறது. சகோதரன் -சகோதரியிடமிருந்து என்ன கிடைக்கிறது ஆனால் பிராமண வாழ்க்கையில் இது தான் வித்தியாசமானது. தர்மம் மற்றும் இராஜ்யம் இரண்டுமே ஸ்தாபனை ஆகிறது, தர்மம் மட்டும் ஸ்தாபனை ஆகவில்லை. மற்ற தர்மத்து தந்தைகள் தர்மத்தை மட்டும் ஸ்தாபனை செய்கிறார்கள். தந்தையினுடைய விசேஷமே தர்மம் மற்றும் இராஜ்யத்தை ஸ்தாபனை செய்கிறார். அப்படியானால் இராஜ்யத்தில் ஒரு இராஜா என்ன செய்வர். மிக நல்ல ஆசனமும் இருக்கிறது. கிரீடமும் இருக்கிறது என்றாலும் என்ன செய்வார்? இராஜ்யமும் தேவையாக இருக்கிறது இல்லையா. அப்படி இராஜ்யம் என்றால் பிராமண பரிவாரத்திலிருந்து இராஜ பரிவாரம். எனவே பிராமண பரிவாரத்தில் ஒவ்வொரு சூழ்நிலையிலும் நிச்சய புத்தி உடையவராக இருந்தால் தான் இராஜ்ய பாக்கியத்திலும் கூட எப்பொழுதும் இராஜ்ய அதிகாரி ஆவார். எனவே பரிவாரத்தோடு ஒத்துப் போவதில்லை அது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை. தந்தையோபோ மிக நன்றாக ஒத்துப் போகிறது தானே என்று அப்படி நினைக்காதீர்கள். ஒருவேளை நாடகம் மறந்து விடுகிறது என்றாலும் தந்தையோ நினைவிருக்கிறார் இல்லையா ஆனால் எந்தவொரு பலஹீனமும் ஒரே நேரத்தில் ஏற்படுகிறது. சுயநிலை அதாவது சுயநிச்சயம் கூட ஒருவேளை பலஹீனமாகிறது என்றால் வெற்றி நிச்சயம் என்பதற்கு பதிலாக குழப்பத்தில் வந்து விடுகிறீர்கள். அப்படி பாப்தாதா நிச்சயத்தின் அஸ்திவாரத்தை சோதனை செய்து கொண்டிருந்தார். என்ன பார்த்தார்?

நான்கு விதமான நிச்சயம் ஒரே சமயத்தில் சேர்ந்திருப்பதில்லை, சில நேரம் இருக்கிறது. சில நேரம் ஆடுகிறது. எனவே எப்பொழுதும் வெற்றியின் அனுபவத்தை செய்ய முடிவதில்லை. பின்பு இது தான் நடந்திருக்க வேண்டும் ஆனால் ஏன் நடக்கவில்லை என்று

தெரியவில்லை? என்று யோசிக்கிறார்கள். மிகவும் அதிகமாக உழைக்கவோ செய்திருக்கிறார்கள், மிக நன்றாகவும் யோசித்திருக்கிறார்கள் ஆனால் யோசிப்பது மற்றும் நடப்பது இதில் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. இதனுடைய அர்த்தமே நிச்சயத்தின் நாலாபக்கமும் உறுதியில்லை என்பதாகும். மேலும் சிரிப்பிற்கான விஷயமோ இது தான் -டிராமாபடி நடந்திருக்கிறது. டிராமாபடி நடந்திருக்கிறது என்றும் கூறிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் மிக நன்றாகவும் ஆடிக் கொண்டும் இருக்கிறார்கள். சில நேரம் எண்ணத்தில் ஆடுகிறார்கள். சில நேரம் வார்த்தையளவில் கூட தடுமாறுகிறார்கள், சில நேரம் காரியம் வரை கூட வந்து விடுகிறது. அந்த நேரம் என்ன அனுபவம் ஆவதாக இருக்கும், காட்சியை எதிரில் கொண்டு வாருங்கள். நாடகம், நாடகம் என்றும் கூறிக் கொண்டிருக்கிறார்கள் மேலும் மேலே கீழே ஆடிக் கொண்டும் இருக்கிறார்கள் ஆனால் நிச்சயபத்தியின் அடையாளம் நிச்சயம் வெற்றி அடைபவர். ஒருவேளை விதி சரியாக இருக்கிறது என்றால் வெற்றி கிடைக்கவில்லை என்பது இருக்கவே முடியாது. எனவே எப்பொழுதாவது ஏதாவதொரு காரியத்தில் வெற்றி கிடைக்கவில்லை என்றால் நிச்சயத்தில் குறைவு என்று புரிந்து கொள்ளுங்கள். ஒரு பக்கம் இன்றி நாலாபக்கமும் சோதனை செய்யுங்கள்.

இன்னொரு விஷயம், எப்படி நிச்சய புத்தியின் அடையாளமாக நிச்சயம் வெற்றி இருக்கிறது அதே போல் கவலையற்றும் இருப்பார்கள். எந்தவொரு வீணான சிந்தனையும் வரவே முடியாது. சுபசிந்தனையைத் தவிர வீணானவையின் பெயர் அடையாளம் இருக்காது. வீணானது வந்தது, விரட்டினோம் அப்படியும் இல்லை. நிச்சய புத்தியின் எதிரில் வீணானவை வர முடியாது. ஏனென்றால் ஏன், என்ன மற்றும் எப்படி இந்த வீணானவை வருகிறது. எப்பொழுது நாடகத்தின் இரகசியத்தை தெரிந்திருக்கிறீர்கள், முதல் இடை கடையைத் தெரிந்தவர்களாக இருக்கிறீர்கள் என்றால் யார் நாடகத்தின் முதல், இடை, கடையைத் தெரிந்தவராக இருக்கிறாரோ அவர் மிகச் சிறிய விஷயத்தில் முதல், இடை, கடையைத் தெரிந்து கொள்ள முடியாதா என்ன? தெரியாமல் இருப்பதற்கான காரணம் ஏன், என்ன, எப்படி, அப்படி இந்த வீணான எண்ணம் ஓடுகிறது. ஒருவேளை நாடகத்தின் மேல் உறுதியான நிச்சயம் இருக்கிறது, ஞானம் நிறைந்தவராகவும் இருக்கிறார்.

சக்திசாலியாகவும் இருக்கிறார் என்றால் வீணான எண்ணம் அசைப்பதற்கான தைரியமும் வைக்க முடியாது ஆனால் எப்பொழுது ஆடுகிறார்களோ என்ன ஆகி விட்டது என்று தெரியவில்லையே என்று யோசிக்கிறார்கள். எனவே பாப்தாதாவும் சிரித்துக் கொள்கிறார், நாடகத்தின் முதல், இடை, கடையைத் தெரிந்தாகி விட்டது. தன்னுடைய 84-ஜென்மத்தை தெரிந்தாகி விட்டது மற்றும் ஒரு விஷயத்தைத் தெரிந்திருக்கவில்லை. மிகுந்த புத்திசாலி தான் நீங்கள். அவ்வப்பொழுது புத்திசாலித்தனத்தை காண்பிக்கிறீர்கள் இல்லையா. கல்ப விருட்சத்தின் அனைத்து இலைகளையும் தெரிந்திருக்கிறீர்களா அல்லது இல்லையா. அனைவருமே மரத்தின் அஸ்திவாரத்தில் அமர்ந்திருக்கிறீர்களா? அல்லது 7,8-பேர் தான் அமர்ந்திருக்கிறீர்களா? அப்படியானால் வேரில் அமர்ந்திருக்கக்கூடியவர்கள் மரத்தைத் தெரிந்திருக்கிறீர்களா? ஒவ்வொரு இலையையும் தெரிந்திருக்கிறீர்கள் மற்றும் இது தெரியவில்லை என்றால் அது எப்படி? எனவே நிச்சபத்தின் அடையாளங்கள் கவலையற்ற நிலை. இதை அனுபவம் செய்யுங்கள். நடக்கும், நடக்காது, என்ன நடக்கும், செய்து கொண்டு தான் இருக்கிறோம், என்ன நடக்கிறது என்று பார்க்கலாம் -இதை கவலையற்ற நிலை என்று கூற முடியாது. பின்பு தந்தையின் எதிரிலும் நீங்கள் உதவி செய்பவர் தான் இல்லையா, நீங்கள் பாதுகாப்பவர் தான் இல்லையா, நீங்கள் இது தான் இல்லையா, நீங்கள் இது தான் இல்லையா என்று முறையீடு செய்கிறார்கள். முறையீடு செய்வது என்றால் அதிகாரத்தை இழப்பது. அதிகாரி இதை செய்து விடுங்களேன், இது நடந்து விடட்டுமே என்று முறையீடு செய்வதில்லை. அப்படி நிச்சய புத்தி என்றால் கவலையற்ற நிலை. இந்த நடைமுறை அடையாளங்களைத் தன் மேலேயே சோதனை செய்யுங்கள். நாமோ நிச்சய புத்தி உடையவரே தான் என்று அந்த மாதிரி அலட்சியத்திலேயே இருந்து விடாதீர்கள். எந்த நிச்சயம் பலஹீனமாக இருக்கிறது என்று அதை சோதனை செய்யுங்கள் மற்றும் மாற்றம் செய்யுங்கள். சோதனை மட்டும் செய்யாதீர்கள். சோதனையாளரின் கூடவே உருவாக்குபவராகவும் ஆக வேண்டும் என்று பாப்தாதா கூறியிருக்கிறார். சோதனையாளர் மட்டுமாக இருக்க வேண்டாம். சோதனை செய்வதின் அர்த்தமே நொடியில் மாறுவது ஆனால் சோதனை செய்கிறீர்கள் மற்றும் மாற்றம் செய்வதில்லை என்றால் வெகுகாலமாக தன்னுள் மனமுடைந்து போவதின் சம்ஸ்காரம்

உறுதியாகிக் கொண்டே இருக்கும். மேலும் எது வெகுகாலத்து சம்ஸ்காரமாக இருக்கிறதோ அது கடைசியில் அவசியம் எதிர்ப்பு செய்து கொண்டே இருக்கும். யாராவது நான் கடைசி நேரத்தில் தந்தையைத் தவிர வேறு எதையுமே நினைக்க மாட்டேன் என்று நினைக்கிறார்கள் என்றால் அது நடக்க முடியாது. வெகு காலத்துப் பயிற்சி தேவையாக இருக்கிறது. இல்லையென்றால் சிவபாபா, சிவபாபா. சிவபாபா என்று ஒரு நொடி நினைப்பீர்கள் மற்றும் அடுத்த விநாடி மாயா உன்னில் சக்தி இல்லை, நீயோ பலஹீனமானவர் என்று கூறும், யுத்தம் நடந்து கொண்டே இருக்கும். ஒருவேளை கவலையற்ற நிலை இல்லை என்றால் பிராமண வாழ்க்கையின் கடைசி காலத்து லட்சியத்தை வர்ணனை செய்கிறீர்கள் இல்லையா அது எப்படி சுலபமாக ஏற்படும். மேலும் ஒருவேளை கடைசி வரை இந்த வீணான எண்ணங்கள் இருக்கிறது என்றால் அவைகளே பூதங்களின், எமதூதர்களின் ரூபத்தில் வரும். மற்றபடி எந்த எமதூதரும் வருவதில்லை. இந்த வீணான எண்ணம் தன்னுடைய பலஹீனங்கள், இவைகள் தான் எமதூதனின் ரூபத்தில் வருகின்றன, எமதூதர்கள் என்ன செய்கிறார்கள்? பயமுறுத்துகிறார்கள். மேலும் மற்றவர்களுக்காக விமானத்தில் செல்வார்கள் என்றும் கூறுவார்கள் அதாவது பறக்கும் கலையினால் கடந்து சென்று விடுவார்கள். விமானம் எதுவும் இல்லை ஆனால் பறக்கும் கலையின் அனுபவம். எனவே முதலிலேயே சோதனை செய்து மாற்றம் செய்யுங்கள். எவ்வளவு நாட்களில் செய்வீர்கள்? செய்வோம் என்று பாப்தாதாவையும் குஷிபடுத்தி விடுகிறார்கள். உறுதிமொழியும் எழுதி விடுகிறார்கள் ஆனால் அது காகிதம் வரை மட்டுமே இருக்கிறதா அல்லது வாழ்க்கை வரை இருக்கிறதா? நல்லது.

மதுபன் நிவாசிகளுக்கு சந்திப்பதற்கான வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இருப்பவர்களுக்கோ விசேஷமாக பாப்தாதாவின் அன்பு இருக்கிறது. அனைவர் மேலேயும் இருக்கிறது மதுபன்னில் ஆனால் இருந்தாலும் கொஞ்சம் விசேஷமாக மதுபன் நிவாசிகளிடம் இருக்கிறது ஏனென்றால் பொறுப்பில் இருக்கிறார்கள். பாருங்கள் இருந்தபோதிலும் நீங்கள் வருகிறீர்கள், உபசாரமோ நன்கு செய்கிறார்கள் இல்லையா. மதுபன்னில் இருப்பவர்கள் உ.பசரிப்பதில் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள் இல்லையா. விருந்தோம்பல் செய்வது தான் மஹான்தன்மை ஆகும்.

யாருக்கு விருந்தோம்பல் செய்யத் தெரியுமோ அவர் மகானாக ஆகியே விடுகிறார். உணவு விஷயத்தில் மட்டும் இல்லை ஆனால் இதயப்பூர்வமான அன்பின் விருந்தோம்பல் யார் செய்கிறாரோ அவர் அனைவரையும் விட உயர்ந்தவர். எவ்வளவு தான் பிக்னிக் செய்தாலும் ஆனால் உள்ளப்பூர்வமான அன்பு கிடைக்கவில்லை என்றால், ஒன்றுமே கிடைக்கவில்லை என்று தான் கூறுவார்கள். அப்படி மதுபன்னில் இருப்பவர்கள் உள்ளப்பூர்வமான அன்பையும் சேர்த்து விருந்தோம்பல் செய்கிறார்கள். செய்கிறீர்கள் இல்லையா? அல்லது யாராவது மேலே கீழே தவறுதலாக செய்கிறார்கள் என்றாலும் பாப்தாதா அப்படித் தான் கூறியிருக்கிறார் என்று கூறுவீர்களா? அந்த மாதிரி செய்யாதீர்கள். அன்புக் கடலின் குழந்தைகள் நீங்கள் இல்லையா. எவ்வளவு தான் அன்பு கொடுப்பது? என்றிருக்க வேண்டாம். சிறிய தண்ணீர் பாத்திரத்தின் குழந்தைகள் இல்லை, கடலின் குழந்தைகள், அளவில்லாதது.

அனைவரிடமும் அன்பின் ஸ்டாக் (கையிருப்பு) இருக்கிறது தான் இல்லையா. மாதர்களிடமும் இருக்கிறது, குமாரிகளிடமும் இருக்கிறது பாண்டவர்களிடமும் இருக்கிறது. கடலாக இருக்கிறதா அல்லது கொஞ்சர் தான் இருக்கிறதா? அப்படியானால் ஒருபொழுதும் கோபமே மாட்டீர்கள் தான் இல்லையா. எப்பொழுது அன்புக்கடலின் குழந்தைகள் என்றால் கோபம் எங்கிருந்து வந்தது? யாருடையவாவது சம்ஸ்காரத்தை தெரிந்து சான்றிதழ் கொடுக்கிறீர்கள் இல்லையா. அவர் தவறாக இருந்தாலும் நீங்களோ ஞானம் நிறைந்தவர்கள் இல்லையா. நீங்களோ இது என்ன என்று தெரிந்திருக்கிறீர்கள் ஆனால் அந்த நேரம் இவர் இந்த மாதிரி செய்தார் இல்லையா அதனால் நானும் செய்தேன் என்று கூறுகிறார்கள். தவறு மூலமாக இன்னொரு தவறு நடந்து விட்டால் அதிசயமாக என்ன செய்வீர்கள். அவர் தவறை செய்தார் மேலும் அதற்கு பதிலாக நீங்களும் தவறையே செய்தீர்கள். சிலர் கூறுகிறார்கள் ஒரு தடவை கோபப்படுவதினால் ஒன்றுமே நடப்பதில்லை, அதனால் அடிக்கடி கோடட்டட்டுக் கொண்டே இருக்கிறார். யருடைய சுபாவமே கோபத்திற்கானதோ அவர் கோடப்படாமல் வேறு என்ன தான் செய்வர் என்று தெரிந்திருக்கிறீர்கள். அவருடைய வேலை கோபப்படுவது மற்றும் உங்களுடைய வேலை அன்பு கொடுப்பதா அல்லது கோடப்படுவதா? அவர் பத்து தடவை

செய்தார் என்றால் நீங்கள் ஒரு தடவையாவது பதில் கொடுப்பீர்கள் இல்லையா? கொடுக்கவில்லை என்றால் அவர் இருபது தடவை செய்வார், பின்பு என்ன செய்வீர்கள்? அவ்வளவு சகித்துக் கொள்ளும் சக்தி இருக்கிறதா? அல்லது அவர் பத்து தடவை செய்தார். நீங்கள் பாதி தடவை செய்தீர்கள் என்றால் ஒன்றும் பாதகமில்லை, அப்படியா? அவர் பொய் பேசினார், நீங்கள் கோடப்பட்டீர்கள் என்றால் சரியாகி விட்டதா? பின்பு மிகுந்த துணிச்சலோடு கூறுகிறார்கள் -பொய் பேசினார் இல்லையா அதனால் கோபம் வந்து விட்டது ஆனால் பொய் பேசுவதோ நன்றாகப்படவில்லை மேலும் கோபப்படுவது நல்லதா? நீங்கள் அன்பின் கடலின் மாஸ்டர் அன்புக் கடல்கள். மாஸ்டர் அன்புக் கடலின் கண். நடத்தை. உள்உணர்வு, பார்வையில் கொஞ்சம் கூட வேறெந்த உணர்வும் வர முடியாது. ஒருவேளை கொஞ்சம் ஆவேசம் வந்து விட்டது என்றால் அதை அன்புக் கடல் என்று கூற முடியமா? அல்லது அது டம்ளோரா? என்ன தான் நடந்து விட்டாலும், முழு உலகமுமே உங்கள் மேல் கோபப்பட்டாலும் மாஸ்டர் அன்புக் கடல் உலகை பொருட்படுத்துவதில்லை. கவலையற்ற மகாராஜாக்கள் நீங்கள். என்ன கவலை இருந்ததோ அதையோ அடைந்தாகி விட்டது. இப்பொழுது இந்த வீணான விஷயங்களிலிருந்து கவலையற்ற மகாராஜா ஆகுங்கள். சோதனை செய்வதற்கான கவலைப்படுங்கள், மாறுவதற்கான கவலைப்படுங்கள் ஆனால் வீணானவைகளிலிருந்து கவலையற்றவர்களாக ஆகுங்கள். செய்ய முடியுமா? அல்லது குழந்தை, பேரன், பேத்தி, கொள்ளுப்பேரன், கொள்ளுப்பேத்தி. கொஞ்சம் கோபப்படுவார்கள். கொஞ்சம் தலைகீழாக நடந்து கொள்வார்கள் என்றால் அன்பிற்கு பதிலாக வேறு பாவனையும் வந்து விடுமா? அலுவலகத்திற்கு செல்வீர்கள், வியாபாரத்தில் செல்வீர்கள், வேலைக்காரன் அந்த மாதிரி கிடைப்பார், சுற்றுப்புற சூழ்நிலை அந்த மாதிரி கிடைக்கும் இருந்தாலும் வீணானவற்றிலிருந்து கவலையற்ற மகாராஜா. சக்திசாலியான நிலையில் கவலையற்றவராக ஆகாதீர்கள். சிலர் தவறாகக் கூட எடுத்துக் கொள்கிறார்கள், எங்கு மரியாதை கொடுப்பதற்கான விஷயமாக இருக்குமோ அங்கு கவலையற்ற மகாராஜா ஆகி விடுங்கள் என்று பாப்தாதா கூறியிருக்கிறார் இல்லையா? ஆனால் மரியாதைகளில் கவலையற்றவராக இருக்க வேண்டாம். உங்களுடைய பட்டமே மரியாதா புருஷோத்தமன். இந்த மரியாதைகள் தான் பிராமனா வாழ்க்கையின் ஒவ்வொரு அடி ஆகும்.

ஒருவேளை அடி மேல் அடி வைக்கவில்லை என்றால் இலக்கை எப்படி அடைவீர்கள்? பிரம்மாபாபாவின் அடி மேல் அடி எடுத்து வையுங்கள் அப்படி இந்த மரியாதைகள் தான் அடி ஆகும். ஒருவேளை இந்த அடியில் கொஞ்சமாவது மேலே கீழே சென்றீர்கள் என்றால் இலக்கை அடைவதிலிருந்து தூரமாகி விடுகிறீர்கள். பின்பு கடின உழைப்பு செய்ய வேண்டியதாக இருக்கிறது. மேலும் பாப்தாதாவிற்கு குழந்தைகள் கடின உழைப்பு செய்வது பிடிப்பதே இல்லை, சகஜயோகி என்று கூறுகிறார்கள் மாறாக கடின உழைப்பு செய்கிறார்கள் அப்படியானால் இது நன்றாக இருக்கிறதா என்ன? நல்லது

வரதானம்: மனம், சொல் மற்றும் செயலின் தூய்மையில் முழுமையான மதிப்பெண்கள் வாங்கக்கூடிய நம்பர் ஒன் கட்டளைப்படி நடப்பவர் ஆகுக!

மனதின் தூய்மை என்றால் எண்ணத்திலும் கூட தூய்மையின்மையின் சம்ஸ்காரம் வெளியாக வேண்டாம். எப்பொழுதும் ஆத்மீக சொரூபம் அதாவது சகோதரன் சகோதரனின் நினைவு இருக்கட்டும். வார்த்தையில் எப்பொழுதும் சத்தியம் மற்றும் இனிமை இருக்கட்டும், காரியத்தில் எப்பொழுதும் பணிவு திருப்தி மற்றும் சிரித்த முகம் இருக்கட்டும். இதன் ஆதாரத்தில் தான் வரிசை எண் கிடைக்கிறது, மேலும் அந்த மாதிரி சம்பூர்ண தூய்மையான கட்டளைப்படி நடக்கும் குழந்தைகளை தந்தையும் குணமகிமை செய்கிறார். அவர் தான் தன்னுடைய ஒவ்வொரு காரியத்தின் மூலம் தந்தையின் காரியத்தை நிரூபிக்கக்கூடிய நெருக்கமான இரத்தினம் ஆவார்.

சுலோகன்: உறவு, தொடர்பு மற்றும் மனநிலையில் லேசாக ஆகுங்கள். தினசரி நடவடிக்கைகளில் அல்ல!

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

## 18.01.1995-1 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## ஞானசரோவர் -திறப்பு விழாவின் மங்களமான நேரத்தில்! (11-AM).

இன்று அன்பு நிறைந்த நாளன்று அன்பின் கடல் பாப்தாதா தன்னுடைய மிக அன்பிற்குரிய. அன்பில் மூழ்கியிருக்கும் லவ்லீன் (அன்பில் ஐக்கியமாகியிருக்கும்) குழந்தைகளைச் சந்திக்க வந்திருக்கிறார். அனைவரின் அன்பு நிறைந்த பாடலை பாப்தாதா (கேட்டுக் கொண்டே இருந்தார் மற்றும் கேட்டுக் கொண்டே இருப்பார். ஒவ்வொரு குழந்தையின் அன்பை பாப்தாதா பார்த்து தந்தையும் 'ஆஹா என்னுடைய அன்பிற்குரிய குழந்தைகளே ஆஹா' என்ற பாடலை பாடுகிறார். குழந்தைகளும் இன்றைய சக்திசாலியான நாளை சேலையில் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். மேலும் அப்படி செய்து கொண்டே இருப்பார்கள். பிரம்மாபாபாவும் குழந்தைகளின் குணங்களின் மஹிமை செய்கிறார்; ஆனால் சாகார ரூபத்தை விட அவ்யக்த ரூபத்தில் இன்னும் நெருக்கம் மற்றும் துணையின் விசேஷ அனுபவத்தை செய்வித்துக் கொண்டிருக்கிறார். தந்தை உடன் இல்லை என்று அப்படி குழந்தைகளுக்கு அனுபவம் ஆகிறதா என்ன? அனுபவம் ஆகிறதா? உடன் ஜென்மம் எடுத்திருக்கிறார், உடன் சேவாதாரி துணைவனாக இருந்திருக்கிறார், மேலும் எதிர்காலத்திலும் உடன் இருப்பார், மேலும் சேர்ந்தே உடன் செல்வார், உடன் இராஜ்யம் செய்வார். சிவபாபாவிற்கு ஓய்வு கொடுப்பீர்கள்; ஆனால் உங்களுடன் பிரம்மாபாபாவும் இராஜ்யம் செய்வார். உங்களுடைய இராஜ்யம் நினைவிருக்கிறது இல்லையா. இன்று சேவாதாரியாக இருக்கிறீர்கள் மற்றும் நாளை இராஜ்ய அதிகாரியாக இருப்பீர்கள். தன்னுடைய இராஜ்யம் எதிரில் தென்படுகிறது இல்லையா. தன்னுடைய இராஜ்யத்தினுடைய அந்த சொர்க்க ஸ்தானம், சொர்க்கத்தின் தெய்வீக உடல் என்ற ஆடை அனைவரின் எதிரில் தெளிவாக இருக்கிறது இல்லையா? இப்பொழுது அதை எடுத்தே விட்டோம் என்று அந்த மாதிரி அனுபவம் ஆகிறது இல்லையா? தன்னுடைய எதிர்காலம் தெளிவாக

இருக்கிறது தான் இல்லையா? இன்று நிகழ்காலமாக இருக்கிறது மற்றும் நாளை எதிர்காலம் நிகழ்காலமாக ஆகி விடும், இந்த நிச்சயம் இருக்கிறது இல்லையா? உறுதியான நிச்சயம் இருக்கிறதா? அனைத்து மிகப் பழைய உறுதியானவர்கள் வந்திருக்கிறார்கள் இல்லையா? ஸ்தாபனையில் ஒன்று தொடக்கத்தில் உடன் இருந்த இரத்தினங்கள் அவர்கள் எதிரில் அமர்ந்திருக்கிறார்கள் மற்றும் இன்னொன்று ஸ்தாபனையின் வளர்ச்சி அடையச் செய்த உயர்ந்த இரத்தினங்கள் என்று பாப்தாதாவிற்கும் விசேஷமாக பிரம்மாபாபாவிற்கும் குஷி இருக்கிறது. அப்படி இந்த சபையில் இரண்டு விதமான இரத்தினங்களையும் பார்த்து பிரம்மாபாபா மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். மேலும் குழந்தைகளும் எவ்வளவு ஊக்கம் உற்சாகத்தில் இருக்கிறார்கள்! உடலைப் பற்றியும் பொருட்படுத்தாமல், என்ன ஏற்பாடு என்பதைப் பற்றியும் சிந்திக்காமல் மிகவும் குளிரான காற்றில் வந்து சேர்ந்து விட்டார்கள். இந்த குளிரான காற்று குழந்தைகள் உங்களுக்கு வணக்கம் சொல்வதற்காக வந்திருக்கிறது. பாருங்கள் இராஜ சிம்மாசனத்தில் எப்பொழுது அமருகிறீர்களோ பின்னால் இருந்து என்ன நடக்கிறது? சாமரம் வீசுவார்கள் இல்லையா? அதனால் அதிலிருந்து மிகவும் குளுமையான காற்று வீசும். அதைப் போல் இந்த குளுமையான காற்றும் சாமரம் வீசுவதற்காக வருகிறது? ஏனென்றால் நீங்கள் அனைவரும் கூட உயர்ந்ததிலும் உயர்ந்த விசேஷ ஆத்மாக்கள் ஆவீர்கள். போதை இருக்கிறது தான் இல்லையா? அப்படி இன்று விசேஷமாக பிரம்மாபாபா தன்னுடைய ஜென்மத்தின் போது உடனிருந்தவர்கள் மற்றும் சேவையில் உடன் இருந்தவர்கள் (சேவைக்குப் பொறுப்பான முதல் இரத்தினம் மற்றும் ஜென்மம் எடுத்த நேரத்தில் முதல் இரத்தினம்) இரண்டையும் பார்த்து பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார்.

நல்லது, இந்த ஹாலையும் இராஜ தர்பார் மாதிரி கட்டியிருக்கிறீர்கள் (ஞான சரோவரின் ஆடிட்டோரியம் ஹால்). இராஜ தர்பார் மாதிரி இருக்கிறது என்றால் கேலரியிலும் அமர்ந்திருக்கிறார்கள், கேலரியில் அமர்ந்திருப்பது கூட நன்றாக இருக்கிறது (ஹாலில் அனைத்து சகோதரர்களும் அமர்ந்திருக்கிறார்கள், மாதர்கள் அனைவரும் வெளியில் அமர்ந்திருக்கிறார்கள்) நல்லது. இன்றோ மாதர்களின் தியாகத்தின் பாக்கி அவர்களுக்கு இப்பொழுது கிடைத்தே விடும். மிக

நன்றாக தபஸ்யா செய்து கொண்டிருக்கிறார்கள், தபஸ்யாவின் பலன் கிடைத்து விடும். குளுமையான காற்று வந்து கொண்டிருக்கிறது என்றால் வெயிலும் வந்து கொண்டிருக்கிறது. நல்லது,

ஞான சரோவர் ஞான குளம் என்று சொல்வீர்களா? அல்லது அன்பின் குளம் என்று சொல்வீர்களா? ஞான சரோவரில் அன்பின் குளம் நன்றாக இருக்கிறது. இந்த ஞான சரோவர் சேவைக்கான விசேஷ லைட் ஹவுஸ் மற்றும் மைட் ஹவுஸ். இந்த இடத்திலிருந்து அனேக ஆத்மாக்களின் பாக்கிய நட்சத்திரம் ஜொலிக்கும். அனேக ஆத்மாக்கள் பிரிந்து விட்டிருந்த தன்னுடைய தந்தையோடு சந்திப்பார்கள். அனேக ஆத்மாக்களின் துக்கத்தை விலக்கக்கூடிய பூமியாகும். சரோவரில் வந்தவுடனேயே சுகத்தின் அலைகள் அடிப்பதின் அனுபவம் செய்து கொண்டே இருப்பார்கள். இந்த ஞானசரோவர் மூலமாக மூன்று விதமான மனிதர்கள், மூன்று விதமான பிராப்தியின் அதிகாரி ஆவார்கள் -சிலர் ஆஸ்தியின் அதிகாரி, சிலர் வரதானங்களின் அதிகாரி மற்றும் சிலர் ஆசீர்வாதங்களின் அதிகாரியாக மட்டும் ஆவார். அப்படி மூன்று விதமான பிராப்தி நிறைந்தது. இது உயர்ந்த சரோவர் ஆகும். சாதாரண ஆத்மாக்கள் வருவார்கள். மேலும் பரிஷ்தா வாழ்க்கையின் அனுபவம் செய்து செல்வார்கள். கூடவே அனேக பிராமண ஆத்மாக்கள் தபஸ்யாவின் சூட்சும அனுபவங்கள் மூலமாக அவ்யக்த பாலனை மற்றும் சூட்சும யோகத்தின் சகஜ அனுபவம் மற்றும் பிராப்திகளின் லாபத்தை எடுப்பார்கள். அனேக பிராமண ஆத்மாக்களின் சுயமுன்னேற்றத்திற்கான உயர்ந்த விருப்பங்கள் நிறைவேறுவதற்கான மிக உயர்ந்த சாதனமாகும். ஸ்தாளமோ பொதுவானது; ஆனால் (மனோ) நிலையின் உயர்ந்த அனுபவம் செய்விக்கக்கூடியது. விதிப்பூர்வமாக ஞானத்தை உலகத்தில் பிரத்யக்ஷம் செய்வதற்கான சாதனம் ஆகும். மேலும் அனைத்தையும்விட முதல் லாபமோ தந்தை மற்றும் குழந்தைகளின் சந்திப்பதற்கானது. பாருங்கள் இருமடங்கு எண்ணிக்கையில் சந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா. வெளியில் அமர்ந்திருந்தாலும் அல்லது எங்கே இருந்தாலும் இருமடங்கு எண்ணிக்கையோ இருக்கிறது இல்லையா. அப்படி அனைத்தையும் விட உடனடி பலனாக குழந்தைகளின் இருமடங்கு எண்ணிக்கையில் சந்திப்பு நடந்து கொண்டிருக்கிறது. புரிந்ததா? அந்த மாதிரி சரோவரில், சரோவரை உருவாக்கக்கூடியவர்களுக்கு,

சகயோகம் கொடுக்கக்கூடியவர்களுக்கு, எண்ணத்தினால் தைரியம் கொடுக்கக்கூடியவர்களுக்கு அன்பின் கரங்களால் சரோவரை முழுமையாக கட்டி முடிக்கக்கூடிய பாரத மற்றும் வெளிநாட்டு குழந்தைகளுக்கு பல கோடி மடங்கு வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள். இது தான் முதல் இடம் இதில் தான் சிறு குழந்தைகளிலிருந்து பிராமணர்களாக இருக்கும் அனைவரின் உடல், மனம், பொருளின் சகயோகம் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறது. உடலால் செங்கல்லை தூக்கவில்லை ஆனால் உடல் மூலமாக அவரவர்களின் உடன் இருப்பவர்களை துணைவர்களாக ஆக்கியிருக்கிறார்கள், ஊக்கம் கொடுத்திருக்கிறார்கள் என்றால் அந்த மாதிரி அன்பு, சகயோகம், சக்தியின் துளிகளினால் மிக அழகாக கட்டப்பட்ட சரோவர் உயர்ந்த வெற்றியின் அனுபவத்தை செய்வித்துக் கொண்டே இருக்கும். அந்த மாதிரி அனைத்து சகயோகிகளுக்கும் மூலை மூலைகளில் இருக்கும் பாரதவாசிகள் மற்றும் வெளிநாட்டினருக்கு மற்றும் விசேஷமாக யார் கடும் குளிரிலும் காற்றிலும் மழையிலும் கூட தைரியத்தை இழக்கவில்லையோ அவர்களுக்கு விசேஷமான வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்! குழந்தைகள் கொஞ்சம் கஷ்டத்தை சந்தித்தார்கள் என்று பாப்தாதாவிற்கு தெரியும்; இருந்தாலும் அன்போடு அதை எடுத்துக் கொண்டார்கள். அன்பின் காரணமாக கடினத்தை அனுபவம் செய்யவில்லை. மேலும் எங்கு தைரியம் இருக்கிறதோ அங்கு பாப்தாதாவின் பல மடங்கு உதவியோ இருக்கவே இருக்கிறது. எனவே பாப்தாதா மசாஜ் செய்து கொண்டே இருந்தார், செய்து கொண்டே இருப்பார். நல்லது. இங்கே உள்ள இன்ஜினியர்கள் கையை உயர்த்துங்கள். நேரத்தில் முடித்து வைத்ததற்காக மிகுந்த வாழ்த்துக்கள். நீங்கள் அமருவதற்கு தகுதியாக கட்டி கொடுத்து விட்டார்கள் இல்லையா? தந்தையும் வந்து விட்டார் இல்லையா? உறுதிமொழியே இதுவாகத்தான் இருந்தது, நீங்கள் அனைவரும் கூட இவர்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கிறீர்கள் தான் இல்லையா? யார் இந்த ஹாலை அலங்கரித்தாரோ அவர் எங்கே? இது முன்னியின் பார்ட்டி. பாருங்கள், அன்பின் சரோவர் இல்லையா அதனால் கல்கத்தாவிலிருந்து இங்கு மலர் வந்து விட்டது (கல்கத்தாவிலிருந்து மிக அழகிய பல வண்ணங்களில் மலர்கள் வந்தன) அதனால் முழு மேடையுமே அலங்கரிக்கப்பட்டிருக்கிறது) நல்லது. உங்கள்

அனைவருக்கும் கூட இங்கு வந்து சேர்ந்ததற்கான வாழ்த்துக்கள். மேலும் மாதர்களுக்கு பல கோடி மடங்கு வாழ்த்துக்கள்!

(ஹாலில் ஒலி அமைப்பு செய்திருந்த ஜால் மிஸ்திரியுடன்) பாருங்கள் ஒருவேளை இவருக்கு தைரியம் இல்லாமல் இருந்திருந்தால் நீங்கள் முரளி கேட்டிருக்க முடியாது. அனைவரும் முரளிக்குப் பின்னால் பைத்தியமானவர்கள் தான் இல்லையா? முரளிக்கான சாதனம் அனைத்தையும் விட உயர்ந்தது. எவ்வளவு நல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எவ்வித சிரமமுமின்றி கேட்க முடிகிறது. வெளியிலும் கேட்க முடிகிறது. இதை மிக நன்றாக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். யார் யார் சேவைக்குப் பொறுப்பானவர்களாக இருக்கிறார்களோ, ஒவ்வொரு துறையின் (டிபார்ட்மென்ட்டின்) பெயரை எடுக்கவில்லை. ஆனாலும் ஒவ்வொரு வரும் எனக்கு அன்பு மற்றும் சகயோகத்தின் வாழ்த்துக்கள் இருக்கிறது என்று புரிந்து கொள்ளட்டும். நல்லது. முதல் வாழ்த்துக்கள் யாருக்கு காடுக்கலாம்? தாதிக்கு (பாப்தாதாவிற்கு). பாப்தாதாவோ கொடுப்பவர் இல்லையா? தந்தை தான் குழந்தைகளின் நம்பர் ஒன் சேவகன் என்று எப்பொழுதும் பாப்தாதா கூறுகிறார். தந்தையோ எப்பொழுதும் சேவாதாரி தான் ஆனால் குழந்தைகளும் சேவையில் தந்தையை விட முன்னுக்கு சகயோகிகளாக இருக்கிறார்கள். ஒவ்வொருவரின் பெயரை கூறலாமா என்ன? ஆனால் உள்ளத்தில் ஒவ்வொரு குழந்தையின் பெயரைக் கூறிக் கொண்டிருக்கிறோம் மற்றும் அன்பு நினைவுகள் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அனைத்து டிப்பார்ட்மென்ட்டுகளுக்கும் வாழ்த்துக்கள். மின்சாரம் இல்லா விட்டாலும் வேலை நடக்காது, மைக் இல்லாவிட்டாலும் காரியம் நடக்காது. லைட், மைட், மைக் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

(டீச்சர்களுடன்) நீங்கள் இல்லை என்றால் சென்டர்கள் திறந்திருக்கப்பட்டிருக்காது. ஒவ்வொரு வரையும் பாருங்கள் எத்தனை சென்ட்டர்கள் திறந்திருக்கிறார்கள். இங்கு சேவையின் இராஜ்தானி; மேலும் அங்கு இராஜ்யத்தின் இராஜ்தானி இருக்கும். நல்லது. பாண்டவர்களும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நல்ல நல்ல பாண்டவர்களும் வந்து சேர்ந்து விட்டார்கள். பாண்டவர்கள் இல்லை என்றாலும் கதி இல்லை; ஆனால் பாண்டவர்கள் சக்திகளை முன்னுக்கு

வைத்திருக்கிறார்கள். நீங்கள் வைத்தீர்களா? அல்லது தந்தை வைத்தாரா? தந்தையைப் பின்பற்றி நடந்திருக்கிறீர்கள். நீங்கள் அனைவரும் கூட தந்தையின் நெருக்கத்தில் அமர்ந்திருக்கிறீர்கள். இவர்கள் மட்டும் தான் நெருக்கத்தில் இருக்கிறார்கள் என்று அப்படி நினைக்காதீர்கள் ஆனால் யார் எதிரில் இருக்கிறார்களோ அவர்கள் மிக நெருக்கத்தில் இருக்கிறார்கள். இரட்டை வெளிநாட்டினரும் வந்திருக்கிறார்கள். இவர்களும் அதிசயக் காரியம் செய்து கொண்டிருக்கிறார்கள். பாரதம் மற்றும் வெளிநாட்டில் பிரத்யக்ஷம் செய்வதற்கான சேவை மிக நன்றாகச் செய்து கொண்டிருக்கிறார்கள் மேலும் செய்து கொண்டே இருப்பார்கள். நல்லது.

(பின்பு பாப்தாதா ஞானசரோவரின் விசாலமான மேடையில் நின்று கொண்டு இன்ஜினியர்கள் உடன் (பொறியாளர்களுடன்) மெழுகுவர்த்தி ஏற்றியதோடு முக்கியமான டீச்சர்கள் மற்றும் தாதிகளுடன் கேக் வெட்டினார், பின்பு முக்கிய தாதிகள் பாப்தாதாவுடன் ஹாலின் வெளியே வந்தார்கள். அங்கு பாப்தாதா இரண்டாயிரத்திற்கும் அதிகமான எண்ணிக்கையில் அமர்ந்திருக்கும் மாதர்களை கை அசைத்து சந்தித்தார். மேலும் கொடியேற்றினார்).

அதற்கு பின்பு கூறிய மஹா வாக்கியங்கள் கீழ்கண்டவாறு: அனைத்து குழந்தைகள், உங்களுடைய இதயத்தில் தந்தையின் அன்பு என்ற கொடி பறந்து கொண்டிருக்கிறது. அதைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். இது சேவைக்கானது. மேலும் தந்தை குழந்தைகளின் நடுவில் உள்ளத்தில் அன்பின் கொடி இருக்கிறது. எப்படி இந்த கொடியேற்று விழா கொண்டாடுகிறீர்கள் என்றால் உயரே பறக்க விடுகிறீர்கள் இல்லையா, அதே போல் அன்பில் உயர்ந்ததிலும் உயர்ந்ததாக எப்பொழுதுமே பறக்க விட்டுக் கொண்டிருங்கள். இந்த கொடி கூட தந்தையைப் பிரத்யக்ஷம் செய்யக் கூடிய கொடி ஆகும். இது துணியாலான கொடி ஆகும் ஆனால் இந்த துணிக் கொடியில் உங்கள் அனைவருடைய செய்தி "தந்தை வந்து விட்டார்' என்பது அடங்கியிருக்கிறது. இதே பிரத்யக்ஷம் செய்யும் கொடி இப்பொழுது ஒவ்வொரு மூலையிலும் பறக்கும். மேலும் நீங்கள் அனைவரும் பறக்க விடப்பட்ட பிரத்யக்ஷதாவின் கொடியை பார்ப்பீர்கள், கேட்பீர்கள், மகிழ்ச்சி அடைவீர்கள். அப்படி இன்று ஞான சரோவரிலிருக்கிறது,

நாளை இந்தக் கொடி உலகில் பறக்கும். நீங்கள் அனைவரும் தபஸ்யா செய்ய வேண்டியதாக இருந்தது; அதற்காக பாராட்டுக்கள்! ஆனால் மிக சௌகரிகமாக நன்றாக அமர்ந்திருக்கிறீர்கள் மேலும் எவ்வளவு நீங்கள் (பாபாவை) பார்க்க முடிகிறதோ அந்த அளவு ஹாலில் பின்னால் அமர்ந்தவர்களுக்கு இல்லை. நீங்கள் வெளியில் இருக்கவில்லை ஆனால் உள்ளத்தின் உள்ளே இருந்தீர்கள். நீங்கள் அனைவரும் மிகுந்த அதிர்ஷ்டசாலிகள் எனவே எப்பொழுதுமே குஷியை மற்றவர்களுக்குக் கொடுத்துக் கொண்டே இருக்கிறீர்கள். குஷியாக இருங்கள் மற்றும் குஷியை மற்றவர்களுக்கு கொடுத்துக் கொண்டே இருங்கள். பின்பு பாப்தாதா நாலாபுறமும் கட்டப்பட்ட பவனங்களின் மேல் தன் திருஷ்டியை கொடுத்தார். (அதற்கு பின்பு ஹாலில் வந்து அனைத்து இன்ஜினியர்களுக்கும் தனது கைகளால் டோலி ஊட்டி விட்டார். பின்பு விடைபெற்றுச் சென்றார்).

வரதானம்: உண்மையான துணைவனின் துணையை எடுக்கக்கூடிய அனைவரிடமிருந்து விலகிய அன்பான பற்றற்றவர் ஆகுக!

தினந்தோறும் அமிர்தவேளையில் அனைத்து உறவுகளின் சுகத்தை பாப்தாதாவிடமிருந்து பெற்று மற்றவர்களுக்கு தாளமாகக் கொடுங்கள். அனைத்து சுகங்களின் அதிகாரி ஆகி மற்றவர்களையும் ஆக்குங்கள். எந்தவொரு வேலையாக இருந்தாலும் அதில் சாகாரத்தில் உடன் இருப்பவரின் நினைவு வர வேண்டாம். முதலில் தந்தையின் நினைவு வரட்டும். ஏனென்றால், தந்தை தான் உண்மையான நண்பன். உண்மையான துணைவனின் துணையை எடுத்தீர்கள் என்றால் சுலபமாகவே அனைவரிடமிருந்து விலகியவராக மற்றும் அன்பானவராக ஆகி விடுவீர்கள். யார் அனைத்து உறவுகளினால் ஒவ்வொரு காரியத்திலும் ஒரு தந்தையை நினைவு செய்கிறாரோ அவர் சுலபமாகவே பற்றற்றவர் ஆகி விடுகிறார். அவர்களுக்கு எந்தப் பக்கமும் ஈடுபாடோ பற்றுதலோ இருப்பதில்லை. எனவே மாயாவிடம் தோல்வியும் ஏற்பட முடியாது.

சுலோகன்: மாயாவைப் பார்க்க மற்றும் தெரிந்து கொள்வதற்காக திரிகாலதரிசி மற்றும் திரிநேத்ரி ஆகுங்கள். அப்பொழுது தான் வெற்றி அடைபவர் ஆவீர்கள்!

✺ ✺ ✺ ✺ ✺ ✺ ✺ ✺ ✺ ✺ ✺ ✺ ✺ ✺ ✺ ✺ ✺ ✺ ✺ ✺ ✺ ✺ ✺ ✺ ✺ ✺ ✺ ✺ ✺ ✺ ✺ ✺ ✺ ✺ ✺ ✺ ✺
✺ ✺ ✺ ✺ ✺ ✺ ✺

## 18.01.1995-2 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிரம்மாபாபாவின் அடிமேல் அடி வைத்து (ஆக்ஞாகாரி) கட்டளைப்படி நடப்பவர் ஆகுங்கள்!

இன்று எல்லைக்கப்பாற்பட்ட பாப்தாதா தன்னுடைய எல்லைக்கப்பாற்பட்ட சேவையில் உடன் இருப்பவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். இரண்டு விதமான உடன் இருப்பவர்கள் இருக்கிறார்கள். ஒன்று அன்பான சம்மந்தத்தின் ஆதாரத்தில் உடன் இருப்பவர்கள் மற்றும் இன்னொன்று அன்பு, சம்மந்தம் மற்றும் சேவைக்காக உடன் இருப்பவர்கள். இரண்டு விதமான உடன் இருப்பவர்களை பார்த்துக் கொண்டிருக்கிறோம். யாராவது உலகில் ஏதாவது மூலையில் இருந்தால் கூட பாப்தாதாவின் எதிரில் இருக்கிறார். எங்கிருந்தாலும் எப்பொழுதும் உடன் இருப்போம் என்பது பாப்தாதா மற்றும் குழந்தைகளின் உறுதிமொழியாக இருக்கிறது. இந்த பிராமண வாழ்க்கை தொடக்கத்திலிருந்து கடைசி வரை தந்தை மற்றும் குழந்தைகளின் அழியாத துணையாக இருக்கிறது. குழந்தைகள் சாகாரத்தில் இருந்தாலும் மற்றும் பாப்தாதா ஆகாரத்தில் நிராகாரத்தில் இருந்தாலும் பிரிந்திருக்கிறார்களா என்ன? இல்லை தான் இல்லையா? அப்படியானால் தூரமாக இருக்கிறீர்களா அல்லது அருகில் இருக்கிறீர்களா? இந்த உள்ளத்தின் அருகாமை சாகாரத்திலும் கூட அருகாமையை அனுபவம் செய்விக்கிறது. எந்த தேசத்திலிருந்தாலும் உள்ளத்தின் அருகாமை உடன் இருப்பதின் அனுபவம் செய்விக்கிறது. பிரிந்திருக்க முடியாது, அசம்பவமாகும். பரமாத்மாவின் உறுதிமொழி ஒருபொழுதும் நிறைவேற்றப்படாமல் இருக்க முடியாது. பரமாத்மாவின் உறுதிமொழி இப்படி நடக்க வேண்டும் என்றாகி விடுகிறது. எனவே அது நடக்காமல் இருக்க முடியாது. எனவே எப்பொழுதும் அருகில் இருக்கிறீர்கள், எப்பொழுதும் துணையாக இருக்கிறீர்கள் மற்றும் துணைவியாகி கையோடு கை கோர்த்து

துணையை எடுத்துக் கொண்டே எவ்வளவு மகிழ்ச்சியோடு வாழ்ந்து கொண்டு இருக்கிறீர்கள். மகிழ்ச்சி இருக்கிறதா அல்லது கஷ்டப்பட்டு உழைக்க வேண்டியதாக இருக்கிறதா? கொஞ்சம் கொஞ்சம் டின உழைப்பு இருக்கிறதா? எப்பொழு ஏதாவது விஷயம் (பிரச்சனை) வந்து விடுகிறது என்றால் தந்தை ஒதுங்கி விடுகிறார். எந்தவொரு விஷயத்தையும் கொண்டு வராமல் இருந்தீர்கள் என்றால் தந்தை செல்ல மாட்டார். விஷயம் தந்தையை ஒரு பக்கமாக்கி விடுகிறது. எப்படி இடையில் ஏதாவது திரைச்சீலை வந்து விடுகிறது என்றால் திரைச்சீலை வருவதினால் ஒருபக்கம் ஆகி விடுகிறது இல்லையா? அப்படி இந்த விஷயம் என்ற திரைச்சீலை இடையிடையே வந்து விடுகிறது ஆனால் கொண்டு வருபவர் யார்? திரைச்சீலையின் வேலை வருவது மற்றும் உங்களுடைய வேலை என்ன? அகற்ற வேண்டுமா அல்லது அதைப் பார்த்து ரசிக்க வேண்டுமா? குழந்தைகள் சில நேரம் விஷயங்களில் மிகுந்த மகிழ்ச்சியை எடுத்துக் கொள்கிறார்கள் என்று பாப்தாதா பார்க்கிறார்.

யார் மேல் அன்பு இருக்கிறதோ அந்த அன்பின் அடையாளம் உடன் கூடவே இருப்பதாகும். உடன் இருப்பதின் அர்த்தம் (மவுன்ட்) அபுவில் இருக்க வேண்டும் என்பதல்ல. அபுவிலோ பாருங்கள் இப்பொழுது கொஞ்சம் அதிகமானவர்கள் வந்து விட்டதனால் தண்ணீர் பிரச்சனை ஏற்பட்டு விட்டது இல்லையா? அப்படி சாகாரத்தில் உடன் இருப்பதல்ல ஆனால் உள்ளப்பூர்வமாக உடன் இருப்பதாகும். ஒருவேளை உள்ளப்பூர்வமாக உடன் இருக்கவில்லை என்றால் மதுபன்னிலிருந்தும் கூட தூரமாக இருக்கிறீர்கள் -வெகு தூர தேசத்திலிருந்தாலும் கூட உள்ளப்பூர்வமாக அருகில் இருக்கிறார் என்றால் அவர் உடன் இருக்கிறார். எனவே பாப்தாதாவை திலாராம் (உள்ளத்தின் ராம்) என்று கூறுகிறார்கள், உடலின் ராம் என்று கூறுவதில்லை. அப்படி உங்களுடைய உள்ளம் தந்தை மேல் இருக்கிறது தான் இல்லையா? தந்தையின் உள்ளத்தில் உங்களுடைய உள்ளம் இருக்கிறது மற்றும் உங்களுடைய உள்ளத்தில் தந்தையின் உள்ளம் இருக்கிறது. அப்படி இந்த ஆன்மீக உடன் இருத்தல் உள்ளத்திற்குத் தான் தெரியும். நீங்கள் அனுபவிகள் தான் இல்லையா அல்லது இங்கிருந்து சென்றீர்கள் என்றால் தூரமாகி விட்டோம் என்று சொல்வீர்களா? இல்லை. எப்பொழுதும் உடன் இருப்பது -இதை எந்தவொரு ஆத்மாவும்

இன்னொரு ஆத்மாவோடு செய்ய முடியாது. ஒரே ஒரு பரமாத்மா மட்டும் தான் ஆத்மாக்களுடன் எப்பொழுதும் உடன் இருக்க முடியும். மேலும் இந்த பரமாத்மா உடன் இருக்கும் பாக்கியம் குழந்தைகள் உங்கள் அனைவருக்கு மட்டும் தான் இருக்கிறது.

(இன்று முழு ஹாலில் அனைத்து சகோதர சகோதரிகளும் தரையில் அமர்ந்திருக்கிறார்கள்). மிக நல்ல காட்சி. பாப்தாதாவிற்கு இன்றைய சபையின் காட்சியைப் பார்த்து நினைவுச்சின்னம் நினைவில் வருகிறது. நினைவுச் சின்னமாக ருத்ர மாலையைக் காண்பிக்கிறார்கள், அதில் முகம் மட்டும் தென்படும். உடல் தென்படுவதில்லை. அப்படி இங்கிருந்து கூட முகம் மட்டும் தான் தென்படுகிறது மற்ற வேறு எதுவுமே தென்படவில்லை. அப்படி ருத்ர மாலையின் நினைவுச்சின்னம் தென்படுகிறது. ஒருவர் பின்னால் இன்னொருவர் அமர்ந்திருக்கிறார்கள் இல்லையா? எனவே உடல் மறைந்து விட்டது முகம் தென்படுகிறது.

இது தான் அன்பின் பிரத்யக்ஷ சொரூபம். பிரம்மாபாபா மேல் அனைவருக்கும் அன்பு இருப்பதால்தானே வந்திருக்கிறீர்கள்? மேலும் நீங்கள் அனைவரும் பிரம்மா குமார் மற்றும் பிரம்மா குமாரிகள் என்று கூறுகிறீர்கள். சிவ குமார், சிவகுமாரி என்று கூறுவதில்லை அப்படி பிரம்மாபாபா மேல் அதிக அன்பு இருக்கிறது இல்லையா? மேலும் பிரம்மாபாபாவிற்கும் எப்பொழுதும் குழந்தைகள் மேல் அன்பு இருக்கிறது. அதனால் தான் அவ்யக்தம் ஆன பிறகும் அவ்யக்த பாலனை செய்து கொண்டிருக்கிறார். அவ்யக்த பாலனை கிடைக்கிறது தான் இல்லையா அல்லது நாங்கள் பிரம்மாபாபாவை அனுபவம் செய்யவில்லை என்று நீங்கள் கூறுவீர்களா? பிரம்மா குமார் -பிரம்மா குமாரி என்று கூறுகிறீர்கள் என்றால் தந்தையின் பாலனை இன்றி பிறந்திருப்பீர்களா என்ன? ஒருவேளை பிரம்மாபாபாவின் பாலனை இருக்கவில்லை என்றால் இன்று நிராகார தந்தையின் பாலனையால் மட்டும் யக்ஞத்தின் படைப்பு மற்றும் யக்ஞத்தின் வளர்ச்சி ஏற்பட்டிருக்காது. வெளிநாட்டினருக்கு பிரம்மாபாபாவின் பாலனை கிடைக்கிறது தான் இல்லையா? ஆமாம்). பாருங்கள் வெளிநாட்டிற்கு தந்தை செல்கிறார் என்றால் இந்தியாவில் செய்ய மாட்டாரா என்ன? அப்படி பாபாவை நாங்கள் பார்க்கவே இல்லை என்ற முறையீட்டை

செய்ய மாட்டீர்கள் தானே? எப்பொழுதும் சந்திக்கிறார், எப்பொழுதும் பார்க்கிறார், எப்பொழுதும் உடன் இருக்கிறார். சாகார உடலில், சாகார ரூபத்திலோ எப்பொழுதும் உடன் இருக்க முடியாது ஆனால் அவ்யக்த ரூபத்தில் அனைவருக்கும் துணையாக இருக்க முடியும். எப்பொழுது விரும்பினாலும் சந்திப்பிற்கான கதவுகள் திறந்தே இருக்கின்றன. இப்பொழுது இடம் இல்லை, இப்பொழுது நேரம் இல்லை என்று அவ்யக்த வதனத்தில் ஒருபொழுதும் சொல்ல மாட்டோம். உடலின் பந்தனம் இருக்கிறது ஆனால் அவ்யக்தத்தில் உடலின் பந்தனமோ அல்லது உடல் சம்மந்தப்பட்ட உலகின் நியமங்களின் பந்தனமோ இல்லை. இங்கோ முன்னால் அமருங்கள், பின்னால் அமருங்கள் என்ற நியமம் வைக்கவேண்டியதாக இருக்கிறது. நேரத்திற்கு தகுந்தாற்போல் இப்பொழுது கூட நீங்கள் மிகுந்த பாக்கியம் நிறைந்தவர்கள். உட்காருவதற்காவது இடம் கிடைத்தது தான் இல்லையா? போகப்போக நிற்பதற்குக் கூட இடம் கிடைப்பது கடினமாகி விடும். ஏனென்றால் நீங்கள் அனைவரும் மற்றவர்களுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டியதாக இருக்கும். இப்பொழுதோ உங்களுக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. எப்படி பாருங்கள், இப்பொழுது மதுபன்னில் இருப்பவர்களுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டியது இருந்தது இல்லையா (அனைத்து மதுபன் நிவாசிகள் மற்றும் அபு நிவாசிகள் அனைவரும் பாண்டவ பவனில் முரளி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்) இதுவும் பரிவாரத்தின் அன்பு ஆகும்.

பிரம்மாபாபா மேல் அன்பு இருக்கிறது என்றால் தந்தைக்குச் சமமாக ஆக வேண்டும் என்பதாகும். நிராகாரத்தின் (சிவபாபா) சமம் ஆவது அதைக் கொஞ்ச நேரத்திற்காக அனுபவம் செய்கிறீர்கள் ஆனால் பிராமணன் என்றால் எப்பொழுதும் பிரம்மாவிற்குச் சமமாக பிரம்மாச்சாரி எது பிரம்மாபாபாவின் ஆச்சரணோ (நடத்தை) அதுதான் அனைத்து பிராமணர்களின் ஆச்சரண் ஆகும். அதாவது செயல்பாடு ஆகும். உச்சாரணம் (வார்த்தைகள் கூட பிரம்மாபாபாவிற்குச் சமம், ஆச்சரணம் கூட பிரம்மாபாபாவிற்குச் சமமாக இருக்கிறது. இதைத் தான் ஃபாலோ ஃபாதர் என்று கூறுவது. அப்படி பிரம்மாபாபாவின் ஒவ்வொரு அடி மேல் அடி வைப்பது இதைத் தான் ஃபாலோ ஃபாதர் (follow father) என்று கூறுவது. அப்படி பிரம்மாபாபா தந்தையின் ஸ்ரீமத்படி முதல் அடியாக என்ன எடுத்து வைத்தார்?

முதல் அடியில் கட்டளைப்படி நடப்பவராக ஆகியிருக்கிறேனா? என்ன கட்டளை கிடைத்ததோ அந்தக் கட்டளையை பிரத்யக்ஷ சொரூபத்தில் கொண்டு வந்தேனா? அப்படி கட்டளைப்படி நடப்பவரில் முதல் அடியில் ஃபாலோ ஃபாதராக இருக்கிறேனா? என்று சோதனை செய்யுங்கள். அமிர்தவேளையில் தொடங்கி இரவு வரை எண்ணம், சொல், செயல், நெருக்கத்திற்காக என்ன கட்டளை கிடைத்திருக்கிறதோ அதே கட்டளைப்பிரமாணம் நடக்கிறேனா? அல்லது சில கட்டளை நடைமுறைப்படுத்தப்படுகிறது மற்றும் சில நடைமுறைப் படுத்தப்படவில்லை. எண்ணமும் கட்டளைப்படி இருக்கிறதா அல்லது கலப்படமாக இருக்கிறதா? ஒருவேளை கலப்படமாக இருக்கிறது என்றால் முழுமையான கட்டளைப்படி நடப்பவராக இருக்கிறீர்களா அல்லது அரைகுறையான கட்டளைப்படி நடப்பவரா? ஒவ்வொரு நேரத்தின் எண்ணத்திற்கும் கட்டளை தெளிவாகக் கிடைத்திருக்கிறது. அமிர்தவேளை என்ன எண்ணம் வைக்க வேண்டும் இதுவும் தெளிவாக இருக்கிறது தான் இல்லையா? அப்படியானால் பின்பற்றி நடக்கிறீர்களா அல்லது சில நேரம் பரந்தாமம் சென்று விடுகிறீர்களா மற்றும் சில நேரம் நித்திரை உலகத்திற்கு சென்று விடுகிறீர்களா? ஒவ்வொரு காரியத்தில் ஒவ்வொரு சமயமும் அடி மேல் அடி இருக்கிறதா? தந்தையின் அடி ஒன்று மற்றும் குழந்தைகளின் அடி இன்னொன்றாக இருந்தால் அவரை கட்டளைப்படி நடப்பவர் என்று கூற மாட்டோம் இல்லையா? முயற்சி செய்வதிலும் விவகாரத்திலும் இரண்டிலும் எப்படிப்பட்ட கட்டளை இருக்கிறதோ அப்படியே கட்டளையை பாலனை செய்வது இதன் சதவிகிதத்தை சோதனை செய்யுங்கள். சோதனை செய்யத் தெரியுமா? அப்படி முதல் அடியில் கட்டளைப்படி நடப்பவராக ஆகியிருக்கிறேனா, எனவே கட்டளைப்படி நடப்பவருக்கு எப்பொழுதும் தந்தையின் ஆசிர்வாதங்கள் தானாகவே கிடைக்கிறது, கூடவே பிராமண பரிவாரத்தின் ஆசீர்வாதங்களும் இருக்கிறது. எனவே என்ன எண்ணத்தை உருவாக்கினாலும் அது தனக்காக இருந்தாலும் அல்லது சேவைக்காக இருந்தாலும், ஸ்தூல காரியத்திற்காக இருந்தாலும் மற்றும் மற்ற ஆத்மாக்களுக்காக இருந்தாலும் அதில் அனைவரின் ஆசீர்வாதங்கள் கிடைத்ததா என்று சோதனை செய்யுங்கள். ஏனென்றால் கட்டளைப்படி நடப்பவராக ஆவதினால் அனைவரின் ஆசீர்வாதங்கள் கிடைக்கிறது. மேலும் ஒருவேளை ஆசீர்வாதங்கள்

கிடைத்துக் கொண்டிருக்கிறது என்றால் அதனுடைய அடையாளம் ஆசீர்வாதங்களின் பிரபாவத்தினால் உள்ளம் எப்பொழுதும் திருப்தியாக இருக்கும், மனம் திருப்தியாக இருக்கும். வெளிமுகமான திருப்தி இல்லை, ஆனால் மனதின் திருப்தி. மேலும் மனதின் திருப்தி சரியாக இருக்கிறதா அல்லது போலியாக இருக்கிறதா இதனுடைய அடையாளம் ஒருவேளை சரியான முறையில் சரியாக கட்டளைப்படி நடப்பவராக இருக்கிறார் என்றால், ஆசீர்வாதங்கள் இருக்கிறது என்றால் எப்பொழுதும் தானும் மற்றும் மற்றவர்களும் டபுள் லைட்டாக இருப்பார்கள். ஒருவேளை டபுள் லைட்டாக இருக்கவில்லை என்றால் மனதின் திருப்தி இல்லை என்று புரிந்து கொள்ளுங்கள். தந்தையின் மற்றும் பரிவாரத்தின் ஆசீர்வாதங்களும் கிடைக்கவில்லை. பரிவாரத்தின் ஆசீர்வாதமும் அவசியமாகும். தந்தையோடு நமது தொடர்பு இருக்கிறது, தந்தையினுடைய ஆசீர்வாதங்களோ இருக்கிறது, பரிவாரத்தோடு ஒத்துப் போகவில்லை என்றால் ஒன்றும் பாதகமில்லை என்று அப்படி நினைக்காதீர்கள். மாலையில் ஜோடி மணிகள் மட்டும் இல்லை, அதனால் மாலை உருவாகுவது இல்லை என்று ஏற்கனவே கூறியிருக்கிறோம். மாலையில் வர வேண்டும் எனவே ஒவ்வொரு ஆத்மாவும் என்னைப் பார்த்து குஷியாக இருக்கட்டும், பார்த்து லேசாகி விட வேண்டும். சுமை அகன்று விட வேண்டும் என்ற முழுமையான இலட்சியத்தை வையுங்கள். அப்படி உள்ளப்பூர்வமான திருப்தி மற்றும் கட்டளைப்படி நடப்பதினால் கிடைக்கும் ஆசீர்வாதங்கள் தன்னையும் லேசானவராக மற்றும் மற்றவர்களையும் லேசானவர்களாக ஆக்கும். இதன் மூலம் கட்டளைப்படி நடப்பவராக எவ்வளவு ஆகியிருக்கிறோம் என்று புரிந்து கொள்ளுங்கள். எப்படி பிரம்மாபாபாவைப் பார்த்து ஒவ்வொரு சிறியவர் மற்றும் பெரியவர்கள் திருப்தி அடைந்து குஷியில் ஆடினார்கள். ஆடும் பொழுதோ லேசாக இருப்பார்கள் இல்லையா? அப்பொழுது தான் ஆடுவார்கள் இல்லையா? ஒருவர் உடலால் பருமனாக இருந்தாலும் மனதால் லேசாக இருக்கிறார் என்றாலும் நடனமாடுவார். மேலும் மெலிந்தவராக இருக்கிறார், ஆனால் மனதால் சுமையாக இருக்கிறார் என்றால் ஆட மாட்டார். எனவே தானும் தன் மேலேயே திருப்தியாக இருக்கின்ற மாதிரி, கூடவே மற்றவர்களும் திருப்தியாக இருக்கின்ற மாதிரி வார்த்தைகளும் இருக்க வேண்டும். என்னுடைய உணர்வோ அப்படி இருக்கவில்லை. என்னுடைய நோக்கமோ அந்த மாதிரி இல்லை என்று அப்படி வேண்டாம் ஆனால்

உணர்வுகள் மற்றும் உள்நோக்கம் ஏன் சென்றடையவில்லை? ஒருவேளை உண்மை என்றால் மற்றவர்கள் வரை வைப்ரேஷன்ஸ் (எண்ண அதிர்வலைகள்) ஏன் செல்லவில்லை? ஏதாவது காரணம் இருக்கும் இல்லையா? எனவே ஆசீர்வாதங் களுக்குப் பாத்திரமானவனாக எதுவரை ஆகியிருக்கிறேன்? என்று சோதனை செய்யுங்கள். எவ்வளவு இப்பொழுது தந்தை மற்றும் பிராமண ஆத்மாக்களின் ஆசீர்வாதங்களுக்குப் பாத்திரமாக ஆவீர்களோ அவ்வளவே இராஜ்யத்திற்குப் பாத்திரமானவர்கள் ஆவீர்கள். ஒருவேளை இப்பொழுது பிராமண பரிவாரத்தை திருப்தி செய்ய முடியவில்லை என்றால் இராஜ்யத்தை என்ன நடத்துவீர்கள். இராஜ்யத்தை என்ன திருப்திப்படுத்துவீர்கள். ஏனென்றால் பிராமண ஆத்மாக்கள் உங்களுடைய இராயல் குடும்பத்தினராக ஆனார்கள் என்றால் யார் குடும்பத்தைத் திருப்திப்படுத்த முடியவில்லையோ அவர் பிரஜைகளுக்கு என்ன செய்வார்? சம்ஸ்காரத்தை இங்கேதான் நிரப்ப வேண்டும் இல்லையா? அல்லது அங்கே யோகா செய்து நிரப்புவீர்களா? இங்கேயே நிரப்ப வேண்டும். ஒருவேளை தற்சமயம் பிராமண பரிவாரத்தில் காரணத்தை நிவாரணம் செய்ய முடியவில்லை. காரணம் காரணம் என்றே சொல்லிக் கொண்டே இருக்கிறீர்கள் என்றால் எங்கு காரணம் இருக்கிறதோ அங்கு நிவாரண சக்தி இல்லை. ஒருவேளை பரிவாரத்தில் நிவாரண சக்தி இல்லை என்றால் உலகத்தின் இராஜ்யத்திற்கு என்ன நிவாரணம் செய்வீர்கள். ஏனென்றால் உங்களுடைய இராஜ்யத்தில் ஒவ்வொரு ஆத்மாவும் எப்பொழுதும் நிவாரண சொரூபமாக இருக்கிறார்கள். அங்கு காரணம் இருக்குமா என்ன? எப்படி இப்பொழுது இராஜ்ய சபையில் இந்தக் காரணம் இந்தக் காரணம் … என்று காரணங்கள் கூறுகிறார்கள் அங்கு அப்படி இராஜ்ய தர்பார் இருக்குமா என்ன? அங்கோ குஷியாக இருக்கிறீர்களா என்று மட்டும் தான் கேட்பார்கள். தர்பார் மட்டும் இல்லை, மிக நல்ல சந்திப்பும் இருக்கும். எனவே காரணம் சொல்லி தன்னை ஆசீர்வாதங்களிலிருந்து வஞ்சிக்கப்பட்டவராக ஆக்காதீர்கள். பிரம்மாபாபா காரணத்திற்கு நிவாரணம் செய்தார் அதனால் நம்பர்-1 ஆனார். பாப்தாதாவிடம் அனைவரின் காரணங்களின் கோப்பு மட்டும் தான் ஒன்றாக சேருகின்றன. அனைவருக்கும் கோப்பு இருக்கிறது -சிலருடையது சிறிய கோப்பு, சிலருடையது பெரிய கோப்பு. இப்பொழுது கூட கோப்புகளை வைக்க வேண்டுமா, கோப்புகளை அதிகரித்துக் கொண்டே

இருக்க வேண்டுமா அல்லது மாற வேண்டுமா? இன்றிலிருந்து அனைத்து கோப்புகளையும் முடித்து விடுவீர்களா. பின்பு இன்னொரு புது கோப்பையோ வைக்க வேண்டியது இருக்காது தான் இல்லையா. ஒருவேளை புதிய கோப்பை வைத்தீர்கள் என்றால் தண்டனை கட்ட வேண்டியதாக இருக்கும். யோசித்துக் கொள்ளுங்கள். முடித்து விடுவோமா அல்லது கொஞ்ச நாட்கள் வைத்துக் கொள்வோமா? சிவராத்திரி வரை வைத்துக் கொள்வோமா. சிவராத்திரி வரை கொஞ்சம் வாய்ப்பு கிடைக்க வேண்டும் அதுவரை முயற்சி செய்து மாறி விடுவோம் என்று யார் நினைக்கிறார்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். நல்லது. தைரியம் வைப்பது கூட நல்ல விஷயம் தான் ஆனால் இப்பொழுது மட்டும் தைரியம் வைக்காதீர்கள். பாப்தாதாவின் எதிரில் இருந்தோம் இல்லையா? அதனால் தைரியம் இருந்தது என்று அப்படியும் இல்லையே. கீழே இறங்கினீர்கள் கொஞ்சம் தைரியம் குறைந்து விட்டது மற்றும் தங்களுடைய தேசத்திற்கு சென்றீர்கள் என்றால் இன்னும் குறைந்து விட்டது. ஏதோ விஷயம் வந்தது, மேலு இன்னும் குறைந்து விட்டது என்று அப்படி செய்ய மாட்டீர்கள் தானே? பாருங்கள் எப்பொழுது ஏதாவது காரணம் எதிரில் வருகிறது மற்றும் காரணத்தின் காரணமாக தைரியம் குறைந்து விடுகிறது, பலஹீனம் வந்து விடுகிறது. மேலும் எப்பொழுது அந்த விஷயம் முடிந்து விடுகிறதோ அப்பொழுது தன் மேலேயே வெட்கம் வருகிறது தான் இல்லையா? இதைச் சரியாக செய்யவில்லை, இது நடந்தது நல்லது அல்ல என்று தன் மேலேயே வெட்கம் ஏற்படுகிறது. செய்து விட்டு பின்பு வேதனைப்படுவது இதுவோ உங்களுடைய பிரஜையின் காரியமா அல்லது உங்களுடையதா? வேதனைப்படுபவர் இராஜாவாக ஆக முடியுமா என்ன? சாட்சி நிலை என்ற சிம்மாசனத்தில் அமர்ந்து விடுங்கள் மற்றும் உங்களை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள், இதை யோசியுங்கள். தன்னுடைய நீதிபதியாக ஆகுங்கள், மற்றவர்களின் நீதிபதி ஆகாதீர்கள். மற்றவர்களின் நீதிபதி ஆவது அனைவருக்கும் தெரியும், மற்றவர்களின் நீதிபதியாக மிக விரைவில் ஆகி விடுகிறீர்கள். மேலும் தன்னுடைய வக்கீலாகி விடுகிறீர்கள். அப்படி சாட்சி நிலையின் சிம்மாசனத்தில் தனக்குத் தானே நிர்ணயம் செய்வது மிக நன்றாக இருக்கும். சிம்மாசனத்தின் கீழே இருந்து முடிவெடுத்தீர்கள் என்றால் நிர்ணயம் நன்றாக இருக்காது. ஒரு நொடியில் ஆசனத்தில் அமர்ந்திருப்பவர் ஆகி விடுங்கள். இந்த நிலை

தான் உங்களுடைய ஆசனம் ஆகும். சரியான சுலபமான நிர்ணயத்தின் ஆசனம் சாட்சியாக இருக்கும் நிலை. சாட்சியாக இருக்கவில்லை என்றால் மற்றவர்களின் விஷயம் மற்றவர்களின் நடத்தை அதிகமாக எதிரில் வருகிறது. தன்னுடையது வருவதில்லை. ஒருவேளை சாட்சியாகி பார்த்தீர்கள் என்றால் தன்னுடையதும் பார்க்கத் தென்படும், மற்றவர்களுடையதும் பார்க்கத் தென்படும். பிறகு தீர்மானம் என்னவாக இருக்குமோ அது யதார்த்தமாக இருக்கும். இல்லையென்றால் யதார்த்தமாக இருக்காது.

நாடகத்தில் என்ன விஷயம் வந்தாலும் அந்த விஷயங்களில் மிக நல்ல புத்தி இருக்கிறது ஆனால் சில நேரம் பிராமண குழந்தைகளின் புத்தி கொஞ்சம் குறைந்து விடுகிறது. விஷயம் வருகிறது மற்றும் சென்று விடுகிறது ஆனால் பிராமணக் குழந்தைகள் விஷயத்தைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விடுகிறார்கள். விஷயம் நிற்பதில்லை, சென்று விடுகிறது ஆனால், தான் விஷயத்தை விடுவதில்லை. அப்படி விஷயங்களில் புத்தி அதிகமாக இருக்கிறதா அல்லது பிராமணர்களிடமா? விஷயங்கள் புத்திசாலி ஆனது இல்லையா? இரண்டு நாட்களாக இந்த விஷயம் நடந்து கொண்டிருக்கிறது, இரண்டு மணி நேரமாக இந்த விஷயம் நடந்து கொண்டிருக்கிறது என்று அனேக குழந்தைகள் கூறுகிறார்கள் மற்றும் இரண்டு மணி நேரத்தில் இழந்தது எவ்வளவு? இரண்டு நாட்களில் இழந்தது எவ்வளவு? எனவே புத்தியுடையவர் ஆகுங்கள். நல்லது.

வரதானம்: ரியாலிட்டி (உண்மை) மூலமாக ராயல்ட்டியின் (இராஜ குடும்பத்தினர் போல் நடந்து கொள்வது) பிரத்யக்ஷ ரூபம் காண்பிக்கக்கூடிய சாட்சாத்கார மூர்த்தி ஆகுக!

ஒவ்வொரு ஆத்மாவும் பிரத்யக்ஷ ரூபத்தில் தன்னுடைய ரியாலிட்டி மூலமாக ராயல்ட்டியின் சாட்சாத்காரம் செய்விக்கும் நேரம் இப்பொழுது வரப்போகிறது. பிரத்யக்ஷதாவின் நேரத்தில் மாலையின் மணியின் வரிசை எண் மற்றும் எதிர்கால இராஜ்யத்தின் சொரூபம் இரண்டுமே பிரத்யக்ஷமாகும். இப்பொழுது போட்டி செய்து செய்து கொஞ்சம் பொறாமை என்ற தூசியின் திரைச்சீலை, மின்னிக் கொண்டிருக்கும் வைரங்களை மறைத்து விடுகிறது. கடைசியில் இந்த

திரைச்சீலை அகன்று விடும். பின்பு மறைந்திருந்த வைரங்கள் தன்னுடைய பிரத்யக்ஷ முழுமையான சொரூபத்தில் வருவார்கள். ராயல் குடும்பம் இப்பொழுதிலிருந்தே தன்னுடைய ராயல்ட்டியைக் காண்பிக்கும். அதாவது தன்னுடைய எதிர்காலத்து பதவியைத் தெளிவாக்கும். எனவே ரியாலிட்டி மூலமாக ராயல்ட்டியின் சாட்சாத்காரம் செய்வியுங்கள்.

**சுலோகன்: ஏதாவது விதி மூலம் வீணானதை முடிவு கட்டி சக்தியை வெளிக்காட்டுங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 19.01.1995 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிரம்மாபாபாவிற்குச் சமமாக சர்வஸ்வ தியாகியாக (அனைத்தையும் தியாகம் செய்தவராக) ஆகுங்கள்!

இன்று எல்லைக்கப்பாற்பட்ட பாப்தாதா தனது எல்லைக்கப்பாற்பட்ட சேவை தோழர்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். இரண்டு வகையான தோழர்கள் உள்ளனர் -ஒருவர் சிநேகம் சம்பந்தத்தின் தோழமையை நிறைவேற்றுபவர், மற்றவர் அன்பு, உறவு மற்றும் சேவையின் தோழமையை நிறைவேற்றுபவர். இரண்டு வகையான தோழர்களையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவர்கள் உலகின் கடைசி மூலையில் இருந்தாலும், அவர்கள் பாப்தாதாவின் முன்னால் இருக்கிறார்கள். எங்கிருந்தாலும், எப்போதும் கூடவே இருப்போம் என்பது பாப்தாதா மற்றும் குழந்தைகளின் உறுதிமொழியாகும். இது பிராமண வாழ்க்கை ஆரம்பம் முதல் இறுதி வரை தந்தை மற்றும் குழந்தைகளின் அழியாத இணைப்பாகும். குழந்தைகள் சரீரத்தில் இருந்தாலும், பாப்தாதா சூட்சுமமாக, நிராகாரியாக இருந்தாலும் தனியாகவா இருக்கிறோம்? இல்லைதானே! எனில் தூரமாகவா அல்லது அருகிலா? இந்த இதயத்தின் நெருக்கம் சரீர நிலையில் கூட நெருக்கத்தை உணர வைக்கிறது. நீங்கள் எந்த நாட்டிலும் இருக்கலாம் ஆனால் இதயத்தின் நெருக்கம் உங்களை ஒன்றாக உணர வைக்கிறது. அதை பிரிக்க முடியாது, அது சாத்தியமில்லை. பரமாத்மா கொடுத்த வாக்குறுதியை ஒருபோதும் தவிர்க்க முடியாது. பரமாத்மாவின் உறுதிமொழி எதிர்காலமாக ஆகி விடுறது எனில் எதிர்காலம் தள்ளிப் போவதில்லை. அதனால்தான் சதா அருகிலேயே இருக்கிறார், சதா தோழனாகவும் மற்றும் துணைவனாக கை கோர்த்து, எவ்வளவு மகிழ்ச்சியுடன் சென்று கொண்டிருக்கிறீர்கள். மகிழ்ச்சி உள்ளதா அல்லது கடின உழைப்பா? கொஞ்சம் கொஞ்சம் கடின உழைப்பு உள்ளதா? ஏதாவது விஷயம் வரும்போது, தந்தை விலகி விடுகிறார்.

எந்த விஷயத்தையும் கொண்டு வரவில்லை என்றால் தந்தையும் செல்ல மாட்டார். விஷயம் தந்தையை விலக்கி விடுகிறது. நடுவில் ஒரு தடுப்பு வருகிறது எனில், அதனால் ஒதுங்கிச் சென்று விடுகிறீர்கள் இல்லையா? எனவே இந்த விஷயங்களின் ரூபத்தின் தடுப்பு நடுநடுவில் வந்து விடுகிறது ஆனால் அதை யார் கொண்டு வருகிறார்கள்? தடுப்பின் வேலை வருவது மற்றும் உங்கள் வேலை என்ன? நீக்குவதா அல்லது கொஞ்சம் கொஞ்சம் அதனுடன் மகிழ்ச்சியாக இருப்பதா? குழந்தைகள் சில சமயங்களில் விஷயங்களில் மிகுந்த மகிழ்ச்சி அடைவதை பாப்தாதாவும் பார்க்கின்றார். யார் மீது அன்பு ஏற்படுகிறதோ, அன்பின் அடையாளம் ஒன்றாக இருப்பதே. ஒன்றாக வாழ்வது என்றால் அபுவில் வாழ்வது என்பதல்ல. அபுவிலோ பாருங்கள், எண்ணிக்கை கொஞ்சம் அதிகமானது என்றால் தண்ணீர் கிடைப்பது கஷ்டமாகி விட்டது, இல்லையா? எனவே, உடலால் ஒன்றாக இருக்காதீர்கள், ஆனால் இதயத்தில் ஒன்றாக வாழுங்கள். ஒருவேளை இதயத்தில் அருகில் இல்லை என்றால் நீங்கள் மதுபனில் இருந்தாலும் வெகு தொலைவில் தான் இருக்கிறீர்கள். வெளிநாட்டிலும் மற்றும் கடைசி நாட்டிலும் வாழ்ந்தாலும், அவர்கள் இதயத்திற்கு நெருக்கமாக இருந்தார்கள் எனில் அவர்களும் கூடவேதான் இருக்கிறார்கள். அதனால்தான் பாப்தாதா திலாரம் என்று அழைக்கப்படுகிறார், சரீர-ராம் என்று அழைக்கப்படுவதில்லை. எனில் இதயம் தந்தையிடம் உள்ளதல்லவா? உங்கள் இதயம் தந்தையின் இதயத்திலும், தந்தையின் இதயம் உங்கள் இதயத்திலும் உள்ளது. எனவே இந்த ஆன்மீக துணையைப் பற்றி உங்கள் இதயத்திற்குத் தெரியும். நீங்கள் அனுபவிகள் தானே? இல்லை, இங்கிருந்து சென்றீர்கள் என்றால் நாங்கள் தூரம் சென்று விட்டோம் என்று கூறுவீர்களா? இல்லை. இது தொடர வேண்டும், எந்த ஒரு ஆத்மாவும் இன்னொரு ஆத்மாவுடன் இதைச் செய்ய முடியாது. ஒரே ஒரு பரமாத்மாவால் மட்டுமே இது முடியும். எனவே பரமாத்மாவுடன் கூடவே இருப்பதற்கான பாக்கியம் குழந்தைகள் உங்களுக்கு மட்டும்தான் உள்ளதல்லவா?

(இன்று அனைத்து சகோதரர்களும் சகோதரிகளும் பலகையின் மீது அமர்ந்திருக்கிறார்கள்). மிக அருமையான காட்சி. இன்றைய சந்திப்பின் காட்சியைப் பார்க்கும்போது பாப்தாதாவிற்கு ஒரு நினைவுச்சின்னம் ஞாபகத்திற்கு வருகிறது. நினைவுச்சின்னத்தில் ருத்ராக்ஷ மாலையைக்

காண்பிக்கிறார்கள், அதில் முகங்கள் மட்டுமே தெரிகின்றன, சரீரம் தெரிவதில்லை. அப்படியே இங்கும் கூட முகம் மட்டும்தான் தெரிகிறது, வேறு எதுவுமேத் தெரியவில்லை. எனில் ருத்ராக்ஷ மாலையின் நினைவுச்சின்னம் தெரிகிறதல்லவா! ஒருவர் பின்னால் ஒருவர் அமர்த்திருக்கிறீர்கள் எனில் சரீரம் மறைந்து விடுகிறது, முகம் தெரிகிறது. இது அன்பின் வெளிப்படையான சொரூபம். அனைவருக்கும் தந்தை பிரம்மா மீது அன்பு உள்ளதால் தானே நீங்கள் இங்கு வந்திருக்கிறீர்கள்? மேலும் நாங்கள் பிரம்மா குமார் மற்றும் பிரம்மா குமாரிகள் என்று கூறிக் கொள்கிறீர்கள், சிவ குமார் அல்லது சிவ குமாரிகள் என்று அல்ல. அப்படியானால், தந்தை பிரம்மா மீது அதிக அன்பு இருக்கிறது, இல்லையா? மேலும் தந்தை பிரம்மாவும் சதா குழந்தைகள் மீது அன்பு கொண்டவர். அதனால்தான் அவர் அவ்யக்தாக இருந்தாலும் அவ்யக்த பாலனை செய்து கொண்டிருக்கிறார். அவ்யக்த பாலனையைப் பெறுகிறீர்களா? அல்லது நாங்கள் பிரம்மாபாபாவின் அனுபவம் செய்யவில்லை எனக் கூறுவீர்களா? நீங்கள் பிரம்மா குமார், பிரம்மா குமாரிகள் என்று கூறிக் கொள்கிறீர்கள் எனில் தந்தையின் பாலனையின்றி பலன் அடைந்துள்ளீர்களா? ஒருவேளை பிரம்மா தந்தையின் பாலனை இல்லையேல் இன்று நிராகார தந்தையின் பாலனையினால் மட்டுமே இந்த யக்ஞத்தின் படைப்பு மற்றும் யக்ஞத்தின் வளர்ச்சி ஆகியிருக்காது. இரட்டை வெளிநாட்டவர்களுக்கு பிரம்மா தந்தையின் பாலனை கிடைக்கிறது தானே? (ஆமாம் ஐயா!). பாருங்கள், தந்தை வெளிநாடு செல்லும் போது, அவரால் அதை இந்தியாவில் செய்ய முடியாதா என்ன! எனவே, பாபா எங்களைப் பார்ப்பதே இல்லை என்று ஒருபோதும் புகார் கூறக் கூடாது. சதா சந்திக்கின்றார், சதா பார்க்கின்றார், சதா கூடவே இருக்கின்றார்! சாகார உடலில், சாகார ரூபத்தில், அவரால் உடன் இருக்க முடியாது ஆனால் அவ்யக்த ரூபத்தில் அனைவருடனும் இருக்க முடியும். எப்போது வேண்டுமானாலும் சந்திப்பின் கதவுகள் திறந்திருக்கும். அவ்யக்த வதனத்திலோ இப்போது இடம் இல்லை, இப்போது நேரம் இல்லை என்பதே இல்லை. இங்கோ உடலில் உடலின் பந்தனம் உள்ளது மற்றும் அவ்யக்தத்தில் உடலின் பந்தனம் அல்லது உடல் வாழ்க்கையின் சட்டங்களின் பந்தனம் இல்லை. இங்கோ நீங்கள் விதிகளைப் பின்பற்ற வேண்டியுள்ளதுதானே -முன்னால் உட்காரவும், பின்னால் உட்காரவும். இப்போதும் கூட நேரத்தின்படி நீங்கள் மிக மிக மிக பாக்யசாலிகள்!

இருப்பினும் உட்கார இடம் கிடைத்ததல்லவா? போகப்போக நிற்பதற்கு கூட இடமில்லாமல் கஷ்டமாக இருக்கும், ஏனென்றால் நீங்கள் அனைவரும் மற்றவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டி வரும். இப்போது உங்களுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. பாருங்கள், எப்படி இப்போது மதுபன் வாசிகள் வாய்ப்பளிக்க வேண்டி உள்ளது இல்லையா? (மதுபன் வாசிகள், அபு வாசிகள் அனைவரும் பாண்டவ பவனில் முரளி கேட்டுக் கொண்டுள்ளனர்). இதுவும் கூட பரிவாரத்தின் அன்பு ஆகும்! பிரம்மா தந்தையின் அன்பு என்பது தந்தைக்குச் சமமாக ஆவது! நிராகாருக்குச் சமமாக ஆவதில் சிறிது நேரம் அனுபவம் செய்கிறீர்கள் ஆனால் பிராமணன் என்றால் சதா பிரம்மாவிற்குச் சமமான பிரம்மாச்சாரி! தந்தை பிரம்மாவின் நடத்தை தான் அனைத்து பிராமணர்களின் நடத்தை ஆகும் அதாவது செயல்கள். பேசுவதும் பிரம்மா தந்தைக்குச் சமமாக, நடத்தையும் பிரம்மா தந்தைக்குச் சமமாக இருக்க வேண்டும், இதைத் தான் 'ஃபாலோ ஃபாதர்' (தந்தையைப் பின்பற்றுவது) என்பது! எனில் பிரம்மா தந்தையின் ஒவ்வொரு அடி மீது அடி வைப்பவர்தான் தந்தையைப் பின்பற்றுபவர் என்று கூறப்படுகிறார். என்றால் தந்தையின் ஸ்ரீமத்படி பிரம்மா தந்தை எடுத்து வைத்த முதல் அடி என்ன?

எப்படி முதல் அடி கட்டளைப்படி நடப்பவர் என்று கூறியிருந்தோம் அதே போல் இரண்டாவது அடி சர்வஸ்வ தியாகி (அனைத்தையும் தியாகம் செய்தவர்). முதலில் கட்டளைப்படி நடப்பவர் ஆனதினால் ஆசிர்வாதங்கள் கிடைத்தது மற்றும் ஆசீர்வாதங்களின் பலத்தினால் சர்வஸ்வ தியாகி. அப்படி தியாகத்தில் கூட நம்பர் ஒன் உதாரணமாக பிரம்மா ஆனார். தேகத்தின் உறவுகளின் தியாகம் பெரிய விஷயம் இல்லை ஆனால் தேகத்தின் பழைய சுபாவ சம்ஸ்காரத்தின் தியாகம் அவசியமாகும். உறவின் (சொந்தங்கள்) தியாகத்தை மற்ற தர்மத்திலும் (மதங்களிலும் செய்கிறார்கள் ஆனால் சுபாவ சம்ஸ்காரத்தின் அனைத்து வம்சம் சகிதமாக தியாகம் செய்வது இதைத் தான் சர்வஸ்வ தியாகி என்று கூறுவது. ஒருவேளை அம்சம் மாத்திரத்திலாவது தேகத்தின் சுபாவம், சம்ஸ்காரம் இருந்து விட்டது என்றால் அவ்வப்பொழுது அந்த வம்சம் அதிகரித்துக் கொண்டே இருக்கும். மேலும் அந்த வம்சம் அவ்வளவு வேகமாக இருக்கிறது எப்படி லௌகீக குடும்பத்தில் பார்த்திருக்கிறீர்கள் இல்லையா? பெரிய வயதானவர்கள் மிகவும் சாந்தமாக இருப்பார்கள் ஆனால் பேரன், பேத்திகள் மிகவும்

சுறுசுறுப்பாக இருப்பார்கள். அப்படி ஒருவேளை பழைய ஏதாவது வம்சம் இருந்து விட்டது என்றால் அதுவும் தலைகீழான அதிசயக் காரியத்தை செய்து காண்பிக்கும். அந்த நேரத்தின் நிலைமையை பாப்தாதா பார்க்கிறார், எப்படி யாராவது உலகத்தில் திவாலா கொடுக்கிறார் என்றால் ஒரு நொடியில் லட்சாதிபதியிலிருந்து பிச்சாதிபதி ஆகி விடுகிறார். அதே போல் தென்படுகிறது. அனைத்து பொக்கிஷமும் ஒரு நொடியில் இல்லாமல் ஆகி விட்டது. பிறகு கடுமையாக உழைக்க வேண்டியதாக இருக்கும் இல்லையா? எனவே சர்வஸ்வ தியாகி என்றால் தேகத்தின் உறவு மற்றும் தேகத்தின் பழைய சுபாவம், சம்ஸ்காரத்தையும் தியாகம் செய்தவர். எப்பொழுது வேண்டுமானாலும் உங்களுடைய நிலையை சோதனை செய்யுங்கள். ஒருவேளை ஏமாற்றுகிறது என்றால் யார் ஏமாற்றுகிறார்? சுபாவம். சம்ஸ்காரம் தான் இல்லையா? அப்படி தியாகத்தின் பாக்கியத்தை அழிப்பது இந்த சுபாவம், சம்ஸ்காரம் ஆகும். மேலும் பாப்தாதாவோ பிராமணர்களுக்காக தியாகத்தையும் தியாகம் செய்யுங்கள் என்று இன்னும் அழுத்தமாக கோடிட்டு காண்பிக்கிறார். 'நான் தியாகி ஆவேன்' இந்த அபிமானத்தையும் தியாகம் செய்ய வேண்டும். இதைத் தான் தியாகத்தையும் தியாகம் செய்வது என்று கூறுவது. நான் செய்தேன், சகித்துக் கொண்டேன், இதைச் செய்தேன், அதைச் செய்தேன் என்று இந்த கதைகள் கூறாதீர்கள். ஒருவேளை யாராவது சகித்தும் கொண்டார்கள் என்றால் சகித்துக் கொண்ட பிறகு சக்தி வருகிறது. சகித்துக் கொள்வது மட்டும் இல்லை, சகித்துக் கொள்வது என்றால் சக்தியை தாரணை செய்வது. எனவே தான் சகித்துக் கொள்ளும் சக்தி என்று கூறுகிறார்கள். சகித்துக் கொள்வது என்றால் சக்தி ரூபத்தின் பிரத்யக்ஷ ரூபம் காண்பிப்பது. அப்படியானால் நல்லதாகத்தான் நடந்தது இல்லையா? என்ன சகித்துக் கொண்டீர்கள்? இன்னும் லாபத்தை எடுத்தாகி விட்டது இல்லையா! மேலும் யாருக்காக சகித்துக் கொண்டீர்கள்? தந்தையின் கட்டளைப்படி நடப்பவர் ஆவதற்காக சகித்துக் கொண்டீர்கள், மற்றவர்களுக்காக சகித்துக் கொள்ளவில்லை. தந்தையின் கட்டளையை ஏற்று நடந்தீர்கள். அப்படி கட்டளைப்படி நடந்ததின் ஆசீர்வாதங்கள் கிடைக்கும் இல்லையா? என்ன சகித்துக் கொண்டீர்கள்? ஆசீர்வாதங்களை பெற்றீர்கள் இல்லையா? விஷபத்தை எதிரில் வைக்கும் பொழுது, இதுவரை அதிகமாக சகித்துக் கொண்டாகி விட்டது, எவ்வளவு தான் சகித்துக் கொள்வது, சகித்துக் கொள்வதற்கும்

ஒரு எல்லை இருக்க வேண்டும் என்று யோசிக்கிறீர்கள் ஆனால் எவ்வளவு எல்லைக்கப்பாற்பட்டு சகித்துக் கொள்வதோ அவ்வளவு எல்லைக்கப்பாற்பட்ட ஆசிர்வாதங்கள். ஏனென்றால் தந்தையின் கட்டளைப்படி நடப்பவர் ஆகுகிறீர்கள். சகித்துக் கொள் என்று தந்தை கூறியிருக்கிறார். அப்படியானால் கட்டளையை ஏற்று நடப்பது குஷிக்கான விஷயமா அல்லது நிர்பந்தத்திற்கான விஷயமா? நிர்பந்தத்தில் சகித்துக் கொள்ளாதீர்கள். சிலர் சகித்துக் கொள்ளவும் செய்கிறார்கள். மேலும் என்னைப் போல் யாரும் சகித்துக் கொள்வதில்லை என்று கூறவும் செய்கிறார்கள். பிறகு நான் எவ்வளவு சகித்துக் கொண்டேன் என்று உங்களுக்குத் தெரியாது என்று தாதிகளிடம் வந்து கூறுகிறார்கள் ஆனால் என்ன நஷ்டம் ஏற்பட்டு விட்டது. லாபம் தான் ஒன்றாகச் சேர்ந்தது. அப்படி தியாகத்தின் பரிபாஷையை (சூத்திரத்தை) புரிந்து கொண்டீர்களா? பாருங்கள் பக்தி மார்க்கத்தில் கூட எப்பொழுது பலி கொடுக்கிறார்களோ அப்பொழுது ஒருவேளை பலிகடா கதறுகிறது என்றால் அந்த பிரசாதம் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை என்ற இந்த அடையாளமும் இருக்கிறது. ஒரே வெட்டில் சுத்தாமல் கதறாமல் துண்டாகி விட்டது என்றால் பிரசாதம் ஆகி விடுகிறது. அப்படி பலிகடாவையும் கத்தாமல் இருக்க வேண்டுமே என்று கூறுகிறார்கள். மேலும் நீங்கள் கூறுகிறீர்கள் சகித்துக் கொண்டோம், சகித்துக் கொண்டோம் என்று இது பலிகடா கதறுவது போல் ஆனது இல்லையா? எண்ணத்திலோ, வார்த்தைகளிலோ கொஞ்சமாவது கதறினீர்கள் என்றால் பிரசாதமாக ஆகவில்லை. தந்தையால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றால் ஆசிர்வாதங்கள் எப்படி கொடுப்பார்? அப்படியானால் என்ன செய்வீர்கள், கொஞ்சம் கொஞ்சம் உள்ளுக்குள்ளேயே கதறுவீர்களா? கொஞ்சம் மூலையிலிருந்து குளியலறையிலிருந்து மறைத்து ஓரிரு கண்ணீர் துளிகள் வடிப்பீர்களா? கொஞ்சமாவது சலுகைகள் கிடைக்க வேண்டும் இல்லையா? மாதர்களை குழந்தைகள் அதிகமாக தொந்தரவு செய்கிறார்கள் என்றால் என்ன செய்வீர்கள்? கொஞ்சம் மனதால் அழுவீர்களா? மாதர்களே மனதால் அழுகிறீர்களா? கொஞ்சம் கொஞ்சம் அழுகிறீர்கள். மேலும் சகோதரர்கள் என்ன செய்கிறார்கள்? அவர்கள் கண்களால் அழுவதில்லை, ஆனால் கோபப்பட்டு உள்ளுக்குள்ளேயே அழுது விடுகிறார்கள். ஆவேசம் வருவதும் அழுவதுதான். அப்படியானால் பாண்டவ சேனை என்ன நினைக்கிறது? கொஞ்சம்

அழுவதற்கான சலுகை வேண்டுமா? யாருக்கு கொஞ்சம் கொஞ்சம் சலுகை வேண்டுமோ அவர்கள் கையை உயர்த்துங்கள். வேண்டாமா? எனவே இன்றிலிருந்து அழுவதின் கோப்பு முடிவு கட்டப்பட்டதா அல்லது கை தட்டி மட்டும் குஷிபடுத்தி விட்டீர்களா? பிறகோ இன்றிலிருந்து அஞ்சல் வருவதும் குறைந்து விடும். அஞ்சலுக்கான வீணான செலவு ஞானசரோவரில் மிச்சமாகி விடும். எப்பொழுது ஏதாவது அந்த மாதிரி விஷயம் வந்தால் அஞ்சலின் செலவை உண்டியலில் போட்டு விடுங்கள். ஞானசரோவரிலோ இன்னும் செலவு செய்ய வேண்டியது இருக்கிறது இல்லையா?

ஞானசரோவர் மேல் அனைவருக்கும் மிக நல்ல அன்பு இருக்கிறது. ஞானசரோவர் மேல் அன்பு என்றால் சேவை மேல் அன்பு. ஸ்தானத்தின் மேல் அன்பு இல்லை, ஆனால் சேவைக்கு நிமித்தமான ஸ்தானமாகும் என்றால் சேவை மேல் அன்பு இருக்கிறது. இங்கு அமர்ந்திருப்பவர்கள் அனைவரிலும் ஞானசரோவருக்காக தன்னுடைய கொண்டைக்கடலைக்குச் சமமாக சிறிதளவு பணத்தைக்கூட போடாதவர்கள் யாராவது இருக்கிறீர்களா? யார் யார் போட்டீர்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். அனைவரும் செய்திருக்கிறார்கள். மதுபன்னில் இருப்பவர்கள், ஹாஸ்பிட்டலில் இருப்பவர்கள், சேவாதாரிகள் அனைவரும் போட்டார்களா? அப்படி அனைவரின் சகயோகத்தினால் எவ்வளவு நல்ல சேவை ஸ்தானம் உருவாகி விட்டது என்று பாருங்கள். அனைவருக்கும் பிடித்திருக்கிறது தானே? ஆம், தங்குவதில் கொஞ்சம் சிரமம் இருந்தது ஆனால் அது சரியாகி விடும். பின்பு அடுத்த தடவை வரும் போது மகிழ்ச்சியைக் கொண்டாடுவீர்கள். இப்பொழுதோ சில நேரம் வெண்ணீர் கிடைப்பதில்லை, சில நேரம் தண்ணீர் கிடைப்பதில்லை, புதிய வீட்டில் இப்படியெல்லாம் நடக்கும் ஆனால் ஞானசரோவரில் இருப்பவர்கள் அனைவரும் குஷியாக இருக்கிறீர்களா? நீங்களோ மிக மிக பாக்கியம் நிறைந்தவர்கள் என்று கூறியிருந்தோம். பக்தி மார்க்கத்தின் மேளாக்களிலோ மண்ணில் தங்குவார்கள். இங்கோ மெத்தையும் கம்பளியும் கிடைத்தது தான் இல்லையா? அப்படியானால் அனைவரும் நன்றாக தூங்கியிருக்கிறீர்களா? புதிய படுக்கை, புதிய வீடு. இருந்தாலும் பாருங்கள், இவ்வளவு பேருக்கு வருவதற்கான வாய்ப்போ கிடைத்தது இல்லையா? நல்லது. தாதிகளுக்கு ஞானசரோவர் பிடித்திருக்கிறதா?

ஞானசரோவரில் இரண்டு இலட்சியம் இருக்கிறது -ஒன்றோ விசேஷ சேவை, இன்னொன்று பிராமணர்களுடைய புகலிடம். அப்படி இந்த இரண்டு இலட்சியத்தின் காரணமாக இதே விதியில் கட்டப்பட்டிருக்கிறது. இங்கு பாண்டவ பவனில் பிராமணர்களைத் தவிர மற்றவர்களை அனுமதிப்பதில்லை ஆனால் அங்கு அனேக நெருக்கத்தில் இருப்பவர்கள் நெருங்கிய சம்மந்தத்தில் வருவார்கள். எப்படி ஈஸ்வரிய விஷ்வ வித்தியாலயம் என்று பெயர் இருக்கிறதோ அப்படி வித்தியாலயம் என்ற பெயரை பிரத்யக்ஷம் செய்வீர்கள். அப்படி இரண்டு சேவை இல்லையா? இங்கு பிராமணர்களுக்காக கட்டப்பட்டிருக்கிறது அங்கு உலகில் உள்ள அனைத்து ஆத்மாக்களை மனதில் வைத்து கட்டப்பட்டுள்ளது. எனவே வித்தியாசம் ஆகி விட்டது இல்லையா? இலட்சியத்தில் வித்தியாசம் ஏற்பட்டுவிட்டது. நல்லது.

இன்னும் மற்ற அடிகளை பின்பு கூறுவோம் ஆனால் இங்கு இரண்டு அடிகளையும் மிக நல்ல முறையில் சோதனை செய்யுங்கள். மேலும் அனைத்து கோப்புகளும் முடிக்கப்பட்டு விட்டன என்று நினைவு வைத்துக் கொள்ளுங்கள். மறந்து விடாதீர்கள். எந்தக் கோப்பு? காரணத்தின் மற்றும் அழுவதின் கோப்பு. ஆவேசமும் அழுவதுதான். ஆவேசத்தில் வருவது கூட மனதால் அழுவது தான். நாங்கள் அழவில்லை என்று அவர்கள் நினைக்கிறார்கள் ஆனால் மனதிலோ மிகவும் அழுதிருக்கிறார்கள். அப்படி இந்த இரண்டு கோப்புக்களையும் முடித்து விட வேண்டும். தன் மேல் (ஃபைன்) அபராதம் போட்டு விடாதீர்கள், சுத்தமாக (ரிஃபைன்) ஆக வேண்டும்.

பிரம்மாபாபா தன்னுடைய ஆதியில் (தொடக்கத்தில்) உடனிருந்தவர்களைப் பார்த்து குஷியடைகிறார். துணையாக இருந்தவர்கள் தான் இல்லையா? டீச்சர்ஸ் நீங்கள் அனைவரும் துணையாக இருக்கிறீர்கள் இல்லையா? பாண்டவர்களும் ஆதியில் உடன் இருந்தவர்கள் என்றால் சக்திகளும் உடன் இருப்பவர்கள். வலது கரமாக இருக்கிறீர்கள். எனவே பிரம்மாவிற்கு அனேக புஜங்களைக் காண்பித்திருக்கிறார்கள். புஜம் என்றால் சகயோகி, உடனிருப்பவர். அனைவரும் வலது கரம் தான் இல்லையா? இங்கு இடது கூட வலதாகி விடுகிறது. இடதை இடது என்று கூறமாட்டோம், அனைவரையும்

உடனிருப்பவர் என்று கூறுவோம். நல்லது. நாலாபுறங்களிலும் இருந்து வந்திருக்கிறீர்கள்.

ஒன்று பாரதத்தின் சேவைக்கு பொறுப்பில் இருக்கும் அனைத்து ஜோன்கள், அப்படி பாரதத்தின் சேவாதாரி குழந்தைகளுக்கு பாப்தாதா சேவையின் வாழ்த்துக்களையும் வழங்குகிறார் மேலும் கூடவே எப்பொழுதும் உண்மையாக இருந்து நிரூபணம் கொடுக்கும் குழந்தைகளுக்கு விசேஷமாக தெய்வீக குணங்களின் ஆபரணத்தை பரிசாக கொடுக்கிறார். உண்மையின் அடையாளம் நிரூபணம் கொடுப்பது அதாவது பிரத்யக்ஷமாக நடந்து காண்பிப்பது. அப்படி உண்மையான குழந்தைகள் அவரவர்களின் நிரூபணம் அதாவது சேவையின் பலன்களை வெளிப்படையாக காண்பித்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் வரும் காலத்திலும் காண்பித்துக் கொண்டே இருப்பார்கள். இதற்காக உண்மையான குழந்தையாக இருப்பவர்களை பாப்தாதா மற்றும் தாயும் எப்பொழுதும் மிக நல்ல அலங்காரம் செய்கிறார்கள். யார் நல்ல குழந்தையாக இருப்பாரோ அவருக்கு எப்பொழுதுமே மிக நல்ல பொருட்களைக் கொடுப்பார்கள். அப்படி இங்கேயோ அனைவரும் ஒருவர் இன்னொருவரை விட நல்லவர்களாக இருக்கிறீர்கள். எனவே பாப்தாதா அந்த மாதிரி உண்மையான மற்றும் நிரூபணம் கொடுக்கக்கூடிய குழந்தைகளுக்கு விசேஷமாக தெய்வீக குணங்களின் ஆபரணத்தை பரிசாக கொடுக்கிறார். அப்படி இந்த பரிசை பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுங்கள். இவர்களுக்கு பரிசு கிடைத்துக் கொண்டிருக்கிறது என்று மாயாவுக்கும் தெரிய வந்து கொண்டிருக்கிறது, உங்களிடம் இரட்டை பூட்டு இருக்கிறது தான் இல்லையா? நினைவு மற்றும் சேவை இரண்டின் சமநிலையில் எப்பொழுதும் இருப்பது என்றால் இரட்டை பூட்டு போடுவது. அனைவரிடமும் இரட்டைப் பூட்டு இருக்கிறதா அல்லது ஒரு பூட்டு இருக்கிறதா, இன்னொன்று செயலிழந்து இருக்கிறதா? சாவி தொலைந்து விடவில்லையே என்றும் பார்த்துக் கொள்ளுங்கள். சாவியை மிக பத்திரமாக வைத்திருக்கிறேன் என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் ஆனால் எப்பொழுது அது தேவையோ அப்பொழுது கிடைப்பதில்லை மற்றும் தென்படவில்லை என்று அப்படியில்லையே? நல்லது.

**மதுபன் நிவாசி, ஹாஸ்பிட்டல் குடும்பம்:** (மதுபன் நிவாசி, ஹாஸ்பிட்டலைச் சேர்ந்தவர்கள் அனைவரும் பாண்டவ பவனில் அமர்ந்து முரளி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்). அவர்களுக்கு சிந்தனை வந்து கொண்டிருக்கிறது. மதுபனில் இருப்பவர்களோ ஒவ்வொரு நாளின் லாட்டரியைப் பெறுபவர்கள். எவ்வளவு லாட்டரி கிடைக்கிறது. கடின முயற்சி செய்ய வேண்டியதில்லை, தானாக லாட்டரி வந்து விடுகிறது. மதுபனில் இருந்தாலும் அல்லது ஹாஸ்பிட்டலைச் சேர்ந்தவர்களானாலும் அல்லது ஞானசரோவரில், மேலே கீழே யார் யாரெல்லாம் இருக்கிறார்களோ அவர்கள் அனைவருக்கும் தினசரி லாட்டரி கிடைக்கிறது. மேலும் லாட்டரி மூலமாகத் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மிகவும் சௌகரியமாக உணவு அருந்திக் கொண்டும் இருக்கிறார்கள். சென்டரில் இருப்பவர்களுக்கோ உண்டியலை நிரப்புவதற்கு எவ்வளவு கடின உழைப்பு செய்ய வேண்டியதாக இருக்கிறது. மேலும் மதுபனில் இருப்பவர்களின் உண்டியலும் சமையலறையும் எப்பொழுதும் நிரம்பி இருக்கிறது. மதுபன் செலவு செய்வது மேலும் மதுபனில் சேமிட்பு செய்பவர்கள் சென்டரைச் சேர்ந்தவர்கள். அப்படி சென்டரில் இருப்பவர்கள் சம்பாதிக்கும் குழந்தைகள் அப்படி சம்பாதிக்கும் போதை, லாட்டரியின் போதை அவரவர்களுடையது. அப்படி அனைவருக்கும் அவரவர்களின் பாக்கியம் கிடைத்திருக்கிறது. யாருடைய பாக்கியமும் யாருடையதை விடவும் குறைந்தது அல்ல. ஏனென்றால் பாக்கியத்தை உருவாக்குபவரின் பாக்கியத்தின் பண்டாரா நிரம்பி இருக்கிறது. எனவே அனைவருக்கும் ஒருவர் இன்னொருவரை விட அதிக பாக்கியம் இருக்கிறது. அவரவர்களுடையது மட்டும் இருக்கிறது ஆனால் ஒவ்வொருவரின் பாக்கியம் ஒருவர் இன்னொருவரைவிட நல்லதாக இருக்கிறது நல்லது

**டீச்சர்களுடன்:** டீச்சர்கள் நீங்கள் யாராக இருக்கிறீர்கள்? வலது கரம் தான் இல்லையா? வலது கரம் இன்றி ஒருவேலையும் நடப்பதில்லை. தந்தையின் காரியத்தை நிறைவேற்றுபவர்கள் வலது கரம். நல்லது. நாலாபுறத்திலுமுள்ள பாப்தாதாவின் அன்பை பிரத்யக்ஷம் செய்யக்கூடிய அனைத்து குழந்தைகளுக்கும், தந்தையைப் பின்பற்றி நடக்கக்கூடிய உயர்ந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் பாப்தாதாவின் அடி மேல் அடி எடுத்து வைக்கக்கூடிய கட்டளைப்படி நடக்கும் உயர்ந்த

ஆத்மாக்களுக்கு எப்பொழுதும் உறுதியான எண்ணம் மூலம் பிரம்மா பாபாவிற்கு சமமாக சர்வஸ்வ தியாகி விசேஷ ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் உண்மையானவராகி ஒவ்வொரு நேரமும் நிரூபணம் கொடுக்கக்கூடிய பாத்திரமான ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

தாதிகளுடன்: அனைத்தும் சுலபமாக நிறைவேறிக் கொண்டிருக்கிறது இல்லையா? குஷி அனைத்தையும் மறக்கச் செய்து விடுகிறது. குஷியின் எதிரில் வேறு ஒன்றுமே அனுபவம் ஆவதில்லை. அப்படி மதுபன் குஷிகளின் சுரங்கம். குஷியின் காரணமாக அனைத்தும் சுலபமாகி விடுகிறது. உணவு கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் குஷி என்ற சத்துணவு கிடைத்துக் கொண்டே இருக்கிறது. (சபையை பார்த்துக் கொண்டே) அனைவரும் மிகுந்த குஷியில் இருக்கிறீர்கள் இல்லையா? அல்லது கொஞ்சம் கொஞ்சம் குறை இருந்து விட்டதா? இல்லை. குஷிகளின் சுரங்கத்திற்கு வந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? என்ன ஆனாலும் சரி, திருப்தியின் வரதானம் கிடைக்கப் பெற்றிருக்கிறது. திருப்தியின் பலன் மகிழ்ச்சி நிறைந்த நிலை. அனைவரும் மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள். மேலே கீழே சென்றாலும் மீண்டும் மகிழ்ச்சியுடையவர் ஆகி விடுகிறார்கள். ஒருவேளை மகிழ்ச்சி நிறைந்த ஆத்மாக்களை பார்க்க வேண்டும் என்றால் எங்கே பார்ப்பது? மதுபனிலா அல்லது சென்டரிலும் கூடவா? மகிழ்ச்சி நிறைந்தவர்களைப் பார்க்க வேண்டும் என்றால் பிராமணர்களைப் பாருங்கள். எப்பொழுதும் திருப்தியான மகிழ்ச்சி நிறைந்த எண்ணம் உடையவர்கள். எண்ணத்தில் வேறு ஏதாவது இருக்கிறதா என்ன? மகிழ்ச்சியான நிலையே தான். அப்படித் தான் இல்லையா? அனைவரும் மகிழ்ச்சி நிறைந்தவர்களாக இருக்கிறீர்களா அல்லது கவலை நிறைந்தவர்களாக இருக்கிறீர்களா? இந்த மாதிரி அனைவரும் சிரித்துக் கொண்டே இருக்கும் மாதிரி வேறு ஏதாவது சபை இருக்க முடியுமா? மற்ற சத்சங்களில் சென்றீர்கள் என்றால் சிலருடைய முகம் ஒரு மாதிரியும், சிலருடைய முகம் வேறு மாதிரியும் இருக்கும். மேலும் இங்கு அனைவரின் முகத்தைப் பார்த்தீர்கள் என்றால் எப்படி இருக்கிறது. புன்முறுவலுடன் இருக்கிறது. பிராமணர்களின் புன்முறுவலின் அடையாளம் தேவதைகளின் படங்களிலும் சிலைகளிலும் காண்பிக்கிறார்கள். அது யாருடைய படங்கள்?

உங்களுடையது தான் இல்லையா? அல்லது பெரிய தாதிகளினுடையதா? உங்களுடைய கோவில் இருக்கிறதா? நீங்கள் எந்த தேவி மற்றும் தேவதை தெரியுமா? கணேஷா, அனுமானா, தேவிகளா, என்னவாக இருக்கிறீர்கள்? எந்த தேவி தேவதையாக இருந்தாலும் தெய்வீக குணங்கள் நிறைந்த ஆத்மா தேவதையாவீர்கள் நீங்கள். பிறகு யாராவது அனுமான் என்று கூறினாலும், கணேஷர் என்று கூறினாலும் அல்லது தேவி என்று கூறினாலும் நீங்கள் தெய்வீக குணங்கள் நிறைந்த தேவ ஆத்மாக்கள்.

நல்லது. (தாதிகளுடன்) உங்களுடைய பக்தர்கள் எந்த நேரம் பிரார்த்தனை செய்கிறார்கள் என்று உங்களுக்கு தெரியுமா? எந்த நேரம் பக்தர்கள் அழைக்கிறார்கள் என்றால் உங்களுக்கு அது தெரிய வருகிறதா? அல்லது உங்களுடைய போதையிலேயே மூழ்கியிருக்கிறீர்களா? பாவம் பக்தர்கள் அந்த மாதிரியே கதறிக் கொண்டிருக்கிறார்கள். உணர்வு ஏற்படுகிறது தான் இல்லையா? பக்தர்களின் கூக்குரலின் உணர்வு அவசியம் வருகிறது. அப்பொழுது தான் சுபபாவனை மற்றும் நல்விருப்பங்களை கொடுக்கிறீர்கள் இல்லையா? சுற்றுப்புறச்சுழலில் அமைதியை ஏன் பரப்புகிறீர்கள், லைட் ஹவுஸ் மற்றும் மைட் ஹவுஸாக ஏன் ஆடுகிறீர்கள்? அனைத்து பக்த ஆத்மாக்கள் மற்றும் மற்ற ஆத்மாக்கள் திருப்தியாக குஷியாக, அமைதியாக இருக்க வேண்டும் என்பதற்காக. (தாதி ஜானகியுடன்) உலக பூமி உருண்டையின் மேல் நின்று கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? அல்லது லண்டனின் உருண்டையில் நின்று கொண்டிருக்கிறீர்களா? உலக உருண்டையில் இருக்கிறீர்கள் இல்லையா? மதுபனின் உருண்டையில் இல்லை, ஆனால் உலக உருண்டையில் நிற்கிறீர்கள். வருவது மற்றும் செல்வதோ பயிற்சி ஏற்பட்டு விட்டது. இப்பொழுது வருவது மற்றும் செல்வது எப்படி அனுபவம் ஆகிறது? வெளிநாடாகவா அல்லது வீடாக அனுபவம் ஆகிறதா? வீட்டில் இருந்து ஹாலில் வந்தீர்கள் அல்லது ஹாலிலிருந்து வீட்டில் வந்தீர்கள். நல்லது -லண்டனைச் சேர்ந்தவர்களுக்கும் விசேஷ சேவைக்காக வாழ்த்துக்கள். கடினத்தை சுலபமாக்குவது இதுவொரு நல்ல உதாரணம் ஆகும். நன்றாக இருக்கிறது. சிலர் உடலால், சிலர் மனதால், சிலர் பொருளால் அனைவரின் சகயோகத்தினால் தான் வெற்றி கிடைத்திருக்கிறது. (மேலும் கிடைத்துக் கொண்டே இருக்கும்.

லண்டனும் வெளிநாட்டின் லைட் ஹவுஸ் ஆகும். எப்படி பாரதத்திற்காக மதுபன் லைட் ஹவுஸ் ஆக இருக்கிறது என்றால் லண்டனும் லைட் ஹவுஸ் தான். எனவே இரண்டு தாதிகள் மேலும் மிகுந்த அன்பு இருக்கிறது இல்லையா? இருவருக்கும் தந்தை மேல் அன்பு மேலும் தந்தைக்கு இவர்கள் மேல் அன்பு. மேலும் அனைவருக்கும் தாதிகள் மேல் அன்பு இருக்கிறது. அதிகமான அன்பு இருக்கிறது இல்லையா? நல்லது தான். அன்பு தான் கோட்டை ஆகும். ஒருவேளை அன்பின் கோட்டை இல்லாமல் இருந்தது என்றால் யக்ஞத்தின் ஸ்தாபனையின் காரியம் ஆட்டம் கொடுக்கும் ஆனால் அன்பின் கோட்டை அழியாததாக துண்டுபடாமல் நடத்துவித்துக் கொண்டிருக்கிறது. நல்ல ஜோடி தான். அன்பு வைக்க வேண்டும் என்றால் இந்த மாதிரி அன்பு வையுங்கள், அன்பானவர்களாகவும் இருக்கிறார்கள், மேலும் விலகியவர்களாகவும் இருக்கிறார்கள். நல்லது.

வரதானம்: எப்பொழுதும் தந்தையின் அழியாத மற்றும் சுயநலமற்ற அன்பில் ஐக்கியமாகி இருக்கக்கூடிய மாயா ப்ரூ ஃப் (மாயாவால் தாக்க முடியாதவர்) ஆகுக!

எந்தக் குழந்தைகள் எப்பொழுதும் தந்தையின் அன்பில் ஐக்கியமாகி இருக்கிறார்களோ அவர்களை மாயா கவர்ச்சிக்க முடியாது. எப்படி வாட்டர் ப்ரூ ஃப் துணி இருக்கிறது, அதில் ஒரு துளி நீர் கூட நிற்காது. அப்படி யார் முழு ஈடுபாட்டுடன் அன்பில் ஐக்கியமாகி இருக்கிறார்களோ அவர் மாயா ப்ரூ ஃப் ஆகி விடுகிறார். மாயாவின் எந்த விதமான முற்றுகையும் செய்ய முடியாது. ஏனென்றால் தந்தையின் அன்பு அழியாதது மற்றும் சுயநலமற்றது, யார் இதன் அனுபவி ஆகி விட்டார்களோ அவர்கள் அற்ப காலத்தின் அன்பில் மாட்டிக் கொள்ள முடியாது. ஒரு தந்தை, இரண்டாவது நான், இதற்கிடையில் மூன்றாவதாக யாரும் வர முடியாது.

சுலோகன்: விலகியிருந்து அன்பானவராகி காரியம் செய்பவர் தான் ஒரு நொடியில் முற்றுப்புள்ளி வைக்க முடியும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 26.01.1995 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அன்பின் அடையாளமாக தன்னை மாற்றிக் கொள்வதில் தன்னை சக்திசாலியானவராக ஆக்குங்கள்!

இன்று இந்த சீசனின் கடைசி சந்திப்பு. வெளிநாட்டினரின் சீசன் வேறு, ஆனால் இன்டியன் புரோகிராம் படியோ இன்று கடைசி, மேளாவின் விஷயமோ வேறாகும் ஆனால் பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார்; முழு சீசனில் சந்திப்பது, கலகலப்பாக இருப்பது, குஷியாக இருப்பது இவை அனைத்தும் நல்லது தான் ஆனால் அன்பின் அடையாளம் என்பது என்ன? சென்டர்களில் அல்லது குடும்பத்தில் இருந்து கொண்டே தன்னுடைய தினசரி கால அட்டவணையில் மாற்றம் செய்யுங்கள். மேலும் மாற்றமாக என்ன செய்வது? ஃபாலோ ஃபாதர் (தந்தையைப் பின்பற்றுவது) மட்டும் செய்ய வேண்டும். பிரம்மாபாபா என்ன செய்தார்? பிரம்மாபாபா கவனக்குறைவாக இருந்தாரா? கடைசி நாள் வரை ஓய்வாக இருந்தாரா? இல்லை. இந்த அடையாளம் இருக்கிறது தான் இல்லையா? உங்களுக்கும் அவர் மேல் அன்பு இருக்கிறது இல்லையா? எவ்வளவு அன்பு இருக்கிறது? (டூ மச்) (மிக அதிகம்) மேலும் அதற்கான அடையாளம் எவ்வளவு? இதில் டூ மச் என்று சொல்லவில்லை. எனவே இப்பொழுது அன்பின் கூடவே தன்னை சக்திசாலியாகவும் ஆக்குங்கள். தன்னுடைய மாற்றத்தில் சக்தி ரூபம் ஆகுங்கள். சசுஜயோகி, சகஜயோகி என்று சொல்லி கவனக்குறைவைக் கொண்டு வராதீர்கள். தன்னை பொருத்தவரையிலும், சேவையைப் பொருத்தவரையிலும் மற்றவர்களின் உறவு நெருக்கத்திலும் கவனக்குறைவு அதிகமாக வந்து விட்டது என்று பாப்தாதா பார்க்கிறார். இது எல்லாமே இருக்கத் தான் செய்யும் என்று அந்த மாதிரி நினைக்காதீர்கள். ஒருவர் இன்னொருவரை காப்பி செய்யாதீர்கள், தந்தையைக் காப்பி செய்யுங்கள். மற்றவர்களைப் பார்க்கும் பழக்கம் கொஞ்சம் அதிகமாகி விட்டது. தன்னைப் பார்ப்பதில் கவனக்குறைவு

வந்து விட்டது. கிட்டப்பார்வை பலஹீனமாகி விட்டது மற்றும் தூரப்பார்வை துல்லியமாகி விட்டது என்று பாப்தாதா ஏற்கனவே கூறியிருந்தார் இல்லையா? அப்படியானால் இப்பொழுது என்ன செய்வீர்கள்? சீசனின் பழமாக (பலனாக) என்ன கொடுப்பீர்கள்? தந்தை வந்தார், சந்தித்தோம், கொண்டாடினோம், முரளி கேட்டோம் என்று இது மட்டும் தான் பழமா (பலனா)? ஒவ்வொரு சீசனுக்கான பழம் இருக்கிறது இல்லையா? அப்படி இந்த சீசனின் பழமாக பாப்தாதாவிற்கு என்ன 'போக்' ஸ்வீகாரம் செய்விப்பீர்கள். 'போக்' வைத்தீர்கள் என்றால் பழமும் வைக்கிறீர்கள் இல்லைய. அதுவோ பஜாரில் கிடைத்து விடுகிறது, பெரிய விஷயம் ஒன்றுமில்லை. இப்பொழுது இந்த சீசனின் பழமாக என்ன படைப்பீர்கள் அல்லது 'போக்' வைப்பீர்கள்? வைக்க வேண்டுமா அல்லது கடினமாக இருக்கிறதா? நம்பர் ஒன் 'போக்' எங்கிருந்து வருகிறது என்று பார்க்கலாம். மிக நல்ல நல்ல உறுதிமொழியையோ செய்து விட்டு செல்கிறீர்கள். ஒருபொழுதும் முடியாது என்று சொல்வதில்லை. சரி என்று தான் சொல்கிறீர்கள். குஷியடையச் செய்து விடுகிறீர்கள் ஆனால் இப்பொழுது என்ன செய்வீர்கள். டீச்சர்கள் நம்பர் ஒன் 'போக்' வைப்பீர்கள் தான் இல்லையா? அனைத்து சென்டர்களின் 'போக்'கை பார்க்கலாம். குடும்பத்தில் இருப்பவர்கள் கூட 'போக்' வைக்கிறீர்கள் தான் இல்லையா? அல்லது நீங்களே சாப்பிட்டு விடுகிறீர்களா? இது சென்டர்களில் இருப்பவர்களின் வேலை என்று அப்படி நினைக்காதீர்கள், அனைவரின் வேலையாகும். அப்படி கட்டளைப்படி நடப்பவரின் அடியை நடைமுறையில் கொண்டு வர வேண்டும்.

நான்காவது அடி -நம்பிக்கைக்குரியவர். ஒருபொழுதும் மனதால், டத்தியால், எண்ணத்தினால் தந்தையின் நம்பிக்கையற்றவராக ஆக வேண்டாம், நம்பிக்கைக்குரியவரின் அர்த்தமே எப்பொழுதும் ஒரு தந்தை, வேறு யாரும் இல்லை என்பதாகும். எண்ணத்தில் கூட உடல், உடல் சம்மந்தப்பட்ட உறவுகள், உடல் சம்மந்தப்பட்ட பதார்த்தங்கள் மற்றும் தேகத்திலிருக்கும் நபர்கள் ஈர்க்க வேண்டாம். எப்படி கணவன் மனைவி எப்பொழுது ஒருவர் இன்னொருவருக்கு நம்பிக்கைக்குரியவராக ஆகிறார் என்றால் கனவில் கூட ஒருவேளை வேறொருவரின் நினைவு வந்து விட்டது என்றால், நம்பிக்கைக்குரியவர் என்று கூற முடியாது. அப்படி பிரம்மாபாபாவைப்

பார்த்தீர்களா, எண்ணத்தில் கூட இன்னொருவரின் பக்கம் செல்லவில்லை. ஒரு தந்தை தான் அனைத்தும் என்ற இந்த உணர்வைத் தான் நம்பிக்கைக்குரியவர் என்று கூறுவது. ஒருவேளை பதார்த்தங்களின் ஈர்ப்பும் இருக்கிறது. சாதனங்களின் ஈர்ப்பும் இருக்கிறது என்றால் சாதனா (முயற்சி) துண்டித்து விடுகிறது. நம்பிக்கைக்குரிய நிலை (கற்பு) உடைந்து விடுகிறது. மேலும் உடைந்தது ஒருபொழுதும் நிரம்பியவராக, பூஜைக்குரியவராக மஹிமை செய்யப்படுவதில்லை. எனவே எண்ணத்தில் கூட ஏதாவது ஒரு கவர்ச்சி, உங்களை நம்பிக்கையற்றவராக ஆக்கி விடவில்லையே என்று சோதனை செய்யுங்கள். ஒருவேளை கொஞ்சமாவது யாரிடமாவது விசேஷ கவர்ச்சி இருக்கிறது, சிறிதேனும் தனிப்பட்ட ஈர்ப்பு இருக்கிறது, அது குணங்களின் மேலானாலும், சேவையின் மேலேயோ அல்லது நல்ல சம்ஸ்காரத்தின் மேலேயோ ஒருவேளை அதிகப்படியாக பிரபாவம் ஆகிறீர்கள் என்றால் நம்பிக்கைக்குரியவர் என்று சொல்ல முடியாது. அனைவரின் விசேஷத்தில், எல்லைக்கப்பாற்பட்ட விசேஷத்தில் ஈர்க்கப்படுவது என்றால் அது வேறு விஷயம் ஆனால் ஏதாவது விசேஷ நபர் அல்லது சாதனங்களின் மேல் கவரப்படுகிறார் என்றால் நம்பிக்கைக்குரியவர் என்ற பட்டியலிலிருந்து துண்டிக்கப்பட்டு விட்டார் என்று தான் கூற முடியும். அதனால் உடைந்த மூர்த்தியாக நீங்கள் இல்லையே என்று சோதனை செய்யுங்கள். பூஜைக்குரிய நிலையில் இருக்கிறேனா? எங்காவது அதிகப்படியான பற்றுதல் மற்றும் ஈர்ப்போ இல்லையே? எண்ணத்தில் கூட ஈர்ப்பு வேண்டாம். வார்த்தைகள், செயல்களின் விஷயங்களையே விட்டு விடுங்கள் ஆனால் எண்ண அளவில் இருந்தால் கூட துண்டிக்கப்பட்டவர் பட்டியலில் வந்து விடுவார். அப்படி சோதனை செய்யத் தெரியும் இல்லையா? நல்லது.

இப்பொழுது ஏதாவது புதுமையைக் காண்பியுங்கள். புது வருடமோ தொடங்கி விட்டது. பாப்தாதாவிற்கு தொடக்கத்தின் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் எப்பொழுதும் நினைவு வருகிறது. அந்த நேரத்து பலனாக நீங்கள் இருக்கிறீர்கள். ஒருவேளை எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வு இல்லாமல் இருந்திருந்தால் ஸ்தாபனையில் இவ்வளவு வளர்ச்சி ஏற்பட்டிருக்க முடியாது. பிரம்மாபாபா கடைசி வரை அதிக வயோதிகராக இருந்த

போதிலும், உடலின் கணக்கை முடித்துக் கொண்டே எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியத்தின் நிலையும் வெளிப்படையாக தென்பட்டது. சாதனங்களைத் தனக்காக ஏற்றுக்கொள்ளவில்லை. சேவைக்காக ஏற்றுக் கொண்டார் என்பது வேறு விஷயம். தனக்காக ஏற்றுக்கொள்வது மற்றும் சேவைக்காக காரியத்தில் ஈடுபடுத்துவது -இதன் வித்தியாசத்தையோ தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? தனக்காக எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் இருக்கட்டும். சேவைக்காக சாதனங்களை காரியத்தில் ஈடுபடுத்துங்கள் ஆனால் சாதனம் கவனக்குறைவை கொண்டு வர வேண்டாம். அப்படி இந்த விஷயத்தில் தந்தையைப் பின்பற்றி நடப்பவராக நீங்கள் ஆக வேண்டுமா அல்லது இனி வரக்கூடியவர்கள் செய்ய வேண்டுமா? நீங்கள் செய்ய வேண்டும். நல்லது.

குழந்தைகளை எப்பொழுதும் என்ன என்று கூறுவது? குலவிளக்கு. அப்படி பிராமண குலத்தின் எப்பொழுதும் பிரகாசமாக எரிந்து கொண்டிருக்கும் விளக்காக இருக்கிறீர்கள் இல்லையா? தந்தையின் உயர்ந்த விருப்பங்களின் தீபத்தை ஏற்றக்கூடிய குல தீபம் ஆவீர்கள். அந்த மாதிரி தான் இல்லையா?

நல்லது, இன்று டீச்சர்கள் (சகோதரிகள்) முன்னால் அமர்வதற்கான வாய்ப்பை எடுத்திருக்கிறார்கள் -அமருவதற்கான வாய்ப்பில் மட்டும் குஷியடைந்து விடாதீர்கள். இதில் கூட நம்பர் ஒன் வாய்ப்பை எடுக்க வேண்டும். இப்பொழுது அனைத்தும் மாறிவிடுகிற மாதிரி உங்களுக்குள் தினசரி காரியங்களை வடிவமைத்துக் கொள்ளுங்கள். என்ன வந்ததோ அதைச் செய்தேன், எப்பொழுது வந்ததோ அப்போது அதைச் செய்தேன் என்றில்லாமல் தினசரி காரியங்களைத் தொய்வாக விடாதீர்கள். இது நல்லது தானே அல்லது சகஜ யோகிக்குப் பதிலாக கடின யோகியாக ஆகி விடுவீர்களா?

நல்லது. இன்று அனைத்து மண்டலங்களுக்கும் எப்பொழுதும் தந்தையைப் பின்பற்றி நடப்பதில் நம்பர் ஒன் ஆகுங்கள் என்ற விசேஷ வரதானத்தை மற்றும் சேவையை பாப்தாதா கொடுக்கிறார். மேலும் எந்த சென்டர் மற்றும் எந்த மண்டலம் (ஜோன்) ஃபாலோ ஃபாதர் செய்வதில் நம்பர் ஒன்னாக இருக்கிறது என்று பார்ப்பார். நான் நம்பர்

ஒன்னாகத் தான் இருக்கிறேன்; ஆனால் மற்றவர்கள் இருக்கவில்லை அதனால் நம்பர் ஒன் பரிசு கிடைக்காது என்று அப்படி நினைக்காதீர்கள். இப்பொழுது எந்த ஜோனில் எது நம்பர் ஒன் சேவை நிலையமாக இருக்குமோ அதற்கு மிக நல்ல பரிசு கொடுப்போம். எனவே சென்டர்களுக்கு இந்த ரிசல்ட்டைக் காண்பிக்க வேண்டும். சென்டரில் வரக்கூடிய மாணவர்களும் இதில் வந்து விடுகிறார்கள். ஒன்று சென்டரில் உடன் இருப்பவர்கள் மற்றும் இன்னொன்று வரக்கூடிய மாணவர்கள் இருவருமே நம்பர் ஒன்னாக இருக்கட்டும். அப்படியானால் எவ்வளவு காலத்தில் பரிசைப் பெறுவீர்கள்? எவ்வளவு கூறுகிறீர்களோ அவ்வளவு கொடுப்போம். ஒருவேளை இரண்டு வருடங்கள் என்று சொன்னீர்கள் என்றால் இரண்டு வருடமும் கொடுப்போம். சொல்லுங்கள், இரண்டு வருடங்கள் தேவையா? ஒரு வருடம் போதுமா? எவ்வளவு வேண்டும்? (ஆறு மாதங்கள்). நல்லது. ஆறு மாதங்களாகவே இருக்கட்டும். ஏனென்றால் அடுத்த சீசன் ஆறு மாதங்களுக்குப் பிறகு தான் தொடங்கும். அப்படி முதல் சந்திப்பில் வருபவர்களுக்கு இந்த மாதிரி ரிசல்ட் கொடுப்பவர்களுக்கு பாப்தாதா விசேஷமாக தங்குவதற்காக நல்ல ஏற்பாடு செய்து கொடுப்பார். 'குஞ்ச் பவன்' நல்லது இல்லையா? ஒரு அறையில் இரண்டு இரண்டு பேர்கள் தூங்கிக் கொள்ளுங்கள்.

மதுபன்னில் இருப்பவர்களோ அனைத்திலும் முதலில் செய்யும் நான் தான் அர்ஜுனன் ஆவார்கள். மதுபனின் வைப்ரேஷன் அதிர்வலைகள் நாலாபுறமும் பரவுகிறது. அப்படி மதுபனில் இருப்பவர்களோ எப்பொழுதுமே சரி செய்கிறேன் பாபா.. என்று ஆஜராக இருப்பவர்கள். சரி என்று கூறுபவர்கள் தான் இல்லையா அல்லது இடையிடையே முடியாது, இல்லை என்று சொல்வதும் பிடித்திருக்கிறதா? மிக நல்ல பரிசு கொடுப்போம். முற்றிலும் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உடைய ஆத்மா என்ற அனுபவம் ஆகட்டும். எனக்குத் தான் எல்லாம் தெரியுமே என்கிறவர்களாக ஆகாதீர்கள். ஆம். இவர் நம்பர் ஒன் என்று மற்றவர்கள் சான்றிதழ் கொடுக்கட்டும். மூன்று சான்றிதழ்கள் இருக்கிறது இல்லையா? ஒன்று மனதிற்குப் பிடித்தவர், இரண்டாவது தந்தைக்குப் பிடித்தவர், மூன்றாவது அனைவருக்கும் பிடித்தவர். அப்படி யார் இந்த மூன்று சான்றிதழ்களையும் பெறுவார்களோ அவர்களுக்கு அதிக நாட்கள் இருப்பதற்கான ஏற்பாடு செய்வோம். அதிகப்படியான

பிரம்மா போஜனமும் அளிப்போம். அனைத்தையும் விட முதலிலோ வெற்றி அடைந்தவர் என்று அறிவிப்போம், இது எவ்வளவு நன்றாக இருக்கும், வெற்றி இரத்தினங்களின் மாலை உருவாகி விடும். அனைவரும் இதில் தன்னுடைய நம்பரை பெற முடியும். டீச்சர்ஸ் தான் எடுக்க முடியும் என்று அப்படி இல்லை! குடும்பத்தில் இருப்பவர்களுக்கும் டீச்சர்கள் சான்றிதழ்கள் கொடுத்தார்கள் என்றால் நம்பர் பெற முடியும் ஆனால் என்னுடைய டீச்சரோ கொடுக்க மாட்டார் என்று அப்படி யோசிக்கிறீர்களா? ஒருவேளை அந்த மாதிரி ஏதாவது விஷயம் இருக்கிறது என்றால் தாதிகளிடம் சரி பார்த்துக் கொள்ளுங்கள்.

அனைத்து மண்டலங்களையும் சேர்ந்தவர்கள் என்ன யோசித்திருக்கிறீர்கள்? அனைவரும் நம்பர் ஒன் எடுப்பவர்களாக ஆவீர்களா? நல்லது. இந்தூரைச் சேர்ந்தவர்கள் நம்பர் ஒன்னாக ஆவீர்களா? போபாலும் நம்பர் ஒன், 100-சதவிகிதம். மேலும் இந்தூர் 100'ஐ விட 10-20 எண்கள் அதிகமாக பெறுவார்கள். மேலும் பஞ்சாப் 1000! பஞ்சாபிற்கோ நான்கு லட்சங்களின் மாலை கொண்டு வர வேண்டியதாக இருந்தது. உறுதியாக இருக்கிறீர்கள் இல்லையா? மறந்து விட வில்லையே? நான்கு லட்சங்களிலிருந்து அடுத்த சீசன் வரை ஒரு லட்சத்தை கொண்டு வாருங்கள். கொண்டு வருகிறீர்களா என்று பார்க்கலாம். பஞ்சாபைச் சேர்ந்தவர்கள் என்ன செய்வீர்கள்? இப்பொழுது பஞ்சாபின் பொறுப்பிலிருப்பவருக்கு (தாதி சந்திரமணி) ஞான சரோவரின் விதை போடப்பட்டிருக்கிறது, இரட்டை பொறுப்பாளர் ஆகி விட்டார். அப்படியானால் பஞ்சாபைச் சேர்ந்த டீச்சர்கள் செய்வீர்கள் தான் இல்லையா? ஆமாம்,சரி என்றாவது சொல்லுங்கள். செய்வீர்களா? நல்லது. டெல்லியைச் சேர்ந்தவர்கள் எந்த எண்ணை எடுப்பீர்கள்? அனைவரும் நம்பர் ஒன் எடுப்பீர்களா? டெல்லியைச் சேர்ந்வர்களுக்கு ஏ ஒன் என்று சொல்ல வேண்டும். டெல்லிக்கோ நிமித்தமாக ஆக வேண்டும் இல்லையா? சென்ற தடவை அனைத்து மண்டலங்களைச் சேர்ந்தவர்களுக்கும் வேலை கொடுத்திருந்தோம், என்ன செய்ய வேண்டும் என்று நினைவு இருக்கிறதா? சிறிய மைக்கை கொண்டு வராதீர்கள், ஒற்றுமையான ரூபத்தில் பெரிய பெரிய மைக் கொண்டு வர வேண்டும். இந்தூர் சேட்டுகளின் (செல்வந்த முக்கியஸ்தர்கள்) கூட்டத்தைக் கொண்டு வர வேண்டும். போபால்

குழுவின் ரூபத்தில் கொண்டு வர வேண்டும். பஞ்சாப் உலகத்தில் பெயர் பெறும் மாதிரியான குரூப்பைக் கொண்டு வர வேண்டும். யார் மூலமாக பெயர் ஏற்படும்? யார் யார் பெரிய பெரிய தீவிரவாதிகள் இருக்கின்றனரோ அவர்களை உள்நோக்கு முகமுடையவர்களாக ஆக்கி விட வேண்டும். பின்பு அரசாங்கம் பிரம்மா குமாரிகளுக்கு வெகுமதி அளிப்பார்கள். பிரசித்தி பெற்ற அனைவருக்கும் தெரிந்த யார் மேல் வெகுமதி அறிவிக்கப்பட்டிருக்கிறதோ அந்த மாதிரியானவராக இருக்கட்டும். அந்த மாதிரி அதிசயத்தை, செய்யுங்களேன். மந்திரியோ வந்து கொண்டே தான் இருக்கிறார். பஞ்சாபைச் சேர்ந்தவர்கள் செய்ய முடியுமா? அல்லது தீவிரவாதிகளைக் கண்டு பயப்படுகிறீர்களா? பார்க்கலாம், எந்த சென்டர் யாரை அழைத்து வருகிறார்கள் என்று. ஏதாவது புதிய விஷயம் செய்து காண்பியுங்கள், பாருங்கள் ஒரு கொள்ளைக்காரன் வந்தால் கூட எவ்வளவு சேவை ஆகி விடும் ஆனால் அவர்களை கொள்ளைக்காரனிலிருந்து பிராமணனாக ஆக்கி அழைத்து வாருங்கள், அப்படியே கூட்டி வராதீர்கள். இங்கே வந்து பின்பு வெளியே சென்று அந்த மாதிரி ஏதாவது இம்சைக்கான காரியம் செய்தார் என்றால் பிரம்மா குமாரிகளின் பெயரும் கெட்டு விடும். எனவே மாற்றம் செய்த பிறகு அழைத்து வாருங்கள். நல்லது.

ஈஸ்டர்ன் ஜோன் என்ன செய்வீர்கள்? நம்பர் ஒன் அடைவீர்களா? நேபாளத்தைச் சேர்ந்தவர்கள் கூறுங்கள். நம்பர் ஒன்னைப் பெறுவீர்களா, உறுதியாக? அனைத்து ஈஸ்டர்ன் ஜோனைச் சேர்ந்தவர்களா அல்லது நேபாளைச் சேர்ந்தவர்களா? பீகாரைச் சேர்ந்தவர்கள் என்ன செய்வீர்கள்? நம்பரைப் பெறுவீர்களா? (பாப்தாதா தனித்தனி மாநிலங்களின் சகோதர சகோதரிகளை கைதூக்கச் சொன்னார்) அப்படி அனைவரும் எந்த எண்ணை பெறுவீர்கள்? முதலாவதா? அல்லது இரண்டாவதா? நல்லது.

மகாராஷ்ட்ராவைச் சேர்ந்தவர்கள் என்ன செய்வீர்கள்? ஒரு லட்ச சதவிகிதம் பரிசாகப் பெறுவீர்களா அல்லது நூறு சதவிகிதமா? எவ்வளவு செய்வீர்களோ அவ்வளவு தன்னுடைய நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தைத் தான் உயர்ந்ததாக ஆக்குகிறீர்கள். நல்லது. குஜராத் அனைவரையும் விட முன்னுக்கு செல்லும் இல்லையா? கர்நாடகா அதிசயம் செய்து காண்பிக்கும். குழப்பம் செய்யாதீர்கள். எப்பொழுது

எண்ணிக்கை அதிகமாகி விடுகிறது என்றால் கொஞ்சம் கொஞ்சம் குழப்பமும் தொடங்கி விடுகிறது. எப்பொழுதும் அதிசயம் செய்து காண்பிக்க வேண்டும். ஆந்திரா உலகின் இருளை ஒரு நொடியில் விலக்கி விட வேண்டும். முதலில் தன்னுடையதை செய்தால் தான் உலகத்தினுடையதை செய்ய முடியும். நல்லது. ஆந்திராவைச் சேர்ந்தவர்களும் ஊக்கம் உற்சாகத்தில் இருக்கிறார்கள். அப்படி எப்பொழுதும் ஊக்கம் உற்சாகத்தில் முன்னேறிக் கொண்டே இருங்கள், மேலும் தமிழ்நாடு என்ன செய்யும்? தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் தமோகுணத்தை அழித்து விடுங்கள். அனைவரும் சதோபிரதானம் ஆகி விடட்டும். கேரளா மற்றும் தமிழ்நாடோ சிறியது ஆனால் அதிசயம் செய்பவர்கள். இராஜஸ்தானைச் சேர்ந்தவர்கள் என்ன அதிசயம் செய்வீர்கள்? ரிசல்ட்டிலும் கூட அனைவரையும் விட ராஜா ஆகி விடுங்கள், புரிந்ததா? ராஜா ஆவது என்றால் எண் முன்னுக்கு பெறுவது. இராஜஸ்தானோ ராஜ்யத்தின் ஸ்தானம் தான். அப்படி ரிசல்ட்டில் கூட ராஜாவின் பரிசைப் பெறுங்கள்.

உத்திரபிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்ன அதிசயம் செய்வீர்கள்? அனைத்து பக்தி மார்கத்தின் தீர்த்த ஸ்தலங்களை அபு தீர்த்த ஸ்தலத்தில் அடக்கி விடுவார்கள். அதிசயம் செய்வீர்கள் தான் இல்லையா? யாராவது தீர்த்த யாத்திரை செல்ல வேண்டும் என்றால் எங்கு செல்வது? அபு தீர்த்தத்தில் வரட்டும், மஹான் தீர்த்தத்தில் வரட்டும். அப்படி அனைத்து தீர்த்த ஸ்தலங்களும் இந்த மஹான் தீர்த்தத்தில் அடங்கி விடட்டும். ஆக்ராவோ சிறியது ஆனால் பாப்தாதா சோட்டா சோ சுபான் அல்லா! (சிறியவர்கள் இறைவனுக்கு சமமானவர்கள்). அப்படி ஆக்ராவைச் சேர்ந்தவர்கள் அதே போல் ஏதாவது அதிசயம் செய்து காண்பியுங்கள்.

இரட்டை வெளிநாட்டினருடன்: இரட்டை வெளிநாட்டினர் என்ன செய்வீர்கள்? இந்தியாவை விட இரட்டைக் காரியம் செய்வார்கள். இரட்டை அதிசயம் காண்பிப்பார்கள் -அது எது? அனைவரும் கவரப்பட்டு பாரதத்தில் தந்தையை சந்திப்பதற்கான, அந்த மாதிரியான ஆர்வத்தை அவர்களில் உருவாக்குங்கள். அனைவரும் பாரதத்தால் கவரப்பட்டு இங்கு வரட்டும். முதலில் மைக்கை அழைத்து வருவீர்கள் இல்லையா. வெளிநாட்டின் மைக்கும் மிகவும் நன்கு ஒலி எழுப்பக்கூடியது. எனவே

வெளிநாட்டின் மைக் அனேகர்களை மிக சப்தமான ஒலி மூலமாக எழுப்பிக் கொண்டே இருக்கட்டும், எழுப்பிக் கொண்டே இருப்பார்கள். வெளிநாட்டில் கூட பிரம்மா குமாரிகளுக்கு அமைதிப் பரிசு கிடைத்திருக்கிறது. அப்படி சேவையின் நிரூபணத்தைக் கொடுத்தார்கள். மேலும் வெளிநாட்டில் தந்தையின் விசேஷ விருப்பத்தை நிறைவேற்றி இருக்கிறார்கள். லண்டனில் நாளை 27ம் தேதி அன்று அங்குள்ள முக்கியமான இடத்தில் மியூசியத்தின் திறப்பு விழா இருக்கிறது. அனேக ஆத்மாக்களுக்கு செய்தி கிடைக்க வேண்டும். இன்றைய நாளில் அனைத்து பிராமணர்களும் விசேஷ சேவையில் பொறுப்பிலிருப்பவராக ஆகிக் கொண்டிருக்கிறார்கள். பாரதத்தில் அந்த மாதிரி முக்கியமான இடத்தில் இதுவரை செய்யவில்லை. இங்கே ஒவ்வொரு தெருவிலும் மியூசியம் திறந்திருக்கிறார்கள் ஆனால் முக்கியமான இடத்தில் இருக்கட்டும். இதில் வெளிநாடு நம்பர் ஒன் எடுத்து விட்டார்கள். அப்படி நம்பர் ஒன் எடுத்தவர்களுக்கு பாராட்டுக்களும் நம்பர் ஒன். நல்லது.

நாலாபுறத்திலும் உள்ள அன்பின் நிரூபணம் கொடுக்கக்கூடிய, ஒவ்வொரு கட்டளையையும் எண்ணம், சொல் மற்றும் செயலில் கொண்டு வரக்கூடிய, எப்பொழுதும் தன்னை தந்தைக்குச் சமமாக சிம்பிள் மற்றும் சேம்பிளாக ஆக்கக்கூடிய, பிரம்மாபாபாவின் ஒவ்வொரு அடிமேல் அடி வைக்கக்கூடிய அந்த மாதிரி தந்தைக்குச் சமமாக ஆக வேண்டும் என்ற சக்திசாலியான உறுதியான எண்ணம் வைத்திருக்கும் அனைத்து குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும், நமஸ்காரமும்.

<u>தாதிகளுடன்</u>: கவலையற்ற மகாராஜாவாக இருக்கிறீர்கள்; எனவே காரியங்கள் மிக சகஜமாக நடந்து கொண்டிருக்கிறது. யார் சுயம் சமர்ப்பண நிலையில் இருக்கிறாரோ அவருக்கு அனைவரது சகயோகமும் தானாகவே கிடைக்கிறது. சகயோகமும் அவரின் எதிரில் சமர்ப்பணம் ஆகி விடுகிறது. மேலும் உள்ளப்பூர்வமாக யார் சமர்ப்பணம் ஆகியிருக்கிறார்களோ அவருக்கு சகயோகமும் உள்ளப்பூர்வமாக எதிரில் வருகிறது. எங்கு உள்ளப்பூர்வமான அன்பு இருக்கிறதோ அங்கு சகயோகம் கிடைக்கிறது. அன்பு இல்லை என்றால் சகயோகமும் இல்லை. அப்படி அனைவரது சகயோகமும் உள்ளப்பூர்வமாக

இருக்கிறது இல்லையா? ஒவ்வொருவரும் என்ன நினைக்கிறீர்கள்? நம்முடைய வேலையா? அல்லது தாதிகளுடைய வேலையா? நம்முடைய மதுபனா அல்லது மதுபனில் இருப்பவர்களின் மதுபனா? அப்படி தந்தையும் முதலில் நீங்கள் என்று கூறுகிறார். நல்லது. அனைவரும் நன்றாக இருக்கிறீர்களா? தாதிகள் மட்டும் முன்னுக்குச் செல்கிறார்கள் என்று நினைத்துக் கொள்ளாதீர்கள். தாதிகளில் நீங்கள் அனைவரும் அடங்கியிருக்கிறீர்கள். தூரமாக உணருகிறீர்களா? அல்லத நெருக்கத்தில் இருப்பதாக உணருகிறீர்களா? நெருக்கத்தில் தான் இருக்கிறீர்கள் இல்லையா. பின்னால் அமர்ந்திருப்பவர்களாக இருந்தாலும், கடைசி நாற்காலியில் யார் உட்கார்ந்திருக்கிறாரோ அவரும் நெருக்கமாக இருக்கிறார். அனைவரும் எப்பொழுதும் எங்கே இருக்கிறீர்கள்? உள்ளத்தில் இருக்கிறீர்கள் இல்லையா. எனவே தூரமாக இல்லை. ஒருவேளை தூரமாக இருக்கிறீர்கள் என்றால் பின்பு தந்தை தேடிக் கண்டுபிடித்து கொண்டு வர வேண்டியதாக இருக்கிறது. ஒருவேளை குழந்தைகள் வீட்டு வாசலின் வெளியே சென்று விட்டார்கள் என்றால் என்ன செய்வது? அவரை அழைத்து வரச் செல்வீர்கள் இல்லையா? அல்லது வீட்டு விடுவீர்களா? அப்படி தந்தையும் பார்க்கிறார், இவர்கள் உள்ளத்தின் கதவுகளில் இருந்து வெளியே சென்று விட்டார்கள். மற்ற வேலைகளில் முனைப்பாக (பிஸி) ஆகி விடுகிறார்கள் இல்லையா. அதனால் கொஞ்சம் கதவை விட்டு வெளியில் சென்று விடுகிறீர்கள். பின்பு தந்தை வந்து அழைத்து வர வேண்டியதாக இருக்கிறது. பின்பு பிடித்து கூட்டி வர வேண்டியதாக இருக்கிறது. நல்லது, அனைவரும் குஷியாக இருக்கிறீர்கள் இல்லையா? ஏதாவது புகார் இல்லையே? அல்லது அங்கே சென்ற பிறகு கொஞ்சம் கொஞ்சம் இப்படி நடந்தது என்று சொல்வீர்களா? பெரிய கூட்டமாக இருக்கும்போது ஏதாவது கொஞ்சம் கொஞ்சம் ஆங்காங்கு நடக்கத்தான் செய்யும் என்று நீங்களும் கொஞ்சம் யோசித்து பாருங்கள். இருந்தாலும் கும்ப மேளாவை விட ஆயிரம் மடங்கு நல்லது தான் இல்லையா? நல்ல பிரம்மா போஜனமோ கிடைக்கிறது. உணவிலோ எந்த வித கடினமும் இருக்கவில்லை. சிற்றுண்டி கிடைக்கவில்லை என்றால் யாருக்காவது பசி ஏற்படவில்லை தானே? நல்லது.

வரதானம்: சுயநலம் என்ற வார்த்தையின் அர்தத்தை தெரிந்து எப்பொழுதும் ஒரே சீரான நிலையில் நிலைத்திருக்கக்கூடிய சகஜமான முயற்சி செய்பவர் ஆகுக!

தற்சமயம் ஒருவர் இன்னொருவர் மேல் இருக்கும் பற்றுதல் அது அன்பினால் ஏற்பட்டதல்ல சுயநலத்தினால் ஏற்பட்டது. சுயநலத்தின் காரணமாக பற்றுதல் இருக்கிறது, மேலும் பற்றுதல் இருக்கும் காரணத்தினால் விலகியிருப்பவராக ஆக முடிவதில்லை. எனவே சுயநலம் என்ற வார்த்தையின் அர்த்தத்தில் நிலைத்திருந்து விடுங்கள்; அதாவது முதலில் சுயத்தின் ரதத்தை அர்ப்பித்து விடுங்கள். இந்த சுயநலம் சென்று விட்டது என்றால் விலகியிருப்பவராக ஆகியே விடுவீர்கள். இந்த ஒரு வார்த்தையின் அர்த்தத்தைத் தெரிந்து கொள்வதினால் எப்பொழுதும் ஒருவரின் மற்றும் ஒரே ஒருவரின் ரசனையில் மூழ்கிய நிலை உள்ளவராக ஆகி விடுவீர்கள். இதுவே சுலபமான முயற்சி ஆகும்.

சுலோகன்: பரிஷ்தா ரூபத்தில் இருப்பதினால் எந்தவொரு தடையும் தன்னுடைய பாதிப்பை ஏற்படுத்த முடியாது!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋

## 26.02.1995 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## சங்கமயுகம் உற்சவங்களின் யுகம்; உற்சவம் கொண்டாடுவது என்றால் அழியாத ஊக்கம் உற்சாகத்தில் இருப்பது!

இன்று திரிதேவ் படைப்பவர் திரிமூர்த்தி சிவ தந்தை தனது ஆன்மீக வைரங்களுடன் வைர விழா அல்லது வைர ஜெயந்தியைக் கொண்டாட வந்துள்ளார். இந்த வியப்பூட்டும் பிறந்த நாளை வைர ஜெயந்தி என்று கூறப்படுகிறது ஏனெனில் சோழிக்கு சமமான ஆத்மாக்களை வைரத்திற்கு ஒப்பானதாக மாற்றுவற்குத்தான் தந்தை அவதரிக்கின்றார். இது ஒரு ஆச்சரியமான பிறந்த நாள், முழு கல்பமும், முழு உலகிலும் அனைத்திலிருந்தும் வித்தியாசமானது மற்றும் அன்பானது. எந்த ஒரு பிறந்த நாளையும் கொண்டாடுகின்றனர் எனில் ஆத்மாக்களுடைய, தேகதாரிகளுடைய பிறந்த நாளைக் கொண்டாடுகின்றனர் ஆனால் இந்த சிவ ஜெயந்தி சரீரதாரி ஆத்மாக்களுடைய பிறந்த நாள் இல்லை, நிராகார பிந்து ரூபத்தினுடைய பிறந்த நாளாகும். சிவ ஜெயந்தி என்று கூறும்போதே ஜோதிபிந்து ரூபம் முன்னால் வருகிறது. முழு கல்பமும் அசரீரி பரம் ஆத்மாவுடைய பிறந்த நாளைக் கொண்டாடுவதில்லை. அசரீரியாக இருக்கும் ஒரே ஒரு திரிமூர்த்தி சிவ தந்தையுடைய வித்தியாசமான பிறந்த நாள் ஆகும் மற்றும் இந்த ஒரு சிவ ஜெயந்திதான் தந்தை மற்றும் குழந்தைகள் ஒன்றாகப் பிறந்த நாளாகும். இன்று தந்தையுடைய பிறந்த நாளை மட்டும் கொண்டாட வந்துள்ளீர்களா அல்லது பிராமண ஆத்மாக்களுடைய பிறந்த நாளையும் கொண்டாட வந்துள்ளீர்களா? எல்லோருக்கும் கூறுகிறீர்களா சிவ ஜெயந்தி ஆகையால் திரிமூர்த்தி ஜெயந்தி, பிராமண ஜெயந்தி எனில் இத்தனை ஆத்மாக்களுக்கும் பரமாத்மா தந்தையுடன் கூடவே பிறந்த நாள் -இது வித்தியாசமாக உள்ளதுதானே. லௌகீக முறையில் தந்தையின் பிறந்த நாள் மற்றும் குழந்தைகளின் பிறந்த நாள் ஒன்றாக இருக்காது. தேதி

வேண்டுமானால் ஒன்றாக இருக்கலாம் ஆனால் வருஷத்தில் வித்தியாசம் இருக்கும். எனவே இத்தகைய வியப்பூட்டும் பிறந்த நாள், வித்தியாசமான மற்றும் அன்பான பிறந்த நாளைக் கொண்டாட எங்கெங்கிருந்தெல்லாம் வந்தடைந்து விட்டீர்கள். உலகின் மூலைமுடுக்குகளிலிருந்து எதற்காக வந்துள்ளீர்கள்? தங்களுடைய பிறந்த நாளைக் கொண்டாடாவா அல்லது தந்தையுடையதா? அல்லது இரண்டுமேவா? தந்தைக்கு நீங்கள் வாழ்த்து கூறுவீர்களா அல்லது தந்தை உங்களுக்கு வாழ்த்து கூறுவாரா? நீங்கள் தந்தைக்கு வாழ்த்துக்கள் கூறுகிறீர்கள் மற்றும் தந்தை உங்களுக்கு கூறுகிறார் கோடானுகோடி வாழ்த்துக்கள் என! ஒவ்வொரு பிராமண ஆத்மாவும் வைரத்தை விடவும் விலையுயர்ந்தவர்கள்; இந்த ஸ்தூல வைரமோ உங்கள் முன் ஒன்றுமே இல்லை. இந்த உலகில் வைரத்திற்கு மதிப்பு இருப்பதால்தான் வைரத்தைப்போல எனக் கூறுகிறார்கள் ஆனால் உங்களுடைய மதிப்பிற்கு முன் அந்த வைரம் என்ன? ஒன்றுமே இல்லை. இதே வைரம்தான் உங்களுடைய மாளிகைகளில், சுவர்களில் இருக்கும். வைரத்தை விடவும் அதிக மதிப்பு ஒவ்வொரு பிராமண ஆத்மாவும்! பாப்தாதா நாலா பக்கமும் உள்ள குழந்தைகளை வைரத்தை விடவும் விலைமதிக்க முடியாதவர்களாக அனைவருக்கும் முன்னால் பார்த்துக் கொண்டிருக்கிறார். பாப்தாதாவிற்கு முன்னால் மதுபனுடைய சபை மட்டுமில்லை ஆனால் உலகின் நாலா புறமும் உள்ள பிராமணக் குழந்தைகளின் சபை உள்ளது. அனைவருடைய இதய வாழ்த்துக்களின் சிநேகம் நிறைந்த பாடலைக் கூறுங்கள்; கூறுங்கள், தந்தை அருகிலேயே கேட்டுக் கொண்டிருக்கிறார். இதயத்தின் ஓசை திலாராமிடம் முதலில் வந்து சேர்கிறது. எனில் பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார் குழந்தைகளுடைய சேவையின் பிரத்யக்ஷ சான்று நாலா புறத்திலிருந்தும் மதுபன், தந்தையுடைய இனிமையான வீடு (sweet home) வரை வந்தடைந்து கொண்டிருக்கிறது. எப்படியும் சிவஜெயந்தியை உற்சவம் (விழா) எனக் கூறுகின்றனர். சரியான முறையில் உற்சவத்தை பிராமணர்கள் நீங்கள் தான் கொண்டாடுகிறீர்கள். ஏனெனில் உற்சவத்தின் அர்த்தமே எல்லோரும் ஊக்கம் உற்சாகத்தில் இருப்பது! எனில் இங்கே யாரெல்லாம் அமர்ந்திருக்கிறீர்களோ, அனைவருடைய உள்ளத்திலும் உற்சாகமும் ஊக்கமும் எவ்வளவு உள்ளது? அழியாததாக உள்ளதா அல்லது இன்றைக்கு மட்டும் தானா? அழியாததுதானே? ஆதலால் பாப்தாதா

இந்த சிரேஷ்ட சங்கம யுகத்தை உற்சவத்தின் யுகம் எனக் கூறுகின்றார். ஒவ்வொரு நாளும் உற்சவம்தான்.

என்ன மகிமையோ, அந்த தலைப்பை நீங்கள் வைக்கிறீர்கள் 'வேற்றுமையில் ஒற்றுமை' எனில் நடைமுறையில் பல தேசங்களில், பல மொழிகளில், பல ரூபங்களில் ஆனால் வேற்றுமையிலும் கூட எல்லோருடைய உள்ளமும் ஒற்றுமையாக உள்ளதுதானே. ஏனெனில் தந்தை ஒருவர்தான்! அமெரிக்காவிலிருந்து வந்திருக்கட்டும், ஆப்பிரிக்காவிலிருந்து வந்திருக்கட்டும் ஆனால் உள்ளத்தில் ஒரு தந்தைதான். ஒரு ஸ்ரீமத்படி நடக்கக்கூடியவர்கள். எனில் பாப்தாதாவிற்கு நன்றாக உள்ளது. அநேக மொழிகளில் இருந்தாலும்கூட மனதின் பாடல், மனதின் மொழி ஒன்றுதான். எந்த ஒரு மொழிக்காரராக இருக்கட்டும், கறுப்பு கிரீடமோ கிடைத்து விட்டதல்லவா! (அனைவரும் 'ஹெட்ஃபோன்' மூலம் அவரவர் மொழிகளில் கேட்டுக் கொண்டிருக்கின்றனர்!), இப்போது இந்த கறுப்பு கிரீடம் மாறி தங்கமாகி விடும் ஆனால் அனைவரது மனதின் மொழி ஒன்றுதான் மற்றும் ஒரே சொல்தான் 'மேரா பாபா'! எல்லா மொழிக்காரரும் கூறுங்கள் 'மேரா பாபா'! ஆம், இது ஒரே ஒன்றுதான் எனில் வேற்றுமையில் ஒற்றுமைதானே.

உற்சாகத்தில் இருக்கக்கூடியவர்கள் என்றால் சதா உற்சவம் கொண்டாடுகின்ற சிரேஷ்ட ஆத்மாக்கள் ஆவீர்கள். ஒருபோதும் உற்சாகம் குறைந்து விடக் கூடாது. முன்பும் கூறினேன் -பிராமண வாழ்க்கையின் மூச்சே ஊக்கம் உற்சாகம்தான்! ஒருவேளை மூச்சு நின்று போனால் வாழ்க்கை நொடியில் முடிந்து விடும்தானே. எனில் பிராமண வாழ்க்கையில் ஒருவேளை ஊக்கம் உற்சாகத்தின் மூச்சு இல்லையேல் பிராமண வாழ்க்கையும் இல்லை. யார் சதா ஊக்கம் உற்சாகத்தில் இருக்கிறாரோ அவர் உடனே சொல்வார், பிராமணனாக இருப்பதே ஊக்கம் உற்சாகத்திற்காகத்தான் மற்றும் யாருக்கு ஊக்கம் உற்சாகம் குறைவாகிறதோ அவரது பேச்சும் கூட மாறி விடுகிறது. அவர் கூறுவார் -சரியாகத்தான் உள்ளேன் ஆனால்..., ஆக வேண்டும் ஆனால்..., ஆகி விடும் ஆனால்... எனில் இந்த பாஷைக்கும், அந்த பாஷைக்கும் எவ்வளவு வித்தியாசம் உள்ளது. அவரது ஒவ்வொரு சொல்லிலும் 'ஆனால்' கண்டிப்பாக வரும் -ஆக வேண்டும் ஆனால்...

எனவே இந்த 'ஆனால்' உள்ளதல்லவா, இது ஊக்கம் உற்சாகத்தின் குறைபாட்டினால் பலகீனத்தின் வார்த்தை வெளிப்படுகிறது. எனவே ஊக்கம் உற்சாகம் ஒருபோதும் குறையக்கூடாது. ஊக்கம் உற்சாகம் ஏன் குறைகிறது? பாப்தாதா கூறுகிறார் சதா ஆஹா ஆஹா என கூறுங்கள் மற்றும் கூறுவதோ 'ஏன், ஏன்' (why). ஒருவேளை ஏதாவது சூழ்நிலையில் 'ஏன்' என்று வந்தது என்றால் ஊக்கம் உற்சாகத்தின் அழுத்தம் குறைந்து விடுகிறது. பாப்தாதா சென்ற வருஷம் விசேஷமாக இரட்டை வெளிநாட்டினருக்குக் கூறினார் -ஏன் என்ற சொல்லை பிராமணர்களின் அகராதியில் மாற்றி விடுங்கள்; எப்போது ஏன் (why) என்ற சொல் வருகிறதோ அப்போது 'பற' (fly) என்ற சொல்லை நினைத்தால் ஏன் என்பது முடிந்து விடும். எந்த ஒரு சிறிய சூழ்நிலையும் பெரியதாக ஆகிறது என்றால் அதற்கு இந்த ஏன் தான் காரணம் -இது ஏன், இது என்ன,... மற்றும் பறந்து விட்டீர்கள் என்றால் சூழ்நிலை என்னவாகி விடும்? சிறிய பொம்மையாகி விடும்! எப்போது ஏன் என்பது மனதில் வருகிறது என்றால் கூறுங்கள் பிராமணர்கள் அகராதியில் ஏன் என்ற சொல்லே இல்லை, பற தான் உள்ளது. ஏனெனில் ஏன் ஏன் என்பது ஐயோ ஐயோ என்றாக்கி விடுகிறது. பாப்தாதாவிற்கு சிரிப்பு வருகிறது, ஒருபக்கம் கூறுகிறீர்கள்- இல்லை, எங்களைப் போன்ற சிரேஷ்ட பாக்கியம் யாருக்குமே இல்லை. இப்போது இதைச் சொல்வீர்கள் மற்றும் உடனேயே உற்சாகம் குறைந்தது எனில் சொல்வீர்கள் -ஏன்னு தெரியலை, எனது பாக்கியமே அப்படித்தான். எனது பாக்கியத்தில் இவ்வளவுதான் உள்ளது. எனில் ஐயோ ஐயோ என ஆனதா! ஆகவே எப்போது ஐயோ ஐயோவின் காட்சி வருகிறதோ உடனே ஆஹா ஆஹா என்றால் காட்சியும் மாறி விடும் மற்றும் நீங்களும் மாறி விடுவீர்கள்.

இரட்டை வெளிநாட்டினர் இந்நாட்களில் 'பாஸிடிவ் திங்கிங்' (positive thinking) பாடமுறை நடத்துகிறீர்களா. எல்லா வெளிநாடுகளிலும் விசேஷமாக இந்த பாடமுறையை நடத்துகிறீர்கள்? தனக்கும் நடத்துகிறீர்களா அல்லது மற்றவருக்குத்தானா? எப்போது அந்த மாதிரி சூழ்நிலை வருகிறது என்றால் தன்னையே மாணவனாக்கி, தானே டீச்சராகி தனக்கே இந்த பாடத்தை நடத்துங்கள். தனக்கே இந்த பாடத்தை நடத்த முடியுமா அல்லது பிறருக்கு மட்டும் நடத்த முடியுமா? பிறருக்கு நடத்துவது மிக எளிது. எப்போது இது இயல்பான ஸ்திதி ஆகி விடுகிறதோ, அப்போது ஒவ்வொருவரிடமும்,

விஷயத்தையும் நேர்மறை உள்ளுணர்வு மூலம் பார்த்தால், கேட்டால் அல்லது சிந்தித்தால் ஸ்திதி எப்படி இருக்கும்? இந்நாட்களில் விஞ்ஞானம் மூலமும் இத்தகைய சாதனங்கள் வெளி வந்துள்ளன, அதனால் கரடுமுரடான பொருளையும் கூட மிக அழகானதாக மாற்றி விடுகின்றனர். பார்த்திருக்கிறீர்களா -என்னதிலிருந்து என்னவாக ஆக்கி விடுகின்றனர். அப்படியானால் உங்களுடைய உள்ளுணர்வால் இத்தகைய மாற்றம் செய்ய முடியாதா? எதிர்மறை ரூபத்தில் வரட்டும் ஆனால் நீங்கள் அதை நேர்மறையான உள்ளுணர்வு மூலம் மாற்றி விடுங்கள். ஒருவேளை குழப்பத்தில் வருகிறீர்கள் என்றால் அதற்கான காரணம் -எதிர்மறையை கேட்பது, சிந்திப்பது, பேசுவது அல்லது செய்வது. இந்த உருமாதிரி உருவாக்குகிறார்களா -தீயதை சிந்திக்காதே, பார்க்காதே, பேசாதே, செய்யாதே! அமைதிசக்தியால் எதிர்மறையை நேர்மறையாக மாற்ற முடியாதா என்ன? உங்களுடைய மனம் புத்தியை அப்படி ஆக்குங்கள் -எந்த வித எதிர்மறையையும் தொடக்கூடாது, நொடியில் மாற்றம் அடைந்திட வேண்டும். அந்த மாதிரி தீவிர வேகத்தில் அனுபவம் செய்ய முடியுமா? மனம் புத்தி அப்படி தீவிர வேகத்தினுடைய இயந்திரம் ஆகட்டும். ஆக முடியுமா அல்லது நேரம் பிடிக்குமா? எதிர்மறை விஷயம் வந்தது என்றால் கொஞ்சம் சிந்திக்க விடுங்கள், சரியானது எது என்பதைப் பார்ப்போம் என்றாகி விடுமா? தீவிர வேகத்தில் மாற்றம் செய்து விடுங்கள் -இதற்குத்தான் பிராமண வாழ்க்கையின் வேடிக்கை மற்றும் மகிழ்ச்சி எனப்படுகிறது. ஒருவேளை வாழ வேண்டுமெனில் மகிழ்ச்சியாக வாழுங்கள். யோசித்து யோசித்து வாழ்வது வாழ்க்கை அல்ல! நீங்கள் மற்றவர்களுக்குக் கூறுகிறீர்கள் ராஜயோகம் வாழ்வதற்கான கலை என. நீங்களோ ராஜயோக வாழ்க்கை வாழ்பவர்களா அல்லது சொல்லக்கூடியவர்களா? எப்போது ராஜயோகம் வாழும் கலை என்றால் ராஜயோகிகளுடைய கலை என்ன? இது தானே? விழா கொண்டாடுவது என்றால் மகிழ்ச்சியாக இருப்பது. மனதும் மகிழ்ச்சியாக, உடலும் மகிழ்ச்சியாக, சம்பந்தம் தொடர்பும் மகிழ்ச்சியாக இருப்பது.

பல குழந்தைகளும் கூறுகின்றனர் எங்களுடைய வழிமுறைகளில் சரியாக இருக்கிறோம், மகிழ்ச்சியாகவும் இருக்கிறோம் ஆனால் சம்பந்தம் தொடர்பில் மகிழ்ச்சியாக அவ்வப்போது இருக்கிறோம்; ஆனால் சம்பந்தம் தொடர்பு தான் உங்களுடைய ஸ்திதிக்கான பேப்பர்

என்றால் பதில் கூறுகிறார்கள், எப்படியாயினும் நானோ பாஸ் வித் ஹானர் ஆக உள்ளேன் ஆனால் பேப்பர் வரும்போது மதிப்பெண் குறைந்தது எனில் இவர்களை என்னவென்று சொல்வது? இப்படியில்லை தானே! முழு மதிப்பெண் பெறக்கூடியவர்களா? பாப்தாதாவும் கூறியுள்ளார் யார் சதா தந்தையுடன் கூடவே இருக்கிறாரோ அவரே 'பாஸ்'. கூடவே இல்லையேல் 'பாஸ்' கிடையாது. எனில் சதா எங்கு இருக்கிறீர்கள்? தூரமாக இருக்கிறீர்களா, அருகில் இருப்பதில்லையா? இரட்டை வெளிநாட்டினரோ 'டபுள் பாஸ்' ஆக வேண்டும்தானே. நல்லது.

இரட்டை வெளிநாட்டினர் இம்முறை உயரத்தாண்டி (high jump) விட்டனர். உயரத்தாண்டி மதுபன் வந்தடைந்து விட்டீர்கள். (இம்முறை எல்லா வருஷத்தையும் விட அதிகமாக இரட்டை வெளிநாட்டினர் வந்துள்ளனர்). நல்லது. இரட்டை வெளிநாட்டினர் பலருக்கும் கூட பட்டத்து ராணி ஆவதற்கான வாய்ப்பு நன்றாகவே கிடைத்துள்ளது. பட்டத்து ராணி ஆவதில் மகிழ்ச்சி உள்ளதா, இல்லையா? உங்களுடைய சொந்த உடமைகள் அவ்வளவு உள்ளது அதன் மீதே படுத்துறங்கி விடலாம். ஏனெனில் பெரியது ஒன்று, சிறியது ஒன்று கொண்டு வருகிறீர்கள் எனில் சிறியதை தலையணை ஆக்கி விடுங்கள், இடமும் மிச்சமாகும்தானே! நன்றாக இருக்கிறது, பாப்தாதாவும் காட்சிகளைப் பார்க்கின்றார், கனமான பைகளை எப்படி இழுத்துக் கொண்டு வருகிறீர்கள். நல்ல காட்சியாக உள்ளதுதானே. சங்கமத்தில் இந்த உழைப்பும் கூட கொஞ்ச காலத்திற்குத்தான், பின்னர் இயற்கையும் உங்களுக்கு தாசி ஆகி விடும் என்றால் தாசிகளும் நிறைய இருப்பர். பின்பு உங்களது சாமான்களைத் தூக்க வேண்டிய அவசியம் இல்லை. இப்போது உங்களது ராஜ்யம் ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது, இந்த சமயம் குப்த வேஷத்தில் இருக்கிறீர்கள், சேவாதாரிகளாக பின்பு ராஜ்ய அதிகாரி ஆவீர்கள். எனில் சேவாதாரிகளுக்கோ எல்லா விதமான சேவைகளும் செய்ய வேண்டியுள்ளது. எந்தளவு இப்போது உடல், மனம், பொருள், தொடர்பின் மூலம் சேவை செய்கிறீர்களோ அந்தளவுதான் அங்கும் சேவாதாரிகள் கிடைப்பார்கள். முதலாவதோ, இந்த இயற்கையின் ஐந்து தத்துவங்களும் உங்களுடைய சேவாதாரி ஆகி விடும். உங்களது ராஜ்ய பாக்கியம் நினைவிருக்கிறதுதானே. எவ்வளவு முறை ராஜ்ய அதிகாரி ஆகியுள்ளீர்கள். எண்ணற்ற முறை

மற்றும் ஆகிக் கொண்டே இருப்பீர்கள் ஆனால் ராஜ்ய அதிகாரியை விட இப்போதைய சேவாதாரி வாழ்க்கை உயர்ந்தது. ஏனெனில் இப்போது தந்தையும் குழந்தைகளும் ஒன்றாக உள்ளனர். எந்த விதமான சேவை ஆகட்டும் ஆனால் சேவையின் பிரத்யக்ஷ பலன் இப்போது கிடைக்கிறது. தந்தையின் சிநேகம், சகயோகம் மற்றும் தந்தை மூலம் கிடைக்கப் பெற்ற கஜானாக்களின் பிரத்யக்ஷ பலன் என்ற ரூபத்தில் கிடைக்கின்றன. எப்போதாவது ஏதாவது விசேஷ சேவை செய்கிறீர்கள் மற்றும் யுக்தியுக்தான சேவை செய்கிறீர்கள் என்றால் எவ்வளவு குஷி ஏற்படுகிறது. அந்த நேரத்தில் முகத்தை ஃபோட்டோ எடுத்தீர்களானால் அது எப்படி இருக்கும். எனவே ஒருபக்கம் சேவை செய்கிறீர்கள், மறுபக்கம் பிரத்யக்ஷ பலன் உங்களுக்காக சதா தயாராகவே உள்ளது. ஒரு கையால் சேவை செய்யுங்கள், மறு கையால் பலனை சாப்பிடுங்கள் -இத்தகைய அனுபவம் ஆகிறதா? இல்லை, சேவையில் பெரியதாக உழைக்க வேண்டியுள்ளதா? சேவையில் குழப்பம் ஆகிறதா, இல்லையா? அவ்வப்போது ஆகிறது. இந்த குழப்பம்தான் மாற்றத்தை ஏற்படுத்துகிறது, அனுபவஸ்தர் ஆக்குகிறது. நிகழ்காலத்தை மட்டுமே பார்ப்பதால் குழப்பத்தில் வருகிறீர்கள்; ஆனால் நிகழ்காலத்தில் மறைந்துள்ள எதிர்காலம் தெளிவாகத் தெரிவதில்லை, ஆதலால் குழப்பத்தில் வந்து விடுகிறீர்கள். எந்த ஒரு பெரியதிலும் பெரிய ஆபத்தான சூழ்நிலை உண்மையில் எதிர்காலத்திற்காக பெரிய பாடத்தைக் கற்பிக்கிறது; சூழ்நிலை அல்ல ஆனால் உங்களுடைய டீச்சர் ஆகும் -அத்தகைய கண்ணோட்டத்தில் பாருங்கள், இந்த சூழ்நிலை என்ன பாடம் கற்பித்தது என? இதற்குத்தான் கூறப்படுகிறது எதிர்மறையை நேர்மறையில் மாற்றம் செய்வது என! சூழ்நிலையை மட்டும் பார்த்தீர்கள் எனில் பயப்பட்டு விடுவீர்கள் மற்றும் சூழ்நிலை மாயா மூலம் சதா புதுப்புது ரூபத்தில் வரும். அப்படியில்லை வராது என்பது, எந்த ரூபத்தில் வந்துள்ளதோ அந்த ரூபத்தில் வராது. புதிய ரூபத்தில் வரும் எனில் அதில் பயப்பட்டு விடுகிறீர்கள் -இதுவோ புது விஷயம், இதுவோ ஆகாது, இதுவோ ஆகியிருக்கக் கூடாது,... ஆனால் புரிந்து கொள்ளுங்கள் மாயா இறுதி வரை வேஷம் போட்டு பல ரூபத்தைக் காட்டும். மாயாவிற்கு வேஷம் போட மிகவும் சீக்கிரமாகவும், நன்றாகவும் வரும். எப்படி உங்களுடைய ஸ்திதியோ அப்படி சூழ்நிலையாக ஆகி வரும். இன்று நீங்கள் கொஞ்சம் அலட்சியமாக இருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள், எனில் மாயாவும்

அதே அலட்சிய சூழ்நிலையின் ரூபத்தில் வரும். இன்று கொஞ்சம் மனநிலை சரியில்லை, எப்படி இருக்க வேண்டுமோ அப்படியில்லை, எனில் 'மூட்-ஆ..ப்'ன் (mood off) சூழ்நிலை ரூபத்தில்தான் வரும். அப்புறம் சிந்திக்கிறீர்கள், ஆரம்பத்திலேயே நான் நினைத்துக் கொண்டிருந்தேன் பிறகு இது என்ன ஆயிற்று என? ஆதலால் மாயாவைப் பார்ப்பதற்காக, தெரிந்து கொள்வதற்காக திரிகாலதரிசி மற்றும் திரிநேத்ரி ஆகுங்கள். முன்னால், பின்னால், எதிரில் திரிநேத்ரி ஆகுங்கள். நீங்கள் அனைவருமே திரிநேத்ரி, திரிகாலதரிசி தானே? ஆம்/இல்லை? எல்லோருமே -ஹான் ஜீயா, இல்லையா? (ஹான் ஜீ). தனது மொழியை விட இதை மிகவும் நன்றாகக் கூறுகிறீர்கள். எல்லோரும் குஷிதானே? (ஹான் ஜீ). இத்தனை பெரிய குழுவில் மகிழ்ச்சி வருகிறது? (ஹான் ஜீ). அடுத்த வருஷம் கூட்டத்தில் வரக்கூடாது, கொஞ்சம் பின்னால் வரலாம்? என யாராவது இப்படி நினைக்கவில்லைதானே. கூட்டத்தின் மகிழ்ச்சியும் அன்பானது. அப்படியே வருவதானாலும் நிகழ்ச்சிநிரல்படிதான், அதிகம் வர வேண்டாம் ஆனால் எல்லாவிடத்தும் அனுசரித்துப் போகக்கூடிய பழக்கம் இருக்க வேண்டும். அனுசரித்துப் போகும் சக்தி சதா வெற்றியாளர் ஆக்குகிறது. பிரம்மாதந்தை குழந்தைகளுடன் குழந்தையாக, பெரியவர்களுடன் பெரியவராக ஆகி அனுசரித்துப் போனாரல்லவா. யாசிக்கும் வாழ்க்கையாகட்டும், சாதனங்களின் வாழ்க்கையாகட்டும், இரண்டிலுமே அனுசரித்துப் போய் குஷிகுஷியுடன் இருக்க வேண்டும், யோசிக்கக்கூடாது. இங்கோ துக்கமடைவதில்லை ஆனால் குஷிக்குப் பதில் கொஞ்சம் யோசிப்பது அதிகமாகி விடுகிறது -என்ன இப்படி ஆச்சு, எப்படி ஆச்சு,... எனில் யோசிப்பவர்களுக்கு அனுசரித்துப்போய், மகிழ்ச்சியடைய சிறிது காலம் பிடிக்கின்றது. தன்னை சோதியுங்கள் -எவ்வித சூழ்நிலையாயினும், நல்லதோ, ஆட்டக்கூடியதோ, ஆனால் ஒவ்வொரு சமயமும், சூழ்நிலைகளுக்குள் தன்னை அனுசரிக்க முடிகிறதா? இரட்டை வெளிநாட்டினருக்கு தனியாக இருப்பது நன்றாக உள்ளது மற்றும் சேர்ந்து இருப்பதும் மிக நன்றாக உள்ளது ஆனால் சேர்ந்திருந்தாலும், தனியாக இருந்தாலும் அனுசரித்துப் போவது -இதுதான் பிராமண வாழ்க்கை! அப்படியில்லை, குழுவில் இருக்கும்போது தலை பாரமாகி விடுவது -இல்லை, எனக்குத் தனிமை தேவை, இந்த பயங்கரம் வேண்டாம், எனக்குத் தனியாக வேண்டும்... மனம் தனியாக அதாவது வெளிநோக்குமுகத்திலிருந்து

உள்நோக்குமுகமாயிற்று என்றாலே தனிமைதான். சிலர் கூறுகிறார்களா -தனியாக அறை தேவை, இரண்டு பேர் கூடாது. தனியாக கிடைத்தாலும் மகிழ்ச்சியாகத் தூங்க வேண்டும் மற்றும் பத்து பேருக்கு நடுவிலும் தூங்கினாலும் மகிழ்ச்சியாகத் தூங்க வேண்டும். வெளிநாட்டினரால் பத்து பேருக்கு நடுவில் தூங்க முடியுமா அல்லது கஷ்டமா? தூங்க முடியுமா? (ஹான் ஜீ). நல்லது, இப்போது அடுத்த வருடம் 20-20 பேரைத் தூங்க வைப்போம். பாருங்கள் காலம் மாறிக் கொண்டேயிருக்கிறது மற்றும் மாறிக் கொண்டேயிருக்கும். உலகின் நிலமை நாசுக்காகிக் கொண்டேயிருக்கிறது மற்றும் இன்னும் ஆகும். ஆகத்தான் வேண்டும். இப்போது ஒரே இடத்தில் தனித்தனியாக இருக்கிறீர்கள், இறுதியில் எல்லா இடங்களிலும் ஒன்றாகி விடுவர். எனில் நாசுக்கான நேரம் வந்தேயாக வேண்டும். சமயம் நாசுக்காகட்டும் ஆனால் உங்களுடைய இயல்பு தொந்தரவு (குழப்பம்) அடையக் கூடாது. பலருடைய இயல்பும் மிகவும் நாசுக்காகி விடுகிறதுதானே, கொஞ்சம் சப்தம் கேட்டாலும், கொஞ்சம் ஏதாவது ஆயிற்று என்றாலும் தொந்தரவு அடைந்து விடுகிறார்கள். இதற்கு கூறப்படுகிறது, நாசுக்கான ஸ்திதி, நாசுக்கான இயல்பு என; எனில் நாசுக்கான இயல்பு கூடாது. எப்படி சமயமோ அப்படி தன்னை அனுசரிக்க வேண்டும். இந்தப் பயிற்சி போகப்போக உங்களுக்கு வேலைக்காகும். ஏனெனில் நிலைமைகள் சதா ஒரே மாதிரியாக இருக்காது மற்றும் இறுதி பேப்பர் உங்களுடைய குழப்பமான நேரத்தில்தான் நடக்கும். ஓய்வெடுக்கும் நேரத்தில் ஆகக்கூடாது; குழப்பமான நேரத்தில் ஆக வேண்டும். எனில் இப்போதிருந்தே தன்னை அனுசரிக்கும் சக்தி இருந்தால் குழப்பமான நேரத்தில் மதிப்புடன் தேர்ச்சி பெற முடியும். பேப்பர் ரொம்ப நேரத்திற்கானது அல்ல, மிகக் குறைவான நேரம் தான் ஆனால் நாலா பக்கமும் குழப்பமான சூழ்நிலைகள், அவற்றின் நடுவில் பேப்பர் தர வேண்டும். ஆகையால் தன்னை இயல்பாலும் கூட சக்திசாலி ஆக்குங்கள். என்ன செய்வேன், என் இயல்பே இதுதான், என் பழக்கமே இப்படித்தான் என்பது கூடாது. இதைத்தான் தொந்தரவு அடையும் இயல்பு எனக் கூறப்படுகிறது. பாருங்கள், பாப்தாதா ஸ்தாபனையின் ஆதியில் எல்லா அனுபவமும் செய்வித்தார். எப்போது ஆரம்பமானதோ, ராஜ்குமார், ராஜ்குமாரிகளை விட அதிக பாலனை, சாதனம், என அனைத்தும் அனுபவம் செய்வித்தார் மற்றும் போகப்போக யாசிக்கும் வாழ்க்கையையும் (beggary life) கூட முழு அனுபவம் செய்வித்தார்.

யாரெல்லாம் இரண்டையுமே அனுபவம் செய்தார்களோ அவர்களுக்குப் பழக்கமாகி விட்டது. எனில் உங்களுக்கு முன்னாலோ அத்தகைய சமயம் வரவில்லை ஆனால் வரும். எங்கிருந்தாலும், எல்லோரும் ஆடத்தான் வேண்டும், எல்லா ஆதாரங்களும் உடையத்தான் வேண்டும் என்றால் அத்தகைய நேரத்தில் என்ன தேவை? ஒரே ஒரு தந்தையின் ஆதாரம்! நீங்கள் அனைவரும் மிக மிக மிக அதிர்ஷ்டசாலிகள்; வரப்போகிற காலமும் உங்களுடைய சகஜ சாதனங்களுடையது. சகஜ சாதனங்களுடன் கூடவே உங்களுடைய பிராமண ஜென்மம் ஆகிறது ஆனால் சாதனம் மற்றும் சாதனை -சாதனங்களைப் பார்த்துக் கொண்டே சாதனைகளை மறந்து விடக்கூடாது. ஏனெனில் இறுதியில் சாதனைதான் வேலைக்காகும். புரிந்ததா?

இரட்டை வெளிநாட்டினர் செய்தி அளிப்பதில் மிகவும் நன்றாக பாகத்தை செய்து கொண்டிருக்கின்றனர் என பாப்தாதா குஷி அடைகின்றார். சென்டர்களும்கூட நல்ல ஊக்கம் உற்சாகத்துடன் திறந்து கொண்டிருக்கின்றனர். எனில் பாப்தாதா இன்று உங்கள் அனைவருக்கும் விழா கொண்டாடுவதற்கான வாழ்த்துக்களையும் அளித்துக் கொண்டிருக்கின்றார் மற்றும் கூடகூடவே சேவைக்கான வாழ்த்துக்களையும் அளித்துக் கொண்டிருக்கின்றார். சேவை மற்றும் சுய முன்னேற்றம் இரண்டிலுமே தீவிர வேகமாக இருக்கட்டும் என்பதில் மட்டுமே அடிக்கோடு இடுகின்றார். சுய ஸ்திதி மற்றும் சேவையில் முன்னேற்றம் இரண்டின் சமநிலை என்பது சதா நினைவிலிருக்கட்டும். அவ்வப்போது பாப்தாதா கேட்கிறார், பார்க்கின்றார், எப்போது ஏதாவது சேவையினுடைய மிகப் பெரிய காரியம் ஓடோடி செய்கிறீர்களா, எனில் காரியத்தின் ஊக்கத்தில் காரியத்தையோ செய்து விடுகிறீர்கள் ஆனால் அவ்வப்போது யாராவது கூறுகிறார்கள் -சேவைக்குப் போனீர்களா அதனால் உங்களது ஸ்திதி கொஞ்சம் குறைந்து விட்டது, போதும், இப்போது நினைவில் அமருங்கள், சேவை செய்ய வேண்டாம், நினைவிலேயே அமருங்கள் என்று அப்படி ஆகி விடக்கூடாது. நினைவு மற்றும் சேவை இரண்டும் சேர்ந்தே இருக்க வேண்டும்!

பாப்தாதா உங்கள் அனைவருடைய கடிதங்களைப் படிக்கிறார். பல குழந்தைகள் கூறுகிறார்கள் 6-6 பக்கங்கள் எழுதினோம் பதில் எதுவுமே

வரவில்லை. இவ்வளவு கடிதங்கள் அனுப்பினோம், பதிலே வரவில்லை! ஆனால் பாப்தாதா எல்லாவற்றிற்கும் நிச்சயம் பதில் தருகிறார். உங்களுக்கு எழுத வேண்டும் என்ற சங்கல்பம் எழுந்ததுமே தந்தையிடம் அங்கு வந்து சேர்ந்து விடுகிறது; ஆனால் நன்றாக செய்கிறீர்கள், நீளமாக எழுதாதீர்கள், சுருக்கமாக எழுதுங்கள். ஏனெனில் எழுதுவதால் மனதில் என்ன ஓடிக் கொண்டேயிருக்கிறதோ அது முடிவடைந்து விடுகிறது, லேசாகி விடுகிறது. ஆதலால் கட்டாயமாக எழுதுங்கள் ஆனால் சுருக்கமாக எழுதுங்கள். உங்கள் அனைவருடைய 'கார்ட்' (card) முதலியவை வதனத்திலும் கண்காட்சியில் இருக்கிறது. (அனைவருடைய 'கார்ட்' ம் மேடை மீது மிக அழகான விதத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ளது). இங்கும் கூட கண்காட்சி வைக்கப்பட்டுள்ளது எனில் சேர்ந்ததா, சேரவில்லையா? இப்படி நினைக்காதீர்கள். வந்து சேருகின்றன! மற்றும் பாப்தாதா ஒவ்வொருவருடைய சமாசாரத்தையும், -சேவையினுடையதோ, ஸ்திதியினுடையதோ -பார்க்கின்றார் மற்றும் பார்த்து விட்டு சக்திகளின் அதிர்வலைகளை அளிக்கின்றார். நல்லது.

(பாப்தாதா எல்லா தேசத்து சகோதர-சகோதரிகளையும் தனித்தனி குழுவாக கை உயர்த்தச் செய்தார். வட, தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, யு.கே., மலேசியா, ஐரோப்பா, மொரீஷியஸ், ஸ்ரீலங்கா, கரீபியன் தீவுகள்).

நாலாபுறமும் உள்ள விலைமதிப்பிட முடியாத விசேஷ ரத்தினங்களுக்கு, சதா தினமும் உற்சாகத்துடன் உற்சவம் கொண்டாடும் சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா சுய நிலை மற்றும் சேவையின் முன்னேற்றத்தில் சமநிலையில் இருக்கக்கூடிய ஆசீர்வாதத்தினுடைய அதிகாரி ஆத்மாக்களுக்கு, சதா சூழ்நிலைகளை சகஜமாகக் கடந்து செல்லக்கூடிய அத்தகைய ஆடாத அசையாத மகாவீர் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்!

**டீச்சர்களுடன்:** டீச்சர்களுக்கு பாப்தாதா விசேஷமாக வாழ்த்துக்களை அளிக்கின்றார். ஏனெனில் ஒவ்வொரு வருஷமும் சேவையின் ரிஸல்ட்'ல் டீச்சர்கள் நன்றாக உழைத்துள்ளீர்கள். இதனால் பிரத்யக்ஷ பலன் தந்தையின் ஆசீர்வாதங்கள்! புரிந்ததா. குஷியாக இருக்கிறீர்களா?

என டீச்சர்களிடம் கேட்க வேண்டிய அவசியமில்லை. குஷியாக இருக்கிறீர்கள் மற்றும் குஷியை உருவாக்க நிமித்தமானவர்கள். யார் மற்றவர்களை குஷிப்படுத்துகிறார்களோ அவர்கள் சுயம் அவ்வாறு நிச்சயம் இருப்பார்கள். டீச்சர் என்றால் அசையாதவர்கள், அமரர்கள்; எனில் அசையாதவர்களாகவும் இருப்பது, அமரராகவும் இருப்பது. அப்படி இருக்கிறீர்களா? அவ்வப்போது குஷி கொஞ்சம் குறைந்து விடுகிறதா? இல்லை, அப்படி ஆகவே முடியாது, இந்தளவு நிச்சயம் இருக்கிறது.

**தாதி ஜானகியுடன்:** இயற்கையை வென்றவர்தானே! இயற்கையின் வேலை ஆட்டுவது மற்றும் உங்கள் வேலை இயற்கையை ஆட்டுவது. நல்லது, அன்பினால் ஓய்வு எடுப்பதில்லை ஆனால் கட்டாயத்தின்பேரில் எடுக்கிறீர்கள். இவருக்கு சேவை மீது மிகுந்த பிரியம் உள்ளது. ஊக்கம் உள்ளது, யாரும் தடுத்து நிறுத்த முடியாது, யாரும் தடுத்து நிறுத்த முடியாது. அப்படித்தானே. (பாபா தன்னிடம் வைத்துள்ளார்). கூடவே இருக்கிறீர்களா என்றால் கூடவேதான் வைத்திருப்பார். நல்லது. புதிய புதிய கண்டுபிடிப்புகள் வெளி வரும். பரவாயில்லை, ஓய்வும் கிடைக்கிறது என்றால் ஏதாவது புதிய திட்டம் வகுப்பதற்காகத்தான். ஆதலால் உங்களுக்கு ஏதாவது புதிய பொருள் கிடைக்கும். தாதிகளைப் பார்த்து அனைவரும் குஷி அடைகின்றனர். அனைவரது அன்பும் சேவையின் பிரத்யக்ஷ பலன் ஆகும். எனில் முழு நாளும் எத்தனை பலன் கிடைக்கின்றது. யார் பார்த்தாலும் எந்தப் பார்வையில் பார்க்கின்றனர்? அனைவரது உள்ளத்திலும் ஆஹா தாதி ஆஹா, ஆஹா தாதி ஆஹா என்று வெளிப்படுகிறது. இதுவும் கூட சேவையின் பலன்தான். யார் எந்தளவு அன்புடன் பலன் எதிர்பாராமல் சேவை செய்கின்றனரோ அவருக்கு பிரத்யக்ஷ பலன் சதா கிடைக்கிறது மற்றும் அனைவரிடமிருந்தும் கிடைக்கிறது. அனைவருடைய உள்ளத்திலிருந்து வருகிறது -நம்முடைய தாதி, அல்லது இவர் லண்டன் உடைய தாதி எனக் கூறுவார்களா, இவர் மதுபன் தாதி என்றா? அனைவருடைய தாதிகள். யார் உலக அதிகாரி ஆகிறாரோ அவரை இப்போதிருந்தே எல்லோரும், அதிலும்கூட விசேஷ பிராமணர்கள் என்னுடையவர் என ஏற்றுக் கொள்வார்கள். நல்லது, நலமா? எல்லாமே நன்றாக உள்ளது. கெட்டு விடவேக் கூடாது. இப்போது இடையிடையே கொஞ்சம் ஓய்வில் இருந்தாலே போதும், மற்றவை நன்றாக உள்ளது.

ஊக்கம் உற்சாகம் வைப்பதால் மற்றவர்களுக்கும் கூட ஊக்கம் உற்சாகம் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. பறக்கக்கூடியவர் மட்டுமல்ல ஆனால் பறக்க வைக்கக்கூடியவராவார். வாரத்தில் பாதி நாள் அல்லது ஒரு நாள் முழு ஓய்வுக்கென ஒதுக்கி விடுங்கள், பின்பு உங்கள் சரீரம் நன்றாக உதவி புரியும். சில காலம் இப்போது ஓய்வு தேவை. இத்தனை வலது கரங்களை உருவாக்கி உள்ளீர்கள், எல்லா தேசத்திலும் வலது கரங்கள் உள்ளனர் என்றால் வலது கரங்கள் செய்யட்டும். முதுகெலும்பாக மட்டும் இருங்கள். பழைய பழைய ஆதி ரத்தினங்களும்கூட நிறைய பேர் வந்துள்ளனர். 20-வருடத்தினர் கை உயர்த்துங்கள். யார் முதல் முறையாக வந்துள்ளீர்களோ அவர்கள் கை உயர்த்துங்கள்; முதல் முறை வந்துள்ள அனைவருக்கும் விசேஷமான வாழ்த்துக்கள்! நல்ல நல்லவர்கள் வந்துள்ளனர். இப்போது அமர பவ என்ற வரதானத்தை சதா கூடவே வைத்திருங்கள். ஓம் சாந்தி!

குழந்தைகள் பாப்தாதாவுடன் சிவ ஜெயந்தி கொண்டாடினார்கள், பாடினார்கள், மெழுகுவர்த்தி ஏற்றினார்கள், கேக் வெட்டினார்கள். பாப்தாதா மேடை மீது எழுந்து நின்று தனது பொற்கரங்களால் கொடியை அசைத்தார் மற்றும் அனைவருக்கும் வாழ்த்துக்களை அளித்தார்! இந்தக் கொடியை அசைப்பதற்கு முன் அனைவருடைய மனதிலும் எந்த சிநேகத்தின் கொடியை அசைத்துக் கொண்டிருக்கிறீர்களோ, அதைப் பார்த்து பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். முதலில் அனைவரது உள்ளத்திலும் சிநேகத்தினுடைய, சேவையினுடைய கொடி உள்ளது, பின்னர் இது உங்கள் அனைவருடைய அடையாளம்! அனைவருடைய அழகான முகம் முழு உலகிலும் குஷியைப் பரப்பிக் கொண்டிருக்கிறது. குஷியின் அதிர்வலைகள் நாலா புறமும் உலகில் சென்று கொண்டே இருக்கின்றன. இதே போல் சதா குஷியின் அதிர்வலைகளைக் கொடுத்துக் கொண்டே இருங்கள் மற்றும் தந்தையுடைய பிரத்யக்ஷதாவின் கொடியை நடைமுறையில் அசைத்துக் கொண்டே இருங்கள்! நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 07.03.1995 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிராமணன் என்றால் தர்ம பலம் மற்றும் சுயராஜ்ய பலத்தின் அதிகாரி ஆத்மா என்பதாகும்!

இன்று பாப்தாதா நாலாபுறத்திலுமுள்ள குழந்தைகளின் இரண்டு முக்கியமான பலங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அந்த இரண்டு பலங்கள் ஒன்று தர்ம பலம் மற்றும் இன்னொன்று சுயராஜ்ய பலம். இந்த இரண்டு பலங்களும் ஒவ்வொருவருக்கும் பிராப்தி ஆகிறது என்பது தான் பிராமண வாழ்க்கையின் விசேஷமாகும். தர்ம பலம் என்றால் சத்தியம், தூய்மையின் தாரணை சொரூபம் மற்றும் சுயராஜ்ய பலம் என்றால் அதிகாரி ஆகி அனைத்து கர்ம இந்திரியங்களையும் தன்னுடைய அதிகாரத்தினால் கட்டளைப்படி நடத்துவது. சுயராஜ்ய அதிகாரி மற்றும் சுயராஜ்யத்தின் பலம் நிறைந்தவர் எந்தவொரு சூழ்நிலை, இயற்கை மற்றும் மாயாவின் அனைத்து சொரூபங்களுக்கு அடிமை ஆக மாட்டார், அதிகாரியாக இருப்பார், ஒவ்வொரு பிராமண ஆத்மாவிற்கும் இந்த இரண்டு பலங்களையும் பாப்தாதா பிராப்தி செய்வித்திருக்கிறார் இல்லையா? அனைவரிலும் இந்த இரண்டு பலங்களும் முழுமையாக இன்னும் வரவில்லையா? இப்பொழுதைய இரண்டு பலங்களை பிராப்தி செய்பவர் தான் எதிர்காலத்தில் தர்மம் மற்றும் இராஜ்ய பலத்தின் அதிகாரி ஆகிறார். இரண்டு பலங்களையும் தாரணை செய்திருக்கிறீர்களா? தன்னுடைய சித்திரத்தை பார்த்திருக்கிறீர்களா? இரட்டை வெளிநாட்டினரின் சித்திரமா அல்லது வேறு யாருடைய சித்திரமா? அப்படி அந்த சித்திரங்களில் இரண்டு பலங்களின் அடையாளத்தைப் பார்த்தீர்களா? தர்ம பலத்தின் அடையாளம் ஒளிக்கிரீடம் மற்றும் இராஜ்ய பலத்தின் அடையாளம் ரத்தினம் பதித்த கிரீடம், அந்த மாதிரியான தன்னுடைய சித்திரத்தைப் பார்த்திருக்கிறீர்களா? அப்படி இரண்டு பலங்களின் தாரணையை இந்த நேரம் செய்கிறீர்கள். அது தான் அரைக்கல்பம் இரண்டு பலங்களுமே

உங்கள் அனைவருக்கும் ஒரே கையில் இருக்கிறது. துவாபரயுகத்தில் இருந்து பார்த்தீர்கள் என்றால் தர்ம பலம் தனியாகி விட்டது மற்றும் இராஜ்ய பலம் தனியாகி விட்டது. எனவே தர்ம தந்தைகளுக்கு வர வேண்டியதாக இருந்தது. அப்படி தர்ம தந்தை மற்றும் இராஜா இருவரும் வெவ்வேறாக இருந்தார்கள் ஆனால் உங்களுடைய இராஜ்யத்தில் வெவ்வேறாக இருக்குமா என்ன? ஒவ்வொருவரிடமும் இரண்டு பலங்களும் சேர்ந்தே இருக்கிறது. எனவே துண்டுபடாத தடையற்ற இராஜ்யம் இருக்கிறது. அப்படி ஒவ்வொருவரிடமும் இந்த இரண்டு பலங்களை ஒவ்வொருவரும் தன்னுள் எவ்வளவு தாரணை செய்திருக்கிறார்கள் என்று பார்த்துக் கொண்டிருந்தோம். எவ்வளவு அதிகாரிகளாக ஆகியிருக்கிறார்கள் என்பதையும் பார்த்துக் கொண்டிருந்தோம். எப்பொழுதுமே அதிகாரியாக இருக்கிறீர்களா அல்லது சில நேரம் அடிமையாகவும் சில நேரம் அதிகாரியாகவும் இருக்கிறீர்களா? இந்த நேரம் அதிகாரியாகவும் மற்றும் அடுத்த நேரம் அடிமையாகவும் ஆகி விட்டீர்கள் என்றால் நன்றாக இருக்குமா? அல்லது எப்பொழுதும் அதிகாரியாக இருப்பது நன்றாக இருக்குமா? எப்பொழுதும் அதிகாரம் வேண்டுமா அல்லது கொஞ்ச காலத்திற்காக இருந்தாலும் பரவாயில்லையா? எப்பொழுது தந்தை அவரே அதிகாரம் கொடுத்துக் கொண்டிருக்கிறார், கொடுப்பவர் கொடுத்துக் கொண்டிருக்கிறார் மேலும் பெறுபவர்களாக இருப்பவர்களுக்கு என்ன செய்ய வேண்டும்? பெறுவது சுலபமா அல்லது கொடுப்பது சுலபமா? பெறுவதிலோ எந்தக் கடினமும் இல்லை தானே? கொடுப்பதில் யோசிக்க வேண்டியதாக இருக்கிறது -கொடுக்கலாமா, வேண்டாமா, கொஞ்சம் கொடுக்கலாமா. அதிகம் கொடுக்கலாமா ஆனால் பெறுவதிலோ எவ்வளவு கிடைக்கிறதோ அவ்வளவு எடுத்துக் கொள்வோம் என்று அனைவரும் கூறுவார்கள். அப்படியானால் பெறுவதில் நம்பர் ஒன்னாக இருக்கிறீர்களா அல்லது இரண்டாம் நம்பராக இருக்கிறீர்களா? இதிலேயே நம்பர் இரண்டாக யாரும் ஆவதில்லை. மேலும் எப்பொழுது கொடுக்க வேண்டியது இருக்கிறது என்றால் கொடுப்பதிலும் நம்பர் ஒன்னாக இருக்கிறீர்களா அல்லது யோசிக்க வேண்டியது இருக்கிறதா, தைரியம் வைக்க வேண்டியது இருக்கிறதா? உண்மையில் பார்த்தீர்கள் என்றால், என்ன கொடுக்கிறீர்கள்? பிராமண வாழ்க்கையில் கொடுக்க வேண்டுமா அல்லது எடுக்க வேண்டுமா? ஒருவேளை கொடுக்கக் கூடிய பொருளை

விட பெறக்கூடிய பொருள் உயர்ந்ததாக இருக்கிறது என்றால் பெறுவதாக ஆனதா? அல்லது கொடுப்பதாக ஆனதா? கொடுக்க வேண்டியதிருக்கும். கொடுக்க வேண்டும் -என்று இதை யோசித்தீர்கள் என்றால் சுமையானவர்களாக ஆகி விடுகிறீர்கள். எடுக்க வேண்டும் என்றால் எப்பொழுதும் குஷியாக இருப்பீர்கள், தைரியமாக இருப்பீர்கள். கொடுப்பதில் கொடுப்பது கடினம் என்று யோசிக்கிறீர்கள் ஆனால் முதலில் பெறுகிறீர்கள் பின்பு கொடுக்கிறீர்கள் என்றால் ஒன்றுமே இருப்பதில்லை. தந்தைக்கு கொடுக்கும் மாதிரி உங்களிடம் ஏதாவது இருக்கிறதா? கொடுப்பது என்றால் நல்ல பொருளைத் தான் கொடுக்கப்படும் அல்லது கெட்ட பொருளை கொடுப்பார்களா? சரி உங்களிடம் நல்லதாக எது இருக்கிறது -உடல் நல்லதாக இருக்கிறதா? மனம் நல்லதாக இருக்கிறதா? செல்வம் நல்லதாக இருக்கிறதா? (கிடையாது மோசமானதாக இருக்கிறது. மருந்துகளினால் தள்ளிக் கொண்டு உடலை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். அப்படி தள்ளப்படும் வண்டி நன்றாக இருக்குமா என்ன? அப்படி பிராமண வாழ்க்கையில் எடுப்பதே எடுப்பது தான். மேலும் குழந்தைகள் தந்தையை விட புத்திசாலிகள் என்று பார்த்து தந்தையோ புன்முறுவலிட்டுக் கொண்டே இருக்கிறார். முதலில் எடுத்துக் கொள்கிறார்கள் பின்பு கொடுப்பதற்கு யோசிக்கிறார்கள். புத்திசாலிகள் தான் இல்லையா? நல்லது தான், குழந்தைகள் புத்திசாலிகளாக இருக்கிறார்கள் என்றால் தந்தைக்கோ பிடித்தமானதாகத் தான் இருக்கும் இல்லையா? ஆனால் ஒருவேளை மந்தமாகி விட்டார்கள் என்றால் நன்றாக இருக்காது. சில நேரம் என்ன ஆயிற்றோ என்கிற மாதிரி குழந்தைகளினுடைய முகம் ஆகி விடுகிறது எப்படி நடைமுறையில் உடலிலுள்ள இரத்தம் குறைந்து விட்டது என்றால், பலஹீனம் ஆகி விடுகிறார்கள் இல்லையா? முகத்தில் கூட பலஹீனம் பார்க்கத் தென்படுகிறது. அப்படி இங்கேயும் குஷியின், சக்திகளின் குறை ஏற்பட்டு விட்டது என்றால் முகம் அப்படி ஆகி விடுகிறது எப்படி.. அனைவரும் தெரிந்திருக்கிறீர்கள், அனைவரும் அனுபவிகள் தான். குஷிகளின் சுரங்கமே கிடைத்திருக்கிறது என்று ஒரு பக்கம் கூறுகிறீர்கள். மேலும் அதுவும் அழியாதது பின்பு எப்படி குறைந்து விடுகிறது? தந்தையிடம் உங்களுடைய முழு நாளின் மனதின் நிலை மற்றும் நிலையின் பிரகாரம் முகம் எப்படி மாறுகிறதோ அந்த முழு நாளின் சித்திரம் அங்கே இருக்கிறது. நீங்களோ சித்திரங்களின் மியூசியம் உருவாக்குகிறீர்கள் இல்லையா? அதே போல்

தந்தையிடம் உங்களுடைய சித்திரங்களின் மியூசியம் இருக்கிறது. எனவே நான் பிராமண ஆத்மா இராஜ்ய பலம் மற்றும் தர்ம பலத்தின் அதிகாரி ஆத்மா ஆவேன் என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இந்த நினைவின் நிச்சயம் இருக்கிறது என்றால் போதை இருக்கிறது. நிச்சயம் குறைவாக இருக்கிறது என்றால் போதையும் குறைவாக இருக்கிறது. எனவே இந்த பலங்கள் எப்பொழுதும் உடன் இருக்கிறதா அல்லது சில நேரம் தொலைந்து போகிறதா. மேலும் சில நேரம் வந்து விடுகிறதா?

நல்லது. இன்று அதிகமானோர் இரட்டை வெளிநாட்டினர் வந்திருக்கின்றனர். பாப்தாதா விசேஷமாக இரட்டை வெளிநாட்டினரிடம் முழு நாளில் தன்னுடைய அதிகாரத்தின் ஆசனத்தில் செட் ஆகி இருக்கிறீர்களா அல்லது வெகு விரைவில் அப்செட் ஆகி விடுகிறீர்களா? (ஆசனத்தை விட்டு விடுகிறீர்களா?) அல்லது அப்செட் ஆவது கடந்த காலத்து விஷயம், இப்பொழுது ஆவதில்லை என்று அப்படியா? என்று கேட்கிறார். கடந்த காலமாக ஆகி விட்டது தான் இல்லையா? இப்பொழுதோ அப்படி ஆவதில்லை தான் இல்லையா? இப்பொழுது ஞானம் நிறைந்தவர், சக்தி நிறைந்தவர் ஆகி விட்டார்கள். சின்ன விஷயத்தில் அப்செட் ஆகி, முகம் மாறி, மூட் (மனநிலை) மாறி விடுவது என்பதோ இல்லையே. அந்த மாதிரி எப்பொழுதாவது ஆகிறதா? சில நேரம் அப்செட் ஆகுகிறீர்களா? நல்லது. உங்களில் யார் அப்செட் ஆவது என்றால் என்ன என்பதையும் மறந்து விட்டீர்கள், அந்த மாதிரி சக்திசாலியான ஆத்மாக்கள் ஒருபொழுதும் அப்செட் ஆவதில்லை என்று நினைக்கிறீர்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். உண்மையையோ சொல்கிறீர்கள் அதற்காக பாராட்டுக்கள்! இப்பொழுது இந்த சீசனில் எதையாவது மதுபன்னில் விட்டு விட்டு செல்வீர்களா அல்லது எதையாவது எடுத்துச் செல்வீர்களா? பெரும்பான்மையோர் மதுபன்னில் சிவராத்திரியை கொண்டாடினீர்கள் இல்லையா? யாருடைய பிறந்த நாளாக இருக்கிறதோ அவருக்கு ஏதாவது கிஃப்ட் கொடுப்பீர்கள் தான் இல்லையா. அப்படி தந்தைக்கு என்ன கிஃப்ட் (பரிசு) கொடுத்திருக்கிறீர்கள்? இந்த அப்செட் ஆவது இருக்கிறது இல்லையா? இனிமேல் அந்த மாதிரி ஆக மாட்டோம் என்று கூறி, இதையே கிஃப்ட் ஆகக் கொடுத்து விடுங்கள். தைரியம் இருக்கிறதா? நல்லது. கையை

உயர்த்துங்கள் மேலும் டி.வியில் அனைவரின் கையை படம் பிடித்து வைத்துக் கொள்ளுங்கள். யோசித்துப் புரிந்து உறுதியான கையை உயர்த்துங்கள். பாருங்கள் அனைவரின் கை படம் பிடிக்கப்பட்டு இருக்கிறது. பார்த்துக் கொள்ளுங்கள் இப்பொழுது புகைப்படம் பிடிக்கப்பட்டு விட்டது. பாப்தாதாவிற்கு அந்த மாதிரி முகத்தை பார்க்கவே பிடிப்பதில்லை. பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் எப்பொழுதும் மலர்ந்திருக்கும் ஆன்மீக ரோஜாவாகப் பார்க்க விரும்புகிறார். வாடிப்போனதாக அல்ல. மலர்ந்திருப்பதாக பார்க்க விரும்புகிறார். யார் மேல் அன்பு இருக்கிறதோ அவருக்கு எது பிடிக்குமோ அதைத்தான் செய்வார்கள் இல்லையா? இரட்டை வெளிநாட்டினரோ தந்தை மேல் மிகுந்த அன்பு வைத்திருக்கிறார்கள் அப்படியானால் தந்தைக்கு எது பிடிக்குமோ அது தான் உங்களுக்கும் பிடிக்கும் இல்லையா? எனவே இப்பொழுது என்ன செய்வது, விஷயமே அப்படி இருந்தது, எனவே அப்செட் ஆகி விட்டோம் என்ற செய்தி யாரிடமிருந்தும் வர வேண்டாம். ஒருவேளை அப்செட் ஆக்கும் விஷயம் வந்தாலும் கூட நீங்கள் அப்செட் நிலையில் வராதீர்கள். எப்படி ஊஞ்சலில் ஆடுகிறீர்கள் இல்லையா, அது அதிகமாக மேலே கீழே செல்லும், மிகவும் கீழே வந்து, மிகவும் மேலே சென்று, மிக வேகமாகச் செல்கிறது என்றால் உடலை அப்செட் ஆக்கும் இல்லையா? ஆனால் நீங்கள் அப்செட் ஆகுகிறீர்களா என்ன? ஏன் ஆவதில்லை? விளையாட்டு என்று நினைக்கிறீர்கள் என்றால் அப்செட் ஆவதற்கு பதிலாக மனமகிழ்ச்சிக்கான பொழுதுபோக்கு என்று நினைக்கிறீர்கள். காரணம் என்னவாக ஆனது? விளையாட்டு என்பது தான். அதே போல் ஒருவேளை ஏதாவது அப்செட் ஆக்கும் விஷயம் வந்தாலும், அவசியம் வரும், யார் யார் கையை உயர்த்தினார்களோ அவர்களிடம் இன்னும் அதிகமாக அப்செட் ஆக்கக்கூடிய பெரிய விஷயங்கள் வரும். ஏனென்றால் மாயாவும் முரளியைக் கேட்டுக் கொண்டிருக்கிறது ஆனால் அதை ஒரு விளையாட்டு என்று புரிந்து கொள்ளுங்கள், பயப்படாதீர்கள். நல்லது. ஊஞ்சலை ஆட்டுகிறது என்றால் ஆட்ட விடுங்கள் ஆனால் மனம் பயப்பட வேண்டாம். ஞானம் நிறைந்த, சக்தி நிறைந்தவராக ஆகி விடுங்கள். அந்த சீட்டை விடாதீர்கள். ஒருவேளை ஓரிரு தடவையாவது இவர் அப்செட் ஆகுபவர் இல்லை என்று மாயா பார்க்கிறது என்றால் அதுவே அப்செட் ஆகி விடும் உங்களை ஆக்காது. விஷயத்தை ஒருவர் இன்னொருவருடன் நன்றாகப் பரிமாறிக்

கொள்ளுங்கள் ஏதாவது விஷயம் வருகிறது என்றால் ஞானம் நிறைந்தவராக இருக்கும் காரணத்தினால் இது சரி தான், இது சரியில்லை, இந்த மாதிரி இருக்க வேண்டும். இந்த மாதிரி இருக்கக் கூடாது என்று புரிந்து கொள்கிறீர்கள் இல்லையா? ஆனால் விஷயத்தின் பரிமாற்றத்தை அந்த விஷயத்திற்கேற்றபடி செய்யுங்கள், அப்செட் ரூபத்தில் செய்யாதீர்கள். ஒருபக்கம் சொல்லிக் கொண்டே செல்வீர்கள், இன்னொரு பக்கம் கங்கை, யமுனை புரண்டோடிக் கொண்டே இருக்கும். மனதில் ஓடினாலும் சரி, கண்களினால் ஓட வைத்தாலும் சரி, இரண்டுமே சரியில்லை தான். அப்படி கிஃப்ட் (பரிசு கொடுப்பதற்கு தயாராகி விட்டீர்களா? யோசித்து விட்டீர்களா அல்லது ஆம் என்று சாதாரணமாக சொல்லிவிட்டீர்களா?

பாப்தாதா மிக எளிதான வார்த்தைகளில் யுக்தி கூறுகிறார். எப்பொழுதாவது ஏதாவது சூழ்நிலை அல்லது இயற்கை குழப்பம் செய்விக்கும் ரூபத்தில் வருகிறது என்றால் இரண்டு வார்த்தைகளை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். விதி என்னவென்றால் நாட் (வேண்டாம்) அல்லது டாட் (புள்ளி) போடுங்கள். நாட் அல்லது டாட். ஒருவேளை ஏதாவது விஷயம் தவறாக இருக்கிறது என்றால் நாட் என்பதை யோசியுங்கள், அதாவது செய்ய வேண்டாம் என்பதாகும். யோசிக்க வேண்டாம், செய்ய வேண்டாம். பேச வேண்டாம் என்று அப்படி! மேலும் டாட் போட்டு விட்டீர்கள் என்றால் நாட் ஆக ஆகியே விடும். யோசிக்காதீர்கள், மேலும் புள்ளி வையுங்கள். முடிந்தது. புள்ளி வைப்பதில் எவ்வளவு நேரம் எடுக்கும்? ஒரு விநாடியைவிட குறைந்த நேரம் ஆனால் என்ன ஆகிறது? இதைச் செய்யக்கூடாது, சரியில்லை என்று புரிந்து கொள்கிறார்கள் இருந்தாலும் டாட் போடத் தெரிவதில்லை. ஞானம் நிறைந்தவராகவோ ஆகி விட்டீர்கள், ஆனால் ஞானம் நிறைந்தது மட்டும் போதாது, ஞானத்தின் கூடவே சக்தி நிறைந்த நிலையும் தேவையாக இருக்கிறது. அப்படி சக்திசாலியான நிலையின் பலஹீனம் இருக்கிறது. எனவே டாட் போட முடிவதில்லை. மேலும் யாருக்கு டாட் போடத் தெரியுமோ அவர் தந்தையையும் மறப்பதில்லை, தந்தையும் டாட் (புள்ளி) ஆக இருக்கிறார். நீங்களும் புள்ளியாக இருக்கிறீர்கள். அப்படி என்றால் அனைத்தும் நினைவில் வந்து விடும். முற்றுப்புள்ளி. கேள்விக்குறி, ஆச்சரியக்குறி, அல்லது கமா என்ற இவைகளைப் போடாதீர்கள், ஃபுல் ஸ்டாப். ஃபுல் ஸ்டாப்

போடுவது எவ்வளவு சுலபமாக இருக்கிறது. மற்ற அனைத்துமே கடினம். மேலும் அனைத்தையும் விட மிகக் கடினமானது கேள்விக்குறி ஆனால் அதைப் போடுவதோ மிக எளிதில், விரைவாக வந்து விடுகிறது. ஓய் (why ஏன்) என்ற வார்த்தை வருகிறது என்றால் என்ன செய்ய வேண்டும் என்று ஏற்கனவே கூறியிருந்தோம். ஃப்ளை (fly). மேலே பறந்து செல்லுங்கள். ஒய் இல்லை ஃப்ளை. ஃப்ளை பண்ண (பறக்க) தெரியும் இல்லையா? இரட்டை வெளிநாட்டினரிலும் நல்ல நல்ல இரத்தினங்கள் உருவாகியிருக்கிறார்கள். அந்த மாதிரி இரத்தினங்களைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார். கூடவே அந்த மாதிரி விலைமதிக்க முடியாத இரத்தினங்களில் ஒருவேளை மிகக் கொஞ்சமாவது எங்காவது கரை தென்படுகிறது என்றால் அந்த விலைமதிக்க முடியாத இரத்தினங்களின் எதிரில் இந்தக் கரை பார்க்க நன்றாகவே இல்லை. மிகச் சிறிய கரையாக இருக்கலாம், ஆனால் கரை என்று தான் சொல்வார்கள் இல்லையா? எனவே எப்பொழுது விலைமதிக்க முடியாத இரத்தினமாக ஆகி விட்டீர்கள் என்றால் இன்னும் ஏன் சிறிய கரையையும் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? நன்றாக இருக்கிறதா என்ன? சந்திரனிலும் கருப்பு தென்படுகிறது எனவே நன்றாக இருக்கிறது என்று அப்படி யோசிக்கவில்லையே? இரட்டை வெளிநாட்டினர் எந்தவொரு குறையும் இல்லாத ஒரு முன் மாதிரியாக இருந்து காண்பியுங்கள். மற்றபடி கரை ஏற்படுவதின் காரணமாக என்ன இருக்கிறது? கரை ஏற்பட வேண்டும் என்று விரும்புவதில்லை ஆனால் ஏற்பட்டு விடுகிறது. ஏன் கரை ஏற்படுகிறது? மூல காரணத்தை தெரிந்திருக்கிறீர்களா? தெரிந்து கொள்வதிலோ புத்திசாலிகள் தான் நீங்கள். தெரிந்தும் இருக்கிறீர்கள் மேலும் உங்களுக்குள் எப்பொழுது ஒர்க் ஷாப் (ஒரு விஷயத்தை ஆழமாக சிந்தித்து கருத்து பரிமாறுதல்) வைக்கிறீர்கள் என்றால் பாப்தாதா ஒர்க்ஷாப்பின் புகைப்படத்தையும் பார்க்கிறார், இந்தக் காரணம், இந்த காரணம் என்று அதிகமான காரணத்தை வெளிக் கொண்டு வருகிறீர்கள். மேலும் நல்ல நல்ல விஷயங்களை ஒர்க் ஷாப்பில் கலந்துரையாடுகிறீர்கள் ஆனால் ஒர்க்கில் (காரியத்தில் கொண்டு வருவதில்லை. தேக உணர்வின் அதிகமான சூட்சும ரூபம் ஆகிக் கொண்டே செல்கிறது. இப்பொழுது பெரிய பெரிய ரூபத்தில் தேக உணர்வு வருவதில்லை ஆனால் சூட்சும மற்றும் ராயல் ரூபத்தில் வருகிறது. புத்தியை மிக நன்றாக வேலை செய்ய விடுகிறீர்கள்,

எப்பொழுது நல்ல நல்ல விஷயங்களை யோசிக்கிறீர்களோ அப்பொழுது பாப்தாதாவும் குஷியடைகிறார் ஆனால் நல்ல விஷயத்தை யோசித்து, செய்து பிறகு கொஞ்சமாவது ஒருவேளை ஏதாவது சேர்ப்பது -சரி செய்கிறீர்கள் என்றால் நான் என்பது வந்து விடுகிறது. மற்றபடி குஷியோடு உங்களுடைய கருத்துக்களைக் கூறுகிறீர்கள் அதே போல் மற்றவர்களின் கருத்துக்களையும் குஷியோடு எடுத்துக் கொள்ளுங்கள். இது எப்படி நடக்கும், இதை என்ன செய்திருக்கிறார்கள். இதுவோ நடக்கவே முடியாது, இந்த மாதிரி செய்யவே முடியாது. அந்த மாதிரி யோசித்து பயப்படாதீர்கள். எவ்வளவு தன்னுடைய விஷயத்திற்கு மரியாதை கொடுக்கிறீர்களோ அந்தளவே மற்றவர்களின் கருத்து, மற்றவர்களின் விஷயத்திற்கும் மரியாதை கொடுங்கள். கருத்து கூறுவது வேறு விஷயமாகும், உங்களுக்கு அவர்களுடைய கருத்து சரியாகப் படவில்லை என்றாலும் அதன் பாதிப்பில் வருவது, மனநிலை மேலே கீழே போய்விடுகிறது என்றால் இந்த சேவை, சேவையாக இருப்பதில்லை. அட்ஜஸ்ட் அனுசரித்து நடந்து கொள்வது) செய்வது, மற்றவர்களின் கருத்துக்களையும் தன்னுடைய கருத்துக்கள் போல் யோசிப்பது, புரிந்து கொள்வது என்ற இது தான் மற்றவர்களின் கருத்துக்களுக்கு மரியாதை கொடுப்பது. எப்படி நான் இதை யோசித்திருக்கிறேன் அல்லது என்னிடம் இந்தக் கருத்து இருக்கிறது, சிந்தித்தீர்கள் மற்றும் காரியம் செய்தீர்கள் எனவே என்னுடைய கருத்துக்களுக்கு மகத்துவம் இருக்க வேண்டும். மற்றவர்களும் மரியாதை கொடுக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள் இல்லையா? அதே போல் மற்றவர்களின் கருத்துக்களையும் தன்னுடைய கருத்துக்களோடு சேர்த்துக் கொள்ள வேண்டும். அப்படி சேர்த்துக் கொள்ளத் தெரிவதில்லை, மற்றவர்களின் கருத்துக்களை மற்றவர்கள் கருத்துக்கள் என்று நினைக்கிறீர்கள். ஏனென்றால் இப்பொழுது இரட்டை வெளிநாட்டினர் நீங்களும் சேவைக் களத்தில் திட்டம் தீட்டுவதில் மிக நன்றாக முன்னேறிக் கொண்டிருக்கிறீர்கள் இன்னும் முன்னேறுவீர்கள் ஆனால் அட்ஜஸ்ட்மென்டின் விசேஷத்தை உபயோகித்தில் கொண்டு வாருங்கள். ஒருவேளை ஏதாவது குழந்தை முன்னேறிச் செல்கிறது என்றால் பாப்தாதாவிற்கு குஷி ஏற்படுகிறது. ஏன் முன்னேறுகிறார் என்று அப்படி நினைப்பதில்லை. ஒருவர் முன்னேறுகிறார் என்றால் மிக நல்ல விஷயம் தானே அப்படி இரட்டை வெளிநாட்டினர்களுக்காக பாப்தாதாவிற்கு அன்போ இருக்கவே இருக்கிறது ஆனால் சேவைக்கான

திட்டம் மற்றும் நடைமுறை சேவைக்காக என்ன சேவை செய்கிறீர்களோ. செய்து கொண்டு தான் இருக்கிறீர்கள் அதற்காக மிகுந்த மரியாதை இருக்கிறது.

ஒருவேளை இரட்டை வெளிநாட்டினர் நீங்கள் இல்லை என்றால் பாப்தாதாவின் ஒரு பட்டம் நடை முறையில் நிரூபணம் ஆவதில்லை என்று ஏற்கனவே பாப்தாதா கூறியிருக்கிறார், அது எது? விஷ்வ கல்யாணகாரி (உலகிற்கு நன்மை செய்பவர்). இப்பொழுது பாருங்கள் உலகின் நாலாபக்கங்களிலும் தந்தையின் செய்தியை கொடுக்கின்றீர்கள் இல்லையா? இந்த சீசனில் நாலாபக்கங்களிலிருந்தும் வந்திருக்கிறீர்கள் இல்லையா? மொத்தம் எத்தனை தேசங்களிலிருந்து வந்திருக்கிறார்கள்? (58) இன்னும் முக்கியமான தேசங்கள் மீதமிருக்கிறது (125). சின்னச்சின்ன தேசங்களோ அதிகமாக இருக்கும் முக்கியமான தேசங்களாக 125-இன்னும் இருக்கிறது. அப்படியானால் இரட்டை வெளிநாட்டினருக்கோ அதிக சேவை செய்ய வேண்டியதாக இருக்கும். பாரதத்திலும் செய்ய வேண்டும் என்றால் வெளிநாட்டிலும் செய்ய வேண்டும், இரண்டு இடங்களிலும் செய்ய வேண்டும். சேவையின் சம்பூர்ண வெற்றியின் அடையாளம் என்னவென்றால் எந்தப் பக்கத்திலிருந்தும் எங்களுக்கு இன்னும் செய்தி வந்து சேரவில்லை என்று எந்தவொரு ஆத்மாவும் புகார் செய்யக்கூடாது என்பது தான். செய்தியைக் கொடுத்தீர்கள் மேலும் கேட்டு யாராவது தன்னுடைய பாக்கியத்தை உருவாக்கவில்லை என்றால் உங்கள் மேல் புகார் இருக்காது, அது அந்த ஆத்மாவின் மேலேயே ஏற்பட்டதாகும் ஆனால் உங்களுக்காக எந்தவொரு புகாரும் இருந்து விட வேண்டாம். எப்பொழுது உங்களையே மாஸ்டர் விஷ்வ கல்யாணகாரி என்று கூறுகிறீர்கள் என்றால் உலகின் நாலாபக்கங்களிலும் செய்திகளையோ கொடுக்க வேண்டும் தான் இல்லையா? பாரதத்திலும் செய்தியைக் கொடுக்க வேண்டும் என்றால் வெளிநாட்டிலும் செய்தி கொடுக்க வேண்டும். நல்லது.

**வரதானம்: ஞானத்தின் லைட் மைட் (ஒளி, சக்தி) மூலமாக பலஹீனமான சம்ஸ்காரங்களை முடிவு கட்டக்கூடிய சக்தி நிரம்பியவர் ஆகுக!**

ஞானத்தின் மூலமாக தன்னுடைய பலஹீனமான சம்ஸ்காரங்களோ தெரிய வந்து விடுகிறது மேலும் எப்பொழுது அந்த விஷயத்திற்கான தெளிவு கிடைத்து விடுகிறது என்றால் அந்த சம்ஸ்காரம் கொஞ்ச காலத்திற்காக உள்ளே உள்ளடங்கிப் போய்விடுகிறது ஆனால் பலஹீனமான சம்ஸ்காரத்தை முடிவு கட்டுவதற்காக லைட் மற்றும் மைட்டின் அதிகப்படியான சக்தியின் அவசியம் இருக்கிறது. இதற்காக மாஸ்டர் சர்வ சக்திவான், மாஸ்டர் ஞானம் நிறைந்தவரின் கூடவே செக்கிங் மாஸ்டராகவும் ஆகுங்கள். ஞானம் மூலமாக தன்னுள் சக்தியை நிரப்புங்கள் சிந்தனை சக்தியை அதிகரித்தீர்கள் என்றால் சக்தி நிரம்பியவராக ஆகி விடுவீர்கள்.

சுலோகன்: எங்கு அனைத்து பிராப்திகளும் இருக்கிறதோ அங்கு முக மகிழ்ச்சி இருக்கிறது!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 16.03.1995 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அனைத்து பிராப்திகள் நிறைந்த ஆத்மாவின் அடையாளம் –திருப்தியான மற்றும் மகிழ்ச்சியான நிலை!

இன்று அனைத்து பிராப்திகளை செய்விக்கும் பாப்தாதா தன்னுடைய நாலாபுறத்திலுமுள்ள பிராப்தி நிறைந்த குழந்தைகளை பார்த்து கொண்டிருக்கிறார். அனைத்து பிராப்திகளின் வள்ளல், நிரம்பிய மற்றும் சம்பூர்ண தந்தையின் குழந்தைகள் என்றால் ஒவ்வொரு குழந்தைக்கும் தந்தை அனைத்து பிராப்திகளின் ஆஸ்தியை கொடுத்திருக்கிறார். சிலருக்கு பத்தும், சிலருக்கு இருப்பதும் என்று அப்படி கொடுக்கவில்லை. அனைத்துக் குழந்தைகளுக்கும் அனைத்து பிராப்திகளின் அதிகாரத்தை கொடுத்திருக்கிறார். அனைத்து குழந்தைகளும் முழு ஆஸ்தியின் அதிகாரிகள் ஆவார்கள், அப்படி ஒவ்வொரு அதிகார குழந்தைகளும் தன்னில் பிராப்திகளின் அதிகாரத்தை எவ்வளவு பிராப்தி செய்திருக்கிறார்கள் என்பதை பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார். தந்தை அனைத்தையும் கொடுத்திருக்கிறார். தந்தையை சர்வ சக்திவான் மற்றும் நிரம்பிய கடல் என்று கூறுகிறார்கள் ஆனால் குழந்தைகள் அந்த பிராப்திகளை எவ்வளவு தனதாக ஆக்கினார்கள்? தந்தையால் கொடுக்கப்பட்ட ஆஸ்தியை எப்பொழுது தன்னுடையதாக ஆக்கி விடுகிறார்கள் மேலும் எவ்வளவு தன்னுடையதாக ஆக்குவார்களோ அவ்வளவு என்னுடைய பொக்கிஷம் என்ற குஷி மற்றும் போதை இருக்கிறது. கொடுத்தது தந்தை ஆனால் தன்னில் தாரணை செய்து தன்னுடையதாக ஆக்கி விட்டார். அப்படியென்ன பார்த்தோம்? தன்னுடையதாக ஆக்குவதில் வரிசைக்கிரமமாக ஆகி விட்டார்கள் என்பதை பார்த்தோம். தந்தையோ வரிசை நம்பரை உருவாக்கவில்லை ஆனால் அவரவர்களின் தாரணையின் சக்திக்கேற்றபடி வரிசைக்கிரமமானவர்களாக ஆக்கி விட்டார்கள். அமிர்தவேளையில் இருந்து இரவு வரை எப்பொழுதும்

பிராப்திகளின் போதை மற்றும் அனுபவத்தில் இருக்கும் சம்பூர்ண அதிகார மற்றும் அனைத்த பிராப்திகளினால் நிரம்பிய ஆத்மாக்களின் அடையாளம் என்னவாக இருக்கும்? பிராப்திகளின் அடையாளம் திருப்தியாக இருப்பது ஆகும். அவர் எப்பொழுதும் திருப்தியானவராகி மற்றவர்களுக்கும் திருப்தியான நிலையின் ஜொலிப்பின் வைப்ரேஷனை (அதிர்வலைகளை) பரப்பிக் கொண்டே இருக்கிறார். அவருடைய முகம் எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்ததாகத் தென்படும். மகிழ்ச்சி நிறைந்த நிலை என்றால் அனைத்து கேள்விகளிலிருந்தும் விடுபட்ட நிலை எந்தக் கேள்வியும் இருக்காது. ஏன், என்ன, எப்படி இவை அனைத்தும் முடிவடைந்திருக்கும். அந்த மாதிரி மகிழ்ச்சி நிறைந்தவராக ஆகி விட்டீர்களா? அல்லது இப்பொழுது கூட சில நேரம் இது என்ன, இது ஏன், இது எப்படி ஆகும், எப்பொழுது ஆகும் என்று அந்த மாதிரி ஏதாவது கேள்வி எழுகிறதா? இந்தக் கேள்வி மனதிலோ அல்லது மற்றவர்களிடமிருந்து எழுகிறதா? கேள்வி நிறைந்தவர்களாக இருக்கிறீர்களா அல்லது மகிழ்ச்சி நிறைந்தவர்களாக இருக்கிறீர்களா? அல்லது சில நேரம் கேள்வி நிறைந்த சிந்தனை மற்றும் சில நேரம் மகிழ்ச்சி நிறைந்த சிந்தனையா? என்ன இருக்கிறது? பிராமணர்களின் பொக்கிஷத்தில் பிராப்தியில்லாத ஒன்றும் இல்லை என்பது தான் மகிமையாக இருக்கிறது. இது யாருடைய, எந்த பிராமணர்களின் மகிமை? உங்களுடையதா அல்லது இன்னும் வரப்போகிறவர்களுடையதா? நீங்களே தான் அது -அப்படி எப்பொழுது ஏதாவது பிராப்தியின்மை இருக்கிறது என்றால், பிராப்தியின்மை திருப்தியின்மைக்கான காரணம் ஆகும். உங்களுடைய அனுபவத்தையும் பாருங்கள் எப்பொழுதாவது மனம் திருப்தியின்றி இருக்கிறது என்றால் அதற்கான காரணம் என்னவாக இருக்கிறது? ஏதாவது பிராப்தியில்லை என்பதின் அனுபவத்தை எப்பொழுது செய்கிறீர்களோ அப்பொழுது திருப்தியின்மை ஏற்படுகிறது. பிராப்தியில்லாதது ஒன்றும் இல்லை என்ற மகிமையோ இருக்கிறது. இது இப்பொழுதிற்கான மகிமையா அல்லது விநாஷ நேரத்திற்கானதா? விநாஷ நேரத்தில் முழுமையாக ஆகி விடுவோம் என்று அப்படியா அல்லது இப்பொழுது ஆக வேண்டுமா? எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்து இருப்போம் ஒருபொழுதும் எந்த விஷயத்திலும் அது தன்னுடைய சம்மந்தத்தில் இருந்தாலும் அல்லது மற்றவர்களின் சம்மந்தத்திலானாலும் கேள்வி எழாது எப்பொழுதும் திருப்தியாக

இருப்போம் என்று உங்களில் யார் நினைக்கிறீர்கள் -அந்த மாதிரி திருப்தியான ஆத்மாக்கள் எத்தனை பேர் இருப்பீர்கள்? நிறைய இருக்கிறீர்களா! நல்லது. உங்களில் யார் நாங்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கிறோம், மாயா எவ்வளவு தான் அசைத்தாலும் நாங்கள் அசைவதில்லை, மாயாவை அசைத்து விடுகிறோம். மாயா நமஸ்காரம் செய்கிறது. நாங்கள் அங்கதன், மாயா தோல்வி அடைகிறது ஆனால் நாங்கள் வெற்றி அடைகிறோம் என்று நினைக்கிறீர்களோ அந்த மாதிரி இருப்பவர்கள் கையை உயர்த்துங்கள். இதில் எப்பொழுதும் என்ற வார்த்தையை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள், சில நேரம் இருப்பவர்கள் இல்லை. மிகக் குறைந்த பேர்கள் தான் இருக்கிறார்கள். கோடியில் சிலர். கேள்விக் குறி எழத் தான் செய்கிறது இல்லையா. கேள்விக்குறி அகராதியிலிருந்து (dictionary) அகன்று விடட்டும். குழப்பமும் இருக்க வேண்டாம். கம்ப்யூட்டரை இயக்குகிறீர்கள் என்றால் அதில் வருகிறது இல்லையா? உங்களுடைய புத்தி என்ற கம்ப்யூட்டரில் எப்பொழுதும் ஃபுல் ஸ்டாப் (முற்றுப்புள்ளி) மாத்திரை வரட்டும். கேள்விக்குறி, ஆச்சரியக்குறி அகன்று விடட்டும். இதைத் தான் எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்தவராக இருப்பது என்று கூறுவது. அந்த மாதிரி மகிழ்ச்சி நிறைந்தவர்கள் மற்றவர்களின் கேள்விக்குறியையும் அழித்து விடுகிறார்கள். இல்லை என்றால் தன்னுள் ஒருவேளை கேள்விக்குறி இருக்கிறது என்றால் ஏதாவது ஒரு விஷயம் கேட்டார்கள், பார்ப்பார்கள், கூறுவார்கள் -ஆம், இதுவோ நடக்கக்கூடாது, ஆனால் நடக்கிறது, நடக்கக்கூடாது என்று நானும் நினைக்கிறேன், குழம்பி விடுவார்கள். அவருடைய கேள்விக்கே இன்னும் அதிக முக்கியத்துவம் கொடுத்து விடுவார்கள். ஆம் இது சரியில்லை ஆனால் நடக்கிறது... என்று கூறி ஒப்பந்தத்தையோ கொடுத்து விட்டார் இல்லையா. அப்படி அவரை மகிழ்ச்சி நிறைந்தவராக ஆக்கவில்லை ஆனால் கேள்வியை இன்னும் பெரியதாக்கி விட்டார். இன்னும் அதிகமாகி விட்டது. பார்த்தால் ஒருவரின் கேள்வியாக இருந்தது, இப்பொழுது இருவருடைய தாக ஆகி விட்டது, இரண்டிலிருந்து நான்கு பேர்களுடையதாக ஆகி விடும். அப்படி மகிழ்ச்சி நிறைந்த வைப்ரேஷனை எண்ண அதிர்வலைகளை) விட கேள்வி நிறைந்த வைப்ரேஷன் வேகமாக பரவுகிறது. ஆம்! அப்படித் தான்.... என்று கூறி ஒத்துப்போய் விட்டார். ஆச்சரியக்குறி வந்து விட்டது இல்லையா -ஆம்! அப்படி முற்றுப்புள்ளியோ

இடப்படவில்லை தானே. இது என் மூலம் நடக்கக்கூடாது, இது எனக்கு கிடைக்க வேண்டும் என்று தனக்காக இருந்தாலும் அல்லது அவர்களுக்கு இது நடக்கக்கூடாது என்று மற்றவர்களைப் பற்றியாக இருந்தாலும் இவைகள் கேள்வி நிறைந்ததாக ஆக்கி விடுகிறது, மகிழ்ச்சி நிறைந்தவராக ஆக்குவதில்லை, அனைவரின் லட்சியம் என்னவாக இருக்கிறது? திருப்தியாக, மகிழ்ச்சி நிறைந்து இருப்பது.

யார் மகிழ்ச்சி நிறைந்த நிலையில் இருப்பாரோ அவருடைய மனம், புத்தியின் வீணானவற்றின் வேகம் அதிகமாக இருக்காது. எப்பொழுதும் நிர்மலமானவராக, பணிவானவராக இருப்பார். பணிவு இருக்கும் காரணத்தினால் அனைவரையும் தன்னுடைய மகிழ்ச்சி நிறைந்த நிலையின் நிழலில் குளுமையை அளிப்பார். அக்னிக்கு சமமாக எரிந்து கொண்டிருக்கும் எப்படிப்பட்டவராக இருந்தாலும், மிகவும் சூடேறிய மூளை உடையவராக இருந்தாலும் மகிழ்ச்சி நிறைந்த நிலையின் வைப்ரேஷனின் நிழலில் குளுமையாகி விடுவார். பலஹீனமாக என்ன வருகிறது? பார்க்கப்போனால் சரியாக நடந்து கொள்கிறீர்கள், தன்னைப் பொறுத்தவரை நன்றாகத்தான் இருக்கிறீர்கள் ஆனால் எப்பொழுது உறவு நெருக்கத்தில் வருகிறீர்கள் மற்றவர்களின் குறைகளைப் பார்த்து, கேட்டு. வர்ணனை செய்து பிரபாவத்தில் வந்து விடுகிறீர்கள். பிறகு இவர் செய்தார் இல்லையா எனவே என் மூலமாகவும் இது நடந்து விட்டது என்று கூறுகிறீர்கள். இவர் சொன்னார் அதனால் தான் நானும் சொன்னேன். அவர் 50-தடவை சொன்னார் நான் ஒரு தடவை சொன்னேன், பின்பு தந்தையின் எதிரிலும் மிக இனிமையிலும் இனிமையான விஷயங்களை வைக்கிறார்கள், பாபா இவ்வளவு யாரால் தான் சகித்துக் கொள்ள முடியும் நீங்களும் புரிந்து கொள்ளுங்களேன் என்று கூறுகிறார்கள். இருந்தாலும் முயற்சி செய்பவர்கள் தான் இல்லையா. அதனால் கொஞ்சமாவது வரும் இல்லையா. அப்படி தந்தைக்கும் புரிய வைக்க ஆரம்பித்து விடுகிறார்கள். இங்கு யார் பொறுப்பில் இருக்கிறார்களோ அவர்களிடம் மிகுந்த கதையைக் கூறுகிறார்கள். அப்படி இருந்தது இல்லையா, அப்படி இருந்தது இல்லையா, அப்படி இருந்தது இல்லையா என்று அப்படி, அப்படி என்பதின் மாலையை ஜபிக்கிறார்கள். அந்த மாதிரி விஷயங்களை இரண்டு வார்த்தையில் வர்ணனை செய்யுங்கள் என்று பாப்தாதா எப்பொழுதுமே இஷாரா கொடுக்கிறார். மிக நீளமாக வர்ணனை

செய்யாதீர்கள். ஏனென்றால் இந்த வீணான விஷயங்கள் மிக காரசாரமாக இருக்கும். சுவராஸ்யமானதாக அனுபவம் ஆகும். எப்படி உணவில் கூட இனிப்பு-புளிப்பு கலந்த சுவையுள்ள பொருள் பிடித்ததாக இருக்கும் இல்லையா. மேலும் சாதாரண சுவையுள்ளவைகளை இவற்றையோ சாப்பிட்டுக் கொண்டே தான் இருக்கிறோம் என்று சொல்வார்கள். அப்படி வீணான விஷயங்கள், வீணானவற்றை கேட்பது, சொல்வது மற்றும் செய்வது இவற்றில் நாளடைவில் ஆர்வம் அதிகரித்து விடுகிறது. பிறகு நானோ விரும்பவில்லை தான் ஆனால் அவர் கூறினார் இல்லையா, அதனால் அவர் கூறுவதையும் கேட்டு விடுவோம் அவருடைய இதய பாரத்தையும் இறக்கி விடுவோம் என்று யோசித்தோம் என்றும் கூறுகிறார்கள். அவருடைய இதயமோ காலியாகி விட்டது ஆனால் உங்களுடைய இதயத்தை நிரப்பி விட்டீர்கள், அப்படி கொஞ்சம் கொஞ்சமாக இதயத்தில் நிரப்பி நிரப்பி பின்பு சம்ஸ்காரமாகி விடுகிறது என்றால் இது தவறு என்று உணர்வே ஏற்படுவதில்லை. இந்த வீணான சம்ஸ்காரம் புத்தி நிர்ணயம் செய்வதை அழித்து விடுகிறது. எனவே எப்பொழுதும் திருப்தியாக இருப்பது தான் சுலபமான விதியாகும். எப்பொழுதும் தன் எதிரில் ஏதாவது ஒரு விசேஷ பிராப்தியை வையுங்கள், ஏனென்றால் பிராப்தி மறப்பதில்லை. ஞானத்தின் விஷயங்கள் மறக்க முடியும் ஆனால் எந்தவொரு பிராப்தியும் மறப்பதில்லை. தந்தையிடமிருந்து என்னென்ன கிடைத்திருக்கிறது, எவ்வளவு கிடைத்திருக்கிறது விதவிதமானவற்றை விரும்புகிறீர்கள் இல்லையா. ஒரே மாதிரியாக இருப்பது விருப்பமானதாக இருப்பதில்லை. அப்படி நீங்கள் உங்களுடைய பிராப்திகளைப் பாருங்கள் -ஞானத்தின் பொக்கிஷங்களின் பிராப்தி எவ்வளவு இருக்கிறது, யோகா மூலமாக சக்திகளின் பிராப்தி எவ்வளவு, தெய்வீக குணங்களின் பிராப்தி எவ்வளவூ நடைமுறையில் போதையில், குஷியில் இருப்பதற்கான பிராப்திகள் எத்தனை? மிகுந்த பட்டியல் இருக்கிறது இல்லையா. சில நேரம் ஒன்றின், வேறு சில நேரம் வேறொன்றின் பிராப்தியை எதிரில் வைத்துக் கொண்டே திருப்தியாக இருங்கள் என்று ஏற்கனவே கூறியிருக்கிறோம். ஏனென்றால் ஒரு குணத்தை கடைபிடித்தீர்கள் என்றால் எப்படி விகாரங்களில் ஒன்றுக்கு ஒன்று மிக ஆழ்ந்த சம்மந்தம் இருக்கிறது, ஒருவேளை வெளிப்படையான ரூபத்தில் கோபம் இருக்கிறது ஆனால் உள்ளே ஆழமாக சோதனை செய்தீர்கள் என்றால்

கோபத்தின் கூடவே பேராசை, அகங்காரம் இருக்கவே இருக்கும். இவை அனைத்தும் அவர்களுக்குள் தோழர்களாக இருக்கிறார்கள். சில வெளிப்படையான ரூபத்தில் இருக்கும், சில உள்ளடங்கிய ரூபத்தில் இருக்கும். அப்படி குணங்களிலும் அவைகளுக்குள் சம்மந்தம் இருக்கிறது. வெளிப்படையாக ஒரு குணத்தை வையுங்கள் ஆனால் மற்ற குணங்களும் அதன் கூடவே உள்ளடங்கிய ரூபத்தில் இருக்கும். அப்படி தினசரி ஏதாவது பிராப்தி சொரூபத்தின் அனுபவத்தை அவசியம் செய்யுங்கள். ஒருவேளை பிராப்தி வெளிப்படையான ரூபத்தில் இருக்கிறது என்றால் பிராப்தியின் எதிரில் பிராப்தியின்மை அகன்று விடும் மேலும் எப்பொழுதும் திருப்தியாக இருப்பீர்கள். அப்படியே பார்த்தீர்கள் என்றாலும் உலகத்திலும் அனைவரும் முக்கிய பிராப்தியாக என்ன விரும்புகிறார்கள்?

ஒவ்வொருவரும் தன்னுடைய பெயர், புகழ் நன்றாக இருக்க வேண்டும், இரண்டாவது மதிப்பு மற்றும் மூன்றாவது மரியாதை. அப்படி பெயர், புகழ், மதிப்பு, மரியாதையை பிராப்தி செய்ய விரும்புகிறார்கள். நீங்களும் என்ன விரும்புகிறீர்கள்? நீங்களும் கூட இதைத் தான் விரும்புகிறீர்கள் இல்லையா? எல்லைக்குட்பட்டது அல்ல, எல்லைக்கப்பாற்பட்டதை விரும்புகிறீர்கள். உலகத்தினரோ எல்லைக்குட்பட்ட பெயர் புகழுக்கு பின்னால் ஓடுகிறார்கள் மேலும் உங்களுடைய பெயர் உலகில் எவ்வளவு உயர்வாக இருக்கிறது அந்தளவு வேறு யாருக்காவது இருக்கிறதா? அப்படி நீங்கள் உங்களுடைய பெயரை பாருங்கள். அனைத்தையும் விட பெயரின் விசேஷம் இது தான் உங்களுடைய பெயரை யார் ஜபித்துக் கொண்டிருக்கிறார்? சுயம் பகவான் உங்களுடைய பெயரை ஜபிக்கிறார். அப்படியானால் இதை விட பெரிய பெயர். புகழ் என்னவாக இருக்கும். உங்களுடைய பெயரினால் இப்பொழுது கடைசி ஜென்மத்தில் கூட அனேக ஆத்மாக்கள் தங்களுடைய உடல் பராமரிப்பை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் பிராமணர்கள் ஆவீர்கள் இல்லையா, அப்படி பிராமணர்களின் பெயரினால் இன்றும் ஜாதி பிராமணர்கள் எவ்வளவு சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்று வரை வெளியுலக பிராமணர்களும் எவ்வளவு உயர்வானவர்கள் என்று மகிமை செய்யப்படுகிறார்கள். அப்படி உங்களுடைய பெயருக்கு எவ்வளவு மகிமை இருக்கிறது. இவ்வளவு உயர்ந்த பெயர்

உங்களுடையதாக ஆகி விட்டது. எனவே எல்லைக்குட்பட்ட பெயர் கிடைக்க வேண்டும் என்று அதன் பின்னால் செல்லாதீர்கள். என்னுடைய பெயரையோ ஒருபொழுதும் எதிலும் எடுப்பதே இல்லை. என்னுடைய பெயர் எப்பொழுதுமே பின்னாலேயே இருக்கிறது. நான் சேவை செய்கிறேன் பெயர் மற்றவர்களுக்கு கிடைத்து விடுகிறது. என்று அப்படி எல்லைக்குட்பட்ட பெயர் கிடைக்க வேண்டும் என்பதின் பின்னால் செல்லாதீர்கள். தந்தையின் இதயத்தில் உங்களுடைய பெயர் எப்பொழுதுமே உயர்ந்ததாக இருக்கிறது. எப்பொழுது தந்தையின் இதயத்தில் பெயர் இருக்கிறது என்றால் எந்த சேவையிலும் அல்லது எந்த நிகழ்ச்சியிலும் அல்லது எந்தவொரு விஷயத்திலும் உங்களுடைய பெயர் வரக்கூட இல்லை என்றாலும் ஒன்றும் பாதகமில்லை, தந்தையிடமோ இருக்கிறது தான் இல்லையா. எப்படி பக்தி மார்க்கத்தில் ஹனுமானின் படத்தை காண்பிக்கிறார்கள் இல்லையா. அவருடைய இதயத்தில் யார் இருந்தார்? இராம் இருந்தார். மேலும் தந்தையின் இதயத்தில் யார் இருக்கிறார்? குழந்தைகள், குழந்தைகளில் நீங்கள் இருக்கிறீர்களா அல்லது இல்லையா. அப்படி அனைவருக்கும் பெயர் கிடைக்கிறது. எனவே பெயர் கிடைக்க வேண்டும் என்று ஏன் அதன் பின்னாலேயே போகிறீர்கள்? ஏனென்றால் அதிகமானோரை இந்த பெயர், புகழ் மதிப்பு மரியாதை தான் கீழே விழ வைக்கிறது. மேலும் இதுவே போதையையும் ஏற்றுகிறது. எனவே பிராப்தியின் ரூபத்தில் பாருங்கள். ஒருவேளை ஏதாவது காரணத்திற்காக உங்களுடைய பெயர் குப்தமாக இருக்கிறது மேலும் நீங்கள் எனக்கு பெயர் கிடைக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள், யதார்த்தம் தான். இருந்தாலும் ஒருவேளை ஏதாவது ஆத்மாவோடு இருக்கும் கணக்கு வழக்கின் காரணமாக அல்லது அவர்களுடைய சம்ஸ்காரத்தின் காரணமாக உங்களுக்கு பெயர் கிடைக்கவில்லை, நீங்கள் சரி தான், அவர் தவறாக இருக்கிறார் இருந்தாலும் அவருக்கு பெயர் கிடைக்கிறது உங்களுக்கு இல்லை என்றாலும் வெற்றி மாலையில் உங்களுடைய பெயர் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. எனவே இதையும் பொருட்படுத்தாதீர்கள். மாயா இந்த ரூபத்தில் அதிகமாக வருகிறது. எனவே தவறுதலாக பெயர் விடப்பட்டிருந்தாலும் ஒன்றும் பாதகமில்லை ஆனால் வெற்றி மாலையில் உங்களுடைய பெயர் விடுபட டியாது முதலில் உங்களுடைய பெயர் இருக்கும். அப்படி என்னுடைய பெயர் தந்தையின் இதயத்தில் இருக்கிறது. வெற்றி

மாலையில் இருக்கிறது, கடைசி வரை என்னுடைய பெயர் சேவை செய்து கொண்டிருக்கிறது என்று தன்னுடைய பெயரின் மகிமையை நினைவு வைத்துக் கொள்ளுங்கள்.

மேலும் உங்களுக்கு எவ்வளவு மதிப்பு இருக்கிறது பகவானும் கூட உங்களை தன்னை விட முன்னுக்கு வைத்திருக்கிறார். முதலில் குழந்தைகள் அப்படி சுயம் தந்தையும் மதிப்பு கொடுத்து விட்டார். உங்களுக்கு எவ்வளவு மதிப்பு இருக்கிறது என்பதை உங்களுடைய ஜடச்சிலைகளுக்கும் கடைசி ஜென்மம் வரை எவ்வளவு மதிப்பு இருக்கிறது என்ற நிரூபணத்தை பாருங்கள். தெரிந்திருந்தாலும் தெரிந்திருக்காவிட்டாலும் எந்தவொரு தேவி தேவதையின் சிலையாக இருக்கிறது என்றால் எவ்வளவு மதிப்பு மரியாதையோடு அதை பார்க்கிறார்கள். அனைத்தையும் விட உயர்ந்த மதிப்பு இதுவரை உங்களுடைய சிலைகளுக்குத் தான் இருக்கிறது. இது ஒரு நிரூபணம் ஆகும். எப்பொழுது உங்களுடைய சிலைகளே இவ்வளவு மதிப்பிற்குரியது மற்றும் பூஜைக்குரியது என்றால் யாரின் மதிப்பு வைக்கப்படுகிறதோ அவரை பூஜைக்குரியவர் என்றும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இவர் எங்களுடைய பூஜைக்குரியவர் என்று எப்பொழுதும் கூறுகிறார்கள் இல்லையா. அப்படி நடைமுறை நிரூபணம் உங்களுடைய சிலைகளுக்கும் மதிப்பு இருக்கிறது என்றால் சைத்தன்யத்தில் இருக்கிறது அதனால் தான் சிலைகளுக்கும் மதிப்பு இருக்கிறது இல்லையா. ஒருவேளை சைத்தன்யத்தில் மதிப்பு இருக்கவில்லை என்றால் சிலைகளுக்கு அது எப்படி கிடைக்கும்? தந்தையோ முதலில் குழந்தைகள் என்று எப்பொழுதும் கூறுகிறார். குழந்தைகள் இரட்டை பூஜிக்கப்படுகிறார்கள், தந்தை ஒரு பூஜைக்குரியவர். அப்படியானால் உங்களுடைய மதிப்பு தந்தையைவிட அதிகமானது இல்லையா, இவ்வளவு உயர்ந்த மதிப்பு கிடைத்து விட்டது. எனவே எப்பொழுதாவது ஏதாவது எல்லைக்குட்பட்ட மதிப்பின் விஷயம் வருகிறது என்றால் பரமாத்மாவிடமிருந்து மதிப்போ கிடைத்து விட்டது ஆத்மாக்களிடமிருந்து கிடைக்கும் மதிப்பை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று அப்படி யோசியுங்கள். நான் இவ்வளவு செய்கிறேன் இருந்தாலும் மதிப்பே கொடுப்பதில்லை, கேட்பதே இல்லை என்று அப்படி யோசிக்காதீர்கள். இந்த மாதிரி யோசிப்பது வீணானது ஆகும். ஏனென்றால் எவ்வளவிற்கு நீங்கள் எல்லைக்குட்பட்ட மரியாதையின் பின்னால் ஓடினீர்கள் என்றால் இந்த

எல்லைக்குட்பட்ட எந்தவொன்றும் நிழலுக்குச் சமமானது. நிழலின் பின்னால் போய்க் கொண்டே இருந்தால் எப்பொழுதாவது நிழல் உங்களுக்கு கிடைக்கிறதா மேலும் அது உங்கள் முன்னே போய்க் கொண்டே இருக்கிறதா? அப்படி இந்த எல்லைக்குட்பட்ட மதிப்பு, மரியாதை, பெயர் புகழ் அனைத்தும் நிழல். இது மாயாவின் வெயிலில் தென்படுகிறது மற்றபடி இது ஒன்றுமே இல்லை. அப்படி உங்களுக்கு பெயரும் கிடைத்து விட்டது, மதிப்பும் உங்களுக்கு கிடைத்திருக்கிறது மேலும் கௌரவமும் எவ்வளவு இருக்கிறது. உங்களுடைய ஒவ்வொரு கௌரவத்தையும் மேலும் யார் கௌரவத்தில் இருக்க வைத்தார் என்பதையும் நினைவு செய்யுங்கள். தந்தை இருக்க வைத்தார். தந்தையின் இதய சிம்மாசனத்தில் இருப்பவர் இல்லையா. அனைத்தையும் விட மிகப் பெரிய புகழ் இராஜபதவிக்கானது இல்லையா, அப்படி உங்களுக்கு ஆசனம், கிரீடம் கிடைத்து விட்டது இல்லையா, யார் பரமாத்மாவின் இதயசிம்மாசனதாரியாக இருக்கிறார் என்றால் இதைவிட பெரிய மரியாதை என்ன இருக்கிறது. இந்த மரியாதையிலேயே எப்பொழுதும் இருங்கள். நல்லது.

**வரதானம்: விலகி மற்றும் அன்பாக இருக்கும் நிலையின் தகுதி மூலமாக பற்றுதலிலிருந்து விடுபடுபவராகக்கூடிய சகஜயோகி ஆகுக!**

சகஜயோகி வாழ்க்கையை அனுபவம் செய்வதற்காக ஞானம் நிறைந்த விலகியவராக ஆகுங்கள் மேலோட்டமான விலகியவராக மட்டும் ஆகாதீர்கள் ஆனால் மனதின் ஈடுபாடு இருக்க வேண்டாம். யார் எவ்வளவு விலகியவராக ஆகிறாரோ அவ்வளவு அன்பானவராகவும் அவசியம் ஆகுகிறார். விலகியிருக்கும் நிலை மிகவும் பிரியமானதாக இருக்கிறது. யார் வெளிப்படையாக பற்றுதலிலிருந்து விலகியவராக இல்லையோ அவர் பிரியமானவராக ஆவதற்கு பதிலாக மதிப்பற்றவராக ஆகி விடுகிறார். எனவே சகஜயோகி என்றால் விலகிய மற்றும் அன்பான நிலையின் தகுதியுடையவர் மற்றும் அனைத்து பற்றுதலிலிருந்து விடுபட்டவர்.

**சுலோகன்: சுயமுயற்சி மற்றும் சேவையின் சமநிலை மூலமாக பந்தனம். சம்மந்தத்தில் மாறி விடும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋

# 16.11.1995-2 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# கனவளவில் கூட பற்றுதலிலிருந்து விடுபட்டவர் ஆகுங்கள்!

பாப்தாதாவிற்கோ தன்னுடைய டி.வி.யில் அதிக புதுப்புது விஷயங்கள் தென்படுகின்றன. இப்பொழுது 60-வருடங்கள் நிறைவேறுகிறது என்றால் இதுவரை நடக்காத விஷயங்கள், அந்த புதுப்புது காட்சிகளும் அதிகமாகத் தென்படுகின்றன. இந்த சீசனில் அவற்றை ஒவ்வொன்றாக வர்ணனை செய்வோம் ஆனால் ஒருவேளை யார் மேலேயாவது கனவளவிலும் கூட பற்றுதல் இருக்கிறது அல்லது சுயநலம் இருக்கிறது என்றால் அதை அழித்து விட வேண்டும் என்பதை நினைவு வைத்துக் கொள்ளுங்கள். நாங்கள் செயலில் வருவதில்லை ஆனால் கனவு வருகிறது என்று அனேகர்கள் கூறுகிறார்கள் ஆனால் ஒருவேளை ஏதாவது வீணான மற்றும் விகார கனவு, பற்றுதலின் கனவு வருகிறது என்றால் நீங்கள் அவசியம் தூங்கும் நேரத்தில் அலட்சியத்தோடு தூங்கியிருந்திருக்கிறீர்கள். முழு நாளில் எனக்கு அந்த மாதிரி ஒரு எண்ணம் கூட வரவில்லை, எதுவும் நடக்கவில்லை இருந்தும் கனவு வந்து விட்டது என்று அனேகர் கூறுகிறார்கள். தூங்கச் செல்லும் நேரம் பாப்தாதாவிற்கு முழு நாளின் கணக்கை ஒப்படைத்து புத்தியை காலி செய்த பிறகு தூங்கச் சென்றீர்களா என்று சோதனை செய்யுங்கள். களைப்படைந்து வந்தோம் பின்பு படுக்கையில் சென்றோம். அப்படியே தூங்கி விட்டோம் என்று அப்படி இருக்க வேண்டாம். இது அலட்சியம் ஆகும். பாவம் செய்யவில்லை மற்றும் எண்ணத்திலும் அது வரவில்லை என்றாலும் கூட இது அலட்சியத்தின் தண்டனை ஆகும். ஏனென்றால் தூங்கச் செல்லும் நேரம் எப்பொழுதும் தன்னுடைய புத்தியை காலி ஆக்க வேண்டும், நல்ல விஷயமாக இருந்தாலும் தீய விஷயமாக இருந்தாலும் அனைத்தையும் தந்தையிடம் ஒப்படைத்து விட்டு தன்னுடைய புத்தியை காலியாக்குங்கள் என்பது தான் தந்தையின் கட்டளை ஆகும். தந்தையிடம் கொடுத்த விட்ட பிறகு தனியாக தூங்காமல் தந்தையுடன் தூங்கி விடுங்கள். தனியாக

தூங்குகிறீர்கள் இல்லையா? அப்பொழுதுதான் கனவு வருகிறது. ஒருவேளை தந்தையுடன் தூங்கினீர்கள் என்றால் ஒருபொழுதும் அந்த மாதிரி கனவு வர முடியாது ஆனால் கட்டளைப்படி நடக்கவில்லை என்றால் கட்டளைக்குப் பதிலாக முறையீடு கிடைக்கிறது. காலை எழுந்தவுடன் என்னுடைய தூய்மை கனவில் அழிந்து விட்டது என்று உள்ளத்தில் முறையீடு (வேண்டுதல்) நிறைந்த உணர்வுகள் வருகிறது இல்லையா? இது எவ்வளவு பெரிய முறையீடு. காரணம் அலட்சியமாகும். எனவே அலட்சியமானவராக ஆகாதீர்கள். வந்தவுடன் இங்கு அங்கு உள்ள விஷயங்களைப் பேசிக் கொண்டே தூங்கி விடுகிறீர்கள் என்றால் உலகத்தில் செய்திகளோ அதிகமாக இருக்கின்றன மேலும் மனம் விரும்பும் செய்திகளோ வீணானவைகளாகத் தான் இருக்கும். வேறு நேரமே கிடைப்பதில்லை எப்பொழுது ஒரே அறையில் சேர்ந்து இருக்கிறோமோ அப்பொழுது ஒருவருக்கொருவர் விஷயங்களை பரிமாறிக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது என்று கூறுகிறார்கள் ஆனால் ஒருபொழுதும் வீணான விஷயங்களை வர்ணனை செய்து கொண்டே தூங்கச் செல்லக் கூடாது. இது அலட்சியம் ஆகும். இது கட்டளையை மீறி நடப்பதாகும். ஒருவேளை வேறு நேரம் கிடைக்கவில்லை மற்றும் அவசியமான விஷயமாக இருக்கிறது என்றால் தூங்கும் அறையில் பேசாமல், அந்த அறைக்கு வெளியே ஒரு விநாடியில் ஒருவர் இன்னொருவருக்குக் கூறுங்கள் ஆனால் தூங்கிக் கொண்டே இப்படி பேசாதீர்கள். அனேக குழந்தைகளுக்கோ பழக்கமாகவே இருக்கிறது. பாப்தாதாவோ எப்படி தூங்குகிறார்கள் என்று அனைவரையும் பார்க்கிறார் இல்லையா? ஒரு விநாடியில் பாப்தாதா முழு உலகத்தையும் சுற்றி வந்து விடுகிறார். மேலும் டிவி மூலமாக எப்படி தூங்குகிறார்கள். எப்படி பேசிக் கொண்டிருக்கிறார்கள். அனைத்தையும் பாப்தாதா பார்க்கிறார். இதற்கு பாப்தாதாவிற்கோ அதிகமான நேரம் எடுப்பதில்லை. ஒரு விநாடி தான் ஆகிறது. ஒவ்வொரு சென்டரையும் ஒவ்வொரு குடும்பத்திலிருப்பவரையும் சுற்றி வந்து பார்க்கிறோம். சென்டரில் நடப்பது மட்டுமின்றி உங்களுடைய வீடுகளில் நடப்பதும் டி.வி.யில் வருகிறது. அப்படி எப்பொழுது தொடக்கம் அதாவது அமிர்தவேளை மற்றும் முடிவு அதாவது தூங்கச் செல்லும் நேரம் நன்றாக இருக்கிறது என்றால் இடைப்பட்ட காலம் தானாகவே சரியாக இருக்கும். புரிந்ததா? பேசிக் கொண்டே சிலருக்கு 12, 12:30-மணி வரை ஆகி விடுகிறது.

பேச்சில் அவ்வளவு ஆர்வமாக ஈடுபட்டு விடுகிறார்கள். அவர்களுக்கு நேரம் செல்வதே தெரிவதில்லை. பிறகு அமிர்தவேளை எழுந்து அமர்கிறார்கள் என்றால் பாதி நேரம் தூக்கத்தில் மற்றும் பாதி நேரம் யோகாவில் இருக்கிறார்கள். ஏனென்றால் அலட்சியமானவராகி தூங்கினார்கள் என்றால் அமிர்தவேளையும் அலட்சியமானதாகத்தானே இருக்கும். நம்மையோ யாரும் பார்க்கவில்லை என்று அப்படி நினைக்காதீர்கள். பாப்தாதா பார்க்கிறார். இந்த தூக்கமும் கூட மிகுந்த அமைதி மற்றும் சுகத்தைக் கொடுக்கிறது. எனவே கலப்படம் ஆகி விடுகிறது. ஒருவேளை நீங்கள் தூங்கினீர்களா என்று கேட்டால் இல்லையில்லை நான் மிகுந்த அமைதியை அனுபவம் செய்து கொண்டிருந்தேன் என்று சொல்வார்கள். பாருங்கள். தூக்கத்தையும் ஓய்வு என்று கூறப்படுகிறது. ஒருவேளை யாராவது நோயுற்று இருக்கிறார் என்றால் ஓய்வு எடுங்கள் என்று டாக்டர்கள் கூறுவார்கள். எப்படி ஓய்வு எடுப்பது? நேரத்தில் தூங்குங்கள். அப்படி தூக்கமும் ஓய்வு தருவதாகும். புத்துணர்வோ அடையச் செய்கிறது தான் இல்லையா. அப்படி தூக்கத்தினால் புத்துணர்வு பெற்று அமர்கிறார்கள் என்றால் இன்று (யோகாவில்) மிகவும் புத்துணர்வு பெற்று விட்டேன் என்று கூறுகிறார்கள்? நல்லது!

அனைவரும் வெகு தூரத்திலிருந்து வந்திருக்கிறார்கள். இந்த குரூப்பில் யார் முதல் தடவையாக வந்திருக்கிறார்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். சிறு குழந்தைகளாக இருப்பவர்கள் பெரியவர்களை விட அன்பிற்குரியவர்களாக இருப்பார்கள் ஆனால் புதியவர்கள் யார் வந்திருக்கிறார்களோ அவர்கள் இடைவெளியை நிரப்ப வேண்டும். பெரியவர்கள் பத்து வருடத்தில் என்ன செய்திருக்கிறார்களோ அதை நீங்கள் பத்து நாட்களில் செய்ய வேண்டும். செய்ய முடியும்! ஏனென்றால், புதியவர்களாக இருப்பவர்களிடம் மிக அதிகமான ஊக்கம் உற்சாகம் இருக்கிறது என்று பாப்தாதா நினைக்கிறார். மேலும் எவ்வளவு பழையவர்களாக ஆகிறார்கள் என்றால் அந்த அளவு அனைத்தையும் புரிந்து கொண்டேன். நான் பழையவன் என்று நினைக்கிறார்கள். எனவே கூறுவதற்கு என்ன அவசியம் என்றும் நினைக்கிறார்கள். புதியவர்கள் குமாரிகள், குமாரர்கள், இல்லறத்தில் இருப்பவர்கள் அப்படி யாராக இருந்தாலும், இல்லறத்தில் இருப்பவர்கள் இந்த அனைத்து மகாத்மாக்களை தனது காலடிகளில் விழ வைக்க

வேண்டும். இவர்கள் இல்லறத்தில் இருந்து கொண்டும் தடையற்று தூய்மையின் பலத்தினால் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள் என்று அனைவரும் உங்களுடைய குணத்தை மகிமை செய்யட்டும் உங்கள் அனைவரின் எதிரில் இந்த உலகிலுள்ள மகாத்மாக்கள் ஒரு நாள் தலைவணங்குவார்கள் ஆனால் தன்னுடைய உறுதிமொழியான பற்றுதலிலிருந்து விடுபட்டு இருக்க வேண்டும் என்பதை நினைவு வைத்துக் கொள்ளுங்கள். நல்லது!

டீச்சர்களுடன்: டீச்சர்களோ ஒவ்வொரு விஷயத்திற்கும் பொறுப்பானவர்கள். பொறுப்பானவர்கள் தான் இல்லையா? இந்த விஷயம் உறுதியாக இருக்கிறது இல்லையா? டீச்சர்களின் அர்த்தமே பொறுப்பில் இருப்பவர். அப்படி இந்த வருடமும் பற்றுதலிலிருந்து விடுபடுவதில் டீச்சர்கள் நம்பர் ஒன்னில் வருவதில் பொறுப்புடையவர்களாக ஆக வேண்டும். சரி தான் இல்லையா? உறுதியாகவா? அனைவரும் கைத்தட்டுங்கள். பாப்தாதாவும் டீச்சர்கள் உங்களுக்காக விசேஷமாக கைத்தட்ட வைக்கிறார். நல்லது!

குமாரிகளுடன்: குமாரிகள் கையை உயர்த்துங்கள். குமாரிகள் என்ன செய்வீர்கள்? குமாரிகள் தனக்குத் தானே நண்பனாகி தன்னுடைய வாழ்க்கையை பந்தனமற்றதாக ஆக்குவதில் நம்பர் ஒன் ஆக வேண்டும். இந்த குமாரிகளின் ஒட்டு மொத்த பட்டியலை உருவாக்குங்கள். பின்பு இவர்களில் உண்மையிலேயே எத்தனை பேர் பந்தனமற்றவர்களாக ஆகிறார்கள் என்பதைப் பார்க்கலாம். குமாரிகளில் ஒருவேளை யாராவது நான் பந்தனமற்றவராகி சேவைக்கு பொறுப்பாளர் ஆவேன் என்று நினைக்கிறாரோ அவர் கையை உயர்த்தட்டும். அவர்களுக்கு பயிற்சி வகுப்புக்கள் (ட்ரெய்னிங்) வைக்கப்படும். இப்பொழுதோ ஞான சரோவரிலும் வகுப்புக்கள் நடக்கிறது. அப்படி குமாரிகள் என்ன ஆவீர்கள்? பந்தனமற்றவர்களாக. மனதின் பந்தனமும் வேண்டாம், சம்மந்தத்தின் பந்தனமும் வேண்டாம். அப்படி இரட்டை பந்தன்முக்த் ஆக. வேண்டும். நல்லது!

குமாரர்களுடன்: குமாரர்கள் கையை உயர்த்துங்கள். குமாரர்களோ மிக அதிகமாக இருக்கிறார்கள். அப்படி குமாரர்கள் என்ன விசேஷத்தைக் காண்பிப்பீர்கள்? குமாரர்கள் தன்னை அந்த மாதிரி தயார் செய்து

கொள்ள வேண்டும், அவர்களுடைய ஸ்தானத்தில் இருந்தாலும் எங்கிருந்தாலும் அவர்கள் தங்களுடைய 400-500 பெயர் அடங்கிய குரூப்பை உருவாக்கி, இவ்வளவு இளைஞர்கள் உலக சேவைக்காக மற்றும் பாரதத்தின் சேவைக்காக அழிவு காரியம் செய்யாமல் உருவாக்கும் காரியம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பாருங்கள் என்று அரசாங்கத்தில் உயர்ந்த பதவியில் இருப்பவர்களை சந்தித்து காண்பிக்க வேண்டும். அந்த மாதிரியான குரூப்பை தயார் செய்யுங்கள். அப்படியானால் எவ்வளவு காலத்தில் தன்னை தயார் செய்து விடுவீர்கள்? ஏனென்றால் அரசாங்கம் இளைஞர்களை முன்னுக்கு வைக்க விரும்புகிறது ஆனால் அவர்களுக்கு அந்த மாதிரி இளைஞர்கள் கிடைப்பதில்லை ஆனால் தந்தையிடமோ இருக்கிறார்கள் இல்லையா? அப்படி ஆல்மைட்டி (அனைத்து சக்திகள் நிறைந்தவரின்) அரசாங்கம் இந்த குழப்பத்திலிருக்கும் அரசாங்கத்தின் எதிரில் ஒரு நடைமுறை உதாரணத்தை காண்பிக்க முடியும் ஆனால் உறுதியற்றவராக இருக்கக்கூடாது. நீங்கள் கூறுகிறீர்கள் நாங்களோ மிக நன்றாக இருக்கிறோம் என்று. மேலும் உங்களுடன் இருப்பவர்கள் அப்படியில்லை இவரோ வெறும் வாயளவில் தான் கூறுகிறார் என்று அப்படி இருக்க வேண்டாம். தூய்மை விஷயத்தில் பிரச்சனையை உருவாக்குகிறார்கள், அது வேறு விஷயம், ஆனால் தெய்வீக குணங்களின் தாரணையில் வீட்டில் இருப்பவர்களின் மேல் உங்களுடைய பாதிப்பு ஏற்பட வேண்டும். புரிந்ததா. உங்களில் யார் வைர விழா வரை நான் தயாராகி விடுவேன் என்று நினைக்கிறீர்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். இப்பொழுது கொஞ்சம் குறைந்து விட்டார்கள். நல்லது! டீச்சர்கள் இந்த வைர விழா ஆண்டின் இடையில், இறுதியில் அல்ல, அரசாங்கத்திற்கு இந்த இளைஞர்களை காண்பித்தோம் என்ற ரிப்போர்ட் அனுப்ப வேண்டும். இப்பொழுதோ இன்னும் 8-மாதங்கள் இருக்கின்றன. அப்படி 8-மாதங்களுக்குள் செய்ய வேண்டும். சரிதான் இல்லையா?.

அதர்குமாரர்கள் மற்றும் அதர்குமாரிகளுடன்: அதர்குமாரர்கள், குமாரிகள் என்ன செய்வீர்கள்? இல்லறத்தில் இருப்பவர்களுக்கு ஒரு புதிய நிரூபணம் கொடுக்க வேண்டும். வீட்டில் யார் யார் இருக்கிறார்களோ, உங்களுடைய குடும்பத்தில், சிலருக்கு நான்கு குழந்தைகள் இருக்கிறார்கள், சிலருக்கு 8-குழந்தைகள், சிலருக்கு

2-குழந்தைகள் இருக்கிறார்கள் அப்படி எத்தனை இருந்தாலும் ஒவ்வொரு இல்லறத்தில் இருப்பவர்கள் தன்னுடைய குழந்தைகளுக்கு அந்த மாதிரி பண்புகளை கற்றுக் கொடுத்து தயார் செய்ய வேண்டும். அந்த மாதிரி தாரணை செய்யும் குரூப் மற்றவர்களுக்கு ஒரு உதாரணமாக இருக்கட்டும். கல்லூரி மற்றும் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கிறார்கள் அவர்களின் எதிரில் அந்தக் குழந்தைகளை காண்பிக்க வேண்டும். இல்லறத்தில் இருப்பவர்களுக்கு தன்னுடைய குழந்தைகளின் குரூப்பை தயார் செய்ய வேண்டும். இவர்களைப் பற்றி யாரிடம் கேட்டாலும் அது அவர்களுடைய டீச்சர்கள் ஆனாலும் அல்லது அவருடைய தெருவில் இருக்கும் நண்பர்களானாலும் அனைவரும் இவரைப் பற்றி நல்ல ரிப்போர்ட் தர வேண்டும். நீங்கள் மிக நல்ல குழந்தைகள் என்று கூறுகிறீர்கள் ஆனால் இவருடைய டீச்சர் இவர் படிப்பதே இல்லை என்று கூறுகிறார் என்று அப்படி இருக்கக் கூடாது. அப்படி இல்லறத்தில் இருப்பவர்களுக்கு அந்த மாதிரி குழந்தைகளை தயார் செய்ய வேண்டும். ஞானத்தில் வருகிறார்கள். நல்லவர்களும் இருக்கிறார்கள் ஆனால் அவர்களுக்கு கொஞ்சம் இன்னும் கவனம் கொடுத்து அந்த மாதிரி குரூப்பை தயார் செய்யுங்கள். அப்படி படிப்பின் சான்றிதழ்களாக அந்தக் குழந்தைகள் ஆகி விடுவார்கள். இல்லையென்றால் நீங்கள் சான்றிதழ் கொடுக்க முடியாது என்று கல்வித்துறையில் இருப்பவர்கள் கூறுகிறார்கள் இல்லையா? அப்பொழுது நடத்தையை பார்க்க வேண்டுமா அல்லது சான்றிதழைப் பார்க்க வேண்டுமா என்று நீங்கள் கூறுங்கள். நீங்கள் காகிதத்தின் சான்றிதழைக் கொடுக்கிறீர்கள், நாங்கள் உங்களுக்கு சைத்தன்யமான சான்றிதழை காண்பிக்கிறோம். புரிந்ததா?

அப்படியே ஒரு சிறப்பும் இல்லாமல் வைர விழாவைக் கொண்டாடாதீர்கள். வைர விழாவில் கொஞ்சம் புதுமையைக் காண்பிக்க வேண்டும். அதைப் பார்த்து இது என்ன என்று அரசாங்கத்தின் கண்கள் திறக்க வேண்டும். எந்தக் காரியத்திலும் அவர்கள் முடியாது என்று சொல்ல முடியாத அளவிற்கு இருக்க வேண்டும். அவர்களுக்கு இன்னும் வாய்ப்புகள் கொடுக்க வேண்டும். எப்படி மகாமண்டலேஸ்வர் எப்பொழுது இங்கு வந்தாரோ அவர் என்ன மனமுவந்து சொன்னார்? எங்களுடைய ஆசிரமத்தை பிரம்மா குமார் மற்றும் குமாரிகள் நடத்தட்டும் என்று தான். அந்த மாதிரி கேட்டார் தான் இல்லையா?

அனைத்து இலாக்காக்களும் எங்களுடைய இலாக்காவில் நீங்கள் மட்டும் தான் காரியம் அதே போல் செய்ய முடியும் என்று அவர்கள் மனமுவந்து கூறட்டும். அந்த மாதிரி நடைமுறை சொரூபம் செய்ய வேண்டும் இது தான் வைர விழா ஆகும் ஆனால் முதல் உறுதிமொழி நினைவிருக்கிறதா? என்னவாக ஆக வேண்டும்? (பற்றுதலிலிருந்து விடுபட்டவராக) அப்பொழுது தான் இவை அனைத்தும் நடக்க முடியும், இன்று வரை குழந்தைகளை அடித்துக் கொண்டே இருந்தீர்கள் என்றால் குழந்தைகள் எப்பொழுது நல்லவர்களாக ஆவார்கள். மேலும் உங்களுக்குள் பலஹீனமானவர்களாக ஆகிக் கொண்டே இருப்பீர்கள் என்றால் மகாத்மாக்கள் எப்படி உங்கள் காலடியில் விழுவார்கள். எவ்வளவிற்கு எவ்வளவு தூய்மையின் தூணை உறுதியாக்கினீர்கள் என்றால் அந்த அளவு இந்த தூய்மையின் தூண் லைட் ஹவுஸின் காரியம் செய்யும். நல்லது!

**இரட்டை வெளிநாட்டினருடன்:** இரட்டை வெளிநாட்டினர் மேல் பாப்தாதாவிற்கு அதிலும் கூட விசேஷமாக பிரம்மாபாபாவிற்கு இரட்டை அன்பு இருக்கிறது. ஏன் இரட்டை அள்பு இருக்கிறது? சொல்லுங்கள். பாப்தாதாவிற்கு இரட்டை அன்பு இருக்கிறது என்று நினைக்கிறீர்களா? (லௌகீக மற்றும் அலௌகீக இரண்டு காரியங்கள் செய்கிறார்கள்) நல்ல பதில் கொடுத்தீர்கள் ஆனால் வேறு காரணமும் இருக்கிறது. பிரம்மாபாபாவிற்கு இரட்டை வெளிநாட்டினர் மேல் விசேஷ அன்பு இதன் காரணமாகத் தான் இருக்கிறது. பிரம்மாபாபா ஒவ்வொரு காரியமும் துரிதமாக செய்வதில் அவரே உதாரணமாகவும் இருந்தார் மற்றும் குழந்தைகளையும் அந்த மாதிரி ஆக்கினார். வெளிநாட்டினர் வருகிறார்கள். ஏழு நாள் பாடம் எடுத்தார்கள், கொஞ்சம் உறுதியானார்கள் மற்றும் சென்டர் திறந்து விடுகிறார்கள். அந்த மாதிரி செய்கிறீர்கள் தான் இல்லையா? இவர்களுக்கோ (டீச்சர்களுக்கு) மிகுந்த டிரெய்னிங் கொடுக்கப்படுகிறது ஆனால் இரட்டை வெளிநாட்டினர் சேவையில் துரிதமான உதாரணமாகி விடுகிறார்கள். பிரம்மாபாபா அந்த மாதிரி குழந்தைகளை வெகுகாலமாக ஆவஹானம் (அழைத்து) செய்து கொண்டிருந்தார். அப்படி இரட்டை வெளிநாட்டினர் சேவையில் அதிக நேரம் எடுத்துக் கொள்வதில்லை. விரைவில் முடித்து விடுகிறார்கள். எவ்வளவு தான் பிஸியாக இருந்த போதிலும் சேவையின் ஆர்வம் மிக நன்றாக இருக்கிறது. இப்பொழுது கூட

மியூசியம் உருவாக்குவதற்காக வந்திருக்கிறார்கள் (ஞான சரோவரில் ஐந்து இரட்டை வெளிநாட்டு சகோதர சகோதரிகள் மியூசியத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்). இரட்டை வெளிநாட்டினருக்கு சிறப்புக்கள் இருக்கின்றன. அதனால் தான் வெளிநாட்டிலிருந்து முக்கியமாக உங்களை அழைத்திருக்கிறார்கள். சிறப்புக்கள் இருக்கிறது இல்லையா? இந்த முழு குரூப்பும் நல்ல குருப் ஆகும். அப்படி விசேஷ ஆத்மாக்கள் ஆகி விட்டீர்கள் இல்லையா? விசேஷ காரியத்திற்காக நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்றால் விசேஷ ஆத்மாவாக ஆகி விட்டீர்கள் இல்லையா? மற்றபடி பாப்தாதாவிற்கோ மிகவும் பிடித்தமானவர்களாக இருக்கவே இருக்கிறீர்கள். சிலபாபாவிற்கும் பிடித்தமானவர்களாக இருக்கிறீர்கள் என்றால் முழு பிராமண குடும்பத்திற்குமே பிடித்தமானவர்களாக இருக்கிறீர்கள். உங்களைப் பார்க்கிறார்கள் இல்லையா? அதனால் இங்கே உள்ள பாரதவாசிகளுக்கும், பாருங்கள் நம்முடைய சேவை பாரதத்தில் மட்டும் இல்லை, உலகம் முழுவதும் இருக்கிறது என்று போதை ஏறுகிறது. அதனால் தான் காணாமல் போய் கண்டெடுக்கப்பட்டவர்கள் இல்லையா? நல்லது!

**மியூசியம் உருவாக்கிக் கொண்டிருக்கும் குரூப்பை பாப்தாதா எதிரில் அழைத்தார்:** இது கூட நாடகப்படி விசேஷமாக வரமளிக்கும் வள்ளலின் வரதானம் கிடைக்கிறது. ஏதாவது கலை இருக்கிறது என்றால் கலையை வரதானம் என்று புரிந்து காரியத்தில் ஈடுபடுத்துங்கள். தந்தையின் வரதானம் டிராமாபடி விசேஷமாக காரணமாகிறது என்றால் அதன் மூலம் காரியம் சகஜமாக மற்றும் சுலபமாக நிறைவேறியேத் தீரும். அந்த மாதிரி தான் இல்லையா? அப்படி விசேஷ வரதானி ஆத்மாக்கள் அவர்களை அந்த விசேஷத்தினுடனேயே காரியத்தில் ஈடுபடுத்திக் கொண்டே இருங்கள். இது தந்தையின் வரதானம் என்று எப்பொழுதும் நினைவில் இருக்கட்டும். உங்களுடைய கைகள் மட்டும் காரியம் செய்யாது, ஆனால் தந்தையின் சக்தி உங்களுடைய கைகளுடன் காரியம் செய்யும். நல்லது!

நாலாபுறத்திலுமுள்ள காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட பாப்தாதாவின் உள்ளத்தில் நிரம்பியிருக்கும் உயர்ந்த ஆத்மாக்களுக்கு,

எப்பொழுதும் தந்தையின் ஒவ்வொரு கட்டளையையும் ஏற்று நடக்கும் மற்றும் தன்னுடைய மற்றும் அவர்களினுடைய முறையீடுகளை சமர்ப்பணம் செய்விக்கக்கூடிய எப்பொழுதும் தூய்மை என்ற தூணை உறுதியாக்கக்கூடிய தூய்மையின் லைட், மைட் ஹவுஸாகி பரப்பக்கூடிய விசேஷ ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தன்னை பற்றுதலிலிருந்து விடுபட்டவராக்கி தந்தையின் நெருக்கத்தில் வரக்கூடிய, இருக்கக்கூடிய அனைத்து குழந்தைகளுக்கும் பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வெளிநாட்டிலிருக்கக்கூடிய நாலா புறத்திலுமுள்ள குழந்தைகளுக்கு விசேஷமான அன்பு நினைவுகள்! ஏனென்றால் அவர்கள் அன்பு நினைவு கடிதத்தை எப்பொழுதுமே அனுப்பிக் கொண்டே இருக்கிறார்கள். யார் யார் கடிதம் அனுப்பியிருந்தீர்களோ அவர்களுக்கும் விசேஷ நினைவு மற்றும் யாரெல்லாம் உள்ளப்பூர்வமாக அன்பு நினைவை அனுப்பியிருந்தார்களோ அவர்களுக்கும் விசேஷமான அன்பு நினைவுகள்.

வரதானம்: சேவையின் பந்தனம் மூலமாக கர்ம பந்தனங்களை அழிக்கக்கூடிய உலக சேவாதாரி ஆகுக!

குடும்ப வாழ்க்கையில் இருந்து கொண்டே இது கணக்கு வழக்கு, கர்ம பந்தனம் என்று ஒருபொழுதும் நினைக்காதீர்கள் ஆனால் இதுவும் சேவை ஆகும். சேவையின் பந்தனத்தில் தன்னை கட்டிப் போட்டு விடுவதினால் கர்ம பந்தனம் அழிந்து விடுகிறது. சேவை மனப்பான்மை இல்லை என்றால் கர்ம பந்தனம் அதன் பக்கம் இழுத்துக் கொண்டே இருக்கும். கர்ம பந்தனம் இருக்கிறது என்றால் துக்க உணர்வுகள் வரும். மேலும் சேவையின் பந்தனம் இருக்கிறது என்றால் குஷி இருக்கும். எனவே கர்ம பந்தனத்தை சேவையின் பந்தனத்தினால் அழித்து விடுங்கள். உலக சேவாதாரிகள் உலகில் எங்கிருந்தாலும் உலக சேவைக்காக இருக்கிறார்கள்.

சுலோகன்: தன்னுடைய தேவதை சொரூபத்தின் நினைவில் இருந்தீர்கள் என்றால் உங்கள் மேல் யாருடைய வீணான பார்வையும் வர முடியாது!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 25.03.1995 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிராமண வாழ்க்கையில் அனைத்தையும் விட உயர்ந்த பொக்கிஷம் -எண்ணத்தின் பொக்கிஷம்!

இன்று பாப்தாதா நாலாபுறங்களிலும் உள்ள குழந்தைகளின் பொக்கிஷங்களின் கணக்கைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஒவ்வொரு குழந்தைக்கும் பொக்கிஷங்கள் மிக அதிகமாகக் கிடைத்திருக்கின்றன. மேலும் அழியாத எண்ணற்ற பொக்கிஷங்கள் கிடைத்திருக்கின்றன. இந்த ஜென்மத்திற்காக மட்டுமல்லாமல் அனேக ஜென்மங்களுக்கு உத்திரவாதம் இருக்கிறது. இப்பொழுதும் உடன் இருக்கிறது. மேலும் வரும் காலங்களிலும் உடனிருக்கும். ஆக இன்று விசேஷமாக அனைத்திலும் சிரேஷ்ட கஜானா, மேலும் அனைத்து கஜானாக்களுக்கும் ஆதாரமான அது அனைவரின் கணக்கில் எவ்வளவு சேர்ந்துள்ளது என்பதைப் பார்த்தனர். கிடைத்ததோ எண்ணிலடங்காதவை, ஆனால் எவ்வளவு சேமிப்பாகியிருக்கிறது? அப்படி அனைத்தையும் விட உயர்ந்த பொக்கிஷம் எண்ணத்தின் பொக்கிஷம் ஆகும். மேலும் உங்கள் அனைவரின் உயர்ந்த எண்ணம் தான் பிராமண வாழ்க்கையின் ஆதாரம் ஆகும். எண்ணத்தின் பொக்கிஷம் மிகவும் சக்திசாலியானது. எண்ணம் மூலமாக ஒரு நொடியை விட குறைந்த நேரத்திலும் பரந்தாமம் வரை சென்றடைய முடியும். எண்ணத்தின் சக்தி ஒரு தானியங்கி ராக்கெட்டையும் விட அதிவேகமுடைய ராக்கெட் ஆகும். எங்கு விரும்புகிறீர்களோ அங்கு சென்றடைய முடியும். அமர்ந்திருந்தாலும் அல்லது ஏதாவது காரியம் செய்து கொண்டிருந்தாலும் எண்ணத்தின் பொக்கிஷத்தினால் மற்றும் சக்தியினால் எந்த ஆத்மாவிடம் சென்றடைய விரும்புகிறீர்களோ அவருடைய அருகில் தன்னை அனுபவம் செய்ய முடியும். எந்த இடத்திற்குச் சென்றடைய விரும்புகிறீர்களோ அங்கு சென்றடைய முடியும். எந்த நிலையைக் கடைபிடிக்க விரும்புகிறீர்களோ அது

உயர்ந்ததாக இருந்தாலும், குஷியினுடையதாக இருந்தாலும், வீணானதாக இருந்தாலும் ஒரு நொடியின் எண்ணத்தினால் அதை அடைய முடியும். நான் உயர்ந்த பிராமண ஆத்மா ஆவேன் என்று நினைத்தீர்கள் என்றால் உயர்ந்த நிலை மற்றும் உயர்ந்த அனுபவம் ஏற்படும். மேலும் நான் பலஹீனமான ஆத்மா. என்னிடம் எந்த சக்தியும் இல்லை என்று நினைத்தீர்கள் என்றால் ஒரு நொடியின் எண்ணத்தினால் குஷி மறைந்து விடும். பிரச்சனையின் சின்னம் மனநிலையில் அனுபவம் ஆகும் ஆனால் இரண்டு நிலைகளுக்குமான ஆதாரம் எண்ணம் ஆகும். (பாபாவின்) நினைவில் அமர்ந்திருந்தாலும் கூட எண்ணத்தின் ஆதாரத்தினால் தான் நிலையை உருவாக்குகிறீர்கள். நான் பிந்து ஆவேன், நான் ஃபரிஷ்தா ஆவேன்... இந்த நிலை எண்ணத்தினால் தான் உருவானது இல்லையா? அப்படியானால் எண்ணம் எவ்வளவு சக்திசாலியானது!

ஞானத்தின் ஆதாரமும் எண்ணமே தான். நான் ஆத்மா ஆவேன், நான் உடல் அல்ல -இந்த எண்ணத்தை உருவாக்குகிறீர்கள். முழு நாளும் மனம், புத்திக்கு சுத்த எண்ணத்தை கொடுக்கிறீர்கள் மற்றும் சிந்தனையில் சுத்த எண்ணத்தை வைக்கிறீர்கள் என்றால் சிந்தனை சக்தியின் ஆதாரமும் எண்ண சக்தி தான். தாரணை செய்கிறீர்கள், இன்று நான் சகித்துக் கொள்ளும் சக்தியை தாரணை செய்ய வேண்டும் என்று மனம் புத்திக்கு எண்ணத்தை கொடுக்கிறீர்கள் என்றால் தாரணைக்கான ஆதாரமும் எண்ணம் தான். சேவை செய்கிறீர்கள், திட்டத்தை உருவாக்குகிறீர்கள் என்றாலும் சுத்த எண்ணம் தான் ஓடுகிறது இல்லையா? சுத்த எண்ணம் மூலமாகத் தான் திட்டம் உருவாகிறது. அனுபவம் இருக்கிறது இல்லையா? அப்படி பிராமண வாழ்க்கைக்கான விசேஷ உயர்ந்த பொக்கிஷம் எண்ணத்தின் பொக்கிஷம் ஆகும். ஒருவேளை நீங்கள் எண்ணத்தின் பொக்கிஷத்தை பயனுள்ளதாக ஆக்குகிறீர்கள் என்றால் உங்களுடைய மனநிலை, காரியம் முழு நாளும் மிக நன்றாக இருக்கிறது. மேலும் எண்ணத்தின் பொக்கிஷத்தை வீணாக இழக்கிறீர்கள் என்றால் முடிவு என்ன ஆகி விடுகிறது? எந்த மனநிலையை விரும்புகிறீர்களோ அது இருப்பதில்லை. மேலும் வீணான எண்ணம் புத்தியையும் பலஹீனம் ஆக்குகிறது மற்றும் நிலையையும் பலஹீனம் ஆக்குகிறது என்று நீங்கள் அனைவரும் தெரிந்திருக்கிறீர்கள். யாருக்கு வீணான எண்ணம்

ஓடுகிறதோ அவருடைய புத்தி பலஹீனம் ஆகிறது, குழப்பமுடையதாக ஆகிறது. நிர்ணயம் சரியாக இருக்காது. எப்பொழுதும் குழப்பமானதாக இருக்கும். நான் என்ன செய்யலாம், என்ன செய்யக்கூடாது, என்பதின் தெளிவான நிர்ணயம் இருக்காது. மேலும் வீணான எண்ணத்தின் வேகம் மிகத் துரிதமானதாக இருக்கும். வீணான எண்ணத்தின் அனுபவமோ அனைவருக்கும் இருக்கும், தீய எண்ணம் இல்லை, வீணானதின் அனுபவம் அனைவருக்கும் இருக்கிறது. அப்படி அதி வேகமாக இருக்கும் காரணத்தினால் அதைக் கட்டுப்படுத்த முடிவதில்லை. கட்டுப்பாடு முடிவடைந்து விடுகிறது. தொந்தரவுக்குள்ளாவது அல்லது குஷி மறைந்து போவது அல்லது மனம் சோர்வடைவது, தன்னுடைய வாழ்க்கையில் மகிழ்ச்சி இல்லாமல் இருப்பது, இவைகள் வீணான எண்ணங்களின் அடையாளங்கள். தன்னுடைய நிலை இந்த மாதிரி ஏன் ஆனது என்றே அனேகருக்கு தெரிவதேயில்லை. அவர்கள் மேலோட்டமாக நான் எந்தப் பாவமும் செய்யவில்லை, ஏதேனும் தவறோ செய்யவில்லை இருந்தும் ஏன் குஷி குறைவாக இருக்கிறது, ஏன் சோர்வு இருக்கிறது. ஏன் இன்றைய வாழ்க்கையில் மகிழ்ச்சி வருவதில்லை என்று பெரிய பெரிய விஷயங்களை மட்டும் பார்க்கிறார்கள். மனமே ஈடுபடுவ தில்லை. இதன் காரணம் என்ன? பாவத்தை பார்க்கிறார்கள். தீய எண்ணங்களைப் பார்க்கிறார்கள், பெரிய தவறுகளை சோதனை செய்கிறார்கள், ஆனால் வீணாக பொக்கிஷத்தை இழப்பதும் கூட சூட்சும தவறாக இருக்கிறது. அவசியம் வீணானதின், வீணாக இழப்பதின் கணக்கு அதிகரித்து இருக்கிறது. உடல் நோய் கூட முதலில் பெரிய ரூபமாக இருக்காது, சிறிய ரூபத்தில்தான் இருக்கும் ஆனால் சிறியதிலிருந்து வளர்ந்து வளர்ந்து பெரியதாக ஆகி விடுகிறது, மேலும் பெரிய ரூபமாகத் தென்படுகிறது. சிறிய ரூபம் தென்படுவதில்லை. அதே போல் இந்த வீணானதின் கணக்கு, இழப்பதின் கணக்கு அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. பாவத்தின் கணக்கு வேறு, ஆனால் இது பொக்கிஷத்தை இழக்கும் கணக்காகும். பாவமோ தெளிவாகத் தென்படுவதினால் இன்று இதைச் செய்தேன் இல்லையா எனவே குஷி குறைந்து விட்டது என்று உணர்ந்து விடுகிறார்கள் ஆனால் வீணாக இழப்பதின் கணக்கின் சோதனை குறைவாக இருக்கிறது. மேலும் நல்லது கடந்து சென்ற இன்றைய நாளும் நல்லதாக இருந்தது, அந்த மாதிரி எந்த தவறும் செய்யவில்லை என்று நீங்களும் நினைக்கிறீர்கள், ஆனால் தன்னுடைய எண்ணத்தின்

உயர்ந்த பொக்கிஷத்தை சேமித்தேனா அல்லது வீணாக இழந்தேனா என்று இதை சோதனை செய்தீர்களா? ஒருவேளை சேமிப்பாகவில்லை என்றால் இழப்பதற்கான கணக்கும் இருக்குமில்லையா? அனைத்தையும் செய்து கொண்டிருக்கிறோம் என்று உள்ளுக்குள் புரிகிறது ஆனால் இன்று என்னென்ன பொக்கிஷத்தை சேமிப்பு செய்தோம் என்பதை சோதனை செய்யுங்கள். சோதனை செய்யத் தெரியுமா? தன்னுடைய சோதனையாளராக ஆகியிருக்கிறீர்களா அல்லது மற்றவர்களின் சோதனை யாளராக ஆகியிருக்கிறீர்களா? ஏனென்றால் தன்னை உள்ளேயிருந்து பார்க்க வேண்டியதாக இருக்கிறது. மற்றவர்களை வெளியிலிருந்து பார்க்க வேண்டியதாக இருக்கிறது. அது சுலபமாகி விடுகிறது. அப்படி எது விசேஷமான உயர்ந்த எண்ணத்தின் பொக்கிஷமோ அது மிக அதிகமாக வீணாகச் செல்கிறது என்று பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார். வீணாகச் சென்றதா அல்லது சக்தி நிரம்பியதாக இருக்கிறதா என்று தெரிவதே இல்லை.

பிரம்மாபாபாவை சிக்கனத்தின் அவதாரம் என்று கூறுகிறார்கள். நீங்கள் அனைவரும் யார்? நீங்களும் அதில் மாஸ்டரா அல்லது இல்லையா? சிக்கனம் தெரியாதா? செலவு செய்யத் தெரியுமா? பார்க்கப் போனால் இரட்டை வெளிநாட்டினருக்கு குடும்ப வாழ்க்கையின் கணக்குப்படி சேமிப்புக் கணக்கை செய்வது குறைவாகத் தெரிந்திருக்கிறார்கள். சாப்பிட்டார்கள், செலவு செய்தார்கள் மற்றும் முடிந்து விட்டது. வங்கியில் கணக்கில் குறைவாக சேமிப்பு வைக்கிறார்கள் ஆனால் இதிலோ சிக்கனத்தின் அவதாரம் ஆக வேண்டும். அப்படி எவ்வளவு கிடைத்திருக்கிறதோ, எவ்வளவு எண்ணத்தின் உயர்ந்த பொக்கிஷம் சேமிப்பு ஆக வேண்டுமோ அவ்வளவு இல்லை என்று பாப்தாதா பார்த்தார் மற்றும் வீணான கணக்கு அதிகமாக இருப்பதாக பார்த்தார். ஒருவேளை எண்ணம் வீணானது என்றால் மற்ற பொக்கிஷங்கள் வீணானவைகளாக தானாகவே ஆகி விடுகின்றன. எண்ணம் வீணானது என்றால் காரியம் மற்றும் வார்த்தைகள் என்னவாக இருக்கும்? வீணானதாகவே தான் இருக்கும் இல்லையா? எண்ணம் தான் அஸ்திவாரம் ஆகும். எனவே எண்ணத்தை சோதனை செய்யுங்கள். லேசாக விட்டு விடாதீர்கள். சரி தான். இரண்டு நிமிடங்கள் தான் சென்றது, அதிகமாகச் செல்லவில்லை ஆனால் இரண்டு நிமிடத்தில்

எத்தனை எண்ணங்கள் செல்கிறது என்று நீங்கள் சோதனை செய்யுங்கள். வீணான எண்ணமோ வேகமாக இருக்கும் இல்லையா? ஒரு நொடியில் அபுவிலிருந்து அமெரிக்கா சென்றடைந்து விடுவார்கள். ஸ்தூலமாக செல்வதற்கு எவ்வளவு மணி நேரங்கள் எடுக்கின்றன. அந்த மாதிரி அவ்வளவு அதிவேகம், அந்த வேகத்தின் பிரமாணம் சோதனை செய்யுங்கள், தன்னுடைய எண்ண சக்தியை மிச்சப் படுத்துங்கள், பின்பு இரவில் சோதனை செய்யுங்கள். ஒருவேளை மிகக் கவனமாக எந்தவொரு பொருளையும் சேமிப்பு செய்கிறீர்கள் என்றால் சேமிப்பு குறைவாக இருந்தாலும் சேமிப்பின் குஷி அதிகப்படியானதாக இருக்கும். ஒருவேளை பத்து பவுண்டு அல்லது டாலர் செலவாக வேண்டும் மற்றும் நீங்கள் ஒரு பவுண்டு அல்லது டாலரை மிச்சப்படுத்தி விட்டீர்கள் என்றால் ஒரு பவுண்டை மிச்சப்படுத்தி வந்திருக்கிறோம் என்று மிகுந்த குஷி இருக்கும். அப்படி தன்னுடைய எண்ணங்களின் மீது கட்டுப்படுத்தும் சக்தியை பிரயோகியுங்கள், விரும்பவில்லை, புரிந்தும் கொள்கிறோம் ஆனால் என்ன செய்வது, அப்படி ஆகி விடுகிறது... என்று சொல்லாதீர்கள். ஆகி விடுகிறது என்று யார் கூறுகிறார்? எஜமானனா அல்லது அடிமையா? எஜமானர்களின் கட்டுப்பாட்டில் இருப்பார்கள் இல்லையா? ஒருவேளை எஜமானனையும் யாராவது ஏமாற்றி விட்டார்கள் என்றால் அவர் எஜமானனா என்ன? கட்டுப்படுத்தும் சக்தி இருக்கிறதா? என்ற இதை சோதனை செய்யுங்கள். ஒன்றோ சேமிப்பு செய்யுங்கள், வேஸ்ட்'ற்குப் (வீணானதற்கு) பதிலாக பெஸ்ட்'ன் (சிறந்ததின்) கணக்கில் சேமியுங்கள். மேலும் இரண்டாவது, ஒருவேளை சேமிப்பு செய்ய முடியவில்லை என்றால் வீணானவற்றை சக்தி நிறைந்த எண்ணங்களில் மாற்றம் செய்யுங்கள். ஒருவேளை கட்டுப்பாடு செய்ய முடியவில்லை என்றால் மாற்றத்தையோ செய்ய முடியும் இல்லையா? அதன் வேகத்தை விரைவில் மாற்றம் செய்ய வேண்டும். இல்லையென்றால் பழக்கம் ஏற்பட்டு விடும். ஒவ்வொரு மணி நேரத்தையும் சோதனை செய்தீர்கள் என்றால் ஒரு மணி நேரத்திலும் கூட எந்த ஐந்து, பத்து நிமிடங்கள் வீணாகச் சென்று கொண்டிருந்ததோ அந்த ஐந்து நிமிடம் கூட வேஸ்ட்டிலிருந்து பெஸ்ட்டில் சேமிப்பாகி விட்டது என்றால் 12-மணி நேரங்களில் ஐந்து, ஐந்து நிமிடம் என்று பார்த்தால் கூட எவ்வளவு ஆகி விடும்? மேலும் குஷி எவ்வளவு இருக்கும். மேலும் எவ்வளவு உயர்ந்த எண்ணங்களின் கணக்கு சேமிப்பாகுமோ அந்தளவு தேவையான

நேரத்தில் சேமிப்பு கணக்கு உபயோகமாக இருக்கும். இல்லையென்றால் ஸ்தூலமான செல்வத்தில் ஒருவேளை சேமிப்பாகவில்லை என்றால் தேவையான நேரத்தில் ஏமாற்றமடைந்து விடுகிறார்கள். அதே போல் இங்கேயும் ஏதாவது பெரிய சோதனை வந்து விடுகிறது என்றால் மனம் மற்றும் புத்தி மிகவும் காலியாக, சக்தியற்றதாக அனுபவம் ஆகிறது. அப்படியானால் என்ன செய்ய வேண்டும்? சேமிப்பு செய்யக் கற்றுக் கொள்ள வேண்டும். அடுத்த வருடம் பார்த்தோம் என்றால், அனைவரின் உயர்ந்த எண்ணங்களின் கணக்கு நிரம்பி இருக்க வேண்டும் காலியானதாக அல்ல. இந்த உயர்ந்த எண்ணங்களின் பொக்கிஷம் தான் உயர்ந்த பிராப்திக்கான ஆதாரம் ஆகும். அப்படியானால் சேமிப்பு செய்யத் தெரியுமா? இராஜயோகி என்றால் சோதனை செய்யவும் தெரிந்திருப்பது மற்றும் சேமிப்பு செய்யவும் தெரிந்திருப்பது ஆகும். யாருடைய கணக்கு சேமிப்பாகுமோ அவருடைய நடத்தை மற்றும் முகம் எப்பொழுதுமே நிரம்பியதாகத் தென்படும். இன்று பார்த்தீர்கள் என்றால் முகம் பொலிவுடன் இருக்கிறது மற்றும் நாளை பார்த்தீர்கள் என்றால் சோர்வின் அலைகள் நிரம்பியதாக இருக்கிறது என்று அப்படி இருக்க வேண்டாம். உங்களுடைய தோற்றம் முழு நாளிலும் எவ்வளவு மாறுகிறது என்று சோதனை செய்யுங்கள். இதை எப்பொழுதாவது சோதனை செய்திருக்கிறீர்களா? தோற்றத்தை மிகவும் மாற்றுகிறார்கள். பாப்தாதாவோ அனைவரின் தோற்றத்தைப் பார்க்கிறார் இல்லையா? அனேக குழந்தைகள் காரியம் செய்வதில் அந்தளவு நேரம் எடுப்பதில்லை, ஆனால் செய்த காரியத்திற்காக வேதனை அடைவதில் மிகுந்த நேரத்தை இழக்கிறார்கள் என்று சிலநேரம் பார்க்கிறோம். பிறகு குஷி காணாமல் போய் மூன்று நாட்கள் ஆகி விட்டது என்று சொல்கிறார்கள். ஏன் குஷி காணாமல் போனது, எங்கே போனது. யார் எடுத்துச் சென்றார்? பொக்கிஷமோ உங்களுடையது, ஆனால் யார் எடுத்துச் சென்றார். பட்சாதாபப்படுவது நல்லதுதான். ஏனென்றால் பட்சாதாபப்படுவது மாற்றத்தை செய்விக்கிறது, ஆனால் அதில் அதிக நேரம் செல்வாகக் கூடாது. பட்சாதாபப்பட்டு வேதனையில் அழுதீர்கள் என்றால் முழு வாரமும் அழுது கொண்டே இருப்பீர்கள். பட்சாதாபப்பட்டீர்கள், நல்லது தான் -ஆனால் பட்சாதாபப்படுவது மற்றும் குஷியின் பிராப்தியைக் கொண்டு வருவது என்று அப்படி இருக்க வேண்டும். வரும் காலத்திற்காக இதைச் செய்ய வேண்டுமா

அல்லது செய்ய வேண்டாமா என்பதை ஒரு நொடியில் முடிவெடுங்கள். நாட் (not வேண்டாம்) மற்றும் டாட் (dot புள்ளி). இந்த இரண்டு வார்த்தைகளை நினைவு வைத்துக் கொள்ளுங்கள் என்று ஏற்கனவே கூறியிருக்கிறோம். யோசிக்காதீர்கள், புள்ளி வையுங்கள்! நான்கு மணி நேரம் அழுது கொண்டே இருந்தீர்கள், தண்ணீர் வரவில்லை சரி, ஆனால் உள்ளேயே அழுது கொண்டே இருந்தார்களே! அரைமணிநேரம் தண்ணீர் வீணாகச் சென்றது மற்றும் நான்கு மணி நேரம் மனதால் அழுதீர்கள். அப்படி பட்சாதாபப்பட்டு வேதனைப்படாதீர்கள். இது மிக அதிகமாகும். பட்சாதாபப்படுவதற்கும் ஒரு எல்லை வைத்துக் கொள்ளுங்கள்.

பாப்தாதாவிற்கு இரட்டை வெளிநாட்டினரின் ஒரு விசேஷத்தன்மை மிகவும் பிடித்திருக்கிறது. அழுவது பிடிக்காது ஆனால் இன்னொரு விசேஷத்தன்மை மிகவும் பிடித்திருக்கிறது. அது எது? உண்மையான உள்ளத்தாருடன் பாபா மிகவும் திருப்தியாக இருக்கிறார். இதற்கிணங்க உண்மை சொல்வதில் பயப்படமாட்டார்கள், மறைக்க மாட்டார்கள். அப்படி உண்மையான உள்ளம் இருக்கிறது. இதன் காரணமாக தந்தையின் இரட்டை அன்பிற்கும் பாத்திரமானவர்களாக இருக்கிறீர்கள். அப்படி உண்மையான உள்ளம் வைத்து தந்தையைத் திருப்திப்படுத்தி விட்டீர்கள் ஆனால் மாற்றத்தையும் அவ்வளவு வேகமாகச் செய்ய வேண்டும். இது நடந்து விட்டது, இது நடந்து விட்டது என்று அதை அடிக்கடி தன் மனதிற்குள் வர்ணனை செய்யாதீர்கள். நடந்தது நடந்து விட்டது. அது முடிந்து விட்டது. வரும் நாட்களில் அடென்ஷன் (கவனம்) வைக்க வேண்டும் ஆனால் சில நேரம் அடென்ஷனுக்குப் பதிலாக டென்ஷனாகி விடுகிறீர்கள், அதைச் செய்யாதீர்கள். மிகப் பெரிய நீதிபதியாக ஆகுங்கள். இங்கேயும் சீஃப் ஜஸ்டிஸ் (தலைமை நீதிபதி) இருக்கிறார் இல்லையா? நீங்களோ சீஃப் ஜஸ்டிஸிற்கும் சீஃப் ஆக இருக்கிறீர்கள். தனக்குத்தான் மிக விரைவில் இது சரி, இது தவறு என்று தீர்ப்பு கொடுங்கள். தவறு என்றால் நாட் (வேண்டாம்) மற்றும் டாட் (புள்ளி). இப்படி ஆகாமல் இருந்திருந்தால் இப்படி ஆகியிருக்கும், இப்படி செய்யாமல் இருந்திருந்தால் இப்படி ஆகியிருக்கும்.. (இப்படி யோசிப்பது) இது இழப்பதற்கான கணக்கை சேமிப்பு செய்கிறீர்கள். வருமானம் முடிந்து விடுகிறது, சேமிப்புக் கணக்கு முடிந்து விடுகிறது. யோசியுங்கள் ஆனால் வீணானதை அல்ல. இன்னும் சேமித்துக்

காண்பியுங்கள். ஒரு மணிநேரத்தில் இவ்வளவு சேமித்தோம், வீணானது தொடங்கியது ஆனால் நான் மாற்றம் செய்தேன் மற்றும் சேமித்தேன் என்ற முடிவைக் காண்பியுங்கள். வீணானதை மிச்சப்படுத்துங்கள். இந்த சேமிப்புக் கணக்கு மிகுந்த குஷியைக் கொடுக்கும்.

இந்த வருடம் அனைவரின் சேமிப்புக் கணக்கை நிரம்பியதாக பாப்தாதா பார்க்க விரும்புகிறார். செய்ய முடியும் தான் இல்லையா? எனவே இப்பொழுது மிக அதிக வேகத்தில் செய்யுங்கள். ஏனென்றால் நேரமும் வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது இல்லையா? இதில் யார் நம்பர் ஒன் ஆகச் செல்கிறார் என்று பின்பு பார்க்கலாம். சேமிப்பு கணக்கு யாருடையது மிக அதிகமாக இருக்கிறது, சேமிப்பு கணக்கில் வரிசைக்கிரமமாக யார் யார் இருக்கிறார்கள் என்ற இந்த பட்டியலை எடுப்போம். மேலும் ஒருவேளை தன்னுடைய எண்ணத்தை கட்டுப்படுத்தினீர்கள் என்றால், மற்றவர்களுக்கு கட்டுப்படுத்து வதற்காக கடும் முயற்சி செய்ய வேண்டியது இருக்காது. பேச விரும்பவில்லை, ஆனால் என்னமோ தெரியவில்லை வாயிலிருந்து வெளிப்பட்டு விடுகிறது என்று சிலர் கூறுகிறார்கள் ஆனால் எப்பொழுது வார்த்தை வெளியாகிறது அல்லது காரியமும் நடக்கிறது என்றால் முதலிலோ எண்ணம் வருகிறது, ஒருவேளை யார் மேலேயாவது கோபமும் பட வேண்டும் என்றால் முதலில் எண்ணத்தில் -அப்படி செய்வேன், அப்படி சொல்வேன், அவர் என்ன நினைக்கிறார் என்று அந்த மாதிரி திட்டம் உருவாகிறது. பின்பு நேரத்தையும் அதில் உபயோகிக்கிறார்கள். எப்பொழுது வருகிறார், யார் வருகிறார் என்று நேரத்தை பார்த்துக் கொண்டே இருப்பார்கள். அப்படி எண்ணத்தின் பொக்கிஷத்திற்குப் பின்னால் நேரத்தின் பொக்கிஷமும் வீணாகச் செல்கிறது. இரண்டிற்கும் சம்மந்தம் இருக்கிறது. அப்படி எண்ணத்தைச் சேமிப்பதினால் நேரத்தை, வார்த்தையை சேமிப்பது தானாகவே ஏற்பட்டு விடுகிறது. நல்லது.

**வரதானம்: ஒரு பலம், ஒருவர் மேல் உள்ள நம்பிக்கையின் ஆதாரத்தில் இலக்கை (லட்சியம்) அருகில் அனுபவம் செய்யக்கூடிய தைரியம் உள்ளவர் ஆகுக!**

உயர்ந்த இலக்கைச் சென்றடைவதற்கு முன்பு முதலில் புயல், சூராவளி இருக்கத்தான் செய்யும். படகை அக்கரைக்குக் கொண்டு செல்வதில் இடையில் வரும் சுழல்களைக் கடந்து செல்லத் தான் வேண்டும். எனவே அவசரத்தில் பயப்படாதீர்கள், களைப்படையாதீர்கள், நிற்காதீர்கள். துணைவனை துணையாக வைத்துக் கொண்டீர்கள் என்றால் ஒவ்வொரு கடினமும் சுலபமாகி விடும். தைரியம் உள்ளவராகி தந்தையின் உதவிக்குப் பாத்திரமானவராக ஆகுங்கள். ஒரே பலம், ஒரே ஒருவரின் மேல் உள்ள நம்பிக்கை என்ற இந்த பாடத்தை எப்பொழுதும் உறுதியாக வைத்தீர்கள் என்றால் இடையில் வரும் சுழல்களிலிருந்து சுலபமாகக் கடந்து வந்து விடுவீர்கள் மற்றும் இலக்கு அருகில் இருப்பதாக அனுபவம் ஆகும்.

சுலோகன்: யார் இயற்கையையும் சேர்த்து ஒவ்வொரு ஆத்மாவிற்காக சுபபாவனை வைக்கிறாரோ அவர் தான் விஷ்வ கல்யாணகாரி (உலக நன்மை செய்பவர்) ஆவார்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 31.03.1995 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# கிரீடம், ஆசனம் மற்றும் திலகத்தின் அடையாளத்தை எப்பொழுதும் உடன் வைத்துக் கொள்ளுங்கள்!

இந்த வருடம் எப்பொழுதும் இராஜ்ய அதிகாரியாக இருந்தேன் என்று அனைவரின் சார்ட் இருக்கட்டும். அடிமைத்தனம் முடிவடையட்டும். 63-ஜென்மங்களோ அடிமையாக இருந்தீர்கள் இல்லையா? இப்பொழுது ஒரு ஜென்மம் அதிகாரி ஆவதற்காகக் கிடைத்திருக்கிறது. அதிலேயும் அடிமையாக இருப்பீர்களா என்ன? அடிமையாவதற்காக இன்னொரு ஜென்மம் அதிகமாக கொடுத்து விடலாமா. சந்தோஷமாக அனுபவியுங்கள். வேண்டாமா? அதிகாரமோ கிடைத்திருக்கிறது, அதிகாரத்தை தன்னிடமே பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும் அவ்வளவு தான். அலட்சியமானவராக ஆகாதீர்கள், பலவீனமானவராக ஆகாதீர்கள். சொல்லும்பொழுது பாருங்கள் என்ன கூறுகிறீர்கள், நான் மாஸ்டர் சர்வ சக்திவான். உங்களில் யாராவது நான் மாஸ்டர் பலவீனமானவன் என்று கூறுகிறீர்களா? ஆனால் ஏன் அப்படி ஆகிறீர்கள்? மாஸ்டர் சர்வ சக்திவான், ஆனால் இருப்பது பலவீனமாக. இது நன்றாக இருக்கிறதா? கேட்பதற்கே நன்றாக இல்லை. அப்படியானால் இந்த வருடத்தின் ரிசல்ட்டில் என்ன செய்வீர்கள்? இப்பொழுதோ வைர விழாவைக் கொண்டாடுவதற்காக ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? நீங்களும் கொண்டாடுவீர்களா அல்லது யாருக்கு 60 வருடங்கள் ஆகி விட்டதோ அவர்கள் கொண்டாடுவார்களா? ஏனென்றால் இது ஸ்தாபனையின் வைர விழா ஆகும். அப்படி ஸ்தாபனையில் நீங்கள் அனைவரும் இருக்கிறீர்களா அல்லது இல்லையா? ஏனென்றால் இப்பொழுது அனைவரும் கலந்து வந்திருக்கிறீர்கள், சிலரோ இரண்டு, நான்கு வருடங்களானவர்கள். சிலர் இரண்டு நான்கு மாதங்களானவர்களும் இருக்கிறார்கள் ஆனால் வைர விழா அனைவருக்குமானது.

ஏனென்றால் இது ஸ்தாபனையின் வைர விழா ஆகும். அப்படியானால் மிகவும் கோலாகலமாகக் கொண்டாடுவீர்கள் இல்லையா? கொண்டாடுவது என்றால் என்ன அர்த்தம்? மாநாடுகள் செய்து, நிகழ்ச்சிகள் செய்வதா அல்லது அவ்வாறு ஆவதா? கொண்டாடுவது என்றால் அவ்வாறு ஆவது மற்றும் ஆக்குவது. கொண்டாடுவது மட்டும் இல்லை. ஆவதும் கூடத் தான், பாருங்கள் நீங்கள் அனைவரும் இந்த சீசனின் முடிவில் 'போக்' வழங்கக்கூடிய ஆத்மாக்கள் அப்படி எவ்வளவு நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இந்த மேளா பிடித்திருந்ததா? இப்பொழுது உங்கள் அனைவரின் புகார்களோ முடிவடைந்தது இல்லையா?வாய்ப்பு கிடைப்பதில்லை, வாய்ப்பு கிடைக்கவில்லை என்ற இந்த முறையீடோ நிறைவேறி விட்டது இல்லையா? பாருங்கள், குழந்தைகளின் அன்பிற்காக எங்கு குழந்தைகள் இருக்கிறார்களோ அங்கு வர வேண்டியதாக இருந்தது. ஏனென்றால் அரைக்கல்பமாக வாருங்கள். வாருங்கள் என்று குழந்தைகள் நினைவு செய்திருந்தார்கள். தந்தையோ தன்னுடைய நேரத்தில் வந்திருக்கிறார், உங்களுடைய கதறலைக் கேட்டு வரவில்லை ஆனால் உங்களுடைய குரலைக் கேட்கவோ செய்கிறார் இல்லையா? அப்படி நீங்கள் அரைக்கல்பமாக வாருங்கள், வாருங்கள் என்று கூறினீர்கள், மேலும் தந்தை இப்பொழுது மேளாவில் வாருங்கள் வாருங்கள் என்று உங்கள் அனைவருக்கும் கூறுகிறார். அனைவரும் குஷியாக இருக்கிறீர்களா? அனைவரும் ஆரோக்கியமாக இருக்கிறீர்களா அல்லது நோயுற்றவர் கூட ஏதாவது (டென்ட்டில்) கூடாரம் தூங்கினாரா? நீங்களோ இங்கு அமர்ந்திருக்கிறீர்கள், மேலும் உங்களுடன் இருந்தவர்கள் யாராவது (இங்கு இல்லாதவர்கள்) இருக்கிறார்களா? யாரும் இல்லை. அனைவரும் இவ்வளவு ஆரோக்கியமாக இருக்கிறீர்கள் என்றால் மிக நல்ல பிரம்மா போஜனம் கிடைத்திருக்கிறது என்று நிரூபணம் ஆகிறது. இப்பொழுதோ இருந்தாலும் தரையில் தூங்குவதற்காக இடம் கிடைத்திருக்கிறது. வரும் நாட்களில் விநாஷ நேரத்திலோ உங்கள் கைகளையே தலையணையாக வைக்க வேண்டியதிருக்கும். மண்ணில் சௌகரியமாக தூங்கி விடுவீர்கள். ஏதாவது கல், முள் குத்தியது என்றால் சரி செய்து விடலாம். இப்பொழுதோ மிக நல்ல ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள் என்று பாப்தாதா பார்த்தார். பாப்தாதாவும் சுற்றி வந்தார். அதிலேயும் குஜராத்தைச் சேர்ந்தவர்களுக்கு பல மடங்கு பாராட்டுக்கள். மிக நன்றாகச் செய்திருக்கிறார்கள். உள்ளப்பூர்வமாக

உழைத்திருக்கிறார்கள். அப்படி யாரெல்லாம் உள்ளப்பூர்வமாக உழைத்திருக்கிறார்களோ அவர்களுக்கு பாப்தாதா உழைப்பிற்காக பல மடங்கு அன்பு கொடுக்கிறார். யார் யார் சேவையில் பொறுப்பாளராகி சேவை செய்கிறார்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். குஜராத்தைச் சேர்ந்தவர்கள் செய்தார்கள் இல்லையா? குஜராத்தைச் சேர்ந்தவர்கள் கையை உயர்த்துங்கள். மிக நன்றாகச் செய்திருக்கிறீர்கள். பாருங்கள் மெல்லிய சப்பாத்தியோ கிடைத்தது. கருகியதோ கிடைக்கவில்லை இல்லையா? பிரம்மா போஜனம் மிக நன்றாகச் செய்யப்பட்டது என்று பாப்தாதாவும் கேள்விப்பட்டார். தரையில் தூங்குவதற்கான பயிற்சியோ ஏற்பட்டு விட்டது இல்லையா? நல்லது. கோடைக் காலத்தில் ஒருவேளை கூடாரம் பரந்து விட்டது என்றால் காற்று வருவதற்காக கூரை இல்லாமல் ஆகி விட்டது தான் இல்லையா. இயற்கையான ஜன்னல்களாக ஆகி விட்டன ஆனால் அடுத்த குரூப்பிற்கு இந்த மாதிரி கிடைக்காது, அவர்களுக்காக நல்ல ஏற்பாடுகள் செய்வோம். மேலும் மதுபனைச் சேர்ந்தவர்கள் யார் யார் மிக நல்ல சகயோகம் கொடுத்தார்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். நன்றாக உழைத்திருக்கிறீர்கள் (தாதி செய்தார்கள். தாதியோ கருவியாக / பொறுப்பிலிருப்ப வராக இருந்தார்கள் இல்லையா? தாதிக்கு முழு நாளிலும் எத்தனை மாலைகள் வந்து விழுகின்றன. ஆசீர்வாதங்களின் மாலைகள் ஒன்றன் பின் ஒன்றாக விழுகின்றது. அதைக் கழற்றவும் வேண்டியதில்லை. மலர்களாலான மாலை ஒருவேளை பத்து மாலைகள் கழுத்தில் விழுந்தால் கூட கழுத்தே வலியெடுத்து விடும். மேலும் இந்த ஆசீர்வாதங்களின் மாலை எவ்வளவு லேசானது மற்றும் எவ்வளவு பிரியமானது. யார் சேவை செய்கிறார்கள், பார்க்கப்போனால் அனைவரும் சகயோகம் கொடுத்தார்கள், சகயோகமின்றி எந்தக் காரியமும் நடக்காது. அனைவருக்கும் ஹான்ஜி (சரி செய்கிறேன்), செய்யுங்கள் என்ற இந்த சகயோகத்தின் கையை கொடுத்தீர்கள். அதனால் தான் இந்தக் காரியம் நிறைவேறியது. ஒருவேளை இரண்டு நான்கு சகயோகி கூட, முடியாது, முடியாது என்று கூறினார்கள் என்றால் இந்த மேளா நடந்திருக்க முடியாது ஆனால் மதுபனைச் சேர்ந்தவர்கள், தல்ஹட்டியில் (சாந்திவனம்) இருப்பவர்களும், குளோபல் மருத்துவ மனையைச் சேர்ந்தவர்களும் மற்றும் நாலாபுறத்திலுள்ள பாரத தேசத்தைச் சேர்ந்தவர்களும், ஞான சரோவரில் இருப்பவர்களும் உதவி

செய்தார்கள். ஞான சரோவருக்குத் தான் அனைத்து பெருமையும், உங்களுக்கு நல்ல உணவு கிடைத்தது (ஞான சரோவரின் நீராவியினால் சமைக்கும் இயந்திரம் மற்றும் பெரிய பெரிய பாத்திரங்கள் மேளாவில் உபயோகிக்கப்பட்டன). ஏனென்றால் நீங்கள் அனைவரும் ஞான சரோவரை கட்டினீர்கள் இல்லையா? அப்படி என்ன விதை போட்டீர்களோ அதன் பழத்தை அருந்திக் கொண்டிருக்கிறீர்கள். உடனடி பலன் இல்லையா, அப்படி உடனடி பலன் கிடைத்தது மேலும் உருவானதும் கூட அதில் அன்போடு இருக்கிறார்கள். கொஞ்சம் கூட களைப்பின் சின்னம் முகத்தில் இல்லவே இல்லை. காரியம் செய்ய வேண்டும் ஆனால் அன்போடு செய்ய வேண்டும். இது தான் அதிசயம் இல்லையா? தூங்கி வழிந்து கொண்டு காரியம் செய்கிறார் என்றால் அந்த வேலை வேலையே இல்லை. மேளாவில் செல்கிறார்கள் என்றால் ஞாபகார்த்தமாக ஏதாவது ஒரு பொருளை வாங்கி வருவார்கள். இந்த பரமாத்மா மேளாவிலிருந்து எந்த ஞாபகார்த்தத்தை எடுத்துச் செல்வீர்கள். கிரீடம், ஆசனம் மற்றும் அழியாத திலகத்தின் அடையாளத்தை அனைவரும் உடன் எடுத்துச் செல்லுங்கள். மூன்று பொருள்களிலிருந்து ஒரு பொருள் இருந்து விட்டது மற்றும் இரண்டு உடன் வந்தது என்று அப்படி இருக்க வேண்டாம். இங்கேயே விட்டு விட்டுச் சென்று விட மாட்டீர்களே? எடுத்துச் செல்லத் தெரியுமா? காணாமல் போன பொருட்கள் நிறைய வந்து சேருகின்றன என்று அறிவிப்பு கூறுகிறார்கள் இல்லையா? அப்படி இங்கேயே விட்டு விட்டு சென்று விடாதீர்கள். நான் அனைவரையும் விட உயர்ந்த பாக்கியவான் ஆத்மா ஆவேன் என்ற இந்த நிச்சயம் மற்றும் போதையில் எப்பொழுதும் இருக்க வேண்டும். இது புத்தியில் மட்டும் இல்லாமல் முகம் மற்றும் நடத்தையிலும் தென்படட்டும். யாரெல்லாம் உங்களுடைய நெருக்கத்தில் வருகிறார்களோ அவர்கள், இவர்கள் சாதாரணமானவர்கள் இல்லை வித்தியாசமானவர்கள் என்று அனுபவம் செய்யட்டும். மேலும் ஆன்மீக ரீதியில் விலகியிருக்கும் நிலை தான் அனைவருக்கும் பிரியமானதாக இருக்கிறது இல்லையா? அப்படியானால் விலகியிருப்பதற்குத் தெரியுமா?

பாரதத்தின் நாலாபுறங்களிலிருந்தும் வந்து சேர்ந்து விட்டார்கள். அனைத்து பக்கங்களிலிருந்தும் வந்திருக்கிறார்களா அல்லது யாராவது வராமல் தங்கிப் போனவர்களும் இருக்கிறார்களா? அனைத்து ஜோனும்

(மண்டலங்கள்) வந்து விட்டன. எப்படி வருவதில் எவரெடியாகி வந்து சேர்ந்து விட்டீர்கள். அதே போலவே ஒருவேளை இப்பொழுது ஒரு நொடியில் திரும்பிச் செல்வதற்கும் தயாராகுங்கள் என்று கட்டளையிட்டால் செய்ய முடியுமா? நாங்கள் சென்று கொண்டிருக்கிறோம், வீட்டில் இருப்பவர்கள் நினைவு செய்வார்கள் என்று டெலிபோன் செய்வதற்கான நினைவு வருமா? ஒரு நொடியில் ஆத்மா உடலிலிருந்து விலகிச் செல்வதற்காக தயாராகி விட வேண்டும். அந்த மாதிரி பயிற்சி செய்யுங்கள். ஏனென்றால் உடன் செல்வோம் என்பது தான் அனைவரின் உறுதிமொழி ஆகும். உறுதிமொழி இருக்கிறதா அல்லது இல்லையா. தந்தை சென்று விட்டார் நாங்கள் பார்த்துக் கொண்டே இருந்தோம் என்று அப்படியா? அப்படி இல்லை. உடன் இருப்போம், உடன் செல்வோம். அப்படியானால் செல்வதற்காக தயார் நிலையும் வேண்டும் இல்லையா? ஏதாவது தங்கத்திலான, வெள்ளியிலான, செம்பினாலான சூட்சும கயிறுகளோ இல்லையே? நீங்கள் மேலே செல்வதற்காக முயற்சி செய்கிறீர்கள். மேலும் கயிறுகள் உங்களை கீழே கொண்டு வந்து விடுகின்றன என்று அப்படியில்லையே. எனவே ஒரு நொடியில் அசரீரி ஆக முடியுமா? என்று சோதனை செய்யுங்கள் மற்றும் பயிற்சி செய்யுங்கள். அசரீரி என்பதின் அர்த்தம் உடலின் எந்த விதமான ஈர்ப்பும் ஆத்மாவை தன் பக்கம் ஈர்க்கக்கூடாது. உயிரோடு இருந்தாலும் கூட, உயிரோடு இருந்து கொண்டே இறந்த வாழ்க்கை. பார்க்கப் போனால் உங்கள் அனைவருக்கும் உங்களுடைய உடலோ இல்லவே இல்லை. என்னுடைய உடல் என்று கூறுவீர்களா அல்லது அது தந்தையின் சொத்தா? எப்பொழுது உடல் தந்தையினுடையதாக ஆகி விட்டது என்றால் உடலற்ற நிலையில் (அசரீரி) ஆவதில் என்ன கடினம்? கடினமா அல்லது சுலபமா? (சுலபம்). சொல்வதற்கோ சுலபம் தான். நான் ஆத்மா, நான் ஆத்மா, நான் உடல் இல்லை என்று யுத்தம் செய்யாமல் இருக்க வேண்டும். யுத்தம் செய்வதிலேயே ஒரு விநாடி முடிந்து விட்டது என்றால் எங்கே சென்றடைவீர்கள். தந்தை கூறினார் மற்றும் நீங்கள் செய்தீர்கள். ஒருவேளை கொஞ்சமாவது அப்படியில்லை அது இப்படி, இப்பொழுதோ கொஞ்சம் நேரம் வேண்டும், இவ்வளவு பயிற்சியோ ஆகவில்லை, ஆகி விடும். என்று யோசித்தீர்கள் என்றால் நீங்கள் போய்ச் சேர்ந்தீர்கள். எங்கே போய்ச் சேர்ந்தீர்கள்.

திரேதாயுகம் போய்ச் சேர்ந்தீர்கள். சரி செய்கிறேன் என்றால் பிரம்மாபாபாவுடன் துணைவனாக ஆவீர்கள். நல்லது.

**டீச்சர்களுடன்:** டீச்சர்கள் அனைவரும் முன்னுக்கு அமர்ந்து இருக்கிறீர்கள், புத்திசாலிகள். மிக நல்லது. நீங்கள் நிமித்தமாகி (பொறுப்பிலிருப்பவராகி) சேவை செய்ததற்கான பாராட்டுக்களை பாப்தாதா கொடுக்கிறார். இருந்தாலும் பாருங்கள் முயற்சி செய்து அனைவரையும் யாத்திரையையோ செய்வித்திருக்கிறீர்கள்.

**குமாரர்களுடன்:** குமாரர்கள் என்ன செய்வார்கள்? குமாரர்கள் எப்பொழுதும் உலகில் ஏதாவது ஒரு மாற்றத்திற்காக தயாராக இருக்கிறார்கள். எந்தவொரு புரட்சியானாலும் அதற்கு காரணமாக குமாரர்கள் ஆகிறார்கள். அப்படி இதுவும் அமைதியின் புரட்சி, அப்படி அனைத்து குமாரர்களும் நம்முடைய ஒவ்வொரு காரியமும் பரிவர்த்தனை செய்வதற்காக காரணமாகி விடுகிறது என்று எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அப்படி குமார் என்றால் உலகை மாற்றம் செய்பவர். அப்படித் தான் இல்லையா? வெறும் கைத்தட்டல்கள் மட்டும் செய்து கொண்டிருக்கவில்லையே. நல்ல நல்ல குமாரர்கள் இருக்கிறார்கள். பாருங்கள், சேவை நிலையத்தின் சேவையில் முன்னேற்றம் அடைந்து தர வரிசை எண் பெறுவதற்காக குமாரர்களும் அவசியம் தேவையாக இருக்கிறார்கள் என்று பாப்தாதா எப்பொழுதும் கூறுகிறார். எங்கு குமாரர்கள் இல்லையோ அங்கே சேவை செய்வதற்கான திட்டங்கள் குறைவாக உருவாகும். அப்படி தடையற்ற சேவாதாரிகள் குமாரர்கள். பிரச்சனை செய்பவராக மட்டும் ஆகாதீர்கள். தடையற்ற சேவாதாரிகள் குமாரர்கள். சேவைக்கு அழகே குமாரர்கள் தான் எனவே பாப்தாதாவிற்கு குமாரர்கள் மிகவும் பிரியமானவர்களாக இருக்கிறார்கள். நல்லது. இந்த வருடமோ அனைவருக்கும் தடையற்றவராக ஆகவே தான் வேண்டும். உங்களிடம் (தாதிகளிடம்) இம்மாதிரி ஆயிற்று, அந்த மாதிரி ஆயிற்று என்று தடைகளின் கடிதங்கள் வராது. குமாரர்களை மாயாவும் மிகுந்த அன்பு செய்கிறது. மாயாவும் இவர் என்னுடையவராக ஆகட்டும் என்று நினைக்கிறது. எனவே இரட்டை கவனம் வேண்டும். மாயாவினுடையவராக ஆக வேண்டாம்.

குமாரிகளுடன்: குமாரிகள் என்ன செய்வீர்கள்? குமாரிகளுக்கோ மிக மிக பெரிய பாக்கியம் ஆகும். குமாரர்கள் 25-வருடங்கள் ஆனவர்களாக இருப்பார்கள் ஆனால் அவரை யாரும் தாதா என்று கூறமாட்டார்கள் ஆனால் குமாரிகளை தாதி என்று கூறுவார்கள், தீதி என்று கூறுவார்கள். குமாரிகள் ஒருவேளை டீச்சர் ஆகி விட்டார்கள் என்றால் தாதி, தீதியின் பட்டம் கிடைத்து விடுகிறது. தீதி என்று கூறுபவர்களும் மிக நல்லவர்கள் மற்றும் ஆகுபவர்களும் நல்லவர்கள் ஆனால் தீதி என்றால் பெரியவர். அப்படி தீதி ஆவது என்றால் பெரிய மனதோடு தன்னுடைய முயற்சி மற்றும் மற்றவர்களின் முயற்சியை செய்விப்பது. தீதி என்ற பெயரினால் மட்டும் குஷியடைந்து விடாதீர்கள். காரியமும் செய்ய வேண்டும். குமார் குமாரிகள் மேல் மாயா கொஞ்சம் அதிகப்படியான அன்பு வைத்திருக்கிறது என்று பார்க்க முடிகிறது ஆனால் இது அன்பு இல்லை, ஏமாற்றுவது ஆகும். முதலில் மாயா மிகவும் அன்பு செய்கிறது ஆனால் அதனுள் அடங்கியிருப்பது ஏமாற்றமாக ஆகி விடுகிறது. இப்பொழுது எந்த குமார் மற்றும் குமாரியைப் பற்றி மாயா சம்மந்தப்பட்ட புகார் வரக்கூடாது. இப்பொழுது புகார் வந்து கொண்டு இருக்கிறது. குமாரர்களும், குமாரிகளும் கூட நிறைய விளையாட்டுக்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது விளையாடாதீர்கள். இப்பொழுது உலகை மாற்றுபவர் ஆகி அனைவரும் ஒருவர் இன்னொருவருக்கு சகயோகி ஆகி முன்னேறிச் செல்ல வேண்டும். சரி தான் இல்லையா.

குடும்பத்தில் இருப்பவர்களுக்காக: குடும்பத்தில் இருப்பவர்கள் என்ன செய்வீர்கள்? குடும்பத்தில் இருப்பவர்கள் நாம் உலகின் காட்சிப் பொருள் பெட்டகத்திலுள்ள மிக நல்ல நம்பர் ஒன் காட்சிப் பொருளாவேன் என்ற இந்த வரதானத்தை எப்பொழுதும் நினைவில் வைக்க வேண்டும். எவ்வளவு நீங்கள் ஷோ பீஸ் அதாவது சேம்பிள். மிக நன்றாக இருப்பீர்களோ பின்பு தந்தையோடு வியாபாரம் செய்பவர்கள் மிக அதிகமாக வருவார்கள். சேம்பிளைப் பார்த்து தானும் கொள்முதல் செய்பவராக ஆகி விடுவார்கள். குடும்பத்தில் இருப்பவர்கள் தன்னுடைய பங்கை மிக நன்றாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஒருவேளை குடும்பத்தினர் இல்லை என்றால் இன்று வரை கூட பாப்தாதாவிற்கு திட்டு வாங்க வேண்டியதாக இருக்கும். பாருங்கள் தொடக்கத்தில் எவ்வளவு திட்டு வாங்கினோம் ஆனால் குடும்பத்தினர்

உங்களை சேம்பிளாகப் பார்த்து தைரியம் வருகிறது. அப்படி குடும்பத்தினருக்கும் அவருடைய விசேஷம் இருக்கிறது ஆனால் குடும்பத்தினரின் அர்த்தம் என்ன? விடுபட்ட உணர்வில் இருப்பவர்கள் என்பதாகும். குடும்பம் என்றால் என்னுடைய பேரன், என்னுடைய கொள்ளுப்பேரன் என்பதல்ல ஆனால் விடுபட்ட உள்உணர்வில் இருப்பவர்கள் ஆனால் என்ன நடக்கிறது? விலகியிருப்பவராகவும் அன்பானவராகவும் இருங்கள் என்று பாப்தாதா கூறுகிறார். அன்பானவராக ஆகுகிறார்கள் ஆனால் விலகியிருப்பவராக ஆகி அன்பானவராக ஆவதில்லை. இந்தத் தவறை செய்கிறார்கள். அன்பானவர்களாகவோ ஆகி விடுகிறார்கள் ஆனால் விலகியிருக்கும் நிலை மறந்து விடுகிறது. அப்படி அன்பானவரும் விலகியிருப்பவருமாக இருக்க இந்த குடும்பத்தினருக்குத் தெரியும் இல்லையா? அன்பானவராக மற்றும் விலகியிருப்பவராக இருப்பதில் திறமை நிறைந்தவர் தான் இல்லையா? மாயா வந்து விட்டது என்ன செய்வது என்று இப்பொழுது இப்படி கடிதம் எழுதாதீர்கள், மாயாவை நிரந்தரமாக விரட்டி விட்டோம் என்று அந்த மாதிரி கடிதம் எழுதுங்கள். கடிதம் எழுதுவதற்கும் அவசியம் இல்லை. பாபாவிடம் வந்து சேர்ந்து விடுகிறது. எழுதுகிறார்கள் என்றால் 4-4 பக்கம் கடிதம் எழுதுகிறார்கள், சிக்கனம் இல்லவே இல்லை. செலவோ ஆகிறது தான் இல்லையா? செலவு யாருக்கு ஆனது? உங்களுக்கா அல்லது தந்தைக்கா? அப்படி வீணான செலவு செய்தீர்கள் இல்லையா. மேலும் படிப்பவர்களுக்கும் வீணாக எவ்வளவு நேரம் செல்கிறது, வார்த்தைகளும் என்ன எழுதுகிறார்கள். சிலர் கிழக்கே போகிறார்கள். சிலர் மேற்கே போகிறார்கள். இரண்டு வார்த்தைகளில் எழுதுங்கள். விரிவாக எழுதாதீர்கள். குஷியான செய்தியின் கடிதம் ஒருபொழுதும் நீளமாக இருப்பதில்லை. தவறான காரியத்தின் செய்திகளின் கடிதம் நான்கு பக்கங்களுக்கு இருக்கும். அப்படி இப்பொழுது குஷி நிறைந்த செய்திகளின் கடிதம் வர வேண்டுமா அல்லது நீள நீளமான கடிதங்கள் வர வேண்டுமா? யாராவது உங்களிடம் வந்து எவ்வளவு தான் அந்த மாதிரி கடிதங்கள் அல்லது செய்திகளைக் கூறினார்கள் என்றால் நீங்கள் என்ன செய்வீர்கள்? ஆடாத அசையாதவர்களாக இருக்க வேண்டும். வீணான காகிதத் தொட்டியில் போட்டு விடுங்கள். இது என்ன நடக்கிறது, இது என்ன இப்படி ஆகி விட்டது... என்று ஆர்வம் காண்பிக்காதீர்கள். கூறுபவர்கள் கூறட்டும் நீங்களோ தந்தை என்ன

கூறுகிறாரோ அதைக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்றால் மற்றவர்கள் கூறுவதையும் கேட்க வேண்டுமா? உங்கள் உறுதிமொழி என்ன? உங்களிடமிருந்து தான் கேட்பேன் என்றா அல்லது மற்றவர்களிடமிருந்தும் கொஞ்சம் கொஞ்சம் கேட்பீர்களா? யாராவது என்ன சொன்னாலும் சரி, யாராவது நான் தந்தை என்று கூறினாலும், நான் இன்னாரென்று கூறினாலும், கூறட்டும். மகிழ்ச்சியை அனுபவிக்க விடுங்கள். நீங்கள் தந்தையினுடையவர்கள் மற்றும் தந்தையினுடையவராகவே இருக்க வேண்டும். சம்மதம் தான் இல்லையா அல்லது கொஞ்சம் கொஞ்சம் மகிழ்ச்சியை எடுத்துக் கொள்ள வேண்டுமா? தந்தையின் பிரபாவத்தில் இருப்பவர்கள் எந்தவொரு பிற ஆத்மாவின் பிரபாவத்தில் வர முடியாது. இவரும் நன்றாக பேசுகிறார். அவர் கூறுவதை கேட்டு விட்டால் தான் என்னவாம் என்று அப்படியில்லை ஆனால் தந்தை என்ன கூறியிருக்கிறார். ஒருவரிடமிருந்து கேளுங்கள், ஒருவர் கூறுவதை மட்டுமே கேளுங்கள். அப்படி இது விருப்பம் தான் இல்லையா அல்லது கொஞ்சம் கொஞ்சம் இராமாயணக் கதை, மகாபாரத கதையும் கேட்பது நல்லதா? இடையிடையே கொஞ்சம் கொஞ்சம் மன மகிழ்ச்சிக்கான பொழுதுபோக்கும் இருக்க வேண்டுமா? அப்படியில்லை நீங்கள் உங்களுடைய மகிழ்ச்சியில் இருங்கள். ஒருவேளை மற்றவர்கள் என்ன செய்தாலும் அவர்களையும் அதை அனுபவிக்க விடுங்கள். சுபபாவனை கொடுங்கள். நீங்கள் பாதுகாப்பாக இருங்கள். பாதுகாப்பாக இருக்கத் தெரியுமா அல்லது கொஞ்சம் நடுக்கம் வந்து விடுகிறதா? நடுக்கமும் வர வேண்டாம். எப்பொழுதும் பாதுகாப்பாக இருங்கள்.

நல்லது, அனைவருக்கும் வரதானம் கிடைத்து விட்டது. பரமாத்மாவின் அன்பு எவ்வளவு இருக்கிறது. இவ்வளவு அன்பை யார் கொடுப்பார்கள் என்ற பாடலையும் பாடுகிறீர்கள் இல்லையா? பரமாத்மா அன்பை வேறு யாரும் கொடுக்க முடியாது. அசம்பவம் ஆகும். அப்படி அனைத்து ஆசைகளும் நிறைவேறி விட்டதா? எதுவரை வாழ வேண்டுமோ அதுவரை சந்தித்துக் கொண்டே இருக்க வேண்டும். ஒருபொழுதும் மாயாவின் பிரச்சனைகளினால் பயப்படாதீர்கள். வா, நானும் வெற்றி அடைபவன் தான் என்று அப்படி இருக்கட்டும். பரவாயில்லை வா என்று அப்படி சவால் விடுங்கள். உங்களுக்கு பிரச்சனை என்றால் எங்களுக்கு மேளா. நல்லது.

அனைத்து பக்கங்களிலும் உள்ள உள்நாட்டு வெளிநாட்டின் அனைத்து சூட்சும சொரூபத்தினால் காட்சியைப் பார்க்கக் கூடிய ஆத்மாக்களுக்கு நாலாபுறத்திலுள்ள எப்பொழுதும் உயர்ந்த பாலனையில் வளர்ந்து கொண்டிருக்கும், உயர்ந்த படிப்பினால் இராஜபதவியை அடையக் கூடிய ஆத்மாக்களுக்கு, சத்குரு மூலமாக அனைத்து வரதானம் பிராப்தி செய்யக்கூடிய ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் மாயாவை வென்ற வெற்றி இரத்தினங்களுக்கு, எப்பொழுதும் யுத்தம் செய்வதை விட்டு இராஜயோகி நிலையில் நிலைத்திருக்கக்கூடிய அனைத்து உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: மாஸ்டர் சர்வ சக்திவானின் நினைவு மூலமாக மாயாவை வென்றவரிலிருந்து உலகை வென்றவராகும் வெற்றி அடைபவர் ஆகுக!

மாயா ஏன் வந்தது என்று தெரியவில்லை என்று எந்தக் குழந்தைகள் அதிகம் யோசிக்கிறார்களோ, பயந்திருக்கும் அவர்களை மாயாவும் தாக்கி விடுகிறது. எனவே யோசிப்பதற்குப் பதிலாக எப்பொழுதும் மாஸ்டர் சர்வ சக்திவானின் நினைவிலிருந்தீர்கள் என்றால் வெற்றி அடைபவர் ஆகி விடுவீர்கள். வெற்றி இரத்தினம் ஆக வேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் இந்த மாயாவின் சிறு சிறு ரூபங்கள். எனவே தன்னை மாயாவை வென்றவர், உலகை வென்றவர் என்று புரிந்து மாயா மேல் வெற்றி அடையுங்கள், பலவீனமானவராக ஆகாதீர்கள். சவால் விடுபவர்களாக ஆகுங்கள்.

சுலோகன்: ஒவ்வொரு ஆத்மாவிடமிருந்து நல் ஆசீர்வாதங்களைப் பெற வேண்டும் என்றால் எல்லைக்கப்பாற்பட்ட கபபாவனை மற்றும் நல்விருப்பங்களில் நிலைத்திருங்கள்!

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 06.04.1995 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தூய்மையின் ஆன்மீக தனித்தன்மையின் (Personality) நினைவு சொரூபம் மூலம் மாயாவை வென்றவர் ஆகுக!

இன்று அன்புக் கடல் பாப்தாதா நாலாபுறங்களிலும் உள்ள அனைத்து அன்பான குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு அன்பான குழந்தைகளின் முகத்தில் ஆன்மீக பெர்சனாலிட்டியின் (தனித்தன்மையின்) பொலிவு தென்படுகிறது. வெளிப்படையான ரூபத்திலோ சாதாரண பெர்சனாலிட்டி உள்ளவர்களாக இருக்கிறார்கள் ஆனால் ஆன்மீக பெர்சனாலிட்டியிலோ அனைவரையும் விட நம்பர் ஒன். உலகில் அனேக விதமான பெர்சனாலிட்டி உள்ளவர்கள் வர்ணனை செய்யப்படுகிறார்கள். உடலின் பெர்சனாலிட்டியும் இருக்கிறது ஏதாவது சிறப்பின் பெர்சனாலிட்டியும் இருக்கிறது மற்றும் ஏதாவது விசேஷ பதவியின் பெர்சனாலிட்டியும் இருக்கிறது ஆனால் உங்கள் அனைவரின் முகத்தில், நடத்தையில் எந்த பெர்சனாலிட்டி இருக்கிறது? தூய்மையின் பெர்சனாலிட்டி இருக்கிறது. தூய்மை தான் பெர்சனாலிட்டி எவ்வளவிற்கு எவ்வளவு தூய்மையாக இருக்கிறாரோ அவ்வளவு அவருடைய பெர்சனாலிட்டி தென்படுவது மட்டுமல்லாமல் அனுபவமும் ஆகிறது. அனைவரும் தன்னுடைய ஆன்மீக பெர்சனாலிட்டியை அனுபவம் செய்கிறீர்களா? சத்யுகத்தில் தொடங்கி இதுவரை உங்களுடைய பெர்சனாலிட்டி மாதிரி வேறு யாருடைய பெர்சனாலிட்டியும் இருக்கிறதா? முழுக் கல்பத்தையும் சுற்றி வந்தீர்கள் என்றால் உங்கள் மாதிரி பெர்சனாலிட்டி இருக்கிறதா? இல்லை தான் இல்லையா? அப்படி உங்களுக்கு உங்களுடைய ஆன்மீக பெர்சனாலிட்டியின் போதை இருக்கிறது. அனாதி காலத்திலோ பரந்தாமத்தில் கூட விசேஷ ஆத்மாக்கள் உங்களுடைய பெர்சனாலிட்டி அனைவரையும் விட உயர்ந்தது. அனைத்து ஆத்மாக்களும் பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஜோதியாக இருந்த போதிலும், ஆன்மீக

பெர்சனாலிட்டி உள்ள ஆத்மாக்கள் உங்களுடைய பிரகாசம் மற்ற ஆத்மாக்களினுடையதை விட வித்தியாசமானது, மிகவும் பிரியமானது. தன்னுடைய அனாதி காலத்தின் பெர்சனாலிட்டியை நினைவில் கொண்டு வாருங்கள். நினைவில் வந்ததா? பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா? பாப்தாதா கூடவே எப்படி ஆன்மீக பெர்சனாலிட்டியில் தென்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். உங்களை நீங்களே பார்க்க முடியுமா? அப்படியானால் அனாதி காலத்தில் சென்று விடுங்கள். எவ்வளவு நேரத்தில் செல்ல முடியும்? செல்வதற்கு எவ்வளவு நேரம் எடுக்கும்? விநாடியை விட குறைந்த நேரம் தான் இல்லையா? அல்லது ஒரு நாள், ஒரு மணி நேரம் தேவையாக இருக்கிறதா? ஒரு விநாடியை விட குறைவான நேரத்தில் எங்கு விரும்புகிறீர்களோ அங்கு சென்றடைய முடியும். அப்படி அனாதி காலத்தினுடைய தன்னுடைய பெர்சனாலிட்டியைப் பார்த்து விட்டீர்களா? இப்பொழுது அனாதி காலத்திலிருந்து ஆதி காலத்தில் (சத்யுக தொடக்கத்தில்) வந்து விடுங்கள். வந்து விட்டீர்களா அல்லது வந்து கொண்டிருக்கிறீர்களா? வந்து சேர்ந்து விட்டீர்களா? அனாதி காலத்திலிருந்து ஆதி காலத்து தன்னுடைய ஆன்மீக பெர்சனாலிட்டி எவ்வளவு உயர்ந்ததாக இருக்கிறது என்று பாருங்கள் உடலினுடையதும் இருக்கிறது என்றால் மனதினுடையதும் இருக்கிறது. செல்வத்தினுடையதும் இருக்கிறது மற்றும் சம்மந்தத்தினுடையதும் இருக்கிறது. அனைத்து விதமான பெர்சனாலிட்டியும் எவ்வளவு உயர்ந்ததாக இருக்கிறது. அப்படி ஆதி காலத்தின் பெர்சனாலிட்டியை பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா? எவ்வளவு அழகாக இருக்கிறீர்கள், எவ்வளவு அலங்கரிக்கப்பட்டிருக்கிறீர்கள், எவ்வளவு சுகம், சாந்தி, அன்பு, ஆனந்த சொரூபமாக இருக்கிறீர்கள் என்றால் ஆதி காலத்திலும் கூட தன்னுடைய பெர்சனாலிட்டியைப் பாருங்கள். தெளிவாக தென்படுகிறதா அல்லது 5-ஆயிரம் வருடங்கள் ஆன காரணத்தினால் கொஞ்சம் தெளிவாக இல்லையா? அனைவருக்கும் தெளிவாக இருக்கிறதா? அனைவருமே திறமைசாலிகள் தான். அப்படி தன்னுடைய ஆதி காலத்தையும் பார்த்து விட்டீர்கள். இப்பொழுது மத்திய காலத்தில் வாருங்கள். மத்திய காலத்தில் கூட உங்களுடைய பெர்சனாலிட்டியாக என்ன இருந்தது? உங்களுடைய ஜடச்சிலைகள் எவ்வளவு விதிப்பூர்வமாக பூஜை மற்றும் மகிமை செய்யப்படுகின்றன. உலகில்

எவ்வளவு தான் தர்ம ஆத்மாக்கள். மகாத்மாக்கள், தலைவர்கள் என்று பெர்சனாலிட்டி நிறைந்தவர்கள் வர்ணனை செய்யப்படுகிறார்கள் என்றாலும் உங்களுடைய ஜடச்சிலைகளின் பெர்சனாலிட்டியின் எதிரில் அவர்களுடைய பெர்சனாலிட்டி ஒன்றுமே இல்லை. எப்படி உங்கள் அனைவருக்கும் பூஜை நடக்கிறதோ அந்த மாதிரி எந்த மகாத்மா அல்லது தலைவரின், தர்ம ஆத்மாவுக்காவது விதிப்பூர்வமான பூஜை நடக்கிறதா? எப்பொழுதாவது பார்த்திருக்கிறீர்களா? உங்களுடைய ஜடச் சிலைகளுக்கு நடக்கும் அலங்காரம் மாதிரி வேறு யாருக்காவது இருக்கிறதா? அப்படி மத்திய காலத்தில் கூட ஆத்மாக்கள் உங்களுடைய தூய்மையின் பெர்சனாலிட்டி யின் விஷேம் எவ்வளவு உயர்ந்ததாக இருக்கிறது. உங்களுடைய சிலையைப் பார்த்திருக்கிறீர்களா? உங்களுடைய பூஜை நடக்கிறதா அல்லது இல்லையா? பெரியவர்களுக்கு மட்டும் தான் நடக்கிறது, எங்களுக்கு இல்லை என்று அப்படியா? இரட்டை வெளிநாட்டினரின் கோவில் இருக்கிறதா? அதில் உங்களுடைய சிலை இருக்கிறது என்று பார்த்திருக்கிறீர்களா? அல்லது கேள்விப்பட்டிருக்கிறீர்கள், எனவே ஆம். இருக்கும் என்று கூறுகிறீர்களா? நினைவில் இருக்கிறதா? அப்படி உங்களுடைய மத்திய காலம் கூட மிக உயர்ந்தது. மேலும் இப்பொழுது கடைசி ஜென்மத்தில், உடலிலிருந்து கொண்டே இறந்து மறுபிறவியாக பிராமண ஜென்மம் கிடைத்திருக்கிறது. அதன் பெர்சனாலிட்டியைப் பாருங்கள், எவ்வளவு உயர்ந்தது? எந்தவொரு உயர்ந்த காரியமாக இருந்தாலும் இப்பொழுது வரை உங்களுடைய பெயருடைய பிராமணர்கள் தான் செய்கிறார்கள். அவர்கள் எவ்வளவு உயர்வாகக் கருதப்படுகிறார்கள். இன்றைய பிராமணன் இப்பொழுது பிராமணனாக இருக்கவில்லை என்றாலும் பெயரோ பிராமணன் தான் இல்லையா? உங்களுடைய பெயரினால் உங்களுடைய பெர்சனாலிட்டியின் காரணமாக அவர்களும் உயர்ந்தவர்களாக வர்ணிக்கப்படுகிறார்கள். அப்படி பிராமண ஜென்மத்தின் பெர்சனாலிட்டி எவ்வளவு உயர்ந்தது. ஆதி காலம், அனாதி காலம், மத்திய காலம் மற்றும் இப்பொழுது கடைசி காலம் அப்படி முழுக்கல்பத்திலும் உங்களுடைய பெர்சனாலிட்டி எப்பொழுதுமே மகானாக இருந்தது.

லௌகீக பெர்சனாலிட்டி உள்ளவர்களின் பெயர் ஒருவேளை வருகிறது என்றால். ஏதாவது விசேஷ புத்தகத்தில் அவரைப் பற்றி இன்னார்,

இன்னார் என்று பெயர் வரும் ஆனால் உங்களுடைய பெயர் எதில் வருகிறது. சாதாரண புத்தகத்தில் வருவதில்லை. சாஸ்திரங்களில் வருகிறது. ஆதி காலத்திலிருந்து எத்தனை சாஸ்திரங்கள் உருவாகியிருக்கின்றன. அதில் யாருடைய சரித்திரம் எழுதப் பட்டிருக்கிறது? யாருடைய மகிமை செய்யப்பட்டிருக்கிறது? யாருடைய கதைகள் கூறப்பட்டிருக்கிறது? அப்படி உலகிலுள்ள பெர்சனாலிட்டி உள்ளவர்களின் மகிமை விசேஷ புத்தகங்களில் இருக்கும் மற்றும் உங்களுடைய மகிமை சாஸ்திரங்களில் இருக்கிறது. மேலும் சாஸ்திரங்களுக்கு எவ்வளவு மரியாதை கொடுக்கிறார்கள். மிகுந்த விதிப்பூர்வமாக சாஸ்திரத்தைப் பத்திரப்படுத்தி வைப்பார்கள், அவற்றையும் உயர்ந்த பூஜைக்குரிய ரூபத்தில் பார்க்கிறார்கள். யார் உண்மையான பக்தராக இருக்கிறாரோ அவர் சாஸ்திரத்தை விதிப்பூர்வமாக வைத்துக் கொள்ளவும் செய்வார் மேலும் படிக்கவும் செய்வார். பொதுவான புத்தகங்கள் மாதிரி வைக்க மாட்டார். அப்படி தன்னுடைய தூய்மையின் பெர்சனாலிட்டியை எப்பொழுதுமே பசுமையான நினைவில் வையுங்கள். தெரிந்திருக்கிறோம்.. அல்லது நான் தான்.... அந்த மாதிரி உள்ளடங்கிய நிலையில் வேண்டாம். நினைவு சொரூபத்தில் வையுங்கள். யாருடைய புத்தியில் இது மிகவும் பசுமையான நினைவில் இருக்கிறது என்றால், நினைவு தான் சக்திசாலியான நிலைக்கு ஆதாரமாகும். மேலும் எங்கு சக்திசாலியான நிலை இருக்கிறதோ அங்கு மாயா வர முடியுமா? சக்திசாலியான ஆத்மாவிடம் மாயாவின் வருகை அசம்பவம் ஆகும். கடின உழைப்பு செய்வதற்கு அவசியமே இல்லை. மாயாவின் வேலை வருவது ஆனால் உங்களுடைய வேலை இப்பொழுது நேரத்திற்கு ஏற்றபடி விரட்டுவது இல்லை. மாயா வந்தது மற்றும் விரட்டினோம் என்று அப்படி வேண்டாம் உங்களுடைய வேலையே எப்பொழுதும் மாயாவை வென்றவராக இருப்பது. அப்படியானால் மாயாவை வென்றவராக இருக்கிறீர்களா அல்லது மாயாவை அடிக்கடி விரட்டுபவராக இருக்கிறீர்களா? இப்பொழுது விரட்ட வேண்டியது இருக்கிறதா, கொஞ்சம் கொஞ்சம் தரிசனம் கொடுப்பதற்காக அது வந்து விடுகிறதா? இல்லையா? இரட்டை வெளிநாட்டினர் மாயாவை நிரந்தரமாக விரட்டி விட்டீர்களா? அல்லது விரட்டிக் கொண்டே இருக்கிறீர்களா? என்ன நிலைமை? நிரந்தரமாக மாயா ஓடிவிட்டதா? இப்பொழுது வராது தான் இல்லையா? அல்லது கொஞ்சம் கொஞ்சம் வந்தாலும்

பரவாயில்லையா? இருந்தாலும் அரைக்கல்பத்தின் நட்பு, நண்பன் இல்லையா? அதை அப்படியே விட்டு விடுவீர்களா? வரவே வராதா? நேரம் முடிவதற்கு முன்பு மாயாவை வெற்றி அடைவதற்கான வெகு காலத்துப் பயிற்சி தேவை என்று ஏற்கனவே கூறியிருந்தோம். கடைசி நேரத்தில் செய்ய முடியாது. ஒருவேளை கடைசி நேரத்தில் மாயாவை வென்றவர் ஆகக்கூடிய முயற்சி செய்தீர்கள் என்றால் என்னவாகும்? பாப்தாதா கிளியின் கதையைக் கூறுகிறார் இல்லையா? கிளியிடம் தண்ணீர் குழாயில் உட்காராதே என்று கூறப்பட்டது ஆனால் அந்தக் கிளி தண்ணீர் குழாயின் மேலே உட்கார்ந்து கொண்டே தண்ணீர் குழாயில் உட்காராதே என்று கூறியது. அதே போலவே கடைசிக் காலத்தில் ஒருவேளை வெகுகாலத்து பயிற்சி இல்லை என்றால் மனதில் நான் ஆத்மா, நான் ஆத்மா என்று யோசித்துக் கொண்டே இருப்பீர்கள் ஆனால் மாயாவின் பிரபாவமும் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். மேலும் நான் ஆத்மா, நான் ஆத்மா என்று முயற்சியும் செய்வீர்கள் ஆனால் அந்த நிலை உருவாகாது. எனவே என்ன செய்ய வேண்டும்? இப்பொழுதிலிருந்தே மாயாவை வென்றவர் ஆவதற்கான பயிற்சி செய்யுங்கள். மேலும் அதற்கான சுலபமான வழி தன்னுடைய ஆன்மீக பெர்சனாலிட்டியை நினைவு சொரூபத்தில் வையுங்கள். பெர்சனாலிட்டி உள்ளவர்களின் அடையாளம் என்னவாக இருக்கும்? யார் உயர்ந்த பெர்சனாலிட்டி உள்ளவராக இருப்பாரோ அவருடைய கண்கள் எங்கேயும் யார் மேலேயும் செல்லாது. இவர் இப்படி, இவர் இதைச் செய்கிறார், நான் ஏன் செய்யக்கூடாது. நான் ஏன் செய்ய முடியாது. என்று மற்றவர்களின் பிராப்தியில் கண் போகாது. ஏன்? ஆன்மீக பெர்சனாலிட்டி உள்ளவர் அனைத்து பிராப்திகளினால் நிரம்பியிருப்பார். சுபாவத்திலும் சம்பன்னம், சம்ஸ்காரத்திலும் சம்பன்னம் மேலும் உறவு நெருக்கத்திலும் சம்பன்னம், நிரம்பியிருப்பார். அவர் ஒருபோதும் தன்னுடைய பிராப்திகளின் பொக்கிஷத்தில் எந்த அபிராப்தியின் (கிடைக்கப்பெறாத) அனுபவமே செய்ய மாட்டார். ஏன்? ஆன்மீக பெர்சனாலிட்டியின் காரணமாக எப்பொழுதுமே மனதால் நிரம்பியிருக்கும் காரணத்தினால் திருப்தியாக இருக்கிறார். எப்பொழுது தன்னில் அபிராப்தியின் அனுபவம் செய்கிறாரோ அப்பொழுது தான் மற்றவர்களின் பிராப்தியில் கண்கள் செல்கிறது. அப்படி ஏதாவது அபிராப்தி இருக்கிறதா என்ன? நீங்கள் என்ன பாடல் பாடுகிறீர்கள். பிராமணர்களின் பொக்கிஷத்தில் இல்லை?

என்பது ஒன்றும் இல்லை. இந்தப் பாடலை வாய் மூலம் இன்றி மனதால் பாடுகிறீர்கள் இல்லையா. யார் பாடுகிறீர்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். நல்லது. இரட்டை வெளிநாட்டினரும் பாடல் பாடுகிறீர்களா? நல்லது.

பாப்தாதா இன்று நாலாபுறத்திலும் உள்ள குழந்தைகளின் தூய்மையின் பெர்சனாலிட்டியை சோதனை செய்து கொண்டிருந்தார். தூய்மையின் சூத்திரத்தை நல்ல முறையில் தெரிந்திருக்கிறீர்கள். தூய்மை என்றால் பிரம்மச்சர்ய விரதம் மட்டும் இல்லை. இன்றைய நாட்களில் சூழ்நிலை காரணமாக அனேக அஞ்ஞானி ஆத்மாக்களும் பிரம்மச்சர்யத்தில் இருக்கிறார்கள். ஞானத்தின் ஆதாரத்தில் இல்லை ஆனால் நிலைமைகளைப் பார்த்து அப்படி இருக்கிறார்கள். சில பக்தர்களும் இருக்கிறார்கள். அது வொன்றும் பெரிய விஷயமில்லை ஆனால் தூய்மையை முழு நாளும் சோதனை செய்யுங்கள். தூய்மையின் அடையாளம் சுத்தம் மற்றும் சத்தியமாக இருப்பது. ஒருவேளை முழு நாளில் அமரும் பொழுதும், எழும்பொழுதும், பேசும்பொழுதும், சேவை செய்யும்பொழுதும், ஸ்தூல சேவை செய்தீர்கள் அல்லது சூட்சும சேவை செய்தீர்கள் ஆனால் ஒருவேளை விதிப்பூர்வமாகச் செய்யவில்லை, விதியில் ஒருவேளை கொஞ்சம் இடைவெளி இருந்து விட்டால் கூட சுத்தம் அதாவது தூய்மை இல்லை. வீணான எண்ணமும் தூய்மையின்மை தான். ஏன்? நான் பாவம் ஏதும் செய்யவில்லை, யாருக்கும் துக்கம் கொடுக்கவில்லை என்று நினைப்பீர்கள் ஆனால் ஒருவேளை வீணானவை இருந்தது. நேரம் சென்றது, எண்ணம் சென்றது, திருப்தி சென்று விட்டது என்றால் உங்களுடைய தூய்மையின் கடைசி நிலையில் வித்தியாசம் ஏற்பட்டு விடும். 16-கலைகள் நிரம்பியவராக ஆக முடியாது. 15-கலை, 14-கலை, 13-கலை... என்று வரிசைக்கிரமமாகி விடும். அப்படி தூய்மையின்மை யாருக்காவது துக்கம் கொடுப்பது அல்லது பாவம் செய்வது மட்டும் இல்லை, ஆனால் தன்னுள் சத்திய நிலை, தூய்மையை விதிப்பூர்வமாக ஒருவேளை அனுபவம் செய்து கொண்டே இருந்தீர்கள் என்றால் தூய்மையாக இருக்கிறீர்கள் என்பதாகும். பேசக்கூடாது ஆனால் பேசி விட்டீர்கள் என்றால் இதை என்னவென்று கூறுவது? எஜமாளனா? எனவே அமிர்தவேளையில் தொடங்கி இரவு வரை தன்னுடைய எண்ணம், வார்த்தை, காரியம், சேவை அனைத்தையும் சோதனை

செய்யுங்கள். மேலோட்டமாக சோதனை செய்யாதீர்கள். ஒருவேளை மேலோட்டமாக சோதனை செய்தீர்கள் என்றால் பாருங்கள் சந்திரவம்சத்தினருக்கு என்ன அடையாளம் கொடுத்திருக்கிறார்கள். வில்லையும் அம்பையும் காண்பித்திருக்கிறார்கள். மேலும் சூர்யவம்சத்தினருக்கு எவ்வளவு சிறிய புல்லாங்குழல் கொடுத்திருக்கிறார்கள். புல்லாங்குழல் எவ்வளவு லேசானது. மேலும் வில்லும் அம்பும் எவ்வளவு பாரமானது, மேலும் உபயோகிப்பதும் எவ்வளவு கடினமானது. ஒன்றோ குறி பார்த்துக் கொண்டே இருங்கள், இன்னொன்று சுமையை தூக்கிக் கொண்டே இருங்கள். ஆனாலும் புல்லாங்குழலைப் பாருங்கள், ஆடுங்கள், பாடுங்கள், சிரியுங்கள், விளையாடுங்கள். எனவே மேலோட்டமான ரூபத்தில் முயற்சி செய்வதை வைக்காதீர்கள். சோதனையையும் வைக்காதீர்கள். இப்பொழுது நுண்ணிய புத்தி உடையவராக ஆகுங்கள். ஏனென்றால் நேரம் திடீரென்று முடியும், முன்கூட்டியே சொல்லிக் கொண்டு ஏற்படுவதில்லை. பாபா நீங்கள் ஏன் கூறவில்லை என்று யாரும் புகார் சொல்லக்கூடாது என்று ஏற்கனவே கூறி விட்டார். தந்தை ஒருபொழுதும் நேரத்தின் உணர்விலேயே இருப்பவராக ஆக்குவதில்லை. இப்பொழுது முழுமையாக வைரமாக வேண்டும் இல்லையா? இந்த உறுதிமொழியை கொடுத்திருக்கிறீர்கள் தான் இல்லையா? வைரவிழாவைக் கொண்டாட வேண்டுமா அல்லது வைரம் ஆக வேண்டுமா? என்ன செய்ய வேண்டும்? ஆகவும் வேண்டும் மற்றும் கொண்டாடவும் வேண்டும். இரண்டையும் சேர்த்தே செய்ய வேண்டும். அப்படி கொடுத்த உறுதிமொழியை நிறைவேற்றினார்களா அல்லது இனிமையான வார்த்தைகள் கூறி வாயை மட்டும் இனிக்கச் செய்தார்களா? என்று அடுத்த வருடம் பாப்தாதா சோதனை செய்வார். அப்படியானால் நீங்கள் யாராக இருக்கிறீர்கள். உறுதிமொழியைக் கூறுபவர்களாக மட்டும் இருக்கிறீர்களா? அல்லது நிறைவேற்றுபவர்களாகவும் இருக்கிறீர்களா? நல்லது. பாருங்கள், டி.வி யில் உங்கள் அனைவரின் புகைப்படம் வந்து கொண்டிருக்கிறது, பின்பு நாள் இருக்கவே இல்லை. நான் சொல்லவில்லை என்று மாறி விடாதீர்கள். ஆவது என்பது நல்லது தான் இல்லையா, மேலும் எது நல்ல விஷயமோ அதை துரிதமாகச் செய்ய வேண்டுமா அல்லது தாமதமாகச் செய்ய வேண்டுமா? விரைவில் செய்ய வேண்டும் இல்லையா?

ஒரு நொடியில் எவரெடியாக ஆக முடியுமா? ஒரு நொடியில் அசரீரி ஆக முடியுமா? அல்லது நான் உடல் இல்லை, நான் உடல் இல்லை. -என்று யுத்தம் செய்ய வேண்டியதாக இருக்குமா? அந்த மாதிரி இல்லை தானே? நினைத்தீர்கள் மற்றும் அப்படி ஆனது. நினைப்பது மற்றும் நிலைத்திருந்து விடுவது (பாப்தாதா சில நிமிடங்கள் யோகப் பயிற்சி செய்வித்தார்). நன்றாக இருக்கிறது இல்லையா. அப்படி முழு நாளில் இடையிடையே இந்தப் பயிற்சி செய்யுங்கள். எவ்வளவு தான் பிஸியாக இருந்தாலும் இடையிடையே ஒரு நொடியாவது அசரீரியாவதற்கான பயிற்சியை அவசியம் செய்யுங்கள், இதற்காக யாரும் நான் பிஸியாக இருக்கிறேன் என்று சொல்ல முடியாது. ஒரு நொடியை இதற்காக எடுத்துக் கொள்ளத் தான் வேண்டும், பயிற்சி செய்யத் தான் வேண்டும். ஒருவேளை யாருடனாவது பேசிக் கொண்டும் இருக்கிறீர்கள், யாருடனாவது காரியம் செய்து கொண்டும் இருக்கிறீர்கள் என்றால் அவர்களுக்கும் இந்த ஒரு நொடியின் பயிற்சியை செய்வியுங்கள், ஏனென்றால் நேரத்திற்கேற்றபடி இந்த அசரீரி நிலையின் அனுபவம், இந்தப் பயிற்சி யாருக்கு அதிகமாக இருக்குமோ அவர் நம்பர் முன்னுக்கு எடுத்து விடுவார். ஏனென்றால் நேரம் திடீரென்று முடியும் என்று ஏற்கனவே கூறினோம் இல்லையா. அசரீரி ஆவதற்கான பயிற்சி இருந்தது என்றால் உடனேயே நேரத்தின் முடிவிற்கான அலைகள் மனதில் வரும். எனவே இப்பொழுதிலிருந்தே பயிற்சியை அதிகரியுங்கள். அடுத்த வருடம் வைர விழா என்றால் இப்பொழுது செய்ய வேண்டாம், பின்பு செய்யலாம் என்று அப்படியும் வேண்டாம். எவ்வளவு வெகுகாலத்து பயிற்சியை சேர்த்துக் கொள்வீர்களோ அவ்வளவு ராஜ்யபாக்கியத்தின் பிராப்தியிலும் நம்பர் முன்னுக்கு எடுப்பீர்கள். ஒருவேளை இடையிடையே இந்தப் பயிற்சி செய்தீர்கள் என்றால் இயல்பாகவே சக்திசாலி நிலையின் அனுபவத்தை சுலபமாகச் செய்வீர்கள். இப்பொழுது சின்ன சின்ன விஷயங்களில் முயற்சி செய்ய வேண்டியதாக இருக்கிறது. அவை அனைத்தும் சுலபமாகவே முடிவடைந்து விடும்.

நல்லது. அனைவரும் குஷியாகவும், திருப்தியாகவும் இருக்கவே இருக்கிறீர்களா அல்லது கேட்க வேண்டுமா? மாதர்கள் குஷியாக இருக்கிறீர்களா? மிகவும் நல்லது பாருங்கள் எங்கெங்கிருந் தெல்லாம்

மேளாவில் வந்து சேர்ந்து விட்டார்கள். நல்ல வாய்ப்பு கிடைத்தது இல்லையா. இல்லை என்றால் நம்முடைய வாய்ப்பு எப்பொழுது வரும் என்று தேதிக்காக காத்துக் கொண்டிருப்பீர்கள். இப்பொழுதோ திறந்த அழைப்பு இருந்தது இல்லையா. அனைவரும் நன்றாக தங்கியிருக்கிறீர்கள் தான் இல்லையா. எல்லைக்கப்பாற்பட்ட அனுபவம் ஆகிக் கொண்டிருக்கிறது இல்லையா? அல்லது கொஞ்சம் கொஞ்சம் சிரமமும் இருக்கிறதா? வயதான மாதர்களுக்கு சிரமம் ஏற்படவில்லையா. வரிசையில் நில்லுங்கள் அப்பொழுது தான் உணவு கிடைக்கும் என்று இருந்ததால் வரிசையில் நின்றதால் களைப்பு ஏற்படவில்லையே? மகிழ்ச்சி வருகிறதா? இவ்வளவு பெரிய குடும்பம் எப்பொழுது கிடைக்கும். அப்படி பரிவாரத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறீர்கள் இல்லையா. பக்தி மார்க்கத்தின் மேளாவை விடவோ இது நல்ல மேளா தான் இல்லையா. இன்னும் இரண்டு நாள் அதிகரித்து விடுவோமா அல்லது பஸ்ஸிற்கான செலவு ஆகுமா? வீட்டு நினைவு வராதா? வேலை நினைவு வராதா? இதுவும் ஏதாவது புதுமை ஏற்பட வேண்டும் என்றால் இந்த மேளாவும் ஒரு புதுமையாக ஆனது. புதுமையை அனுபவம் செய்து விட்டீர்கள். இப்பொழுது மீண்டும் பழைய விஷயங்கள் இருக்குமா என்ன? புது விஷயங்கள் இருக்கும் இல்லையா. புது விஷயங்கள் விருப்பமாக இருக்கிறதா அல்லது பழைய விஷயமா? விஷயம் பிடித்திருக்கிறது இல்லையா. நல்லது.

நாலாபுறத்திலுமுள்ள அனைத்து ஆன்மீக தூய்மையின் பெர்சனாலிட்டி உள்ள விசேஷ ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தொடக்கத்திலிருந்து கடைசி வரை பெர்சனாலிட்டியின் பொலிவை காண்பிக்கக்கூடிய உயர்ந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தூய்மை, சுத்தம், சத்தியத்தின் சக்தி மூலம் தன்னை மற்றும் உலகை மாற்றக்கூடிய உலகை மாற்றும் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் கருவி என்ற உணர்வில் சேவாதாரி ஆகி உடனடி பலனை அனுபவம் செய்யக்கூடிய அனுபவி ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும், நமஸ்காரங்களும்.

வரதானம்: சத்சங் மூலமாக ஆன்மீக வர்ணம் பூசக்கூடிய எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்தவராக மற்றும் டபுள் லைட் ஆகுக!

எந்தக் குழந்தைகள் தந்தையை உள்ளத்தின் உண்மையான துணைவனாக்கி விடுகிறார்களோ அவர்களுக்கு இந்த தொடர்பின் ஆன்மீக வர்ணம் எப்பொழுதுமே பூசப்பட்டிருக்கிறது. புத்தி மூலமாக சத்தியமான தந்தை, சத்தியமான ஆசிரியர், சத்குருவின் தொடர்பில் இருப்பது இது தான் சத்சங்கம் ஆகும். யார் இந்த சத்சங்கத்தில் இருக்கிறார்களோ அவர்கள் எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்து டபுள் லைட்டாக இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்த விதமான சுமையும் அனுபவம் ஆவதில்லை. அவர்கள் தான் நிரம்பியிருப்பதாக, குஷியின் சுரங்கம் என்னுடன் இருக்கிறது, எதுவெல்லாம் தந்தையினுடையதோ அவை அனைத்தும் என்னுடையதாகி விட்டது என்று அனுபவம் செய்வார்கள்.

**சுலோகன்: தன்னுடைய இனிமையான பேச்சு மற்றும் ஊக்கம் உற்சாகம் நிறைந்த சகயோகத்தினால் மனமுடைந்தவர்களையும் சக்தி நிறைந்தவர்களாக ஆக்குங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋

## 07.11.1995 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பாப்தாதாவின் விசேஷ விருப்பம் மற்றும் ஞானத்தின் அஸ்திவாரம் தூய்மை ஆகும்!

இன்று அன்பின் கடல் பாப்தாதா தன்னுடைய அன்பு சொரூப குழந்தைகளை சந்திப்பதற்காக வந்திருக்கிறார். அனைத்து குழந்தைகளின் உள்ளத்தில் தந்தையின் அன்பு நிரம்பியிருக்கிறது. அன்பானது அனைத்து குழந்தைகளையும் தொலைவிலிருந்து அருகில் அழைத்து வந்திருக்கிறது. பக்த ஆத்மாவாக இருந்தபோது தந்தையிடமிருந்து எவ்வளவு தொலைதூரத்தில் இருந்தீர்கள். எனவே நாலாபுறமும் தேடிக் கொண்டே இருந்தீர்கள். மேலும் இப்பொழுது அவ்வளவு நெருக்கத்தில் இருக்கிறீர்கள். ஒவ்வொரு குழந்தையும் நிச்சயம் மற்றும் உறுதியோடு என்னுடைய பாபா என்னுடன் இருக்கிறார் என்று கூறுகிறார்கள். உடன் இருக்கிறாரா அல்லது இந்தப் பக்கம் இருக்கிறாரா அல்லது அந்தப் பக்கம் இருக்கிறாரா என்று தேட வேண்டியதாக இருக்கிறதா? அப்படி எவ்வளவு அருகாமை ஆகி விட்டது. யாராவது பரமாத்மா எங்கிருக்கிறார் என்று கேட்டால் என்ன கூறுவீர்கள்? என்னுடன் இருக்கிறார் என்று தானே கூறுவீர்கள். இப்பொழுது தந்தையும் நான் இல்லாமல் இருக்க முடியாது என்று திடமாகக் கூறுகிறீர்கள். அப்படி இவ்வளவு அருகில் இருப்பவராக, உடன் இருப்பவராக ஆகி விட்டீர்கள். நீங்களும் ஒரு நொடி கூட தந்தை இல்லாமல் இருக்க முடியாது ஆனால் எப்பொழுது மாயா வருகிறதோ அப்பொழுது உடன் யார் இருக்கிறார்? அந்த நேரம் ஒருவேளை தந்தை உடன் இருக்கிறார் என்றால் மாயா வர முடியுமா? ஆனால் விரும்பாவிட்டாலும் இடையிடையே குழந்தைகள் தந்தையோடு கண்ணாமூச்சி விளையாட்டு விளையாடுகிறார்கள். குழந்தைகள் ஒரு பக்கம் என்னுடைய பாபா என்று கூறுகிறார்கள், என்னுடைய பாபா மற்றும் இன்னொரு பக்கம் அவரை விட்டு விலகியும் சென்று விடுகிறார்கள் என்ற குழந்தைகளின் இந்த விளையாட்டையும் பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒருவேளை இப்பொழுது

இங்கேயும் அந்த மாதிரி விலகிச் சென்று விட்டீர்கள் என்றால் உங்களைப் பார்க்க முடியாது இல்லையா? அதே போல் நீங்களும் மாயாவின் பக்கம் அந்த மாதிரி செய்து விடுகிறீர்கள். தந்தையை பார்ப்பதற்கான பார்வை மூடி விடுகிறது மற்றும் மாயாவைப் பார்க்கும் பார்வை திறந்து விடுகிறது. அப்படி இந்தக் கண்ணாமூச்சி விளையாட்டை சில நேரம் செய்கிறீர்கள். இருந்தும் தந்தை குழந்தைகள் மேல் இரக்கமனம் உடையவராகி ஏதாவது வகையில் மாயாவிடமிருந்து அவர்களைப் பிரிய வைத்து விடுகிறார். அது உணர்விழக்கச் செய்கிறது மற்றும் தந்தை நீ என்னுடையவள் என்று உணர்வில் கொண்டு வருகிறார். மூடிய கண்ணை நினைவு என்ற மந்திரத்தினால் திறந்து விடுகிறார்.

அனைவரின் அன்பு எவ்வளவு சதவிகிதம் இருக்கிறது என்று பாப்தாதா கேட்கிறார். 100-சதவிகிதத்தை விட அதிகமாக இருக்கிறது என்று அனைவரும் கூறுகிறார்கள். பல கோடி மடங்கு அன்பு இருக்கிறது என்று அப்படி கூறுகிறீர்கள் இல்லையா. நல்லது. யாருக்கு பல கோடி மடங்கை விட குறைவாக இருக்கிறது, கோடியாக இருக்கிறது, லட்சமாக இருக்கிறது, ஆயிரமாக இருக்கிறது மற்றும் நூறாக இருக்கிறதோ அவர்கள் கையை உயர்த்துங்கள் யாருமே கையைத் தூக்கவில்லை. நல்லது. அனைவரும் உறுதியானவர்கள் தான். பாப்தாதா பிறகு இரண்டாவது கேள்வியைக் கேட்கிறார். பின்பு மாறிவிடாதீர்கள். நல்லது. பல கோடி மடங்கு அன்பு இருக்கிறது என்று இந்தக் குஷியான செய்தியைக் கூறினீர்கள். அன்பிற்கான அடையாளமாக என்ன இருக்கிறது என்று தந்தை கேட்கிறார்? (சமமாக ஆவது). அப்படியானால் சமமாக ஆகியிருக்கிறீர்களா? (இல்லை). பின்போ பல மடங்கிலிருந்து குறைவாகி விட்டது. இப்பொழுது சம்பூர்ணம் ஆவதில் கொஞ்சம் காலம் இருக்கிறது. எனவே அப்படி ஆகி விடுவோம் என்று நீங்கள் அனைவரும் கூறுவீர்கள் அப்படியா? ஆனால் ஒருவேளை அன்பிற்குரியவர் நீ அன்பிற்காக உயிரையும் தியாகம் செய்து விடு என்று கூறினால் உயிரைக் கொடுப்பதற்கும் தயாராகி விடுவார்கள். பாப்தாதா உயிரையோ எடுப்பதில்லை. ஏனென்றால், உயிரோடு இருந்து தான் சேவை செய்ய வேண்டும் ஆனால் ஒரு விஷயத்தில் பாப்தாதாவிற்கு கொஞ்ச நேரம் ஆச்சரியப்பட வேண்டியதாக இருக்கிறது. ஆச்சரியப்படக் கூடாது, அதையோ

உங்களுக்கும் கூறுகிறார் ஆனால் பாப்தாதாவிற்கு ஆச்சரியப்படவேண்டியதாக இருக்கிறது, (இந்த நேரம் இந்த உலகில்) தன்னுடைய பங்கை செய்து கொண்டிருக்கிறார். உயிரைத் தியாகம் செய்வதையோ விடுங்கள் ஆனால் அன்பின் அடையாளமாவது அர்ப்பணமாவது. என்ன சொல்கிறாரோ அதைச் செய்வது. அப்படி தந்தை ஒரு விஷயத்தில் அர்ப்பணமாவதை பார்க்க விரும்புகிறார். அனேக விஷயங்கள் இருக்கின்றன ஆனால் தந்தை அனைத்தையும் எடுக்கவில்லை. ஒரு விஷயத்தில் மட்டும் அர்ப்பணமாக வேண்டும். அந்த விஷயத்திற்காக கையையும் தூக்கி விடுகிறார்கள். உறுதிமொழியும் செய்து விடுகிறார்கள் ஆனால் உறுதிமொழி செய்த பிறகும் கூட செய்து கொண்டே இருக்கிறார்கள். அது என்ன? தந்தையிடம் இருந்து அடிக்கடி விலகிச் செல்வதற்கான என்னுடைய மூல சம்ஸ்காரம் அல்லது மூல பலஹீனம் என்னவென்று ஒவ்வொருவரும் அவர்களே தெரிந்திருக்கிறார்கள். ஒவ்வொருவரும் தன்னுடைய மூல பலஹீனத்தைத் தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? அப்படியானால் அந்த பலஹீனத்தை தெரிந்த போதிலும் ஏன் அர்ப்பணம் செய்வதில்லை. 63-ஜென்மத்தின் துணைவனாக கூடவே இருந்தது அதனால் அதன் மேல் அன்பு இருக்கிறதா?

அன்பின் அர்த்தமே எது அன்பிற்குரியவரின் விருப்பமோ அதைச் செய்வதாகும். ஒருவேளை உதாரணமாக அன்பு செய்பவர் ஒரு விஷயத்தைக் கூறுகிறார்; மேலும் அவர் வேறொன்றைச் செய்கிறார் என்றால் என்னவாகி விடுகிறது? அன்பு இருக்குமா அல்லது சண்டை இருக்குமா? அந்த நேரம் அன்பு இருக்கிறது என்று கூறலாமா அல்லது கம்பை எடுத்து மிக நன்றாக இரண்டு அடி கொடுக்கலாமா? அப்படியானால் தந்தைக்கு எது விருப்பமானது? சமமாக ஆவதிலோ அனேக விஷயங்கள் இருக்கின்றன என்று பாப்தாதா கூறுகின்றார். பிரம்மாபாபாவின் விசேஷங்களைப் பாருங்கள். மேலும் பிரம்மாபாபாவிற்கே சமமாக வேண்டும் என்றால் எவ்வளவு பெரிய பட்டியல் இருக்கிறது? அதற்காகக் கூட, பரவாயில்லை என்று பாப்தாதா கூறுகிறார். ஓரிரண்டு விஷயங்கள் குறை இருக்கிறது என்றாலும் பாதகமில்லை ஆனால் எது மூல அஸ்திவாரமாக இருக்கிறதோ, எது பிரம்மாபாபா மற்றும் ஞானத்தின் ஆதாரமாக இருக்கிறதோ அது எது? பிரம்மாபாபா மற்றும் சிவபாபாவின் விசேஷமான விருப்பமாக என்ன

இருக்கிறது? (தூய்மை, உள்நோக்குமுகம், நிச்சய புத்தி, உண்மை, சுத்தம்). உண்மையில் அஸ்திவாரமானது தூய்மை ஆகும் ஆனால் தூய்மையின் பரிபாஷை (விளக்கம்) மிக ஆழமானது. எங்கு தூய்மை இருக்குமோ அங்கு நிச்சயம் உண்மை, சுத்தம் இவை அனைத்தும் வந்து விடுகின்றன ஆனால் தூய்மையின் ஆழமான பாஷை, தூய்மையின் ஆழமான இரகசியம் இதுவரை புத்தியில் முழுமையாக தெளிவாக இல்லை என்று பாப்தாதா பார்க்கிறார். வீணான எண்ணம் இருப்பது அல்லது மற்றவர்களிடம் உருவாக்குவது, தனக்குள்ளும் இருக்கிறது மற்றும் மற்றவர்களிடம் இருப்பதற்கும் காரணமாக ஆகி விடுகிறார்கள். அப்படி வீணான எண்ணம்,இது தூய்மையா என்ன? அப்படி எண்ணத்தின் தூய்மையின் இரகசியத்தை அனைவரும் நடைமுறையில் கொண்டு வர வேண்டும் இல்லையா. அப்படியே பார்த்தாலும் கூட ஐந்து விகாரங்களும், அது காமமாக இருந்தாலும் அல்லது மோகமாக இருந்தாலும் அனைத்தையும் விட நம்பர் ஒன் காமம், கடைசி மோகம், எந்த விகாரமும் வருகிறது என்றால் முதலில் எண்ணத்தில் வருகிறது வீணான எண்ணம் கோபத்தையும் உருவாக்குகிறது என்றால் காமம் அதாவது வீணான பார்வை, எந்த ஆத்மாவிற்காகவும் ஒருவேளை வீணான பார்வை செல்கிறது என்றாலும் அந்த நேரம் தூய்மை என்று ஏற்றுக் கொள்ள முடியாது. அப்படி பாபாவின் அன்பிற்காக இந்த வீணான எண்ணத்தை ஏன் தியாகம் செய்வதில்லை? செய்ய முடியுமா? (ஆம் முடியும்). ஆம் என்று சொல்வது மிக சுலபம் ஆனால் பாப்தாதாவிடமோ அனைவரின் சார்ட் இருக்கிறது இல்லையா. இதுவரை ஐந்து விகாரங்களின் வீணான எண்ணம் அதிகமாக இருக்கிறது. அது எந்தவொரு விகாரமாக இருந்தாலும் சரி தான். இது ஏன், இது என்ன, இந்த மாதிரி நடக்கக்கூடாது. இந்த மாதிரி நடக்க வேண்டும். அல்லது ஞானி ஆத்மாக்களில் தன்னுடைய குணத்தின் தன்னுடைய விசேஷத்தின் அபிமானம் வருகிறது அல்லது யார் எவ்வளவு முன்னேறிச் செல்கிறார்களோ அந்த அளவு எந்த விஷயத்திலாவது தன்னுடைய குறையைப் பார்த்து குறை தன்னுடைய முயற்சி செய்வதில் இல்லை ஆனால் பெயரில், மதிப்பில், மரியாதையில், கேட்பதில், முன்னுக்கு வருவதில், சென்டர் இன்சார்ஜ் ஆக்குவதில், சேவையில் விசேஷ பங்கை கொடுப்பதில் -இந்த குறை, இந்த வீணான எண்ணமும் விசேஷமாக ஞானி ஆத்மாக்களுக்கு மிகுந்த நஷ்டத்தை ஏற்படுத்துகிறது என்ற இந்த பொதுவான விஷயத்தை

பாப்தாதா கூறுகிறார். மேலும் இன்றைய நாட்களில் இந்த இரண்டும் தான் விசேஷமாக வீணான எண்ணத்தின் ஆதாரமாக இருக்கிறது. அப்படி நீங்கள் எப்பொழுது சேவைக் களத்தில் செல்கிறீர்கள் என்றால் ஒரு நாள் நடவடிக்கைகளை கவனிப்பீர்கள் என்றால் ஒரு நாளில் இந்த இரண்டிலிருந்து அபிமானமாக இருந்தாலும் அல்லது வேறு வார்த்தைகள் கூறுவதானால் அவமானம் -எனக்கு ஏன் குறைவாக, எனக்கும் இந்த பதவி கிடைக்க வேண்டும். என்னையும் முன்னுக்கு வைக்க வேண்டும்; அப்படி இவற்றை அவமானம் என்று நினைக்கிறீர்கள் இல்லையா? அப்படி இந்த இரண்டு விஷயங்கள் அபிமானம் மற்றும் அவமானம் இவை இரண்டும் தான் இன்றைய நாட்களில் வீணான எண்ணத்திற்கான காரணம் ஆகும். ஒருவேளை இந்த இரண்டையும் தியாகம் செய்து விட்டீர்கள் என்றால் தந்தைக்குச் சமமாக ஆவது ஒன்றும் கடினமில்லை. அப்படி தியாகம் செய்வதற்கான சக்தி இருக்கிறதா? நல்லது. எவ்வளவு காலத்தில் செய்வீர்கள்? இப்பொழுது நவம்பர் மாதம் இல்லையா, புது வருடம் வந்தது என்றால் இரண்டு மாதம் ஆகி விடும் இல்லையா. புது வருடத்தில் பொதுவாக புதுக் கணக்கு வைக்கப்படுகிறது. அப்படி ஒவ்வொருவரும் டீச்சராக இருந்தாலும், மாணவர்களாக இருந்தாலும், மகாரதியாக இருந்தாலும் அல்லது மெதுவாக முன்னேறிச் செல்பவராக இருந்தாலும். இதுவோ மகாரதிகளுக்கானது நாங்களோ சிறியவர்கள் என்று அப்படியில்லை. இராஜ்ய பாக்கியத்தை அடையும் நேரத்திலோ நான் சிறியவன் என்று யாரும் கூற மாட்டார்கள். அந்த நேரத்திலோ இரண்டாவது நாராயணனாக என்னையே ஆக்கி விடுங்கள் என்று கூறுவார்கள். அப்படி ஒவ்வொருவருக்கும் இரண்டு வார்த்தைகளில் மட்டும் தன்னுடைய செய்தியைக் கொடுக்க வேண்டும் மேலும் அந்த தபாலின் மேல் விசேஷமாக இப்படி எழுத வேண்டும் "மனநிலையின் கணக்கு", அப்படி அந்த தபால் தனியாக பிரிக்கப்பட்டு விடும். மேலும் உள்ளே வீணான எண்ணம் எவ்வளவு சதவிகிதத்தில் தியாகம் செய்யப்பட்டிருக்கிறது என்று எழுதுங்கள். 50-சதவிகிமா அல்லது 100-சதவிகிதம் தியாகமானதா? ஒரு வரி மட்டும் எழுதுங்கள். நீளமாக எழுதாதீர்கள். யார் நீளமாக எழுதியிருக்கிறாரோ அதை முதலிலேயே கிழித்து விடுவோம். அப்படியானால் தயாராக இருக்கிறீர்களா? ஆம் அல்லது இல்லை என்று சப்தமாகக் கூறுங்கள். இதில் தைரியம் வேண்டும், நேரமும் வேண்டும் என்று யார் நினைக்கிறீர்களோ அவர்கள்

இப்பொழுதே கையை உயர்த்தி விட்டீர்கள் என்றால் உங்களுக்கு இதிலிருந்து விடுதலை கொடுக்கப்பட்டு விடும். யாராவது இருக்கிறாரா அல்லது முயற்சியோ அதிகமாகச் செய்தோம்; ஆனால் முடியவில்லை என்று பின்னால் எழுதுவீர்களா? அப்படியோ எழுத மாட்டீர்கள் இல்லையா? உறுதியாக இருக்கிறீர்களா? நல்லது.

அன்பு மதுபன் வரையோ அழைத்து வருகிறது என்று பாப்தாதா பார்த்தார் ஆனால் இந்த அன்புடனேயே எங்கே சென்றடைய வேண்டும்? தந்தைக்குச் சமமாக ஆக வேண்டும் இல்லையா? எப்படி மதுபன்னிற்கு ஓடி ஓடி வருகிறீர்கள் இல்லையா? என்னுடைய பெயரையும் எழுதுங்கள், என்னுடைய பெயரையும் எழுதுங்கள் என்று கூறுகிறீர்கள். மேலும் எழுதவில்லை என்றால் டீச்சரை கொஞ்சம் முறைத்தும் பார்க்கிறீர்கள். எப்படி மதுபன்னிற்காக அன்பில் ஓடி, ஓடி வருகிறீர்கள், அதே போலவே என்னுடைய பெயர் தந்தைக்குச் சமமாவதில் முதலில் இருக்கட்டும் என்று அந்த மாதிரி முயற்சியும் செய்யுங்கள். எனவே தூய்மையின் அஸ்திவாரத்தை உறுதியாக்குங்கள். பிரம்மாபாபா தூய்மையின் காரணமாக, ஒரு புதுமையின் காரணமாக, தீய வார்த்தைகளையும் கேட்க வேண்டியதாக இருந்தது. தூய்மை அஸ்திவாரம் ஆகும் மற்றும் அஸ்திவாரத்தில் பிரம்மச்சர்ய விரதத்தை தாரணை செய்வது என்ற இதுவோ பொதுவான விஷயம் ஆனால் இப்பொழுது முன்னேறி வந்திருக்கிறீர்கள் என்றால் குழந்தைப் பருவத்தின் நிலை இல்லை, இப்பொழுதோ வானப்பிரஸ்த நிலையில் செல்ல வேண்டும். நான் பிரம்மச்சாரியாகவோ இருக்கிறேன், தூய்மையோ இருக்கவே இருக்கிறது என்று இதில் மட்டும் குஷி அடைந்து விடாதீர்கள். அப்படியே இப்பொழுது பார்வை, உள்உணர்வில் தூய்மையை இன்னும் கோடிட்டுக் காண்பியுங்கள் ஆனால் மூல அஸ்திவாரம் தன்னுடைய எண்ணத்தை தூய்மையாக்குங்கள், ஞான சொரூபமானதாக ஆக்குங்கள், சக்தி சொரூபமானதாக ஆக்குங்கள். எண்ணத்தில் பலஹீனம் மிக அதிகமாக இருக்கிறது. என்ன செய்வது, செய்ய முடியாது, என்னவாகி விட்டது என்று தெரியவில்லை.. இது தூய்மையின் சக்தியா என்ன? தூய்மையான ஆத்மா என்ன செய்வது, ஆகி விட்டது, ஆகி விடுகிறது. விரும்பவோ இல்லை ஆனால்... இந்த மாதிரி தூய்மையான ஆத்மா கூறுமா? இது எந்த மாதிரியான ஆத்மா? தூய்மையான ஆத்மா கூறுகிறதா அல்லது பலஹீனமான ஆத்மா

கூறுகிறதா? நீங்கள் திரிகாலதரிசி ஆத்மா ஆவீர்கள். இவர்கள் படங்களைப் புரிய வைக்கும் பொழுது 84-ஜென்மங்களை நாங்கள் தெரிந்திருக்கிறோம் என்று கூறுகிறார்கள், இப்பொழுது ஏன், என்ன என்று கூறும் இவர்களை அஞ்ஞானி ஆத்மாக்களின் எதிரில் கொண்டு செல்லுங்கள் என்று பாப்தாதா கூறுகிறார். 84-ஜென்மங்கள் தெரியும் என்று புரிய வைக்கிறீர்கள். மேலும் இப்பொழுது என்ன மற்றும் ஏன் என்று கூறுகிறீர்கள். எப்பொழுது தெரிந்திருக்கிறீர்களோ, தெரிந்திருப்பவர்கள் என்ன, ஏன் என்று கூறுவார்களா? இதனால் தான் நடக்கிறது என்று அவர் தெரிந்திருக்கிறார். மாயாவின் பிரபாவத்தின் வசமாகியிருக்கிறார் என்று என்ன என்பதின் பதில் இயல்பாகவே புத்தியில் வரும். மகாரதியாக இருந்தாலும் மெதுவாக முன்னேறுபவராக இருந்தாலும் ஒருவேளை மகாரதி மூலமாகவும் தவறு நடக்கிறது என்றால் அந்த நேரம் அவர் மகாரதி இல்லை, பலஹீனத்தின் வசமாகியிருப்பவர். அப்படி பலஹீனத்தின் வசமாகியிருப்பவர் எங்கேயாவது அலையோடு அலையாக அடித்துச் செல்லப்படுவார் ஆனால் இவர் மகாரதியாக இருந்து கொண்டும் இப்படி செய்கிறார் என்று அந்த ரூபத்தில் நீங்கள் பார்க்கிறீர்கள். அந்த நேரம் மகாரதி இல்லை பலஹீனத்தின் வசமாகியிருப்பவர், புரிந்ததா? புது வருடத்தில் என்ன செய்ய வேண்டும்? வீணானதை முடித்து புதுக் கணக்கைத் துவங்க வேண்டும். சரியா? உறுதியாக இருக்கிறீர்களா? அல்லது ஏதாவது காரணம் கூறுவீர்களா? ஒருவேளை காரணம் இருந்தது என்றால் ஏதாவது புதிய திட்டத்தை கூறுவோம். இப்பொழுது கூற மாட்டோம். இப்பொழுது கூறினோம் என்றால் நீங்கள் ஏதாவது காரணத்தைக் கொண்டு வந்து விடுவீர்கள். காரணம் தான் நிவாரணம் ஆகும். பிரச்சனை சொரூபமாக இன்றி சமாதான சொரூபமாக ஆகுங்கள்.

இப்பொழுது இயற்கையும் களைப்படைந்து விட்டது. இயற்கையின் சக்தியும் முழுமையாக அழிந்து விட்டது. அப்படி இயற்கையும், இயற்கையின் தலைவனான ஆத்மாக்கள் உங்களிடம் இப்பொழுது நேரம் தாழ்த்தாதீர்கள்; விரைவில் செய்யுங்கள் என்று முறையீடு செய்கிறது. நல்லது.

பாப்தாதாவிற்கும் உடலை இயக்கிவிக்க வேண்டியதாக இருக்கிறது. இயங்கினாலும், இயங்கா விட்டாலும் இயக்கிவிக்க வேண்டியதாக இருக்கிறது. ஏனென்றால் தந்தைக்கு குழந்தைகள் மேல் அன்பு இருக்கிறது. இவ்வளவு அன்பிற்குரிய ஆத்மாக்கள் வந்திருக்கிறார்கள். மேலும் தந்தை அவர்களோடு பேசவில்லை என்றால் எப்படி இருக்கும். எனவே வலுக்கட்டாயமாகக் கூட உடலை இயக்கி விக்க வேண்டியதாகவே இருக்கிறது. நல்லது. அனைவரும் குஷியடைந்து விட்டீர்களா? தந்தை கிடைத்தார், திருப்தியாகி விட்டீர்கள் இல்லையா? நல்லது.

நாலா புறத்திலுமுள்ள பல கோடி மடங்கு அன்பு சொரூப ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தன்னை தீய எண்ணம் அற்றவராக ஆக்கக்கூடிய விசேஷ ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தந்தை மற்றும் தடையற்ற சேவையில் முழுமையாக ஈடுபட்டிருக்கும் ஆத்மாக்களுக்கும். எப்பொழுதும் தந்தையின் அன்பில் பலியாகக்கூடிய அனைத்து ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: நாலாபுறத்திலும் குழப்பமான நேரத்தில் அவ்யக்த நிலை அல்லது அசரீரி ஆவதற்கான பயிற்சி மூலமாக வெற்றி அடைபவர் ஆகுக!

கடைசி நேரத்தில் நாலாபுறத்திலும் மனிதர்கள் மற்றும் இயற்கையின் குழப்பம் மற்றும் சப்தம் இருக்கும். கதறுவதற்கு, அசைப்பதற்கான சூழ்நிலை இருக்கும். அந்த மாதிரியான நேரத்தில் ஒரு நொடியில் அவ்யக்த பரிஷ்தாவிலிருந்து நிராகார அசரீரி ஆத்மாவாக ஆகும் இந்தப் பயிற்சி தான் வெற்றி அடைபவராக ஆக்கும். எனவே வெகுகாலத்தின் பயிற்சி இருக்க வேண்டும். எஜமானனாகி எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது வாய் மூலம் இசை ஒலிக்கட்டும், விரும்பினால் காதுகள் மூலுமாகக் கேட்கட்டும், ஒருவேளை விரும்பாவிட்டால் ஒரு நொடியில் நின்று விட வேண்டும். இந்தப் பயிற்சி தான் நினைவு செய்வதற்கு தகுதியானவராக அதாவது வெற்றி மாலையில் கொண்டு வரும்.

**சுலோகன்: முயற்சியை வேகப்படுத்த வேண்டும் என்றால் அலட்சியம் என்ற லூசான ஸ்க்ரூவை டைட் செய்யுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋

# 16.11.1995-1 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வைர விழா ஆண்டை பற்றுதலில் இருந்து விடுபட்ட ஆண்டாகக் கொண்டாடுங்கள் என்பது தான் பாப்தாதாவின் விருப்பம்!

இன்று பாப்தாதா எப்பொழுதும் உள்ளப்பூர்வமாக தந்தையின் நினைவில் இருக்கக்கூடிய தன்னுடைய அன்பிற்குரிய சகயோகி குழந்தைகளை சந்திப்பதற்காக வந்திருக்கிறார். குழந்தைகளுக்கு எவ்வளவு அன்பு இருக்கிறதோ அந்த அளவே தந்தைக்கும் குழந்தைகளின் மேல் அன்பு இருக்கிறது. தந்தை அனைத்து குழந்தைகளுக்கும் ஒரே சமமாக அதிக அன்பைக் கொடுக்கிறார் ஆனால் குழந்தைகள் அவரவர்களின் சக்திக்கு ஏற்றபடி அன்பை தாரணை செய்கிறார்கள். எனவே தந்தைக்கும் வரிசைக்கிரமமாக அன்பு நினைவுகள் என்று கூற வேண்டியதாக இருக்கிறது ஆனால் தந்தை அனைத்துக் குழந்தைகளுக்கும் உள்ளப்பூர்வமான மிக உயர்ந்த அன்பை அமிர்தவேளையிலிருந்தே கொடுக்கிறார். எனவே அமிர்தவேளையை விசேஷமாக குழந்தைகளுக்காக மட்டும் வைக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால் அமிர்தவேளை முழு நாளின் தொடக்க நேரம் ஆகும். ஆக எந்தக் குழந்தைகள் தொடக்க நேரத்தில் தந்தையின் அன்பை உள்ளத்தில் தாரணை செய்து விடுகிறார்கள் என்றால் உள்ளத்தில் பரமாத்மாவின் அன்பு உள்ளடங்கி இருக்கும் காரணத்தினால் வேறு எந்த அன்பும் தன் பக்கம் ஈர்ப்பதில்லை. ஒருவேளை தன்னுடைய நிலைக்கேற்றபடி முழுமையாக உள்ளத்தை நிரப்பி, தந்தையின் அன்பை உள்ளத்தில் தாரணை செய்யவில்லை, கொஞ்சமாவது காலியாக உள்ளது. அரைகுறையாக எடுத்திருக்கிறார் என்றால் உள்ளத்தில் இடம் இருக்கும் காரணத்தினால் மாயா விதவிதமான அனேக அன்பின் ரூபத்தில் மனிதர்கள் மேலும் வைபவங்கள் ஆகிய இரண்டு ரூபங்களிலும் அந்த அன்பு தன் பக்கம் ஈர்த்து விடுகிறது.

எங்களிடம் இதுவரையிலும் மாயா ஏன் வருகிறது என்று சில குழந்தைகள் பாப்தாதாவிடம் கூறுகிறார்கள். எப்பொழுது மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகி விட்டீர்கள் என்றால் மாயா வருவதற்கான கேள்வியே எழாது ஆனால் என்ன காரணம் என்றால் ஆதிகாலத்தில் அமிர்தவேளையில் தன்னுடைய உள்ளத்தில் பரமாத்மாவின் அன்பை சம்பூர்ண ரூபத்தில் தாரணை செய்வதில்லை. ஒருவேளை ஏதாவது ஒன்று பாதி நிரம்பியிருக்கிறது, கொஞ்சம் காலியாக இருக்கிறது என்றாலும் ஸ்திரமாக இருக்காது, ஆட்டம் காணும் இல்லையா. அமிர்தவேளையில் எழுந்திருக்கவும் செய்கிறீர்கள், அமரவும் செய்கிறீர்கள், நன்றாக யோகா செய்ய வேண்டும் என்ற லட்சியமும் இருக்கிறது, மேலும் ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்று கூறவும் செய்கிறீர்கள்.. இதை உள்ளத்தில் இருந்து கூறுகிறீர்களா அல்லது வாயளவில் கூறுகிறீர்களா? உள்ளப்பூர்வமாக கூறினீர்கள் என்றால் உள்ளத்தில் வேறு கவர்ச்சிக்கான காரணம் என்ன? அவசியம் மனிதர்கள் அல்லது வைபவங்கள் பக்கம் அன்பு செல்கிறது. அதனால் தான் தன் பக்கம் ஈர்க்கிறது. உள்ளத்தில் பரமாத்மாவின் அன்பு முழுமையாக நிரம்பியிருப்பதாக இருப்பதில்லை. நீங்களே யோசியுங்கள், ஒருவேளை உங்களுக்கு ஒரு கையில் யாராவது வைரம் கொடுக்கிறார் மற்றும் இன்னொரு கையில் மண் உருண்டையை கொடுக்கிறார் என்றால் உங்களுடைய ஈர்ப்பு எங்கே செல்லும். வைரத்தில் செல்லுமா, மண்ணின் பக்கம் செல்லுமா? மண்ணோடு விளையாடுவது கூட பிடித்திருக்கிறது தான் இல்லையா! வீணான எண்ணம் இது கூட என்னவாக இருக்கிறது? வைரமா அல்லது மண்ணா? மண்ணோடோ விளையாடுகிறீர்கள் தான் இல்லையா! பழக்கம் ஏற்பட்டிருக்கிறது அதனால் தானோ? மனிதர் கூட என்ன? மண் தான் இல்லையா. மண் மண்ணோடு கலந்து விடுகிறது. முகத்தினாலோ, ஏதாவது விசேஷத்தினாலோ, ஏதாவது குணத்தினாலோ பார்ப்பதற்கு உங்களுக்கு மிக அழகாகத் தென்படும் ஆனால் எனக்கு எந்த பற்றுதலும் இல்லை, அன்பும் இல்லை, ஆனால் இவருடைய இந்த குணம் மிக நன்றாக இருக்கிறது என்று கூறுகிறார்கள். அப்படி குணத்தின் பிரபாவம் கொஞ்சம் ஏற்பட்டு விடுகிறது அல்லது இவரிடம் சேவையின் விசேஷத்தன்மை மிக அதிகமாக இருக்கிறது என்றால் சேவையின் விசேஷத்தின் காரணமாக கொஞ்சம் அன்பு இருக்கிறது என்று கூறுகிறார்கள். வார்த்தையில்

சொல்ல மாட்டார்கள், ஆனால் விசேஷமாக ஏதாவது மனிதரின் பக்கம் அல்லது வைபவத்தின் பக்கம் அடிக்கடி எண்ணமும் செல்கின்றது நடந்தால் மிக நன்றாக இருக்கும்! இதுவும் ஈர்க்கப்படுவது தான். அந்த மனிதருக்கு சேவையின் விசேஷத்தைக் கொடுத்தது யார்? அந்த மனிதரா அல்லது தந்தை அளிக்கிறாரா? யார் கொடுக்கிறார்? அந்த மனிதர் மிக நல்லவர், நல்லவர், அது சரி தான், ஆனால் எப்பொழுது ஏதாவது விசேஷத்தை பார்க்கிறீர்கள், குணத்தை பார்க்கிறீர்கள். சேவையை பார்க்கிறீர்கள் என்றால் வள்ளலை (பாபாவை) மறக்காதீர்கள். இந்த மனிதர் கூட பெறுபவரேயன்றி வள்ளல் அல்ல. தந்தையின் குழந்தையாக ஆகாமல் அந்த மனிதரின் இந்த சேவையின் குணம் அல்லது விசேஷத்தன்மை வர முடியுமா? அல்லது அந்த விசேஷத்தை அஞ்ஞான காலத்திலிருந்தே கொண்டு வந்திருக்கிறாரா? ஈஸ்வரிய சேவையின் விசேஷத்தன்மை அஞ்ஞான காலத்தில் இருக்க முடியாது. ஒருவேளை அஞ்ஞானத்தில் கூட ஏதாவது விசேஷம் அல்லது குணம் இருக்கிறது என்றால் கூட ஞானத்திற்கு வந்த பிறகு அந்த குணத்தில் மற்றும் விசேஷத்தில் ஞானம் நிரப்பப்படவில்லை என்றால் அந்த விசேஷத்தன்மை மற்றும் குணம், ஞான மார்க்கத்திற்கு பிறகு இவ்வளவு சேவை செய்ய முடியாது. இயற்கையான குணத்தில் கூட ஞானத்தை நிரப்பத்தான் வேண்டும். அப்படி ஞானத்தை நிரப்புபவர் யார்? தந்தை. அப்படியானால் யார் கொடுத்த பரிசு ஆனது?. வள்ளல் யார்? அப்படியானால் உங்களுக்கு பெறுபவர் பிடித்திருக்கிறதா அல்லது கொடுப்பவர் வள்ளல் பிடித்திருக்கிறதா? அப்படியானால் பெறுபவரின் பின்னால் ஏன் ஓடுகிறீர்கள்?

தந்தையின் எதிரில் அல்லது தாதிகளின் எதிரில் மிக இனிமையாகக் கூறுகிறார்கள். என்னுடைய பற்று கொஞ்சம் கூட இல்லை, முற்றிலும் இல்லை, சேவை காரணமாக கொஞ்சம் இருக்கிறது என்று கூறுவார்கள். கொஞ்சம் என்று கூறி தன்னை விடுவித்துக் கொள்கிறார்கள் ஆனால் இந்த ஈடுபாடு குணங்களின் மேலானாலும் அல்லது சேவைக்காக இருந்தாலும் இந்த பற்று இன்று இல்லையென்றாலும் நாளை எங்கு கொண்டு செல்லும்? சிலரையோ இந்த பற்று பழைய உலகம் வரை கூட அழைத்துச் செல்கிறது ஆனால் பெரும்பாண்மையோர் பழைய உலகம் வரை செல்வதில்லை. சிலர் செல்கிறார்கள். பெரும்பான்மையோருக்கு இந்த விதமான பற்று முயற்சி செய்வதில் அலட்சியத்தன்மையின்

பக்கம் கொண்டு செல்கிறது. பிறகு இப்படியோ சிறிது அதிகமாகவே இருக்கிறது. பிறகு தந்தைக்கும் புரிய வைக்க முற்படுகிறார்கள். பாபா நீங்களோ சாகாரத்தில் இல்லை, பிரம்மாபாபாவும் அவ்யக்தமாகி விட்டார், மேலும் நீங்களோ பிந்துவாக ஜோதியாக இருக்கிறீர்கள். நாங்களோ சாகாரத்தில் இருக்கிறோம். இவ்வளவு பெரிய ஆரோக்கியமான உடல் இருக்கிறது. மேலும் உடல் மூலம் அனைத்தையும் செய்ய வேண்டும். நடக்க வேண்டும் அப்படி நாங்கள் சாகாரத்தில் இருக்கிறோம் மேலும் நீங்கள் ஆகாரம் மற்றும் நிராகாரமாக இருக்கிறீர்கள். எனவே சாகாரத்தில் யாராவது வேண்டும் அல்லவா! நல்லது. அனேகர் வேண்டும் என்பது இல்லையென்றாலும் ஒருவரோ வேண்டும் இல்லையா! ஒருவர் கூட வேண்டாமா! பாருங்கள் பாப்தாதாவோ ஒருவர் வேண்டும் என்று கூறுகிறார். வேண்டாமா? (ஒரு பாபா வேண்டும்) தந்தையோ இருக்கவே இருக்கிறார் ஆனால் பல தடவை மனதில் பல விஷயம் வந்து விடுகிறது, மற்றும் மனம் பாரமாகி விடுகிறது, எதுவரை மனதை லேசாக்கவில்லையோ அதுவரை யோகாவும் செய்ய முடிவதில்லை. பின்பு என்ன செய்வது? அந்த மாதிரி நேரத்தில் என்ன செய்வது என்பது தந்தையின் கேள்வியாகவும் இருக்கிறது. மனம் பாரமாக இருக்கிறது, மேலும் யோகா செய்ய முடியவில்லை என்றால் என்ன செய்வது? நேர்மாறாகவோ, உள்ளுக்குள்ளேயே பிடிவாதம் பிடிக்கவா? மருத்துவர்கள் என்ன கூறுகிறார்கள்? ஒருவேளை வயிறு பாரமாகி விடுகிறது என்றால் வாந்தி எடுத்து வெளியேற்றி விட வேண்டுமா அல்லது உள்ளேயே வைத்துக் கொள்ள வேண்டுமா? மருத்துவர்கள் என்ன கூறுகிறார்கள்? வாந்தி எடுக்க வேண்டும் தான் இல்லையா. அப்படி வாந்தி எடுக்க வேண்டும் என்று மருத்துவரும் கூறுகிறார். நல்லது.

இதுவோ உடலின் மருத்துவரின் விஷயமானது. மேலும் நீங்கள் அனைவரும் மனதின் மருத்துவராக இருக்கிறீர்கள். உடலின் மருத்துவர் தன்னுடைய பதிலைக் கூறினார். இப்பொழுது ஒருவேளை மனதில் ஏதாவது குழப்பம் இருக்கிறது என்றால் எங்கு வாந்தி எடுப்பது என்று மனதின் மருத்துவர்கள் நீங்கள் கூறுங்கள். பாபாவின் எதிரில் வாந்தி எடுப்பீர்களா (பாபாவின் அறையில் சென்று வாந்தி எடுக்க வேண்டும்). அறையில் சென்று வாந்தி எடுத்து விட்டு வரவா. யோசியுங்கள். தந்தையின் எதிரில் வாந்தி எடுப்பீர்களா? இல்லை என்றால் எங்கு

செல்வீர்கள்? ஏதாவது இடத்தை கூறுங்களேன். அந்த நேரம் யாராவது அவசியம் வேண்டும் என்று பாப்தாதாவோ குழந்தைகள் பக்கம் சார்ந்து கொள்கிறார். தந்தையிடம் கூறலாமா? ஒருவேளை தந்தை கேட்பதே இல்லை என்றால் என்ன செய்வது? நானோ பாபாவிடம் கூறிவிட்டேன், பாபாவோ கேட்கவேயில்லை, பதிலே தரவில்லை என்று அனேக குழந்தைகளின் புகார் இருக்கிறது. பின்பு என்ன செய்வது? உண்மையில் ஒருவேளை உள்ளத்தில் பரமாத்மாவின் அன்பு. பரமாத்மாவின் சக்திகள், பரமாத்மாவின் ஞானம் முழுமையாக இருக்கிறது. சிறிது கூட காலியில்லை என்றால் ஒருபொழுதும் யார் பக்கமும் ஈர்ப்போ அல்லது அன்போ செல்ல முடியாது.

எனக்கு பற்று இல்லை ஆனால் கொஞ்சம் பிடித்து மட்டும் இருக்கிறது என்று சிலர் கூறுகிறார்கள் என்றால் இதை எந்த வரிசையில் எடுத்துக் கொள்ளலாம்? பற்று இல்லை, நன்றாக உள்ளது என்றால் இதை என்னவென்று கூறுவது? பிடித்திருக்கட்டும், நன்றாகவே இருக்கட்டும் என்று இதற்கு அனுமதி கொடுத்து விடலாமா? பற்று இல்லை, அவரோடு அமர்வது, அவருடன் பேசுவது, அவர் மூலமாக சேவை செய்விப்பது என்ற இது பிடித்தமானதாக இருக்கிறது என்றால் இதற்காக அனுமதி கொடுத்து விடலாமா? யார் கொஞ்சம் கொஞ்சம் கொடுக்கத் தான் வேண்டும். என்று புரிந்து உள்ளவர்கள் இப்பொழுது சம்பூர்ணமாக ஆகவில்லை, முயற்சி செய்து கொண்டிருக்கிறோம், கொஞ்சம் அனுமதி கொடுக்கத் தான் வேண்டும் என்பவர்களோ கையை உயர்த்துங்கள். இப்பொழுது கையை உயர்த்த மாட்டீர்கள், ஏனென்றால் வெட்கம் வரும் இல்லையா! ஆனால் ஒருவேளை நீங்கள் கொஞ்சம் அனுமதி இருக்க வேண்டும் என்று புரிந்துள்ளீர்கள் என்றால் தாதியிடம் தனிப்பட்டு கடிதம் எழுதி கொடுத்து விடுங்கள். ஐந்து நிமிடம் பேச வேண்டும் என்று சொன்னால் இதற்கோ இன்னும் நேரம் வேண்டும் என்று அந்த மாதிரி கூறாதீர்கள். கடிதம் எழுதி விட்டீர்கள் என்றால் பாப்தாதா அவர்களின் நல்ல குழுவை கூட்டுவார். இன்னும் நன்றாகி விடும் அல்லவா? இப்பொழுது அனைவரும் வேண்டாம் என்று கூறுகிறார்கள், அனைவரின் வீடியோ எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒருவேளை வேண்டாம் என்று கூறி பின்பு செய்தீர்கள் என்றால் பின்பு நீங்கள் வேண்டாம் என்று கூறினீர்கள், பிறகு ஏன் செய்தீர்கள் என்ற கேசட் அனுப்பி வைக்கப்படும். அனுப்பி வைக்கப்படுமா அல்லது பாதுகாப்பாக

இருப்பீர்களா? உறுதியாகவா அல்லது கொஞ்சம் கொஞ்சம் உறுதியற்ற நிலை, கொஞ்சம் கொஞ்சம் உறுதியான நிலையா?

இந்த சீசன் வைர விழாவை தொடக்குவதாக இருக்கிறது என்றால் இந்த சீசனில் நீங்களோ மாநாடுகள், சொற்பொழிவுகள் மற்றும் மேளாக்களின் அதிக நிகழ்ச்சிகள் செய்திருக்கிறீர்கள், ஆனால் பாப்தாதா விசேஷமாக இந்த வைர விழாவில் ஒரு நிகழ்ச்சியை செய்ய விரும்புகிறார், அதற்கு தயாராக இருக்கிறீர்களா?

இந்த வைரவிழாவில் எந்தக் குழந்தையைப் பார்த்தாலும் இரண்டு வருடக் குழந்தையாக இருந்தாலும், 60-வருடக் குழந்தையாக இருந்தாலும், 2-மாத குழந்தையாக இருந்தாலும், டீச்சரோ, மாணவர்களோ, சமர்ப்பணமானவர்களோ அல்லது இல்லறத்தில் இருப்பவர்களோ அனைவரும் இந்த பவள விழா ஆண்டில் தூய்மை மூலமாக நாங்கள் இயற்கையையும் தூய்மையாக்குவோம் என்ற சவாலை தந்தையுடன் சேர்ந்து நீங்கள் அனைவருமே எடுத்திருக்கிறீர்கள். இது எண்ணம் மட்டும் தானா அல்லது இதை தந்தைதான் செய்ய வேண்டுமா? தந்தைக்கு துணையாக இருக்கிறார்களா? கொஞ்சம் கையை மட்டும் உயர்த்தி விடுகிறார்கள். சாதுர்யமாக செய்கிறார்கள். அந்த மாதிரி செய்யாதீர்கள். ஆக முழு உலகத்தில் ஒவ்வொரு குழந்தையும் பற்றுதலிலிருந்து விடுபட்டவர் ஆகட்டும். என்று பாப்தாதா விரும்புகின்றார் சாதனங்களின் மேலும் மனிதர்கள் மேலுள்ள பற்றுதலிலிருந்து விடுபட்டவர் ஆகட்டும். சாதனங்களிடத்திலும் பற்றுதல் வேண்டாம். உபயோகப்படுத்துவது என்பது வேறு விஷயம் ஆகும். மற்றும் பற்றுதல் என்பது வேறு விஷயம் ஆகும். ஆக பாப்தாதா பற்றுதலிலிருந்து விடுபட்ட ஆண்டாக கொண்டாட விரும்புகிறார். இந்த நிகழ்ச்சியை செய்ய விரும்புகிறார். இந்த நிகழ்ச்சியில் நீங்கள் அனைவரும் துணையாக இருப்பீர்களா? இந்தக் காரணமாகி விட்டது என்று பின்போ கூறமாட்டீர்களே! என்ன காரணமாக இருந்தாலும், இமயமலை கூட வந்து விழுந்தாலும் நீங்கள் அந்த இமயமலையை விட்டும் கூட விலகி வந்து விடுங்கள். இவ்வளவு தைரியம் இருக்கிறதா? முதலில் டீச்சர்கள் சொல்லுங்கள். நம்முடைய டீச்சர்களுக்கு பாப்தாதா கூறுகிறார் என்று மாணவர்கள் குஷியடைகிறார்கள். மேலும் டீச்சர்களோ சகயோகத்திற்காக

எப்பொழுதுமே உதவி செய்பவர்களாக இருக்கவே இருக்கிறார்கள். ஏனென்றால் வரும் நாட்களில் இன்றைய உலகத்தில் யார் தன்னைத் தானே தர்ம ஆத்மா, மகான் ஆத்மா என்று கூறிக் கொள்கிறார்கள், அவர்களுடைய தூய்மையின் அஸ்திவாரம் கூட ஆட்டம் காணும். மேலும் அந்த மாதிரி நேரத்தில் தொடக்கத்தில் எப்பொழுது பிரம்மாபாபா நிமித்தமானவராக ஆனார் என்றால் நிந்தனை எக்காரணத்திற்கான விஷயமாக இருந்தது? தூய்மையின் காரணம் தான் இல்லையா. இல்லை என்றால் வயதில் பெரியவர்கள் ஒருவருக்குக் கூட பிரம்மாபாபாவுடைய கடந்த கால வாழ்க்கையில் ஏதாவது தவறை சுட்டிக் காண்பிப்பதற்கு தைரியம் இருந்ததில்லை. அந்த மாதிரி பெர்சனாலிட்டி (தனித்தன்மை) உடையவராக இருந்தார் ஆனால் தூய்மையின் காரணமாக அனைவரிடமிருந்தும் வசை பெற வேண்டியதாக இருந்தது. மேலும் இந்த பரமாத்மா ஞானத்தின் புதுமையே தூய்மை தான். நெருப்பும் பஞ்சும் சேர்ந்திருந்தாலும் உடனே நெருப்பு பிடிக்க முடியாது என்று கூறுகிறீர்கள் இல்லையா? இது ஒரு சவால் தான் இல்லையா? யார் தம்பதிகளாக இருக்கிறீர்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். உங்கள் அனைத்து தம்பதியர்களுக்கும் இது சவாலா அல்லது கொஞ்சம் கொஞ்சம் நெருப்பு பிடிக்கும், பின்பு அணைத்து விடுவீர்களா? உலகத்திற்கே சவால் தான் இல்லையா? முழு உலகத்திலுமே தூய்மையின்றி யோகம் நிறைந்த ஆத்மாவாக, ஞான சொரூப ஆத்மாவாக ஆகவே முடியாது என்று சொற்பொழிவில் நீங்கள் முழு உலகத்திற்கும் கூறுகிறீர்கள் இல்லையா? இது உங்கள் அனைவரின் சவால் தான் இல்லையா? எந்த தம்பதியினர் இது என்னுடைய சவால் என்று நினைக்கிறீர்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். நல்லது. ஒரே குரூப்பில் இருவர் சேர்ந்து வந்திருப்பது அதிகமாக இருக்கிறார்கள். அப்படியானால் வைர விழாவில் என்ன செய்வீர்கள்? பற்றுதலிலிருந்து விடுபட்டவர். கோபத்திலிருந்து விடுபட்டவராக ஆகி விட்டீர்கள் அல்லவா? கொஞ்சம் கொஞ்சம் கோபத்தை அனேகரிடம் பாப்தாதாவும் பார்த்தார் ஆனால் இந்த தடவை அந்த கொஞ்சத்தையும் விட்டு விட்டார்கள். இருந்தாலும் வெளிநாட்டிலும், பாரதத்திலும் யார் கவனம் வைத்து சம்பூர்ண ரூபத்தில் கோபத்திலிருந்து விடுபட்ட வாழ்க்கையை நடைமுறையில் அனுபவம் செய்தார்கள், செய்து காண்பித்தார்கள், அவர்கள் அனைவருக்கும் பாப்தாதா பலகோடி மடங்கையும் விட அதிகமாக

வாழ்த்துக்கள் கொடுக்கிறார். ஏனென்றால் வெளி நாட்டினருக்கும், பாரத தேசத்தினருக்கும் இந்த நேரம் அனைவரின் புத்தி என்ற தொலைபேசி இங்கு மதுபன்னில் இணைக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது அனைவரின் கனெக்ஷன் (இணைப்பு) மதுபன்னில் இருக்கிறது. யார் நல்ல விதத்தில் உறுதியான எண்ணம் செய்தார்களோ அவர்களுக்கு பாப்தாதாவிடமிருந்து விசேஷமாக அதிகப்படியான உதவியும் கிடைத்தது என்ற இதை அனைவரும் அனுபவம் செய்திருந்திருப்பீர்கள். ஒரு வருடமோ கோபத்தை அழித்து விட்டோம் இப்பொழுதோ எப்படி வேண்டுமென்றாலும் இருக்கலாம் என்று அப்படி நினைக்காதீர்கள். ஒருவேளை முழுமையாக பற்றுதலிலிருந்து விடுபட்டதை அனுபவம் செய்தீர்கள் என்றால் தானாகவே கோபத்திலிருந்து விடுபட்டவராகவும் ஆகி விடுவீர்கள். கோபமும் ஏன் வருகிறது? எந்த விஷயத்தை எந்த பொருளை நீங்கள் விரும்புகிறீர்களோ மேலும் அது நிறைவேறவில்லை அல்லது கிடைக்கவில்லை என்றால் கோபம் வருகிறது அல்லவா? உங்களுடைய எண்ணம் அது சரியானதாக இருந்தாலும் அல்லது தவறானதாக இருந்தாலும் எப்பொழுது நிறைவேறவில்லையோ அப்பொழுது கோபம் வருகிறது. உதாரணமாக மாநாடு நடக்கிறது, நிகழ்ச்சி நடக்கிறது அதில் என்னுடைய பங்கும் வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள். எங்களுக்கும் எப்பொழுது வாய்ப்பு கிடைக்கும்? உங்களுடைய விருப்பம் இருக்கிறது மேலும் நீங்கள் சமிக்ஞையும் செய்கிறீர்கள் ஆனால் உங்களுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை என்றால் அந்த நேரம் சிடுசிடுப்பு வருகிறதா அல்லது வருவதில்லையா? மிகப் பெரிய கோபம் வராவிட்டாலும் ஆனால் யார் வேண்டாம் என்று கூறினாரோ அவரைப் பற்றி வீணான எண்ணமும் வரும் இல்லையா? அப்படியானால் இது தூய்மையா இல்லை தானே. தன்னைத் தானே சேவைக்கு ஆஃபர் செய்வது, கருத்துக்கள் கூறுவது, இதைப் பொறுத்தளவில் முழு சுதந்திரம் இருக்கிறது ஆனால் கருத்துக்கு பின்னால் அந்தக் கருத்தை ஆசையின் ரூபத்தில் மாற்றம் செய்யாதீர்கள். எப்பொழுது எண்ணம் ஆசையின் ரூபத்தில் மாறுகிறதோ அப்பொழுது சிடுசிடுப்பும் வருகிறது, வாய் மூலம் கோபமும் ஏற்படுகிறது மற்றும் கைகளும் நீளுகிறது. கைகள் நீளுவது இது மிகப் பெரிய கோபம் ஆகும் ஆனால் சுயநலம் இல்லாதவராகி கருத்தை கொடுங்கள். நான் கூறினேன் என்றால் நடக்க வேண்டும் என்று சுயநலம் வைத்து செய்யாதீர்கள். ஆஃபர் செய்யுங்கள்,

அதிலொன்றும் தவறில்லை ஆனால் ஏன், என்ன என்பதில் செல்லாதீர்கள். இல்லையென்றால் பொறாமை, வெறுப்பு இந்த ஒவ்வொரு கூட்டாளிகளும் வருகிறார்கள் எனவே ஒருவேளை தூய்மையின் நியமத்தை உறுதியாக்கினீர்கள். பற்றுதலிலிருந்து விடுபட்டவர் ஆகி விட்டீர்கள் என்றால் நான் சொன்னது நடக்கத் தான் வேண்டும் என்ற இந்தப் பற்றுதலும் வைக்கக் கூடாது. நடக்கத் தான் வேண்டும் என்று அப்படியும் இருக்கக் கூடாது. ஆ்ஃபர் செய்தீர்கள் இது சரி தான். உங்களுடைய சுயநலமற்ற ஆ்ஃபர் வெகுவிரைவில் சென்றடையும். சுயநலம் மற்றும் பொறாமையின் வசமாகி செய்யப்படும் ஆ்ஃபர் இன்னும் கோபத்தை உருவாக்கும். அப்படியானால் டீச்சர்கள் என்ன செய்வீர்கள். 100-சதவிகிதம் பற்றுதலிலிருந்து விடுபட்டவராக ஆவீர்களா? ஆம் அல்லது இல்லை என்று கூறுங்கள். வெளிநாட்டினர் சரி என்று கூறுங்கள். நல்லது.

**வரதானம்: எப்பொழுதும் பாபாவை உடனிருப்பவராக நினைத்து துணையின் அனுபவம் செய்யக்கூடிய இணைந்த குபமுடையவர் ஆகுக.**

எப்பொழுதெல்லாம் குழந்தைகள் அன்போடு தந்தையை நினைவு செய்கிறார்கள் என்றால் அருகாமையின் மற்றும் துணையின் அனுபவம் செய்கிறார்கள். உள்ளப்பூர்வமாக பாபா என்று கூறினார்கள். என்றால் உள்ளத்தை கொள்ளை கொண்டவர் வந்து விடுகிறார். எனவே தான் ஹஜூர், ஹாஜிர் (இறைவன் எதிரில் இருக்கிறார்) என்று கூறுகிறார்கள். ஹாஜிரா ஹாஜுர் (எப்பொழுதும் உடன் இருப்பவர்) அன்பின் விதியினால் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொருவரிடமும் பாபா ஆஜராகி விடுகிறார், அனுபவம் செய்தவர்கள் தான் இந்த அனுபவத்தை தெரிந்திருக்கிறார்கள். செய்பவர் செய்விப்பவர் என்ற மகிமை இருக்கிறது என்றால் செய்பவர் மற்றும் செய்விப்பவர் இணைந்து விட்டார். அந்த மாதிரி இணைந்த ரூபமுடையவர்கள் எப்பொழுதும் தந்தையின் துணையை அனுபவம் செய்கிறார்கள்.

**சுலோகன்: மனதை எப்பொழுதும் ஆன்மீக மகிழ்ச்சியில் வைப்பது இது தான் வாழ்க்கை வாழ்வதற்கான கலை ஆகும்!**

❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋
❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋

# 16.11.1995-2 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# கனவளவில் கூட பற்றுதலிலிருந்து விடுபட்டவர் ஆகுங்கள்!

பாப்தாதாவிற்கோ தன்னுடைய டி.வி.யில் அதிக புதுப்புது விஷயங்கள் தென்படுகின்றன. இப்பொழுது 60-வருடங்கள் நிறைவேறுகிறது என்றால் இதுவரை நடக்காத விஷயங்கள், அந்த புதுப்புது காட்சிகளும் அதிகமாகத் தென்படுகின்றன. இந்த சீசனில் அவற்றை ஒவ்வொன்றாக வர்ணனை செய்வோம் ஆனால் ஒருவேளை யார் மேலேயாவது கனவளவிலும் கூட பற்றுதல் இருக்கிறது அல்லது சுயநலம் இருக்கிறது என்றால் அதை அழித்து விட வேண்டும் என்பதை நினைவு வைத்துக் கொள்ளுங்கள். நாங்கள் செயலில் வருவதில்லை ஆனால் கனவு வருகிறது என்று அனேகர்கள் கூறுகிறார்கள் ஆனால் ஒருவேளை ஏதாவது வீணான மற்றும் விகார கனவு, பற்றுதலின் கனவு வருகிறது என்றால் நீங்கள் அவசியம் தூங்கும் நேரத்தில் அலட்சியத்தோடு தூங்கியிருந்திருக்கிறீர்கள். முழு நாளில் எனக்கு அந்த மாதிரி ஒரு எண்ணம் கூட வரவில்லை, எதுவும் நடக்கவில்லை இருந்தும் கனவு வந்து விட்டது என்று அனேகர் கூறுகிறார்கள். தூங்கச் செல்லும் நேரம் பாப்தாதாவிற்கு முழு நாளின் கணக்கை ஒப்படைத்து புத்தியை காலி செய்த பிறகு தூங்கச் சென்றீர்களா என்று சோதனை செய்யுங்கள். களைப்படைந்து வந்தோம் பின்பு படுக்கையில் சென்றோம். அப்படியே தூங்கி விட்டோம் என்று அப்படி இருக்க வேண்டாம். இது அலட்சியம் ஆகும். பாவம் செய்யவில்லை மற்றும் எண்ணத்திலும் அது வரவில்லை என்றாலும் கூட இது அலட்சியத்தின் தண்டனை ஆகும். ஏனென்றால் தூங்கச் செல்லும் நேரம் எப்பொழுதும் தன்னுடைய புத்தியை காலி ஆக்க வேண்டும், நல்ல விஷயமாக இருந்தாலும் தீய விஷயமாக இருந்தாலும் அனைத்தையும் தந்தையிடம் ஒப்படைத்து விட்டு தன்னுடைய புத்தியை காலியாக்குங்கள் என்பது தான் தந்தையின் கட்டளை ஆகும். தந்தையிடம் கொடுத்த விட்ட பிறகு தனியாக தூங்காமல் தந்தையுடன் தூங்கி விடுங்கள். தனியாக

தூங்குகிறீர்கள் இல்லையா? அப்பொழுதுதான் கனவு வருகிறது. ஒருவேளை தந்தையுடன் தூங்கினீர்கள் என்றால் ஒருபொழுதும் அந்த மாதிரி கனவு வர முடியாது ஆனால் கட்டளைப்படி நடக்கவில்லை என்றால் கட்டளைக்குப் பதிலாக முறையீடு கிடைக்கிறது. காலை எழுந்தவுடன் என்னுடைய தூய்மை கனவில் அழிந்து விட்டது என்று உள்ளத்தில் முறையீடு (வேண்டுதல்) நிறைந்த உணர்வுகள் வருகிறது இல்லையா? இது எவ்வளவு பெரிய முறையீடு. காரணம் அலட்சியமாகும். எனவே அலட்சியமானவராக ஆகாதீர்கள். வந்தவுடன் இங்கு அங்கு உள்ள விஷயங்களைப் பேசிக் கொண்டே தூங்கி விடுகிறீர்கள் என்றால் உலகத்தில் செய்திகளோ அதிகமாக இருக்கின்றன மேலும் மனம் விரும்பும் செய்திகளோ வீணானவைகளாகத் தான் இருக்கும். வேறு நேரமே கிடைப்பதில்லை எப்பொழுது ஒரே அறையில் சேர்ந்து இருக்கிறோமோ அப்பொழுது ஒருவருக்கொருவர் விஷயங்களை பரிமாறிக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது என்று கூறுகிறார்கள் ஆனால் ஒருபொழுதும் வீணான விஷயங்களை வர்ணனை செய்து கொண்டே தூங்கச் செல்லக் கூடாது. இது அலட்சியம் ஆகும். இது கட்டளையை மீறி நடப்பதாகும். ஒருவேளை வேறு நேரம் கிடைக்கவில்லை மற்றும் அவசியமான விஷயமாக இருக்கிறது என்றால் தூங்கும் அறையில் பேசாமல், அந்த அறைக்கு வெளியே ஒரு விநாடியில் ஒருவர் இன்னொருவருக்குக் கூறுங்கள் ஆனால் தூங்கிக் கொண்டே இப்படி பேசாதீர்கள். அனேக குழந்தைகளுக்கோ பழக்கமாகவே இருக்கிறது. பாப்தாதாவோ எப்படி தூங்குகிறார்கள் என்று அனைவரையும் பார்க்கிறார் இல்லையா? ஒரு விநாடியில் பாப்தாதா முழு உலகத்தையும் சுற்றி வந்து விடுகிறார். மேலும் டிவி மூலமாக எப்படி தூங்குகிறார்கள். எப்படி பேசிக் கொண்டிருக்கிறார்கள். .. அனைத்தையும் பாப்தாதா பார்க்கிறார். இதற்கு பாப்தாதாவிற்கோ அதிகமான நேரம் எடுப்பதில்லை. ஒரு விநாடி தான் ஆகிறது. ஒவ்வொரு சென்டரையும் ஒவ்வொரு குடும்பத்தில் இருப்பவரையும் சுற்றி வந்து பார்க்கிறோம். சென்டரில் நடப்பது மட்டுமின்றி உங்களுடைய வீடுகளில் நடப்பதும் டி.வி.யில் வருகிறது. அப்படி எப்பொழுது தொடக்கம் அதாவது அமிர்தவேளை மற்றும் முடிவு அதாவது தூங்கச் செல்லும் நேரம் நன்றாக இருக்கிறது என்றால் இடைப்பட்ட காலம் தானாகவே சரியாக இருக்கும். புரிந்ததா? பேசிக் கொண்டே சிலருக்கு 12, 12:30-மணி வரை ஆகி விடுகிறது. பேச்சில்

அவ்வளவு ஆர்வமாக ஈடுபட்டு விடுகிறார்கள். அவர்களுக்கு நேரம் செல்வதே தெரிவதில்லை. பிறகு அமிர்தவேளை எழுந்து அமர்கிறார்கள் என்றால் பாதி நேரம் தூக்கத்தில் மற்றும் பாதி நேரம் யோகாவில் இருக்கிறார்கள். ஏனென்றால் அலட்சியமானவராகி தூங்கினார்கள் என்றால் அமிர்தவேளையும் அலட்சியமானதாகத்தானே இருக்கும். நம்மையோ யாரும் பார்க்கவில்லை என்று அப்படி நினைக்காதீர்கள். பாப்தாதா பார்க்கிறார். இந்த தூக்கமும் கூட மிகுந்த அமைதி மற்றும் சுகத்தைக் கொடுக்கிறது. எனவே கலப்படம் ஆகி விடுகிறது. ஒருவேளை நீங்கள் தூங்கினீர்களா என்று கேட்டால் இல்லையில்லை நான் மிகுந்த அமைதியை அனுபவம் செய்து கொண்டிருந்தேன் என்று சொல்வார்கள். பாருங்கள். தூக்கத்தையும் ஓய்வு என்று கூறப்படுகிறது. ஒருவேளை யாராவது நோயுற்று இருக்கிறார் என்றால் ஓய்வு எடுங்கள் என்று டாக்டர்கள் கூறுவார்கள். எப்படி ஓய்வு எடுப்பது? நேரத்தில் தூங்குங்கள். அப்படி தூக்கமும் ஓய்வு தருவதாகும். புத்துணர்வோ அடையச் செய்கிறது தான் இல்லையா. அப்படி தூக்கத்தினால் புத்துணர்வு பெற்று அமர்கிறார்கள் என்றால் இன்று (யோகாவில்) மிகவும் புத்துணர்வு பெற்று விட்டேன் என்று கூறுகிறார்கள்? நல்லது!

அனைவரும் வெகு தூரத்திலிருந்து வந்திருக்கிறார்கள். இந்த குரூப்பில் யார் முதல் தடவையாக வந்திருக்கிறார்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். சிறு குழந்தைகளாக இருப்பவர்கள் பெரியவர்களை விட அன்பிற்குரியவர்களாக இருப்பார்கள் ஆனால் புதியவர்கள் யார் வந்திருக்கிறார்களோ அவர்கள் இடைவெளியை நிரப்ப வேண்டும். பெரியவர்கள் பத்து வருடத்தில் என்ன செய்திருக்கிறார்களோ அதை நீங்கள் பத்து நாட்களில் செய்ய வேண்டும். செய்ய முடியும்! ஏனென்றால், புதியவர்களாக இருப்பவர்களிடம் மிக அதிகமான ஊக்கம் உற்சாகம் இருக்கிறது என்று பாப்தாதா நினைக்கிறார். மேலும் எவ்வளவு பழையவர்களாக ஆகிறார்கள் என்றால் அந்த அளவு அனைத்தையும் புரிந்து கொண்டேன். நான் பழையவன் என்று நினைக்கிறார்கள். எனவே கூறுவதற்கு என்ன அவசியம் என்றும் நினைக்கிறார்கள். புதியவர்கள் குமாரிகள், குமாரர்கள், இல்லறத்தில் இருப்பவர்கள் அப்படி யாராக இருந்தாலும், இல்லறத்தில் இருப்பவர்கள் இந்த அனைத்து மகாத்மாக்களை தனது காலடிகளில் விழ வைக்க

வேண்டும். இவர்கள் இல்லறத்தில் இருந்து கொண்டும் தடையற்று தூய்மையின் பலத்தினால் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள் என்று அனைவரும் உங்களுடைய குணத்தை மகிமை செய்யட்டும் உங்கள் அனைவரின் எதிரில் இந்த உலகிலுள்ள மகாத்மாக்கள் ஒரு நாள் தலைவணங்குவார்கள் ஆனால் தன்னுடைய உறுதிமொழியான பற்றுதலிலிருந்து விடுபட்டு இருக்க வேண்டும் என்பதை நினைவு வைத்துக் கொள்ளுங்கள். நல்லது!

**டீச்சர்களுடன்:** டீச்சர்களோ ஒவ்வொரு விஷயத்திற்கும் பொறுப்பானவர்கள். பொறுப்பானவர்கள் தான் இல்லையா?. இந்த விஷயம் உறுதியாக இருக்கிறது இல்லையா? டீச்சர்களின் அர்த்தமே பொறுப்பில் இருப்பவர். அப்படி இந்த வருடமும் பற்றுதலிலிருந்து விடுபடுவதில் டீச்சர்கள் நம்பர் ஒன்னில் வருவதில் பொறுப்பு உடையவர்களாக ஆக வேண்டும். சரி தான் இல்லையா? உறுதியாகவா? அனைவரும் கைத்தட்டுங்கள். பாப்தாதாவும் டீச்சர்கள் உங்களுக்காக விசேஷமாக கைத்தட்ட வைக்கிறார். நல்லது!

**குமாரிகளுடன்:** குமாரிகள் கையை உயர்த்துங்கள். குமாரிகள் என்ன செய்வீர்கள்? குமாரிகள் தனக்குத் தானே நண்பனாகி தன்னுடைய வாழ்க்கையை பந்தனமற்றதாகஆக்குவதில் நம்பர் ஒன் ஆகவேண்டும். இந்த குமாரிகளின் ஒட்டு மொத்த பட்டியலை உருவாக்குங்கள். பின்பு இவர்களில் உண்மையிலேயே எத்தனை பேர் பந்தனமற்றவர்களாக ஆகிறார்கள் என்பதைப் பார்க்கலாம். குமாரிகளில் ஒருவேளை யாராவது நான் பந்தனமற்றவராகி சேவைக்கு பொறுப்பாளர் ஆவேன் என்று நினைக்கிறாரோ அவர் கையை உயர்த்தட்டும். அவர்களுக்கு பயிற்சி வகுப்புக்கள் (ட்ரெய்னிங்) வைக்கப்படும். இப்பொழுதோ ஞான சரோவரிலும் வகுப்புக்கள் நடக்கிறது. அப்படி குமாரிகள் என்ன ஆவீர்கள்? பந்தனமற்றவர்களாக. மனதின் பந்தனமும் வேண்டாம், சம்மந்தத்தின் பந்தனமும் வேண்டாம். அப்படி இரட்டை பந்தன்முக்த் ஆக. வேண்டும். நல்லது!

**குமாரர்களுடன்:** குமாரர்கள் கையை உயர்த்துங்கள். குமாரர்களோ மிக அதிகமாக இருக்கிறார்கள். அப்படி குமாரர்கள் என்ன விசேஷத்தைக் காண்பிப்பீர்கள்? குமாரர்கள் தன்னை அந்த மாதிரி தயார் செய்து

கொள்ள வேண்டும், அவர்களுடைய ஸ்தானத்தில் இருந்தாலும் எங்கிருந்தாலும் அவர்கள் தங்களுடைய 400-500 பெயர் அடங்கிய குரூப்பை உருவாக்கி, இவ்வளவு இளைஞர்கள் உலக சேவைக்காக மற்றும் பாரதத்தின் சேவைக்காக அழிவு காரியம் செய்யாமல் உருவாக்கும் காரியம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பாருங்கள் என்று அரசாங்கத்தில் உயர்ந்த பதவியில் இருப்பவர்களை சந்தித்து காண்பிக்க வேண்டும். அந்த மாதிரியான குரூப்பை தயார் செய்யுங்கள். அப்படியானால் எவ்வளவு காலத்தில் தன்னை தயார் செய்து விடுவீர்கள்? ஏனென்றால் அரசாங்கம் இளைஞர்களை முன்னுக்கு வைக்க விரும்புகிறது ஆனால் அவர்களுக்கு அந்த மாதிரி இளைஞர்கள் கிடைப்பதில்லை ஆனால் தந்தையிடமோ இருக்கிறார்கள் இல்லையா? அப்படி ஆல்மைட்டி (அனைத்து சக்திகள் நிறைந்தவரின்) அரசாங்கம் இந்த குழப்பத்திலிருக்கும் அரசாங்கத்தின் எதிரில் ஒரு நடைமுறை உதாரணத்தை காண்பிக்க முடியும் ஆனால் உறுதியற்றவராக இருக்கக்கூடாது. நீங்கள் கூறுகிறீர்கள் நாங்களோ மிக நன்றாக இருக்கிறோம் என்று. மேலும் உங்களுடன் இருப்பவர்கள் அப்படியில்லை இவரோ வெறும் வாயளவில் தான் கூறுகிறார் என்று அப்படி இருக்க வேண்டாம். தூய்மை விஷயத்தில் பிரச்சனையை உருவாக்குகிறார்கள், அது வேறு விஷயம், ஆனால் தெய்வீக குணங்களின் தாரணையில் வீட்டில் இருப்பவர்களின் மேல் உங்களுடைய பாதிப்பு ஏற்பட வேண்டும். புரிந்ததா. உங்களில் யார் வைர விழா வரை நான் தயாராகி விடுவேன் என்று நினைக்கிறீர்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். இப்பொழுது கொஞ்சம் குறைந்து விட்டார்கள். நல்லது! டீச்சர்கள் இந்த வைர விழா ஆண்டின் இடையில், இறுதியில் அல்ல, அரசாங்கத்திற்கு இந்த இளைஞர்களை காண்பித்தோம் என்ற ரிப்போர்ட் அனுப்ப வேண்டும். இப்பொழுதோ இன்னும் 8-மாதங்கள் இருக்கின்றன. அப்படி 8-மாதங்களுக்குள் செய்ய வேண்டும். சரிதான் இல்லையா?

அதர்குமாரர்கள் மற்றும் அதர்குமாரிகளுடன்: அதர்குமாரர்கள், குமாரிகள் என்ன செய்வீர்கள்? இல்லறத்தில் இருப்பவர்களுக்கு ஒரு புதிய நிரூபணம் கொடுக்க வேண்டும். வீட்டில் யார் யார் இருக்கிறார்களோ, உங்களுடைய குடும்பத்தில், சிலருக்கு நான்கு குழந்தைகள் இருக்கிறார்கள், சிலருக்கு 8-குழந்தைகள், சிலருக்கு

2-குழந்தைகள் இருக்கிறார்கள் அப்படி எத்தனை இருந்தாலும் ஒவ்வொரு இல்லறத்தில் இருப்பவர்கள் தன்னுடைய குழந்தைகளுக்கு அந்த மாதிரி பண்புகளை கற்றுக் கொடுத்து தயார் செய்ய வேண்டும். அந்த மாதிரி தாரணை செய்யும் குரூப் மற்றவர்களுக்கு ஒரு உதாரணமாக இருக்கட்டும். கல்லூரி மற்றும் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கிறார்கள் அவர்களின் எதிரில் அந்தக் குழந்தைகளை காண்பிக்க வேண்டும். இல்லறத்தில் இருப்பவர்களுக்கு தன்னுடைய குழந்தைகளின் குரூப்பை தயார் செய்ய வேண்டும். இவர்களைப் பற்றி யாரிடம் கேட்டாலும் அது அவர்களுடைய டீச்சர்கள் ஆனாலும் அல்லது அவருடைய தெருவில் இருக்கும் நண்பர்களானாலும் அனைவரும் இவரைப் பற்றி நல்ல ரிப்போர்ட் தர வேண்டும். நீங்கள் மிக நல்ல குழந்தைகள் என்று கூறுகிறீர்கள் ஆனால் இவருடைய டீச்சர் இவர் படிப்பதே இல்லை என்று கூறுகிறார் என்று அப்படி இருக்கக் கூடாது. அப்படி இல்லறத்தில் இருப்பவர்களுக்கு அந்த மாதிரி குழந்தைகளை தயார் செய்ய வேண்டும். ஞானத்தில் வருகிறார்கள். நல்லவர்களும் இருக்கிறார்கள் ஆனால் அவர்களுக்கு கொஞ்சம் இன்னும் கவனம் கொடுத்து அந்த மாதிரி குரூப்பை தயார் செய்யுங்கள். அப்படி படிப்பின் சான்றிதழ்களாக அந்தக் குழந்தைகள் ஆகி விடுவார்கள். இல்லையென்றால் நீங்கள் சான்றிதழ் கொடுக்க முடியாது என்று கல்வித்துறையில் இருப்பவர்கள் கூறுகிறார்கள் இல்லையா? அப்பொழுது நடத்தையை பார்க்க வேண்டுமா அல்லது சான்றிதழைப் பார்க்க வேண்டுமா என்று நீங்கள் கூறுங்கள். நீங்கள் காகிதத்தின் சான்றிதழைக் கொடுக்கிறீர்கள், நாங்கள் உங்களுக்கு சைத்தன்யமான சான்றிதழை காண்பிக்கிறோம். புரிந்ததா?

அப்படியே ஒரு சிறப்பும் இல்லாமல் வைர விழாவைக் கொண்டாடாதீர்கள். வைர விழாவில் கொஞ்சம் புதுமையைக் காண்பிக்க வேண்டும். அதைப் பார்த்து இது என்னஎன்று அரசாங்கத்தின் கண்கள் திறக்க வேண்டும். எந்தக் காரியத்திலும் அவர்கள் முடியாது என்று சொல்ல முடியாத அளவிற்கு இருக்க வேண்டும். அவர்களுக்கு இன்னும் வாய்ப்புகள் கொடுக்க வேண்டும். எப்படி மகாமண்டலேஸ்வர் எப்பொழுது இங்கு வந்தாரோ அவர் என்ன மனமுவந்து சொன்னார்? எங்களுடைய ஆசிரமத்தை பிரம்மா குமார் மற்றும் குமாரிகள் நடத்தட்டும் என்று தான். அந்த மாதிரி கேட்டார் தான் இல்லையா?

அனைத்து இலாக்காக்களும் எங்களுடைய இலாக்காவில் நீங்கள் மட்டும் தான் காரியம் அதே போல் செய்ய முடியும் என்று அவர்கள் மனமுவந்து கூறட்டும். அந்த மாதிரி நடைமுறை சொரூபம் செய்ய வேண்டும் இது தான் வைர விழா ஆகும் ஆனால் முதல் உறுதிமொழி நினைவிருக்கிறதா? என்னவாக ஆக வேண்டும்? (பற்றுதலிலிருந்து விடுபட்டவராக) அப்பொழுது தான் இவை அனைத்தும் நடக்க முடியும், இன்று வரை குழந்தைகளை அடித்துக் கொண்டே இருந்தீர்கள் என்றால் குழந்தைகள் எப்பொழுது நல்லவர்களாக ஆவார்கள். மேலும் உங்களுக்குள் பலஹீனமானவர்களாக ஆகிக் கொண்டே இருப்பீர்கள் என்றால் மகாத்மாக்கள் எப்படி உங்கள் காலடியில் விழுவார்கள். எவ்வளவிற்கு எவ்வளவு தூய்மையின் தூணை உறுதியாக்கினீர்கள் என்றால் அந்த அளவு இந்த தூய்மையின் தூண் லைட் ஹவுஸின் காரியம் செய்யும். நல்லது!

இரட்டை வெளிநாட்டினருடன்: இரட்டை வெளிநாட்டினர் மேல் பாப்தாதாவிற்கு அதிலும் கூட விசேஷமாக பிரம்மாபாபாவிற்கு இரட்டை அன்பு இருக்கிறது. ஏன் இரட்டை அன்பு இருக்கிறது? சொல்லுங்கள். பாப்தாதாவிற்கு இரட்டை அன்பு இருக்கிறது என்று நினைக்கிறீர்களா? (லௌகீக மற்றும் அலௌகீக இரண்டு காரியங்கள் செய்கிறார்கள்) நல்ல பதில் கொடுத்தீர்கள் ஆனால் வேறு காரணமும் இருக்கிறது. பிரம்மாபாபாவிற்கு இரட்டை வெளிநாட்டினர் மேல் விசேஷ அன்பு இதன் காரணமாகத் தான் இருக்கிறது. பிரம்மாபாபா ஒவ்வொரு காரியமும் துரிதமாக செய்வதில் அவரே உதாரணமாகவும் இருந்தார் மற்றும் குழந்தைகளையும் அந்த மாதிரி ஆக்கினார். வெளிநாட்டினர் வருகிறார்கள். ஏழு நாள் பாடம் எடுத்தார்கள், கொஞ்சம் உறுதியானார்கள் மற்றும் சென்டர் திறந்து விடுகிறார்கள். அந்த மாதிரி செய்கிறீர்கள் தான் இல்லையா? இவர்களுக்கோ (டீச்சர்களுக்கு) மிகுந்த டிரெய்னிங் கொடுக்கப்படுகிறது ஆனால் இரட்டை வெளிநாட்டினர் சேவையில் துரிதமான உதாரணமாகி விடுகிறார்கள். பிரம்மாபாபா அந்த மாதிரி குழந்தைகளை வெகுகாலமாக ஆவஹானம் (அழைத்து) செய்து கொண்டிருந்தார். அப்படி இரட்டை வெளிநாட்டினர் சேவையில் அதிக நேரம் எடுத்துக் கொள்வதில்லை. விரைவில் முடித்து விடுகிறார்கள். எவ்வளவு தான் பிஸியாக இருந்த போதிலும் சேவையின் ஆர்வம் மிக நன்றாக இருக்கிறது. இப்பொழுது கூட

மியூசியம் உருவாக்குவதற்காக வந்திருக்கிறார்கள் (ஞான சரோவரில் ஐந்து இரட்டை வெளிநாட்டு சகோதர சகோதரிகள் மியூசியத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்). இரட்டை வெளிநாட்டினருக்கு சிறப்புக்கள் இருக்கின்றன. அதனால் தான் வெளிநாட்டிலிருந்து முக்கியமாக உங்களை அழைத்திருக்கிறார்கள். சிறப்புக்கள் இருக்கிறது இல்லையா? இந்த முழு குரூப்பும் நல்ல குருப் ஆகும். அப்படி விசேஷ ஆத்மாக்கள் ஆகி விட்டீர்கள் இல்லையா? விசேஷ காரியத்திற்காக நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்றால் விசேஷ ஆத்மாவாக ஆகி விட்டீர்கள் இல்லையா? மற்றபடி பாப்தாதாவிற்கோ மிகவும் பிடித்தமானவர்களாக இருக்கவே இருக்கிறீர்கள். சிலபாபாவிற்கும் பிடித்தமானவர்களாக இருக்கிறீர்கள் என்றால் முழு பிராமண குடும்பத்திற்குமே பிடித்தமானவர்களாக இருக்கிறீர்கள். உங்களைப் பார்க்கிறார்கள் இல்லையா? அதனால் இங்கே உள்ள பாரதவாசிகளுக்கும், பாருங்கள் நம்முடைய சேவைபாரதத்தில் மட்டும் இல்லை, உலகம் முழுவதும் இருக்கிறது என்று போதை ஏறுகிறது. அதனால் தான் காணாமல் போய் கண்டெடுக்கப்பட்டவர்கள் இல்லையா? நல்லது!

**மியூசியம் உருவாக்கிக்கொண்டிருக்கும் குரூப்பை பாப்தாதா எதிரில் அழைத்தார்:** இது கூட நாடகப்படி விசேஷமாக வரமளிக்கும் வள்ளலின் வரதானம் கிடைக்கிறது. ஏதாவது கலை இருக்கிறது என்றால் கலையை வரதானம் என்று புரிந்து காரியத்தில் ஈடுபடுத்துங்கள். தந்தையின் வரதானம் டிராமாபடி விசேஷமாக காரணமாகிறது என்றால் அதன் மூலம் காரியம் சகஜமாக மற்றும் சுலபமாக நிறைவேறியேத் தீரும். அந்த மாதிரி தான் இல்லையா? அப்படி விசேஷ வரதானி ஆத்மாக்கள் அவர்களை அந்த விசேஷத்தினுடனேயே காரியத்தில் ஈடுபடுத்திக் கொண்டே இருங்கள். இது தந்தையின் வரதானம் என்று எப்பொழுதும் நினைவில் இருக்கட்டும். உங்களுடைய கைகள் மட்டும் காரியம் செய்யாது, ஆனால் தந்தையின் சக்தி உங்களுடையகைகளுடன் காரியம் செய்யும். நல்லது!

நாலாபுறத்திலுமுள்ள காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட பாப்தாதாவின் உள்ளத்தில் நிரம்பியிருக்கும் உயர்ந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தந்தையின் ஒவ்வொரு கட்டளையையும் ஏற்று நடக்கும்

மற்றும் தன்னுடைய மற்றும் அவர்களினுடைய முறையீடுகளை சமர்ப்பணம் செய்விக்கக்கூடிய எப்பொழுதும் தூய்மை என்ற தூணை உறுதியாக்கக்கூடிய தூய்மையின் லைட், மைட் ஹவுஸ் ஆகி பரப்பக்கூடிய விசேஷ ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தன்னை பற்றுதலிலிருந்து விடுபட்டவராக்கி தந்தையின் நெருக்கத்தில் வரக்கூடிய, இருக்கக்கூடிய அனைத்து குழந்தைகளுக்கும் பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வெளிநாட்டிலிருக்கக்கூடிய நாலா புறத்திலுமுள்ள குழந்தைகளுக்கு விசேஷமான அன்பு நினைவுகள்! ஏனென்றால் அவர்கள் அன்பு நினைவு கடிதத்தை எப்பொழுதுமே அனுப்பிக் கொண்டே இருக்கிறார்கள். யார் யார் கடிதம் அனுப்பியிருந்தீர்களோ அவர்களுக்கும் விசேஷ நினைவு மற்றும் யாரெல்லாம் உள்ளப்பூர்வமாக அன்பு நினைவை அனுப்பியிருந்தார்களோ அவர்களுக்கும் விசேஷமான அன்பு நினைவுகள்.

வரதானம்: சேவையின் பந்தனம் மூலமாக கர்ம பந்தனங்களை அழிக்கக்கூடிய உலக சேவாதாரி ஆகுக!

குடும்ப வாழ்க்கையில் இருந்து கொண்டே இது கணக்கு வழக்கு, கர்ம பந்தனம் என்று ஒருபொழுதும் நினைக்காதீர்கள் ஆனால் இதுவும் சேவை ஆகும். சேவையின் பந்தனத்தில் தன்னை கட்டிப் போட்டு விடுவதினால் கர்ம பந்தனம் அழிந்து விடுகிறது. சேவை மனப்பான்மை இல்லை என்றால் கர்ம பந்தனம் அதன் பக்கம் இழுத்துக் கொண்டே இருக்கும். கர்ம பந்தனம் இருக்கிறது என்றால் துக்க உணர்வுகள் வரும். மேலும் சேவையின் பந்தனம் இருக்கிறது என்றால் குஷி இருக்கும். எனவே கர்ம பந்தனத்தை சேவையின் பந்தனத்தினால் அழித்து விடுங்கள். உலக சேவாதாரிகள் உலகில் எங்கிருந்தாலும் உலக சேவைக்காக இருக்கிறார்கள்.

சுலோகன்: தன்னுடைய தேவதை சொரூபத்தின் நினைவில் இருந்தீர்கள் என்றால் உங்கள் மேல் யாருடைய வீணான பார்வையும் வர முடியாது!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

## 25.11.1995 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மற்றவர்கள் கூறும் வழி, மற்றவர்களின் சிந்தனை மற்றும் மற்றவர்களைப் பார்ப்பதில் இருந்து விடுபட்டவர் ஆகுங்கள், மேலும் மற்றவர்களுக்கு உபகாரம் செய்யுங்கள்!

இன்று பாப்தாதா நாலாபுறத்திலுமுள்ள தந்தையின் விஷேசமான குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். பாரதத்தினரையும் அல்லது வெளிநாட்டினரையும் அவர் எந்தவொரு மூலையில் இருந்தாலும் அனைத்து விசேஷ ஆத்மாக்களை பாப்தாதா அருகில் பார்த்துக் கொண்டிருக்கிறார். பாப்தாதா விற்கு தன்னுடைய விசேஷக் குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி ஏற்படுகிறது. எப்படி குழந்தைகள் உங்களுக்கு தந்தையைப் பார்த்து குஷி ஏற்படுகிறது இல்லையா. குஷி ஏற்படுகிறது அதனால் தான் ஓடி வந்திருக்கிறீர்கள் இல்லையா? அப்படி பாப்தாதாவிற்கும் என்னுடைய ஒவ்வொரு குழந்தையும் விசேஷ ஆத்மா என்று குஷி ஏற்படுகிறது. வயதானவராக இருந்தாலும், படிப்பறிவில்லாதவராக இருந்தாலும், சிறு குழந்தைகளானாலும், இளைஞர்களானாலும், இல்லறத்தில் இருப்பவர்களானாலும், இவர்கள் முழு உலகின் எதிரில் விசேஷமானவர்கள். எவ்வளவு தான் பெரிய அதிசயம் காண்பிக்கும் விஞ்ஞானியாக இருந்தாலும், சந்திரன் வரை சென்றடையச் செய்பவராக இருந்தாலும் தந்தையின் விசேஷக் குழந்தைகளின் எதிரில், அவர்களும் ஒன்றும் அறியாதவர்கள். ஐந்து தத்துவங்களையும் தெரிந்து கொண்டார்கள். அவற்றின் மீது வெற்றி அடைந்திருக்கிறார்கள் ஆனால் மிகச்சிறிய புள்ளி ஆத்மாவை தெரிந்திருக்கவில்லை ஆனால் இங்கு 'நீங்கள் யார்?' என்று சிறு குழந்தையைக் கேட்டாலும் என்ன பதில் சொல்லுவார். நான் ஆத்மா என்று தான் கூறுவார் இல்லையா? ஆத்மா எங்கிருக்கிறது என்று

கேட்டால் அதையும் கூறுவார். மேலும் விஞ்ஞானிகளிடம் ஆத்மா என்றால் என்ன என்று கேளுங்கள். ஆத்மாவின் ஞானத்தை இதுவரை தெரிந்து கொள்ள முடியவில்லை. அப்படி உலக சரித்திரத்தின் கணக்குப்படி எவ்வளவு தான் பெரியவர்களாக இருந்தாலும், இந்த உலக கணக்குப்படி விசேஷமானவர்களாக இருந்தாலும் யார் தன்னைத் தெரிந்து கொள்ளவில்லையோ, அவர்களை விடவோ இங்குள்ள ஐந்து வயது குழந்தை கூட விசேஷமானவராக ஆகி விட்டார். உங்களுடைய தொடக்க காலத்தின் ஒரு மிக நல்ல பாடல் இருக்கிறது, அது எந்த பாடல் என்று நினைவிருக்கிறதா? எவ்வளவு தான் பெரிய பணக்காரரானாலும், சுவாமியாக இருந்தாலும், ஆனால் தந்தையைத் தெரிந்திருக்கவில்லை. அப்படி எவ்வளவு தான் பெரியவராக இருந்தாலும் தலைவராகவோ, நடிகராகவோ இருந்தாலும் தன்னைத் தானே தெரிந்திருக்கவில்லை என்றால் என்ன தான் தெரிந்திருக்கிறார்? எனவே அந்த மாதிரியான விசேஷ ஆத்மாக்கள் நீங்கள். இங்கு படிப்பறிவில்லாத வயதான மாதர் இருக்கிறார் மற்றும் இன்னொரு பக்கம் நல்ல மகாத்மா இருக்கிறார் ஆனால் வயதான மாதர், நான் பரமாத்மாவை அடைந்து விட்டேன் என்று கூறுவார் ஆனால் அந்த மகாத்மாவோ பரமாத்மாவை அடைவது மிகக் கடினம் என்று கூறுவார் ஆனால் இங்கு 100 வயதானவரும் நிச்சய புத்தி இருக்கிறது என்றால் அவரும் என்ன கூறுவார்? நீங்கள் தேடிக் கொண்டேயிருங்கள். நாங்களோ அடைந்து விட்டோம் என்று கூறுவார். அப்படி மகாத்மாவும் உங்கள் எதிரில் ஒன்றுமே இல்லை. இல்லறத்தில் இருப்பவர்கள் நாங்கள் ஜோடியாக இருந்தும், ஒரே கட்டிலில் படுத்திருந்தும், தூய்மையாக இருக்கிறோம், எனென்றால் எங்களுக்கு இடையே தந்தை இருக்கிறார் என்று கூறுவார்கள். மேலும் மகாத்மாக்கள் என்ன கூறுவார்கள்? பஞ்சும் நெருப்பும் சேர்ந்திருப்பது என்பதோ அசம்பவம் ஆகும் என்று கூறுவார்கள். மேலும் உங்களைப் பொறுத்தவரை என்ன நிலைமை இருக்கிறது? தூய்மையாக இருப்பது கடினமா அல்லது சுலபமா என்று இல்லறத்தில் இருப்பவர்கள் கூறுங்கள். சுலபமா அல்லது சில நேரம் கடினமாகி விடுகிறதா? யார் உறுதியாக இருக்கிறார்களோ அவர்கள் பெரிய சபை எதிரிலும் அல்லது என்ன தான் ஆனாலும் தூய்மையோ எங்களுடைய சுயதர்மம் (இயற்கையான குணம்) என்று கூறுவார்கள் பரதர்மம் மற்றவர்கள் சொல்வதனால்) இல்லை, ஆனால் சுயதர்மம் ஆகும். அப்படி தன்னுடையது சுலபமாக

இருக்கும், மற்றவர்களுடையது கடினமாக இருக்கும். தூய்மையின்மை பரதர்மம் ஆகும், ஆனால் தூய்மை சுயதர்மம் ஆகும். அப்படி தன்னுடைய விசேஷத்தை தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா?. ஏனென்றால் புதியவர்களும் அதிகமானவர்கள் வந்திருக்கிறார்கள் இல்லையா? ஆனால் எவ்வளவு புதியவர்கள் இருக்கிறார்களோ அவர்கள் அனைவரும் தூய்மை என்ற விஷயத்தில் உறுதியானவர்கள் தான் இல்லையா? சில குழந்தைகள் இந்த மாதிரியும் செய்கிறார்கள் எதுவரை தந்தையை சந்திப்பதற்கான ஒரு வருடம் முடிவடையவில்லையோ, இந்த நியமம் மிகவும் உறுதியானது என்று அனைவருக்கும் தெரியும், அப்படி மதுபன்னிற்கு வரும் வரை சரியாக இருக்கிறார்கள் ஆனால் பாபாவை பார்த்து விட்டோம், வந்து சேர்ந்து விட்டோம் என்று, பிறகு சிலர் திரும்பிச் சென்ற பிறகு அலட்சியமாகவும் ஆகி விடுகிறார்கள் ஆனால் தூய்மையாக இருப்போம் என்ற உறுதிமொழியை யாரிடம் கொடுத்தோம் என்று யோசித்துப் பாருங்கள். தந்தையிடம் செய்தீர்கள் தான் இல்லையா? தந்தையின் கட்டளை இல்லையா. அப்படி தந்தையிடம் உறுதிமொழி கொடுத்து பின்பு ஒருவேளை அலட்சியமானவர்களாக ஆனீர்கள் என்றால் நஷ்டம் யாருக்கு ஏற்படும். பிராமண பரிவாரத்திலோ ஒருவர் செல்கிறார், பத்து பேர்கள் வருகிறார்கள் ஆனால் நஷ்டம் பலஹீனமான அந்த ஆத்மாக்களுக்கு ஏற்படுகிறது. எனவே யாரெல்லாம் முதல் தடவையாக வந்திருக்கிறார்களோ அவர்கள் தந்தையின் வீட்டிலோ வந்து சேர்ந்து விட்டீர்கள், இதுவோ பாக்கியத்தின் விஷயமாகும் ஆனால் அதிர்ஷ்டத்தின் ரேகையை ஒருபொழுதும் குறைக்காதீர்கள். அதிர்ஷ்டத்தை அதிகரிக்க வேண்டும்.

நல்லது. யாரெல்லாம் வந்திருக்கிறீர்களோ அனைவரின் பெயர் பதிவேட்டிலோ இருக்கவே இருக்கிறது. ரிஜிஸ்டரில் தன்னுடைய பெயரை உறுதியாக எழுதியிருக்கிறீர்களா அல்லது கொஞ்சம் கொஞ்சம் பலஹீனமாகவா? நல்லது. புதியவர்கள் யார் வந்திருந்தாலும் எங்கிருந்து வந்திருந்தாலும், டீச்சர்களிடமோ பட்டியல் இருக்கவே இருக்கிறது. மேலும் தினசரி வருகைப் பதிவேட்டில் எழுதுகிறீர்களா இல்லையா? யார் தினசரி பதிவேட்டை எழுதவில்லையோ அந்த மாதிரியான சென்டர் யாராவது இருக்கிறீர்களா? டீச்சர்கள் உண்மையைக் கூறுங்கள். சில நேரம் (எழுதுவதற்கு முன்பு) தூக்கம்

வந்திருந்திருக்கக் கூடும். சில நேரம் உடல் சரியில்லாமல் இருந்திருக்கலாம். சில நேரம் வகுப்பிற்கு வந்து சேர முடியாமல் இருந்திருப்பார்கள் என்றாலும் தினசரி பதிவேடு குறிக்கப்படுகிறதா? யார் தினசரி பதிவேட்டை எழுதுகிறார்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். நல்லது. ஒவ்வொரு நாளுமா அல்லது சில நேரமா? அல்லது இரண்டு, மூன்று மாதங்கள் ஆகி விடுகின்றதா? அனைத்து ஆசிரியைகளும் பாஸாகி விட்டீர்கள். எனவே கை தட்டுங்கள். புதியவர்களுக்கு முதலில் கொஞ்சம் போதை இருக்கிறது. பின்பு மெதுமெதுவாக குறைந்து விடுகிறது. அப்படி புதியவர்கள் யாரையெல்லாம் அழைத்து வந்திருக்கிறீர் களோ, சகோதரர்கள், சகோதரிகள், அவர்களைப் பற்றி, நிலைத்திருக்கிறார்களா அல்லது வெளியுலகைச் சுற்றச் சென்று விட்டார்களா என்ற இந்த ரிசல்ட்டை மூன்று நான்கு மாதங்கள் கழித்து எழுதுங்கள். ஏனென்றால் சிலர் சுற்றுவதற்கும் சென்று விடுகிறார்கள். இரண்டு வருடங்கள் மாயாவின் யாத்திரை செய்து விட்டு பின்பு இங்கு வந்து சேர்ந்து விடுகிறார்கள். அப்படி ரிசல்ட்டில் இரண்டே வார்த்தைகள் எழுதுங்கள். 60-பேர் வந்தார்கள் மற்றும் 60-பேர்கள் இருக்கிறார்கள். அல்லது 60-பேர் வந்தார்கள், 40-பேர்கள் இருக்கிறார்கள். இந்த இரண்டு வார்த்தைகளை மட்டும் விசேஷமாக இரத்தன்மோகினியின் (தாதி) பெயரில் தனியாக எழுதுங்கள். வெளியில் (கவரில் பிரம்மா குமாரிகள் என்று எழுதுங்கள் ஆனால் பெரிய எழுத்துக்களில் இரத்தன்மோகினி என்று எழுதுங்கள், உள்ளே அல்ல. அப்பொழுது இந்தக் கடிதம் இந்த விஷயத்திற்கானது என்று புரிந்து கொள்வார்கள். இல்லையென்றால் ஈஷவிடம் (தாதி) அதிகமான கடிதங்கள் வந்து விடுகின்றன. எத்தனை விசேஷ ஆத்மாக்கள் தன்னுடைய விசேஷங்களைக் காண்பிக்கிறார்கள் என்று பார்க்கலாம்.

குடும்பத்தில் கூட குழந்தை பிறக்கிறது என்றால் அனைவரும் என்ன கூறுகிறார்கள். நீண்ட ஆயுளுடன் வாழ வேண்டும் என்று கூறுவார்கள். அதே போல் பாப்தாதாவும் விசேஷ ஆத்மாக்களின் அழியாத விசேஷத்தைப் பார்க்க விரும்புகிறார். கொஞ்ச காலத்திற்காக இன்றி, ஒரு வருடம் இருந்தார், இரண்டு வருடம் இருந்தார் என்று அப்படியில்லை. அழியாமல் இருப்பவர்களுக்குத் தான் அழியாத பிராப்தி கிடைக்கிறது. அப்படி மாதர்களும் உறுதியாக இருக்கிறீர்களா?

ஏனென்றால் நீங்கள் ஒரு வருடக்குழந்தையாக இருந்தாலும், இரண்டு வருடம் அல்லது நான்கு வருடக் குழந்தையாக இருந்தாலும் முடிவோ ஒரே நேரத்தில் தான் இருக்கும் இல்லையா? விநாஷமோ ஒரே நேரத்தில் சேர்ந்தே ஏற்படும் இல்லையா. எனக்கு இரண்டு வருடம் தான் ஆகியிருக்கிறது, நானும் வெள்ளி விழா கொண்டாட வேண்டும். அதன் பிறகு விநாஷம் ஏற்படட்டும் என்று கூறுவீர்களா? இதுவோ நடக்காது இல்லையா? எனவே பிற்காலத்தில் வருபவர்களுக்கு இன்னும் முன்னேறிச் செல்ல வேண்டும். கொஞ்ச காலத்தில் மிகுந்த சம்பாத்தியம் செய்ய முடியும். இருந்த போதிலும் உங்களுக்கு முயற்சி செய்வதற்கான நேரம் கிடைத்திருக்கிறது. வரும் நாட்களில் இந்த நேரமும் கிடைக்காது. இப்பொழுது தாமதம் என்ற அறிவிப்பு பலகை போடப்பட்டு இருக்கிறது என்று ஏற்கனவே கூறினோம் இல்லையா? ஆனால் மிகவும் தாமதம் என்ற அறிவிப்பு பலகை இன்னும் போடப்படவில்லை. அப்படி நீங்கள் அனைவரும் அதிர்ஷ்டசாலிகள். உங்களுடைய பாக்கியத்தை நினைவில் வைத்துக் கொண்டே முன்னேறிச் செல்ல வேண்டும். மற்ற எந்த விஷயத்திலும் செல்ல வேண்டாம். குழந்தைகளுடைய முயற்சி செய்யும் நேரம் ஏன் வீணாகச் செல்கிறது என்று இன்று பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார். யாரும் விரும்புவதில்லை, அனைவரும் தன்னுடைய நேரம் பயனுள்ளதாக வேண்டும் என்று தான் விரும்புகிறார்கள் ஆனால் இடையிடையே ஆங்காங்கே அரை மணி நேரம் சிலருக்கு 15-நிமிடம், 5-நிமிடம் வீணாகச் சென்று விடுகிறது. அதற்கான காரணம் என்ன? பெரும்பான்மையினரின் முயற்சி குறைவாக அல்லது தொய்வாக ஆகி விடுகிறது என்றால் அதற்கான மூன்று காரணம் இருக்கிறது என்று இன்று பாப்தாதா பார்த்தார். ஏற்கனவே கூறியிருக்கிறோம், இது புது விஷயம் அல்ல ஆனால் வைர விழாவில் விசேஷமாக என்ன கவனம் கொடுக்க வேண்டும் என்று பாப்தாதா முன்பாகவே கூறுகிறார். அப்படி மூன்று காரணங்கள் இருக்கின்றன.

பிராமண வாழ்க்கையில் சென்று கொண்டிருக்கும் போதே ஸ்ரீமத்துடன் மற்ற ஆத்மாக்கள் கூறும் வழியையும் கலந்து விடுகிறார்கள். ஏதாவது ஒரு விஷயத்தைக் கூறி விடுகிறார். மேலும் நீங்கள் கூறுபவரோ நல்லவர், உண்மையான மகாரதி மேலும் உங்களுக்கு அவர் மேல் நம்பிக்கையும் இருக்கிறது என்று நினைக்கிறீர்கள், அந்த மாதிரி

யாராவது உங்களுக்கு ஏதாவது விஷயத்தை கூறுகிறார் என்றால், அதன் மேல் உங்களுக்கு ஆர்வமும் வந்து விடுகிறது, செய்தியோ நன்றாக இருக்கிறது... எப்படி உலகத்து விஷயங்கள் பிடித்திருக்கிறது இல்லையா? அதே போல் பிராமண உலகத்தின் செய்தியும் பிடித்திருக்கிறது என்றால் நீங்கள் அவர் மேல் நம்பிக்கை வைத்து விஷயத்தை கேட்டு விட்டீர்கள் என்றால் உங்களுக்குள் சென்று விட்டது. அதை நீங்கள் தவிர்க்கவில்லை. சில விஷயங்கள் உண்மையாக வும் இருக்கும், செய்தி உண்மையானதாகவும் இருக்கும், அனைத்தும் பொய்யானவைகளாக இருப்பதில்லை, சில உண்மையானவைகளும் இருக்கின்றன, ஆனால் உங்களுக்கு தந்தையின் கட்டளை என்ன? பரவாயில்லை இந்த மாதிரி செய்திகளைக் கேளுங்கள் என்பதா கட்டளை? இல்லை. இதற்கும் உங்களுக்கும் சம்மந்தம் இல்லை, அது சுவாரஸ்யமான செய்தி தான், அதை நீங்கள் ஒன்றும் செய்ய முடியாது, நீங்கள் கேட்க மட்டும் செய்தீர்கள் என்றாலும் அந்தச் செய்தி புத்தியிலோ சென்றது, நேரம் வீணானதாக ஆனதா அல்லது இல்லையா? மேலும் தந்தையின் ஸ்ரீமத்தில் மற்றவர்கள் சொல்லும் வழியை கலந்து விட்டீர்கள். ஏனென்றால் கேட்டும் கேட்காதீர்கள் என்பது தான் தந்தையின் கட்டளை. அப்படி இருக்கும்பொழுது நீங்கள் ஏன் கேட்டீர்கள்? அதன் பழக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறீர்கள். உதாரணமாக ஒரு தடவை உங்களுக்கு செய்தியைக் கூறினார், உங்களுக்கும் மிகவும் பிடித்திருந்தது, புது விஷயமாக இருந்தது, இந்த மாதிரியும் நடக்கிறது என்ற இந்த விஷயமும் தெரிந்து விட்டது ஆனால் ஒருவேளை நீங்கள் ஒரு தடலை அவருடைய விஷயத்தைக் கேட்டீர்கள் என்றால், அடுத்த தடவை அவர் எங்கு செல்வார்? உங்களிடம் தான் வருவார். நீங்கள் அவருக்காக குப்பைத் தொட்டி ஆகி விட்டீர்கள் இல்லையா? அந்த மாதிரியான விஷயங்கள் என்னென்ன இருக்குமோ அவற்றை உங்களிடம் வந்து தான் கூறுவார். ஏனென்றால் நீங்கள் அவர் சொல்வதைக் கேட்டீர்கள். எனவே ஒன்று அவருக்குப் புரிய வையுங்கள் அல்லது அந்த மாதிரியான விஷயங்களிலிருந்து அவரையும் விடுவியுங்கள். கேட்டு ஆர்வத்தை அதிகரிக்காதீர்கள் ஆனால் ஒருவேளை நீங்கள் கேட்கிறீர்கள் என்றால் சொல்பவரையும் நிரந்தரமாக இந்த விஷயத்தில் முற்றுப்புள்ளி இடவைக்கும் அளவிற்கு உங்களிடம் சக்தி இருக்க வேண்டும். உங்களுக்குள்ளும் முற்றுப்புள்ளி

வைத்து விட வேண்டும். எவரைப் பற்றி செய்தி கேட்டீர்களோ அவர் மேலுள்ள பார்வையில், எண்ணத்தில் கூட வெறுப்புணர்வு முற்றிலும் இருக்க வேண்டாம். இந்த அளவு உங்களில் சக்தி இருக்கிறது என்றால் இது கேட்பதாக ஆகவில்லை, அவருக்கு நன்மை செய்ததாக ஆனது ஆனால் பெரும்பான்மையினரிடம் இப்படித் தான் பார்க்க முடிந்தது; கொஞ்சம் கொஞ்சம் குப்பை ஒன்றாகச் சேர்ந்து சேர்ந்து இந்த வெறுப்புணர்வு அல்லது நடத்தையில் வித்தியாசம் வந்து விடுகிறது, வேறு எதுவும் நடக்காவிட்டாலும் அந்த ஆத்மாவிற் காக சேவை செய்யக்கூடிய பாவனை இருக்காது, சுமையான நிலை இருக்கும். இதைத் தான் ஸ்ரீமத்தில் பரமத்தை மற்றவர்கள் வழியை) கலப்பது என்பதாகும். செய்தியையோ பாப்தாதா கூட கேட்கிறார், ஆனால் என்ன நடக்கிறது? பெரும்பான்மையோரின் உள்நோக்கம் மாறி விடுகிறது. சொல்வதிலும் கூட உள்நோக்கம் மாறிவிடுகிறது. ஒருவர் வந்து கூறுகிறார். இவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள் என்று நான் பார்த்தேன் மற்றும் ஒருவர் சொன்னதைக் கேட்ட பிறகு இன்னொருவர் கூறுகிறார். அப்படியில்லை. நின்று கொண்டு தான் இருந்தார்கள் ஆனால் மற்றவர் சொன்னது போல் வெகு நேரம் நின்று கொண்டிருக்கவில்லை, இப்படி இன்னொன்றும் சேர்ந்து விட்டது. பிறகு மூன்றாமவர் வந்து சொல்வார். இவர்களோ அந்த மாதிரி செய்வதே இல்லை என்று. ஆக எவ்வளவு மாறி விடுகிறது. அவர்களின் பாவனை என்னவாக இருந்தது மற்றும் விஷயங்களில் உள்நோக்கம் எவ்வளவு மாறிவிடுகிறது. அப்படி இந்த பரமத் வாயுமண்டலத்தை கெடுத்து விடுகிறது. அப்படி நேரம் வீணாவதற்கான ஒரு காரணம் பரமத் மற்றும் இன்னொரு காரணம் பரசிந்தனை (மற்றவர்களைப் பற்றி சிந்திப்பது). ஒருவரிடம் விஷயத்தை கேட்டீர்கள் என்றால் அதை 8-10 பேருக்கு சொல்லாமல் இருப்பது என்பதே நடக்க முடியாது. ஒருவேளை யாராவது வெளிநாட்டில் இருந்தால் கூட அவருக்கு கடிதம் மூலம் இங்கு மிகுந்த புது விஷயங்கள் நடந்திருக்கிறது நீங்கள் வருவீர்கள் இல்லையா அப்பொழுது அவசியம் சொல்வேன் என்று எழுதுவார்கள். அப்படியானால் இது என்னவாக ஆனது? பரசிந்தனை. உதாரணமாக நீங்கள் நான்கு பேர்களுக்கு கூறினீர்கள். அந்த நான்கு பேர்கள் அந்த ஆத்மா மேல் வைத்த பாவனையை கெடுத்து விட்டீர்கள் இல்லையா? மேலும் பரசிந்தனை தொடங்கியது என்றால் மிக வேகமாகவும் மற்றும் வெகு காலமும் இருக்கும்.

பரசிந்தனை ஓரிரு விநாடியில் முடிந்து விடாது. யாருக்காவது ஞானம் கூறுகிறீர்கள் என்றால் ஆர்வத்தை ஏற்படுத்துவதற்காக கதை ரூபத்தில் கூறுங்கள் என்று பாப்தாதா கூறுகிறார். முதலில் இது நடந்தது. பின்பு என்ன ஆனது, பின்பு என்ன ஆனது... அப்படி. அப்பொழுது ஆர்வம் அதிகரிக்கிறது இல்லையா?. அதைப் போல் பரசிந்தனை என்ன இருக்கிறதோ அதுவும் ஒரு ஆர்வம் ஏற்படுத்துவதாக இருக்கிறது. அதில் மற்றவர் அவசியம் இந்த மாதிரி யோசிப்பார். பின்பு என்ன ஆனது, பின்பு அப்படி ஆனது, ஆம் அப்படி ஆகியிருந்திருக்கும்... அப்படி இதுவும் கதை மிக நீளமானது. பாப்தாதாவோ அனைவரின் உள்ளத்திலிருக்கும் விஷயங்களைக் கேட்கவும் செய்கிறார். பார்க்கவும் செய்கிறார். எவ்வளவு தான் மறைப்பதற்கு முயற்சி செய்தாலும் பாப்தாதா அங்கங்கே கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக. வெளிப்படையாக சமிக்ஞை கொடுப்பதில்லை, மற்றபடி அனைத்தையும் தெரிந்திருக்கிறார். அனைத்தையும் ஒருவர் பார்க்கிறார். யார் எவ்வளவு தான் இல்லை என்றும், நானோ ஒருபொழுதும் அப்படிச் செய்யவில்லை என்றும் கூறினாலும் பாப்தாதாவிடம் பதிவேடு இருக்கிறது. எத்தனை தடவை செய்தீர்கள், என்னென்ன செய்தீர்கள், எந்த நேரம் செய்தீர்கள், எத்தனை பேருடன் செய்தீர்கள் என்ற இந்த அனைத்தும் பதிவேட்டில் இருக்கிறது. சில நேரம் அமைதியாக மட்டும் இருக்க வேண்டியதாக இருக்கிறது. அப்படி இன்னொரு விஷயம் பரசிந்தனையைப் பற்றி கூறினோம். அவருக்கு சுயசிந்தனை ஒருபொழுதும் இருக்காது. எந்தவொரு விஷயம் இருந்தாலும் பரசிந்தனை செய்பவர் தன்னுடைய தவறையும் மற்றவர்கள் மேல் போடுவார். மேலும் பரசிந்தனை செய்பவர் விஷயங்களை உருவாக்குவதில் நம்பர் ஒன் ஆக இருப்பார். தன்னுடைய முழுமையான தவறை மற்றவர்கள் செய்ததாக அந்த மாதிரி நிரூபிப்பார்கள். கேட்கக் கூடிய பெரியவர்களுக்கும் ஒன்றும் பேசாமல் இருக்க வேண்டியதாக ஆகி விடுகிறது. ஞானத்தின் பாய்ன்ட்டுகளை மீண்டும் நினைவில் கொண்டு வருவது அல்லது ஞானத்தின் பாய்ன்டுகளை கேட்டு விட்டோம், மற்றவர்களுக்கு சொல்லி விட்டோம் என்ற இது மட்டும் சுயசிந்தனை இல்லை ஆனால் சுயசிந்தனை என்றால் தன்னுடைய சூட்சும பலஹீனங்களை சிந்தித்து அகற்றுவது, பரிவர்த்தனை செய்வது இது தான் சுயசிந்தனை. மற்றபடி

ஞானம் சொல்வது மற்றும் கேட்பது அதிலேயோ அனைவரும் திறமை உள்ளவர்கள். அது ஞானத்தின் சிந்தனை ஆகும் ஆனால் சுயசிந்தனையின் நுணுக்கமான அர்த்தம் தன்னைப் பற்றியதாகும். ஏனென்றால் எப்பொழுது ரிசல்ட் வெளியாகுமோ அந்த ரிசல்ட்டில் இவர் ஞானத்தின் சிந்தனையை நன்றாகச் செய்தார் அல்லது சேவையில் ஞானத்தை நன்றாக உபயோகித்தார் என்ற இதையும் பார்க்கப்படும். இந்த ரிசல்ட்டிற்கு முன்பு சுயசிந்தனை மற்றும் பரிவர்த்தனை, சுயசிந்தனை செய்வதின் அர்த்தமே பரிவர்த்தனை செய்வது.

கடைசி முடிவின் மதிப்பெண்கள் முதலில் நடைமுறை தாரணை சொரூபத்திற்குக் கிடைக்கும். யார் தாரணை சொரூபமாக இருப்பாரோ அவர் இயற்கையான யோகியாக இருக்கவே செய்வார். ஒருவேளை மதிப்பெண்கள் அதிகமாகப் பெற வேண்டும் என்றால் முதலில் மற்றவர்களுக்கு என்ன கூறுகிறீர்களோ, இன்றைய நாட்களில் பண்புகளின் மேல் என்ன சொற்பொழிவு நிகழ்த்துகிறீர்களோ. அதை முதலில் தன்னுள் சோதனை செய்யுங்கள். ஏனென்றால் சேவைக்கான மதிப்பெண்களிலோ தாரணை சொரூபத்திற்கு பத்து மதிப்பெண்கள் இருக்கிறது. ஒருவேளை ஞானம் கொடுக்க முடிய வில்லை ஆனால் தன்னுடைய தாரணையினால் பிரபாவம் ஏற்படுத்துகிறீர்கள் என்றால், உங்களுடைய சேவையின் மதிப்பெண்கள் சேமிப்பாகி விட்டது இல்லையா? இன்றைய நாட்களில் எங்களுக்கு சேவையின் வாய்ப்பு மிகக் குறைவாகக் கிடைக்கிறது. எங்களுக்கும் வாய்ப்பு கிடைக்க வேண்டும். மற்றவர்களுக்கு கிடைக்கிறது என்றால், எனக்கு ஏன் கிடைக்கக்கூடாது என்று நினைக்கிறார்கள். சேவை செய்வது மிக நல்லது தான், ஏனென்றால் ஒருவேளை புத்தி ஒருவேலை யுமின்றி சுதந்திரமாக இருக்கிறது என்றால் வீணான எண்ணங்கள் அதிகம் வரும். எனவே சேவையில் புத்தி பிஸியாக இருப்பது ஒரு நல்ல வழியாகும். சேவை செய்வதற்கான ஊக்கம் இருப்பதோ நல்லது தான், ஆனால் நாடகப்படி அல்லது சூழ்நிலையின் அனுசாரம் உங்களுக்கு ஒருவேளை வாய்ப்பு கிடைக்கவில்லை, மேலும் உங்களுடைய (மன) நிலை மற்றவர்களுக்கு சேவை செய்வதற்குப் பதிலாக உங்களையே கீழே கொண்டு வந்து விடுகிறது அல்லது அந்த சேவை உங்களை குழப்பத்தில் கொண்டு வந்து விடுகிறது என்றால் அது என்ன சேவை? அந்த சேவையின் உடனடிப் பலனாக என்ன கிடைக்கும்? உண்மையான

சேவை, அன்போடு செய்யப்படும் சேவை, அனைவரின் ஆசீர்வாதங்களைப் பெற வைக்கும் சேவை, அதனுடைய உடனடிப் பலனாக குஷி இருக்கும். மேலும் ஒருவேளை சேவையில் ஃபீலிங் (உணர்ச்சிவசப்படுவது) வந்து விடுகிறது என்றால், இங்கு பிராமணர்கள் ஃபீலிங்கை என்னவென்று கூறுகிறார்கள்? ஃப்ளூ, ஃப்ளூ என்று தான் கூறுகிறார்கள். ஃப்ளூ நோய் உள்ளவர் என்ன செய்வார்? தூங்கி விடுவார். உணவு அருந்த மாட்டார். தூங்கி விடுவார். இங்கேயும் ஃபீலிங் வருகிறது என்றால், ஒன்று உணவு அருந்த மாட்டார் அல்லது கோபித்துக் கொண்டு எங்காவது சென்று அமர்ந்து விடுவார். அப்படி இது ப்ளூ நோய் ஆகிறது இல்லையா? ஒருவேளை நீங்கள் தாரணை சொரூபமானவராக இருக்கிறீர்கள். உண்மையான சுயநலமற்ற சேவாதாரியாக இருக்கிறீர்கள். ஒன்று நன்மை ஏற்பட வேண்டும் என்ற பாவனையோடு செய்யப்படும் சேவை மற்றும் இன்னொன்று சுயநலத்தோடு செய்யும் சேவை, என்னுடைய பெயர் வந்து விடும். என்னுடைய புகைப்படம் செய்தித் தாள்களில் வந்து விடும். என்னுடைய போட்டோ டி.வியில் வந்து விடும், பிராமணர்களிடையே எனக்கு பெயர் கிடைக்கும், சகோதரி என்னை மிகவும் முன்னுக்கு வைப்பார், என்னை விசாரிப்பார்... இந்த அனைத்து விதமான உணர்வுகள் சுயநலமாக செய்யும் சேவையினுடையவை. ஏனென்றால் இன்றைய கணக்குப்படி, பிரத்யக்ஷம் ஏற்படும் கணக்குப்படி இப்பொழுது சேவை உங்களிடம் தானாகவே வரும், தொடக்கத்தில் ஸ்தாபனையின் விஷயம் வேறாக இருந்தது ஆனால் இப்பொழுது நீங்கள் சேவையின் பின்னால் செல்ல மாட்டீர்கள். சேவை சுயம் உங்களைத் தேடி வரும். அப்படி யார் உண்மையான சேவாதாரியாக இருக்கிறாரோ அந்த சேவாதாரிக்கு வேறு ஏதாவது சேவை கிடைக்கவில்லை என்றாலும் தன்னுடைய முகம் மற்றும் நடத்தை மூலம் சேவை செய்யுங்கள் என்று பாப்தாதா கூறுகிறார். உங்களுடைய முகம் தந்தையின் சாட்சாத்காரம் செய்விக்கட்டும். உங்களுடைய முகம், உங்களுடைய நடத்தை தந்தையை நினைவூட்ட வேண்டும். இந்த சேவை தான் நம்பர் ஒன் ஆகும். அந்த மாதிரியான சேவாதாரி யாரிடம் சுயநல உணர்வுகள் இல்லையோ, எனக்குத் தான் வாய்ப்பு கிடைக்க வேண்டும். ஏன் கிடைப்பதில்லை, கிடைக்க வேண்டும் அந்த மாதிரியான எண்ணங்களையும் சுயநலம் என்று தான் கூறுவோம். பிராமண பரிவாரத்தில் உங்களுடைய பெயர் புகழடைந்து இருக்கவில்லை, நல்ல

சேவாதாரியாக இருந்தும் உங்களுடைய பெயர் வரவில்லை, ஆனால் தந்தையிடமோ பெயர் இருக்கிறது இல்லையா? எப்பொழுது தந்தையின் இதயத்தில் பெயர் இருக்கிறது என்றால் வேறு என்ன வேண்டும்? மேலும் தந்தையின் இதயத்தில் மட்டும் இல்லை ஆனால் எப்பொழுது கடைசி சோதனை வருமோ அப்பொழுது உங்களுடைய நம்பர் முன்னுக்கு இருக்கும். ஏனென்றால் பாப்தாதா கணக்கு வைத்துக் கொள்கிறார். உங்களுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை, நீங்கள் சரியாகத் தான் சொல்கிறீர்கள், ஆனால் வாய்ப்பு கிடைக்கவில்லை என்றால் அதுவும் குறிப்பில் வந்து விடுகிறது. தந்தைக்கு எதையும் செய்ய வேண்டியது இல்லை தானாகவே நடந்து கொண்டிருக்கிறது. சில நேரம் பாப்தாதா குழந்தைகளின் கணக்கை பார்க்கவும் செய்கிறார் அப்படி முதல் விஷயம் பரமத் (மற்றவர்கள் சொல்லும் வழி) மற்றும் இரண்டாவது விஷயம் பரசிந்தனை (மற்றவர்கள் / மற்ற விஷயங்களின் சிந்தனை).

மூன்றாவது விஷயம் பரதர்ஷன் (மற்றவர்களைப் பார்ப்பது). மற்றவர்களைப் பார்ப்பதில் பெரும்பான்மையோர் மிகவும் திறமையானவர்கள். மற்றவர்களைப் பார்ப்பது அதாவது பார்க்கிறீர்கள் என்றால் பார்த்ததற்குப் பின்பு அந்த விஷயம் எங்கே செல்லும். புத்தியில் தானே செல்லும் மேலும் யார் மற்றவர்களைப் பார்ப்பதில் நேரத்தை செலவழிப்பாரோ அவருக்கு தன்னைப் பார்ப்பதற்கான நேரம் எங்கே கிடைக்கும்? விஷயங்களோ அதிகம் நடக்கும் இல்லையா, மேலும் என்ன விஷயங்கள் நடந்து கொண்டிருக்கின்றனவோ அவை பார்க்கவும் தென்படும். கேட்கவும் முடியும். எவ்வளவு பெரிய அமைப்போ அவ்வளவு பெரிய விஷயங்கள் நடக்கும். இந்த விஷயங்கள் ஏன் ஏற்படுகின்றன? இந்த விஷயங்கள் நடக்கக்கூடாது என்று சிலர் நினைக்கிறார்கள், நடக்கக்கூடாது என்பதோ சரி தான்! ஆனால் இது நடக்கக்கூடாது என்று எதைப் பற்றி நீங்கள் நினைக்கிறீர்களோ அதற்காக ஏன் நேரம் செலவழித்தீர்கள்? மேலும் இந்த விஷயங்களே தான் உங்களுடைய பரீட்சை ஆகும். எவ்வளவு பெரிய படிப்போ அவ்வளவு பெரிய பரீட்சையும் இருக்கும். இந்த சூழ்நிலை உருவாவது -பரமத், பரதர்ஷன் அல்லது பரசிந்தனையிலிருந்து தன்னை எவ்வளவு பாதுகாப்பாக வைத்துக் கொள்வது என்ற இது அனைவருக்குமான பரீட்சை ஆகும். இரண்டு

விஷயங்கள் வேறு வேறானவை. ஒன்று பொறுப்பு அதன் காரணமாக கேட்கவும் வேண்டியதிருக்கிறது. பார்க்கவும் வேண்டியதிருக்கிறது. அதை நன்மை பயக்கும் பாவனையோடு கேட்க வேண்டும் மற்றும் பார்க்க வேண்டும். பொறுப்பு இருக்கிறது, நன்மை பயக்கும் பாவனை இருக்கிறது என்றால் அது சரி தான் ஆனால் தன்னுடைய மனநிலையை குழப்பத்தில் கொண்டு வந்து பார்ப்பது, கேட்பது அல்லது நினைப்பது என்ற இது தவறாகும். ஒருவேளை நீங்கள் உங்களை பொறுப்பானவர் என்று நினைக்கிறீர்கள் என்றால் பொறுப்பிற்கு முன்பு தன்னுடைய பிரேக்-ஐ (நிறுத்தும் சாதனத்தை) சக்தி நிறைந்ததாக ஆக்குங்கள். எப்படி மலை மேல் ஏறுகிறார்கள் என்றால் தன்னுடைய பிரேக்கை சரியாக சோதனை செய்து கொள்ளுங்கள் என்று முன்பாகவே அறிவிப்புக் கொடுக்கிறார்கள். அப்படி பொறுப்புக் கூட ஒரு உயர்ந்த நிலை ஆகும். பொறுப்பை நன்றாக எடுத்துக் கொள்ளுங்கள் ஆனால் ஒரு நொடியில் புள்ளி விழுகிறதா என்ற இதைச் சோதனை செய்யுங்கள். அல்லது வைக்கிறீர்கள் புள்ளி, ஆனால் விழுந்து விடுகிறது கேள்விக்குறியா? அது தவறு ஆகும். அதில் நேரம் மற்றும் சக்தி வீணாகச் செல்லும். எனவே முதலில் தன்னுடைய பிரேக்கை சக்திசாலியானதாக ஆக்குங்கள். பார்த்தீர்கள், கேட்டீர்கள் எவ்வளவு முடியுமோ அந்த அளவு நன்மை செய்தீர்கள், அது சரி தான் மற்றும் முற்றுப்புள்ளி வைத்து விடுங்கள். ஒருவேளை அந்த மாதிரியான மனநிலை உங்களிடம் இருக்கிறது என்றால் பொறுப்பை எடுத்துக் கொள்ளுங்கள் இல்லை என்றால் பார்த்தும் பார்க்காதீர்கள், கேட்டும் கேட்காதீர்கள். சுயசிந்தனையில் இருங்கள். இதில் தான் லாபம் இருக்கிறது.

அப்படி இன்றைய பாடம் என்னவாக இருந்தது? பரமத், பரசிந்தன் மற்றும் பரதர்ஷன் இந்த மூன்று விஷயங்களிலிருந்து விடுபடுங்கள் மற்றும் ஒரு விஷயத்தை தாரணை செய்யுங்கள். அந்த ஒரு விஷயம் பரோபகாரி (அனைவருக்கும் உதவி செய்பவர்கள்) ஆகுங்கள். மூன்று விதமான மற்றதை அகற்றுங்கள் மற்றும் ஒரு மற்றதை அதாவது மற்றவர்களுக்கு உதவுபவர்கள் ஆகுங்கள். ஆகத் தெரியுமா? அப்படியானால் எந்த விஷயத்திலிருந்து விடுபடுவீர்கள்? மாதர்கள் என்ன செய்வீர்கள்? (தன்னுடைய) குழந்தைகளின் உபகாரியாகவா அல்லது மற்றவர்களின் உபகாரியாக ஆவீர்களா? அனைவரின் உபகாரியாக ஆக வேண்டும். சுலபமா அல்லது கடினமா? புதியவர்கள்

# 1995 அவ்யக்த முரளி

யார் வந்திருக்கிறார்களோ அவர்கள் இது சுலபம் என்று நினைக்கிறார்களா அல்லது கடினம் என்றா? டீச்சர்கள் கூறுங்கள் -சுலபமா? (ஆம்). இல்லை, பாப்தாதா கடினம் என்று நினைக்கிறார். விஷயங்கள் அவ்வளவு இருக்கின்றது, அவ்வளவு கடினம் ஆகும். இப்பொழுது இங்கே அமர்ந்திருக்கிறீர்கள் என்றால் சுலபம் சுலபம் என்று கூறுகிறீர்கள். மேலும் எப்பொழுது ரயிலிலிருந்து இறங்குகிறீர்கள் என்றால் சிறிய மற்றும் பெரிய விஷயம் நடக்கிறது என்றால் கடினம் என்று கூறுகிறீர்கள். மேலும் வீட்டிற்குச் சென்றீர்கள். சென்டருக்கு சென்றீர்கள். ஏதாவது விஷயம் உங்களை சோதிப்பதற்காக அவசியம் வரும். நல்லது, இரட்டை வெளிநாட்டினருக்கு சுலபமாக அனுபவம் ஆகிறதா அல்லது கடினமாக அனுபவம் ஆகிறதா? ஒருவேளை சுலபமாக அனுபவம் ஆகிறது என்றால் கையை உயர்த்துங்கள். டீச்சர்களோ நம்பர் ஒன் ஆவீர்கள் இல்லையா? எங்களுக்கோ தெரியாது. எங்களுக்கு இந்த விஷயத்தின் ஞானமே இருந்ததில்லை என்று அந்தநேரம் கூறாதீர்கள். எனவே எதில் மதிப்பெண்கள் சேருகிறது மற்றும் எதில் மதிப்பெண்கள் குறைகிறது என்று பாப்தாதா முன்பாகவே கூறுகிறார். யாருக்கும் இன்னும் பதவி நிச்சயிக்கப்படவில்லை. பிரம்மா பாபா மற்றும் ஜெகதம்பாவைத் தவிர அனைத்து பதவிகளும் காலியாக இருக்கின்றன. யாரும் எடுத்துக் கொள்ளலாம். ஒரு வருடம் நிறைந்தவர் கூட எடுத்துக் கொள்ள முடியும்.

அப்படி எப்பொழுதும் என்ன நினைவு வைத்துக் கொள்வீர்கள்? தன்னுடைய விசேஷங்களை நினைவு வையுங்கள். தன்னை விசேஷமானவர் என்று நினைத்தீர்கள் என்றால் இந்த விளையாட்டிற்குச் சமமான விஷயங்கள் நடக்காது. அப்படி விசேஷமானவர்கள் மேலும் எப்பொழுதும் முழு கல்பத்திலும் விசேஷமானவர்களாக இருப்பீர்கள். மேலும் எந்தவொரு தர்மத் தலைவர்களுக்கும் அல்லது மகாத்மாக்களுக்கும் அந்த மாதிரி விதிப்பூர்வமான பூஜை நடப்பதில்லை. எப்படி தேவதைகளுக்கு பூஜை நடக்கிறதோ அந்த மாதிரி யாருக்கும் நடப்பதில்லை. தலைவர்களையோ பாவம் அவர்களை வெயிலில் தொங்க விட்டு விடுகிறார்கள். நல்லது.

**குமாரிகளுடன்:** குமாரிகள் என்ன அதிசயக் காரியம் செய்வீர்கள்? அதிசயக் காரியம் செய்ய வேண்டும் இல்லையா? எதை அனைவரும் செய்கிறார்களோ அதையே நீங்களும் செய்தால் அதில் என்ன அதிசயம்? அப்படி இந்த குமாரிகளின் குரூப் என்ன செய்யும்? ஒருவேளை நீங்களாகச் சொல்லவில்லை என்றால் பாப்தாதா கூறுவதைச் செய்ய வேண்டியது இருக்கும். இல்லையென்றால் நீங்களே சொல்லிவிடுங்கள். இந்த வைரவிழாவில் குமாரிகள் என்ன செய்வீர்கள்? ஏனென்றால் உங்களுக்கோ இப்பொழுது வைர விழாவின் வாய்ப்பு இருக்கிறது. பின்போ கிடைக்காது, அப்படி குமாரிகள் நீங்கள் என்ன செய்வீர்கள் என்று வைர விழாவை முன்னுக்கு வைத்து யோசியுங்கள். முதலிலோ நான் சேவையில் ஈடுபட்டு விடுவேன் என்று யார் லட்சியம் வைத்திருக்கிறீர்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். எழுந்து நில்லுங்கள். நல்லது. இவர்களுடைய புகைப்படம் எடுங்கள். இவர்களோ அதிகமானவர்கள் இருக்கிறார்கள். அப்படி குமாரிகள் நீங்கள் என்ன செய்ய வேண்டும்? நீங்கள் அனைவரும் கையை உயர்த்தினீர்கள், எழுந்தும் நின்றுவிட்டீர்கள், புகைப்படமும் எடுக்கப்பட்டு விட்டது என்றால் நீங்கள் அனைவரும் சேவையில் ஈடுபட வேண்டும். உறுதியாக இருக்கிறது இல்லையா? அல்லது விட்டிற்குச் சென்ற பிறகு நானோ வேலைக்குச் செல்வேன் என்று உங்களுடைய டீச்சரிடம் கூற மாட்டீர்களே? யார் யார் கையை உயர்த்தினீர்களோ அவர்கள் உறுதியானவர்கள் தான் இல்லையா? அல்லது வேலை செய்யக்கூடியவர்களா? சேவை செய்வீர்கள் இல்லையா? நல்லது. யார் பந்தனமற்றவர்களாக இருக்கிறார்களோ, படிப்பில் ஒரு வருடம் மட்டும் இருக்கிறது அல்லது கொஞ்ச காலம் தான் இருக்கிறது என்பவர்கள் கையை உயர்த்துங்கள். யார் பந்தனமற்றவராக ஆக முடியும்? நல்லது. ஏனென்றால் இப்பொழுது முடிவின் நேரம் அருகில் வந்து கொண்டிருக்கிறது என்று பாப்தாதா கூறினார். தேதியைக் கூற மாட்டோம், ஆனால் அருகில் வந்து கொண்டிருக்கிறது. அதன் பிரகாரம் சேவையும் வளர்ச்சி அடைய வேண்டும் இல்லையா? அப்படி எந்த எந்த குமாரிகள் எழுந்து நின்றீர்களோ ஒருவேளை அவர்களே பந்தனமற்றவர் ஆகமுடியவில்லை, ஏதாவது காரணம் இருக்கிறது என்றால் வேறு யாராவது குமாரிகளை அவசியம் தயார் செய்யுங்கள். உதாரணமாக உங்களுக்கு வீட்டின் பந்தனம் இருக்கிறது. ஒருவேளை தானே

பந்தனமற்றவர் ஆக முடியவில்லை என்றால் யாராவது ஒருவரை அவசியம் தயார் செய்யுங்கள். இதைச் செய்ய முடியுமா? ஒரு வருடம் இருக்கிறது. ஒரு வருடத்தில் ஒருவரை தனக்குச் சமமாக ஆக்க முடியாதா? ஆக்க வேண்டும் இல்லையா? அப்படி ஒவ்வொரு குமாரியும் யார் தானாகவே சேவையில் ஈடுபடுவாரோ அவரோ ஈடுபட்டு விடுவார், ஆனால் ஒருவேளை யாராவது தானே ஈடுபட முடியவில்லை என்றால் தன்னைப் போன்ற வேறு குமாரியை தயார் செய்யுங்கள். இது குமாரிகளுக்கு விருப்பமா? ஆம் அல்லது இல்லை என்று கூறுங்கள். யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். நல்லது. பஞ்சாபைச் சேர்ந்த குமாரிகள் கையை உயர்த்துங்கள். இவர்கள் சேவை செய்வார்கள் என்று பஞ்சாபைச் சேர்ந்த அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து கூறுங்கள். பஞ்சாபின் சிங்கம் எங்கு சென்று விட்டது? தீவிரவாதிகளைக் கண்டு பயந்து விட்டீர்களா என்ன? பஞ்சாபின் சிங்கம் என்று கூறுகிறீர்கள் என்றால் சிங்கத்திற்கோ எதிரில் வர வேண்டுமேயன்றி வீட்டிலா அமர்வது அப்படி குமாரிகளுக்கு தன்னைப் போன்ற மற்ற குமாரிகளைத் தயார் செய்ய வேண்டும். ஏனென்றால், பாருங்கள் அனைத்து சகோதரர்களும் சிரிக்கிறார்கள். குமாரிகள் மூன்று வருடத்தின் டிரையலில் (யத்தனத்தில்) இருப்பவர்களும் இருப்பார்கள். மேலும் குமாரர்கள் 40-வருட பழையவர்களும் இருப்பார்கள். அவர்களும் சென்டரில் இருக்கக்கூடிய குமாரிகளை தீதி என்று கூறத் தொடங்கி விடுவார்கள். மேலும் குமாரர்களை தாதா என்று யாரும் கூறுவதில்லை. குமாரர்களுக்கு இந்தப் புகார் வருகிறது, ரிப்போர்ட் இருக்கிறது. நல்லது. குமாரர்கள் கையை உயர்த்துங்கள்

குமாரர்களுடன்: குமாரர்கள் தாதாவாக ஆக மாட்டீர்கள் இல்லையா? தாதா என்று யாரும் கூற மாட்டார்கள் ஆனால் ராஜா ஆக முடியும். வைர விழாவில் குமாரர்கள் குறைந்தது 8-முத்துக்களின் ஒவ்வொரு கங்கனம் மற்றும் மாலை தயார் செய்ய வேண்டும். 8-என்ற மகிமை செய்யப்பட்டிருக்கிறது இல்லையா. உங்களுடைய பிரஜை ஆகி விடுவார்கள். மேலும் பிரஜை உருவாக்குவதினால் நீங்கள் ராஜா ஆகி விடுவீர்கள். குமாரிகளை தாதிகள், தீதிகள் ஆக விடுங்கள். மேலும் நீங்கள் அவர்களை விட ராஜா ஆகி விடுங்கள். குமாரர்களோ அதிகம் இருக்கிறார்கள். ஒருவேளை ஒவ்வொருவரும் 8-பேரைக் கொண்டு வந்தால் கூட பிரஜை ஆகி விடுவார்கள். மேலும் பிரஜை தயார் ஆகி

விட்டால் உங்களுக்கு அவசியம் ராஜதிலகம் கிடைக்கும். ஏனென்றால், அதிகமாக வாரிசு தரமுள்ளவர்கள் இப்பொழுது குறைவாகத்தான் உருவாகிறார்கள். ஒருவேளை குமாரர்கள் ஒரு வாரிசு தரமுள்ளவரையாவது உருவாக்கி விட்டார்கள் என்றால் மகாராஜா ஆகி விடுவார்கள். குமாரர்கள் தயாராக இருக்கிறீர்களா? வாரிசு என்று யாரைக் கூறுவது என்று தெரிந்திருக்கிறீர்களா? சாதாரணமானவர்களோ வந்து கொண்டே தான் இருக்கிறார்கள் ஆனால் வாரிசாக யார் இருப்பாரோ அந்த ஒருவரைப் பார்த்து அனேகர்களும் வருவார்கள். அவரைத் தான் வாரிசு தரமுள்ளவர் என்று கூறுவது மற்றும் சிறிய மைக் என்றும் கூறுவது. அப்படியானால் குமாரர்கள் ராஜா ஆவீர்கள் இல்லையா (ஆம்). நல்லது. இங்கு மதுபனில் ஆம் என்று கூறுகிறீர்கள் மேலும் பஞ்சாப் மற்றும் மும்பை எங்கு சென்றாலும் ஆம் என்று இருக்குமா?

குமாரர்களைப் பார்த்து பாப்தாதா குஷியடைகிறார். குமார், குமாரிகளிடம் இருந்து தந்தைக்கு ஒரு விஷயத்தில் மட்டும் பயம் ஏற்படுகிறது. குஷியும் ஏற்படுகிறது என்றால் பயமும் இருக்கிறது. குமாரர்களோ விவேகமானவர்கள் இல்லையா, சொல்வதற்கோ அவசியமே இல்லை. இதில் எப்பொழுதும் ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை, கொஞ்சம் கூட இல்லை என்றிருக்க வேண்டும். என்ன செய்வது கொஞ்சம் தேவையாகத்தான் இருக்கிறது என்று அப்படி வேண்டாம். இது அந்த மாதிரியான மாயா அதைப் பார்த்திருக்கிறீர்கள் இல்லையா, யானை மற்றும் முதலையின் கதை கேட்டிருக்கிறீர்கள் இல்லையா? அது (முதலை) என்ன செய்கிறது. முதலில் கொஞ்சம் உள்ளே இழுக்கிறது பின்பு முழுமையாக உள்ளே இழுத்து விடுகிறது. தெரிவதில்லை. அப்படி வைர விழாவில் இந்த பயத்தை அகற்றி விட வேண்டும். அந்த மாதிரி ஒரு கடிதமும் வரக்கூடாது. வைர விழா என்றால் கொஞ்சம் கூட குறை இல்லாத நிலை. எனவே கையையோ அனைவரும் உயர்த்தினீர்கள் பாப்தாதாவும் பார்த்தார் ஆனால் ராஜா எத்தனை பேர் ஆனீர்கள் என்ற அந்தப் பட்டியலும் வந்து விடும் இல்லையா?

உலகில் நாலாபுறத்திலுமுள்ள அனைத்து விசேஷ ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் சுயசிந்தனை, ஞான சிந்தனை செய்யக்கூடிய உயர்ந்த

ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தந்தையின் உயர்ந்த வழிப்படி ஒவ்வொரு எண்ணம், சொல் மற்றும் காரியம் செய்யக்கூடிய நெருக்கமான ஆத்மாக்களுக்கு, வைர விழாவிற்காக தன்னை மற்றும் சேவையில் முன்னேற்றம் செய்விக்கக்கூடிய நாலாபுறத்திலும் உள்ள அந்த மாதிரியான விசேஷ ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: எண்ணம் என்ற விதை மூலமாக வார்த்தை மற்றும் செயலில் சித்தியை அடையக்கூடிய சித்தி சொரூபமானவர் ஆகுக!

புத்தியில் என்ன எண்ணம் வருகிறதோ அந்த எண்ணம் தான் விதையாகும். வார்த்தை மற்றும் செயல் விதையின் விஸ்தாரமாகும். ஒருவேளை எண்ணம் அதாவது விதையை திரிகாலதரிசி நிலையில் நிலைத்திருந்து சோதனை செய்யுங்கள், சக்திசாலியானதாக ஆக்கினீர்கள் என்றால் வார்த்தை மற்றும் செயலில் இயல்பாகவே சுலபமான வெற்றி இருக்கவே இருக்கிறது. ஒருவேளை விதை சக்திசாலியானதாக இல்லை என்றால் வார்த்தை மற்றும் யத்திலும் சித்தியின் சக்தி இருப்பதில்லை. சைத்தன்யத்தில் நீங்கள் அவசியம் சித்தி சொரூபமானவராக ஆகியிருக்கிறீர்கள். அதனால் தான் ஜடச்சிலைகள் மூலமாகவும் ஆத்மாக்கள் சித்தியை பிராப்தி செய்கின்றனர்.

சுலோகன்: யோக அக்னியினால் வீணானவற்றின் குப்பையை எரித்து விட்டீர்கள் என்றால் புத்தி சுத்தமாகி விடும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 04.12.1995 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# யதார்த்த நிச்சயம் எனும் அஸ்திவாரத்தின் மூலம் சம்பூர்ண தூய்மையை தாரணை செய்யுங்கள்!

இன்று பாப்தாதா பாரதம் மற்றும் வெளிநாடுகளில் நாலாபுறங்களிலும் உள்ள புதுப்புது குழந்தை களை பார்த்துக் கொண்டிருந்தார். மதுபன்னில் சாகார ரூபத்தில் வந்திருந்தாலும், ஆகார ரூபத்தில் அவரவர்களின் சேவை நிலையங்களில் வந்திருந்தாலும் அப்படி புதியவர்களைப் பார்த்து பாப்தாதா அனைவரின் நிச்சயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஏனென்றால் நிச்சயம் இந்த பிராமண வாழ்க்கையின் முழுமைக்கான அஸ்திவாரம் ஆகும். மேலும் அஸ்திவாரம் உறுதியாக இருக்கிறது என்றால் சலபமாக மற்றும் தீவிர வேகத்தில் சம்பூர்ண நிலை வரை சென்றடைவது நிச்சயமாகும். நிச்சயமும் விதவிதமாக இருந்தது என்று பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார். நான் பரமாத்மா தந்தையின் குழந்தையாக ஆகி விட்டேன், தன்னையும் ஆத்ம சொரூபத்தில் தெரிந்து கொள்வது, ஏற்றுக் கொள்வது, அப்படி நடந்து கொள்வது மற்றும் தந்தையையும் என்னவாக இருக்கிறாரோ அப்படியே தெரிந்து கொள்வது என்ற இதைத் தான் யதார்த்த (மிகச் சரியான) நிச்சயம் என்று கூறுவது.

இரண்டாவது நிச்சயம் -யோகா மூலமாக சிறிது நேரத்திற்காக அமைதியில்லாத நிலையிலிருந்து அமைதியை அனுபவம் செய்கிறார்கள் மற்றும் இடத்தின் சக்திசாலியான வாயுமண்டலம் கவருகிறது மற்றும் பிராமண பரிவாரம், பிராமண ஆத்மாக்களின் ஆத்மீக அன்பு மற்றும் தூய்மையான வாழ்க்கையின் பிரபாவம் ஏற்படுகிறது. சகவாசம் மிகவும் பிடித்திருக்கிறது, உலகத்தின் வாயுமண்டலத்தை ஒப்பிடும் போது இவர்களுடைய தொடர்பு பிடித்திருக்கிறது, ஞானமும் நன்றாக இருக்கிறது. பரிவாரமும் நன்றாக

இருக்கிறது. வாயுமண்டலமும் நன்றாக இருக்கிறது. என்றால் அந்த மாதிரி மனதிற்கு நன்றாகப் பிடித்திருப்பது, அந்த அஸ்திவாரத்தின் ஆதாரத்தில் சென்று கொண்டே இருக்கிறார்கள். இது தான் இரண்டாம் நம்பரில் உள்ளவர்கள். முதல் நம்பர் "யதார்த்த நிச்சயம்" என்று கூறியிருந்தோம் மற்றும் இரண்டாவது நம்பர் "பிடித்திருக்கிறது".

மூன்றாவது நம்பர், உலகியல் உறவினர்களின் துக்கம் நிறைந்த சூழ்நிலைகளிலிருந்து பாதுகாப்பாகி எவ்வளவு நேரம் சேவை நிலையங்களில் இருக்கிறார்களோ அவ்வளவு நேரம் துக்கத்திலிருந்து விடுபட்டு சாந்தியை அனுபவம் செய்கிறார்கள். ஞானத்தின் ஆழத்தில் செல்ல மாட்டார்கள் ஆனால் அமைதியின் பிராப்தியின் காரணமாக சில நேரம் வருவார்கள் மற்றும் சில நேரம் வர மாட்டார்கள் ஆனால் யதார்த்த நிச்சய புத்தி உடையவர்கள் வெற்றி அடைகிறார்கள். மேலும் ஆரம்பத்தில் வரும்பொழுது அமைதியின்மையினால் நொந்து போய் வருகிறார்கள். அமைதி வேண்டுமென்ற விருப்பம் உடையவர்களாக இருக்கிறார்கள் என்று பார்க்கப்படுகிறது. எப்படி தாகம் உள்ளவருக்கு ஒருவேளை ஒரு சொட்டு நீர் கிடைத்து விட்டாலும் மிகப் பெரிய விஷயமாக அனுபவம் செய்வார். அப்படி ஒன்றும் பிராப்தியில்லாத நிலையிலிருந்து பிராப்தி ஆகிறது, பரிவாரத்தில், ஞானத்தில், யோகத்தில், வாயுமண்டலத்தில் வித்தியாசம் தென்படுகிறது. அப்படி தொடக்க காலத்தில் மிக நல்ல ஊக்கம், உற்சாகத்தில் இருக்கிறார்கள், மிகுந்த போதை இருக்கிறது, குஷியும் இருக்கிறது ஆனால் ஒருவேளை முதல் நம்பரின் யதார்த்த நிச்சயத்தின் அஸ்திவாரம் உறுதியாக இல்லை, இரண்டாவது அல்லது மூன்றாவது நம்பரில் மட்டுமே நிச்சயம் இருக்கிறது என்றால் மெது மெதுவாக தொடக்கத்திலிருந்த குஷி, தொடக்கத்திலிருந்த உத்வேகம், குறைந்து அதில் வித்தியாசம் வந்து விடுகிறது.

இந்த சீசனில் புதியவர்கள் அதிகமாக வந்திருக்கிறார்கள், மேலும் வாய்ப்பும் கிடைத்திருக்கிறது, இதுவோ மிக நல்லது தான். பாப்தாதாவிற்கும் இவர்கள் மீண்டும் தன்னுடைய குடும்பத்தில் வந்து சேர்ந்து விட்டார்கள் என்று புதுப்புது குழந்தைகளைப் பார்த்து குஷி ஏற்படுகிறது ஆனால் நிச்சயத்தின் அஸ்திவாரம் உறுதியாக இருக்கிறதா என்று இதை சோதனை செய்யுங்கள். என்னுடைய நிச்சயம்

நம்பர் ஒன் ஆக இருக்கிறதா அல்லது நம்பர் இரண்டாக இருக்கிறதா? ஒருவேளை நம்பர் ஒன் நிச்சயம் இருக்கிறது என்றால், இந்த வாழ்க்கையில் மிக முக்கியமானதாகிய தூய்மையை தாரணை செய்வதில் கடினம் ஏற்படாது. ஒருவேளை தூய்மை, கனவளவில் கூட அசைக்கிறது, குழப்பத்தில் கொண்டு வருகிறது என்றால் நம்பர் ஒன் அஸ்திவாரம் உறுதியாக இல்லை என்று புரிந்து கொள்ளுங்கள். ஏனென்றால் ஆத்மாவின் இயற்கையான குணமே தூய்மை தான். தூய்மையின்மை வெளியிலிருந்து வந்த குணம் ஆகும் மற்றும் தூய்மை தன்னுடைய குணம் ஆகும். அப்படி தன்னுடைய குணத்தின் நிச்சயம் ஏற்பட்டு விட்டது என்றால் வெளியிலிருந்து வந்த குணம் அசைக்க முடியாது. அனேக் குழந்தைகள் முதலிலோ மிக நன்றாக வந்து கொண்டிருந்தோம், இப்பொழுது என்னவாகி விட்டது என்று தெரியவில்லை என்று கூறுகிறார்கள். என்ன ஆகி விட்டது என்றால் தந்தை என்னவாக இருக்கிறார், எப்படி இருக்கிறார் அப்படி அனுபவத்தில் கொண்டு வருவதில்லை. ஒருவேளை தந்தை உடன் இருக்கிறாரா என்று கேட்டால் அனைவரும் கையை உயர்த்துவார்கள். கையை உயர்த்துவதோ மிகவும் சுலபம். ஒருவேளை தந்தை உடன் இருக்கிறார் என்றால் தந்தையின் மகிமையாக முதலில் அவர் சர்வசக்திவான் என்று கூறுகிறீர்கள் -இதை ஏற்றுக் கொள்கிறீர்களா அல்லது தெரிந்து மட்டும் இருக்கிறீர்களா? சர்வ சக்திவான் தந்தை உடன் இருக்கிறார் என்றால் சர்வ சக்திவானின் எதிரில் தூய்மையின்மை வர முடியுமா? வர முடியாது ஆனால் வருகிறதே! அப்படியானால் எங்கிருந்து வருகிறது? வேறு ஏதாவது இடத்திலிருந்தா? திருடர்கள் தனக்காக தனிப்பட்ட வாசலை உருவாக்கிக் கொள்வார்கள். திருட்டு வாசல் என்று இருக்கிறது. அப்படி உங்களிடமோ மறைந்திருக்கும் திருட்டு வாசல் இல்லைதானே? சோதனை செய்யுங்கள். இல்லையென்றால் மாயா எங்கிருந்து வந்தது? மேலே இருந்து வந்ததா? ஒருவேளை மேவே இருந்தும் வந்தாலும் மேலேயே அழிந்து விட வேண்டும். மறைந்திருக்கும் ஏதோ வாசல் வழியாக வருகிறது, அது உங்களுக்குத் தெரிவதில்லை. எனவே மாயா ஏதாவது திருட்டு வாசலை உருவாக்கி வைத்திருக்கவில்லையே என்று சோதனை செய்யுங்கள். ஒருவேளை வாசலை உருவாக்குகிறது என்றாலும் எப்படி உருவாக்குகிறது என்று தெரியுமா? உங்களுடைய விசேஷமான சுபாவம் அல்லது சம்ஸ்காரம் பலஹீனமானதாக

இருக்கும் இல்லையா அதையே மாயா தன்னுடைய வாசலாக உருவாக்கி விடுகிறது. ஏனென்றால், ஏதாவது சுபாவம் அல்லது சம்ஸ்காரம் பலஹீனமானதாக இருக்கிறது என்றால் நீங்கள் எவ்வளவு தான் வாசலை மூடினாலும், ஆனால் பலஹீனமான வாசலாக இருப்பதினால், மாயாவோ அனைத்தையும் தெரிந்திருக்கிறது. அதற்கு இந்த வாசல் பலஹீனமானது என்று தெரிய வந்து விடுகிறது. இதன் மூலம் வழி கிடைக்க முடியும் மற்றும் கிடைத்தும் விடுகிறது. இதனால் நடைமுறையில் தூய்மையின்மையின் எண்ணமும் வருகிறது. வார்த்தைகளும் வருகின்றன, காரியமும் நடந்து விடுகிறது. அப்படி வாசல் திறந்திருந்தது தான் இல்லையா, அதனால் தான் மாயா வந்தது. பின்பு துணை இருக்கிறது என்று எப்படிச் சொல்ல முடியும்? சொல்லும்போது சர்வ சக்திவான் உடன் இருக்கிறார் என்று கூறுகிறீர்கள், அப்படி என்றால் இந்த பலஹீனம் பின்பு எங்கிருந்து வந்தது? பலஹீனம் இருக்க முடியுமா? முடியாது தான் இல்லையா? அப்படியானால் ஏன் இருந்து விடுகிறது. தூய்மையில் அது எந்த விகாரமாக இருந்தாலும், உதாரணமாக பேராசையாக இருந்தாலும் பேராசை சாப்பிடுவதில் மட்டும் இருப்பதில்லை, அனேகர்கள் எங்களுக்கு உடை அணிவதில், உணவு அருந்துவதில் அல்லது வாழ்வதில் அந்த மாதிரி எந்தவொரு கவர்ச்சியும் இல்லை. என்ன கிடைக்கிறதோ, என்ன தயாராகிறதோ அதனை ஏற்று நடந்து கொள்கிறோம் என்று நினைக்கிறார்கள் ஆனால் எப்படி நீங்கள் முன்னேறிச் செல்கிறீர்கள் என்றால் மாயா பேராசையும் இராயல் மற்றும் சூட்சும ரூபத்தில் வருகிறது. அந்த ராயல் பேராசை எது? மாணவர்களாக இருந்தாலும், ஆசிரியராக இருந்தாலும் மாயா இருவரிலும் பேராசையைக் கொண்டு வருவதற்கு, முழுமையான முயற்சி செய்கிறது. உதாரணமாக மாணவன் இருக்கிறார். மிக நல்ல நிச்சய புத்தி உடையவர். சேவாதாரி, அனைத்திலும் நன்றாக இருக்கிறார் ஆனால் எப்பொழுது முன்னேறிச் செல்கிறாரோ அப்பொழுது இந்த ராயல் பேராசை வருகிறது, நான் இவ்வளவு செய்கிறேன், உடலால், மனதால், பொருளால் மேலும் எந்த நேரம் வேண்டுமோ அந்த நேரம் சேவையில் ஆஜராகி விடுகிறேன். இருந்தாலும் என்னுடைய பெயரை, இந்த மாணவன் மிக நல்லவர் என்று டீச்சர் ஒருபொழுதும் வர்ணனை செய்வதில்லை என்ற இந்த பேராசை வந்து விடுகிறது. ஒருவேளை இது வரவில்லை என்றால்,

பின்பு இன்னொரு ரூபம் என்னவாக இருக்கிறது? நல்லது, பெயரைக் கூறி விட்டார் என்றால் அவ்வாறு பெயர் சொல்வதைக் கேட்டு விட்டு. ஆமாம், -நான் அப்படித் தானே இருக்கிறேன், நான் தானே செய்கிறேன். என்னால் தான் செய்ய முடியும் என்ற இந்த அபிமான ஆணவ ரூபத்தில் வந்து விடுவார். அல்லது நிறைய வேலை செய்து வந்திருக்கிறீர்கள் மேலும் யாரும் உங்களை ஒன்றும் கேட்கக்கூட இல்லை, ஒரு டம்ளர் தண்ணீர் கூட குடிக்கக் கொடுக்கவில்லை, பார்க்கவே இல்லை, அவர்களின் வேலையிலேயே அல்லது அவர்களுடைய ஓய்வில் பிஸியாக இருந்தார்கள் என்றால், செய்யவும் வேண்டும், ஆனால் யாரும் ஒரு வார்த்தை கூட கேட்பதில்லை என்ற இந்த உணர்வு வந்து விடுகிறது. அப்படியானால் என்ன செய்ய வேண்டும்? செய்வது அல்லது செய்யாமல் இருப்பது இரண்டுமே ஒன்று தான். இங்கு யாரும் நம்மை கண்டு கொள்வதே இல்லை. இதைவிட வீட்டிலேயே ஓய்வாக அமர்ந்து விடலாம், எப்பொழுது முடியுமோ அப்பொழுது சேவை செய்வோம். இந்த மாதிரி விதவிதமான விகாரங்களின் ராயல் ரூபம் வருகிறது. மேலும் ஒரு விகாரம் வந்து விட்டாலும், உதாரணமாக பேராசை வரவில்லை ஆனால் இந்த அபிமானம் வந்து விட்டது அல்லது தனக்கு மதிப்பு, மரியாதை ஏற்பட வேண்டும் என்ற உணர்வு வந்து விட்டது என்றால், எங்கு இந்த ஒரு விகாரம் இருக்கிறதோ அங்கு பிற நான்கு துணைவர்களும் கூட மறைந்து இருப்பார்கள். மேலும் நீங்கள் ஒருவருக்கு வாய்ப்பு கொடுத்து விட்டீர்கள் என்றால் மறைந்திருக்கும் மற்றவைகள் நேரத்திற்கு ஏற்றாற்போல் தன்னுடைய வாய்ப்பை எடுத்துக் கொண்டே இருக்கும். பின்பு முதலில் இருந்த மாதிரி போதை இப்பொழுது இல்லை, முதலில் மிக நன்றாக இருந்தது, முதலில் மனநிலை மிக நன்றாக இருந்தது, இப்பொழுது என்னவாகி விட்டது என்று தெரியவில்லை என்று கூறுகிறார்கள். மாயா திருட்டு வாசல் வழியாக வந்து விட்டது. இது தான் தெரிய வேண்டியது. எனவே தெரியவில்லை என்று கூறாதீர்கள்.

மேலும் டீச்சர்களுக்கும் வருகிறது. டீச்சருக்கு என்ன தேவையாக இருக்கிறது? சென்டர் நன்றாக இருக்க வேண்டும், உடுத்தும் ஆடை எப்படி வேண்டுமானாலும் இருந்தாலும் ஆனால் சென்டர் கொஞ்சம் வசிப்பதற்குத் தகுதியுள்ள நல்லதாக இருக்க வேண்டும். மேலும் யார் உடன் இருக்கிறார்களோ (துணை சகோதரி) அவர்கள் நல்லவர்களாக

இருக்க வேண்டும், நல்ல மாணவர்களாக இருக்க வேண்டும். மேலும் பாபாவின் உண்டியல் நன்றாக நிரம்ப வேண்டும். ஒருவேளை நல்ல மாணவர் மாற்றலாகிச் சென்று விட்டார் என்றால், இதயம் கொஞ்சம் துடிக்கும். பின்பு, உதவியாளராக அவர் இருந்தார் இப்பொழுது அவர் இங்கிருந்து சென்று விட்டார். என்ன செய்வது? என்று யோசிக்கிறார்கள். உதவி செய்பவராக மாணவர் இருந்தாரா? அல்லது தந்தையா? அப்படியானால் அந்த நேரம் யார் தென்படுகிறார்? மாணவரா அல்லது தந்தையா? அப்படி இந்த ராயல் மாயா அஸ்திவாரத்தை அசைக்க முயற்சி செய்கிறது. ஒருவேளை சர்வசக்திவான் தந்தை உடன் இருக்கிறார் என்ற நிச்சயம் உங்களுக்கு இருக்கிறது என்றால், தந்தை யாரையாவது பொறுப்பாளராக ஆக்கியே விடுவார். அனேகர் இந்த மாதிரியும் யோசிக்கிறார்கள், எங்களுக்கு குறைந்தது ஒரு தடவையாவது அபுவில் நடக்கும் மகாநாட்டில் அல்லது ஏதாவது ஒரு பெரிய மகாநாட்டில் வாய்ப்பு கிடைக்க வேண்டும். சரி. வேறு எந்த வாய்ப்பு இல்லாவிட்டாலும் யோகா முகாமாவது செய்விக்க வேண்டும். இந்த வாய்ப்பும் இருக்க வேண்டும் இல்லையா, சொற்பொழிவு நிகழ்த்துவதற்கு வாய்ப்பு இல்லாவிட்டாலும் மேடையில் வருவதற்கான வாய்ப்பாவது கிடைக்க வேண்டும் இல்லையா? கடைசியில் விநாஷம் ஏற்பட்டு விடும். விநாஷம் வரையிலும் வாய்ப்புக்கான எங்களுடைய பெயர் வராதா, வர வேண்டும் தான் இல்லையா? என்றும் நினைக்கிறார்கள் ஆனால் பாப்தாதா முன்பும் கூறியிருக்கிறார். ஒருவேளை தகுதி இருக்கிறது, மேலும் வாய்ப்பு கிடைக்கிறது என்றால் குஷியோடு செய்யுங்கள் ஆனால் எனக்கும் வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்று எண்ணத்தை உருவாக்குவதும் ஒருவகையில் யாசிப்பதாகும். வேண்டும். வேண்டும் என்கிற இது ராயலாக யாசிப்பதாகும். இது நடக்க வேண்டும்... இவர்கள் என்னை புரிந்து கொள்ளவில்லை. தாதிகள், தீதிகளும் அனைவரையும் தெரிந்திருக்கவில்லை, யார் முன்னுக்கு வருகிறார்களோ அவரை முன்னுக்கு வைத்து விடுகிறார்கள் என்ற இந்த எண்ணம் வருவதும் சூட்சுமமாக யாசிப்பதாகும். உதாரணமாக நீங்கள் மேடையில் வந்து விட்டீர்கள் அல்லது உங்களுடைய ஏதாவது விசேஷத்தின் காரணமாக, யோகா இல்லாவிட்டாலும் கூட, உங்களுடைய நிலை அவ்வளவு நல்லதாக இல்லாவிட்டாலும் கூட, ஆனால் வார்த்தையில், கேட்சிங் பவரில் (கிரகிப்பதில்) விசேஷத் தன்மை இருக்கிறது என்றால் வாய்ப்பு

கிடைத்து விடுகிறது. ஏனென்றால், சிலருடைய வார்த்தையில் இனிமைத் தன்மை இருக்கும், தெளிவு இருக்கும், மேலும் கிரகிக்கும் சக்தி இருக்கிறது என்றால், இங்கே அங்கே உள்ள உதாரணங்களை எடுத்துக் கூறுவார்கள். எனவே அவர்களுக்கு பெயர் ஏற்பட்டு விடுகிறது. யார் வேண்டும்? என்றால் இன்னார் வேண்டும் என்று மனதில் உடனே எண்ணம் உருவாகும். யார் வர வேண்டும்? இன்னார் வரட்டும், அவர் யோகாவில் உறுதியில்லாதவராக இருந்தாலும் கூட இறுதியில் நம்பர் வழங்கப்படுவது என்பது அவர் இத்தனை சொற்பொழிவு நிகழ்த்தினார், இவர் எத்தனை மாணவர்களை மற்றும் சென்டரை உருவாக்கினார் என்பதின் ஆதாரத்தில் இருக்காது ஆனால் தகுதியானவர்களாக எத்தனை பேரை உருவாக்கினார்? என்பதின் ஆதாரத்தில் இருக்கும். சென்டர் உருவாக்குவது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை ஆனால் தகுதியானவர்களாக எத்தனை ஆத்மாக்களை உருவாக்கினார்? 30 சென்டர்களின் பொறுப்பாளர் என்று பெயர் ஏற்பட்டு விடுகிறது. இந்த 30-ல் 15 சென்டர்கள் ஆடிக் கொண்டிருக்கின்றன மற்றும் 15 சரியாக இருக்கின்றன என்றால் லாபமானதா அல்லது பெயர் மட்டும் கிடைத்ததா? இன்னாருக்கு 30-சேவை நிலையங்கள் இருக்கின்றன என்று பெயர் மட்டும் இருக்கிறது ஆனால் வரிசை எண் இதன் ஆதாரத்தில் கிடைக்காது. எத்தனை பேர்களுக்கு சுகம் கொடுத்தார், எவ்வளவு சுயம் அவரே சக்திசாலியாக இருந்தார் என்பதின் ஆதாரத்தில்தான் அவரது வரிசை எண் கிடைக்கும். எனவே இந்த வேண்டும். வேண்டும் என்பதை முடிவு கட்டுங்கள். இல்லையென்றால் யோகா செய்ய முடியாது. இந்த இடத்தில் புரோகிராம் நடந்தது இருந்தும் என்னை அழைக்கவில்லை. நேற்றைய முன்தினம் இந்த இடத்தில் நடந்தது. நேற்று இங்கே நடந்தது, இன்று இங்கு நடந்தது என்று தினசரி இதையே பார்த்துக் கொண்டிருப்பீர்கள். அப்படியானால் யோகா வருமா அல்லது எண்ணிக் கொண்டே இருப்பீர்களா?.

எனவே யதார்த்த நிச்சயமாக என்ன இருக்கிறதோ அதை உறுதிப்படுத்துங்கள் என்ற இது தான் முக்கியமான விஷயம் ஆகும். சொல்வதற்கோ நான் ஆத்மா ஆவேன் மற்றும் எனது தந்தை சர்வ சக்திவான் ஆவார் என்று கூறிவிடுகிறீர்கள் ஆனால் நடைமுறையில் மற்றும் காரியத்தில் வர வேண்டும். தந்தை சர்வ சக்திவானாக இருக்கிறார், ஆனால் என்னை மாயா அசைத்துக் கொண்டிருக்கிறது

என்றால் உங்களுடைய தந்தை சர்வ சக்திவான் என்று யார் ஏற்றுக் கொள்வார்? ஏனென்றால் அவருக்கும் மேலே வேறு யாருமே கிடையாது. அப்படி இன்று பாப்தாதா நிச்சயத்தின் அஸ்திவாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். புதியவரானாலும், பழையவரானாலும் இந்த நிச்சயத்தின் அஸ்திவாரத்தை நடைமுறையில் கொண்டு வாருங்கள். மேலும் தேவையான நேரத்தில் உபயோகப்படுத்துங்கள். காலம் கடந்து சென்று விடுகிறது, பிறகு தந்தையின் எதிரில் என்ன செய்வது, பாபா இந்த மாதிரி ஆகி விட்டது, நீங்களோ இரக்க மனம் உடையவர், இரக்கம் காட்டுங்கள் என்று வேதனைப்படும் நிலையில் வருகிறீர்கள் என்றால் இது என்னவானது? இதுவும் ராயலாக வேதனைப்படுவது தான். உடன் இருக்கிறார் என்றால் யாருக்குமே தைரியம் கிடையாது, நிச்சய புத்தி என்பதின் அர்த்தமே வெற்றி அடைவது தான். ஒருவேளை ஏதாவது பழைய கணக்கு வழக்கு வந்தாலும் கூட மனதை அசைக்காதீர்கள். மனநிலையை மேலே கீழே ஆக்காதீர்கள். வந்து விட்டது என்றாலும் அதை தூரத்திலிருந்தே உடனே அழித்து விடுங்கள். இப்பொழுது யுத்தம் செய்பவராக ஆகாதீர்கள். அனேகர் இப்பொழுது நிரந்தர யோகியாக ஆகவில்லை கொஞ்ச நேரம் யோகியாக மற்றும் கொஞ்ச நேரம் யுத்தம் செய்யும் போர்வீரராக இருக்கிறார்கள் ஆனால் உங்களை நீங்கள் என்னவென்று கூறிக் கொள்கிறீர்கள். யோகி என்றா அல்லது யத்தம் செய்பவர் என்றா? சகஜயோகி என்று கூறுகிறீர்கள். அப்படி புதியதாக யார் வந்திருக்கிறார்களோ அவர்களுக்கு பாக்கியம் பிராப்தி செய்வதற்கான வாழ்த்துக்களை பாபா மீண்டும் கூறுகிறார் ஆனால் வாழ்த்துக்களின் கூடவே அஸ்திவாரம் நம்பர் ஒன்னாக இருக்கிறதா? அல்லது இரண்டாம் நம்பரா என்று இதையும் சோதனை செய்யுங்கள்.

ஞானம் யோகம் மிகவும் பிடித்திருக்கிறது என்று அனேகர் கூறுகிறார்கள். பிடித்திருக்கிறது அது சரி தான், ஆனால் காரியத்தில் கொண்டு வருகிறீர்களா? ஞானம் என்றால் ஆத்மா, பரமாத்மா, நாடகம் என்று சொல்வதில்லை. ஞானத்தின் அர்த்தமே அறிவு/விவேகம். அறிவு நிறைந்தவர் எப்படி நேரமோ அப்படி விவேகத்துடன் நடந்து எப்பொழுதும் வெற்றி அடைவார். வாழ்க்கையில் எப்பொழுதாவது துக்கம் வருகிறது என்றால் என்ன நினைக்கிறீர்கள்? தெரியவில்லை, எனக்கு ஏன் இது புரியவில்லை என்று இதைத் தான் கூறுவீர்கள். அப்படியானால் அறிவு நிறைந்தவரா? ஞானியா? ஆம் அல்லது இல்லை

என்று பதில் கூறுங்கள். (ஆமாம்) ஆம் என்றோ மிக நன்றாக கூறுகிறீர்கள், அறிவு நிறைந்தவரின் அடையாளம் ஒருபொழுதும் ஏமாற்றம் அடைய மாட்டார். மேலும் எப்பொழுதும் க்ளீன் மற்றும் க்ளியர் (சுத்தமான மற்றும் தெளிவான) புத்தியுடையவர் என்பது தான் ஞானி, யோகியின் அடையாளமாகும். மேலும் தாரணை நிறைந்ததின் அடையாளம் எப்பொழுதும் தானும் டபுள் லைட்டாக இருப்பார். எவ்வளவு தான் பொறுப்பு இருந்தாலும் தாரணை சொரூபமானவர் எப்பொழுதும் டபுள் லைட் ஆக இருப்பார். மேளா (மகாநாடு) நடந்தாலும், ஜமேளா (பிரச்சனை) நடந்தாலும் இரண்டிலும் டபுள் லைட் நிலை. மேலும் சேவாதாரியின் அடையாளமாவது எப்பொழுதும் தான் ஒரு கருவி மற்றும் பணிவுடையவர் என்ற உணர்வு இருப்பது. அப்படி இந்த அனைத்தையும் தன்னுள் சோதனை செய்யுங்கள். சொல்வதற்கோ அனைவரும் நான்கு பாடங்களின் இறை மாணவர்கள் என்று கூறுகிறீர்கள். அப்படியானால் அடையாளம் தென்பட வேண்டும்.

ஆக, புதியவர்கள் என்ன செய்வீர்கள்? தன்னுடைய நிச்சயத்தை இன்னும் உறுதியாக்க வேண்டும், இல்லையென்றால் என்னவாகும்? இரண்டு வருடங்கள் இருப்பீர்கள், மூன்று வருடங்கள் இருப்பீர்கள் பிறகு திரும்பி பழைய உலகத்தில் சென்று விடுவீர்கள். மேலும் யார் திரும்பிச் செல்கிறார்களோ அவர்கள் அந்த உலகத்திலும் செட் ஆக முடிவதில்லை. இந்த உலகத்திலும் இருப்பதில்லை, அந்த உலகத்திலும் இருப்பதில்லை. எனவே தன்னுடைய அஸ்திவாரத்தை மிகவும் உறுதியாக்குங்கள். சர்வ சக்திவான் தந்தை உடன் இருக்கிறார் என்று அனுபவம் செய்யுங்கள். இந்த ஒரு விஷயத்தை மட்டும் அனுபவம் செய்தாலும் அனைத்திலும் தேர்ச்சி அடைந்து விடுவீர்கள். வெளியுலகத்து பிரதம மந்திரி இருக்கிறார். மந்திரி இருக்கிறார் என்றால் அவருடைய துணை இருப்பதின் போதையும் இருக்கிறது இல்லையா? இவரோ சர்வ சக்திவான் ஆவார்.

நல்லது, நாலாபுறங்களிலுமுள்ள எப்பொழுதும் உயர்ந்த பாக்கியம் நிறைந்த பாக்கியத்தை உருவாக்குபவரை தன்னுடையவராக ஆக்கக்கூடிய அந்த மாதிரி உயர்ந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் பாப்தாதாவின் ஸ்ரீமத்தை கேட்டார் மற்றும் செய்தார் என்றிருக்கும் அனைத்து உண்மையான குழந்தைகளுக்கு, எப்பொழுதும் சேவையில்

உறுதியாக இருக்கக்கூடிய, பிரச்சனைகளிலிருந்து விடுபட்டு மேலும் பரமாத்மா சந்திப்பின் விழாவை கொண்டாடக்கூடிய அனைத்து குழந்தைகளுக்கும் பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: அனைத்து பொக்கிஷங்களை காரியத்தில் ஈடுபடுத்தி அவற்றை அதிகரிக்கக்கூடிய யோகியிலிருந்து பிரயோகி (உபயோகிக்கும்) ஆத்மா ஆகுக!

பாப்தாதா குழந்தைகளுக்கு அனைத்து பொக்கிஷங்களையும் பிரயோகம் செய்வதற்காகக் கொடுத்திருக்கிறார். யார் எவ்வளவு பிரயோகி ஆகிறாரோ, பிரயோகியின் அடையாளம் முன்னேற்றம். ஒருவேளை முன்னேற்றம் இல்லை என்றால் பிரயோகி இல்லை என்பதாகும். யோகாவின் அர்த்தமே பிரயோகத்தில் கொண்டு வருவது. எனவே உடல், மனம், செல்வம் மற்றும் பொருட்கள் என்னவெல்லாம் தந்தை மூலமாக கிடைத்திருக்கும் சொத்துக்களோ அவற்றை அலட்சியத்தின் காரணமாக வீணாக இழக்காதீர்கள். மாறாக அவற்றை காரியத்தில் ஈடுபடுத்தி ஒன்றை பத்து மடங்காக அதிகரிக்க வேண்டும், குறைந்த செலவில் நிறைந்த பிராப்தி அடைபவராக ஆக வேண்டும். இது தான் யோகியிலிருந்து பிரயோகி ஆத்மா ஆகுபவரின் அடையாளம் ஆகும்.

சுலோகன்: தீய செயல்கள் மற்றும் விகாரங்களை தியாகம் செய்வது தான் உண்மையான தியாகம் ஆகும்!

✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷

# 13.12.1995 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வீணான பேச்சு, தொந்தரவு செய்யும் பேச்சிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு பேச்சில் சிக்கனத்தை கடைப்பிடியுங்கள்!

இன்று பாப்தாதா நாலாபுறங்களிலுமுள்ள ஆத்மாக்களை உங்கள் அனைவருடன் சேர்த்து பார்த்துக் கொண்டிருக்கிறார். நாலாபுறங்களிலுமுள்ள குழந்தைகள் ஆகார (ஒளி வடிவமான) ரூபத்தில் பாப்தாதாவின் எதிரில் இருக்கிறார்கள். சாகாரம் மற்றும் ஆகாரம் அப்படி இரண்டு சபைகள், இரண்டும் எவ்வளவு பெரிய சபைகளாக இருக்கின்றன. பாப்தாதா இரண்டு சபைகளின் குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார் ஏனென்றால் பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் விசேஷமாக இரண்டு ரூபங்களில் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒன்று ஒவ்வொரு குழந்தையும் இந்த அனைத்து மனித ஆத்மாக்களின் முன்னோர்கள் மற்றும் முழு மரத்தின் அஸ்திவாரமாக இருக்கிறார்கள். ஏனென்றால், வேரிலிருந்து தான் முழு மரமும் வளர்கிறது மற்றும் இன்னொரு ரூபத்தில் பெரியவர்களையும் முன்னோர்கள் என்று கூறுவார்கள். அப்படி படைப்பின் தொடக்கத்தில் ஆத்மாக்கள் உங்களுடைய பங்கு தான் இருந்தது. எனவே நீங்கள் பெரியதிலும் பெரியவராக இருக்கிறீர்கள். இந்தக் காரணத்தினால் அனைத்து ஆத்மாக்களின் முன்னோர்களாக இருக்கிறீர்கள். கூடவே உயர்ந்ததிலும் உயர்ந்த முதல் படைப்பு பிராமண ஆத்மாக்கள் நீங்கள் தான். அந்த மாதிரி எப்படி உயர்ந்ததிலும் உயர்ந்தவர் பகவான். அதே போல் பெரியதிலும் பெரிய முன்னோர்கள் நீங்கள் ஆவீர்கள். அப்படி இந்த முழு பூர்வஜ குழந்தைகளைப் பார்த்து தந்தை மகிழ்ச்சி அடைகிறார். நாங்கள் முன்னோடியானவர்கள் என்று நீங்களும் மகிழ்ச்சி அடைகிறீர்களா?

அதே நிச்சயம் மற்றும் போதையில் இருக்கிறீர்களா? அப்படி பாப்தாதா இன்று முன்னோர்களின் சபையை பார்த்துக் கொண்டிருக்கிறார்.

நீங்கள் அனைவரும் யார் தந்தையின் குழந்தைகளாக இருக்கிறீர்களோ, அவர்கள் மாயாவிடம் இருந்து பாதுகாக்கப்பட்டிருக்கிறீர்கள். குழந்தையின் அர்த்தமே தந்தையினுடையவராக ஆவது அதாவது குழந்தை ஆவது அப்படி மாயாவிடம் இருந்து பாதுகாக்கப்பட்டு தந்தையின் குழந்தை ஆகிறீர்கள். நீங்கள் அனைவரும் மாயாவிடமிருந்து பாதுகாக்கப்பட்டிருக்கிறீர்கள் தான் இல்லையா? அல்லது எப்பொழுதாவது அதனுடைய பிடியில் வந்து விடுகிறீர்களா? அந்த மாதிரியும் சக்கர வியூகம் இருக்கிறது. அதிலிருந்து பல முறைகளால் வெளியாக வேண்டியதாக இருக்கிறது. அப்படி ஏதாவது மாயாவின் சக்கர வியூகத்தில் மாட்டிக் கொள்பவராகவோ இல்லையே? ஏதாவது சக்கரம் இருக்கிறதா? பாதுகாக்கப் பட்டிருக்கிறீர்களா? ஆமாம். இங்கே ஆமாம் என்று கூறிச் செல்கிறீர்கள், பின்பு அங்கே சென்ற பிறகு இல்லை என்று அப்படி செய்யாதீர்கள். எப்பொழுது ஒரு தடவை சக்கரத்திலிருந்து வெளியாவதற்கான வழி அல்லது விதி வந்து விட்டதோ பின்பு மாட்டிக் கொள்வதற்கான விஷயமே இல்லை. மாயாவையும் மிக நன்றாகத் தெரிந்து கொண்டீர்கள் தான் இல்லையா அல்லது சில நேரம் தெரியாதவர்கள் ஆகி விடுகிறீர்களா? பின்பு இது மாயா என்று எனக்குத் தெரியவே இல்லை என்று கூறுகிறீர்கள் ஏனென்றால் இன்றைய நாட்களில் நாகரீகமாக விதவிதமான முகமூடிகளை அதிகமாக அணிகிறார்கள். இந்த நேரம் ஒரு ரூபத்தில், அடுத்த நேரம் வேறு ரூபத்தில் இருக்கிறார்கள். அப்படி மாயாவிடமும் மாட்டிக் கொள்ள வைப்பதற்கான முகமூடிகள் அதிகமாக இருக்கிறது. அதனிடம் நல்ல பெரிய கடை இருக்கிறது. எந்த நேரம் எந்த ரூபத்தை தாரணை செய்ய விரும்புகிறதோ அந்த நேரம் தாரணை செய்து விடுகிறது. மேலும் ஒருவேளை தெரிந்தும் தெரியாமலோ மாட்டிக் கொண்டு விட்டால் வெளியாவதற்கு நீண்ட காலம் எடுக்கும். மேலும் சங்கமயுகத்தின் ஒரு நொடி வீணாகிறது என்றால் ஒரு வருடத்தை இழப்பது. சங்கமயுகம் எவ்வளவு சிறியது என்று போசித்துப் பாருங்கள். இப்பொழுது வைர விழா கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். மேலும் இந்த கொஞ்ச காலத்தில் என்ன ஆக வேண்டுமோ, என்ன சேமிக்க வேண்டுமோ அதை இப்பொழுது செய்ய முடியும். ஆவதற்கான காலம்

எவ்வளவு குறைவாக இருக்கிறது. மேலும் முழுக் கல்பத்திற்காக ஆவீர்கள் என்று பாப்தாதா பார்த்தார். எங்கே 5000-வருடங்கள் மேலும் எங்கே இப்பொழுது 60-வருடங்கள், இன்னும் கொஞ்ச காலம் இருந்தாலும் 1000'ன் எண்ணிக்கையிலோ வராது இல்லையா?

இந்தக் கொஞ்ச காலத்தில் ராஜ்ய அதிகாரி ஆவதற்காக மற்றும் ராஜ குடும்பத்தில் வருவதற்காக என்ன செய்ய வேண்டியது இருக்கும்? பார்க்கப்போனால் எண்ணிக்கையின் கணக்குப்படி சத்யுகத்தில் உலக ராஜ சிம்மாசனம் அனைவருக்குமோ கிடைக்கவும் முடியாது. உதாரணமாக முதலில் லட்சுமி நாராயணனோ ஆசனத்தில் அமர்வார்கள் ஆனால் யார் முதல் லட்சுமி நாராயணனின் இராஜ குடும்பத்தினராக இருப்பார்களோ அவர்களுக்கும் அனைவர் மூலமாக அன்பு மற்றும் மரியாதை கிடைக்கிறது. அப்படி ஒருவேளை முதல் இராஜ்யத்தின் ராஜ குடும்பத்திலும் வருகிறீர்கள் என்றால் அது முதல் நம்பராகும். பெரிய ஆசனத்தில் அமராவிட்டாலும் கூட பிராப்தி நம்பர் ஒன் கணக்குப்படி தான் இருக்கும். இல்லையென்றால் உங்கள் அனைவருக்கும் திரேதாயுகம் வரையிலும் ஆசனம் எப்படி கிடைக்கும்? ஆனால் உலக ராஜ்ய அதிகாரி ஆக வேண்டும் என்ற லட்சியமோ அனைவருக்கும் இருக்கிறது இல்லையா? அல்லது அங்கேயும் மாகாணத்தின் ராஜாவாக ஆகி விடுவீர்களா? அப்படி முதல் நம்பரின் ராயல் குடும்பத்தில் வருவது இதுவும் உயர்ந்த முயற்சி செய்வதாகும். சிலருக்கு ஆசனம் கிடைக்கிறது. மேலும் சிலருக்கு ராஜ குடும்பம் கிடைக்கிறது. இதற்கும் ஆழமான ரகசியம் இருக்கிறது.

யார் சங்கமயுகத்தில் எப்பொழுதும் தந்தையின் இதய சிம்மாசனத்தில் இயல்பாக மற்றும் எப்பொழுதாவதன்றி நிரந்தரமாக இருக்கிறாரோ, யார் எப்பொழுதும் தொடக்கத்தில் இருந்து கடைசி வரை கனவளவில் கூட, எண்ணத்தின் அளவில் கூட தூய்மையின் விரதத்தில் எப்பொழுதும் இருக்கிறாரோ, கனவளவில் கூட தூய்மையின்மையை தொடவில்லையோ அந்த மாதிரியான உயர்ந்த ஆத்மாக்கள் ஆசனதாரிகளாக ஆக முடியும். யார் நான்கு பாடங்களிலும் நல்ல மதிப்பெண்கள் பெற்றிருக்கிறாரோ, தொடக்கத்திலிருந்து கடைசி வரை நல்ல எண்ணில் பாசாகி இருக்கிறாரோ அவரைத் தான் மதிப்புடன் தேர்ச்சி பெற்றவர் (பாஸ் வித் ஹானர்) என்று கூறுவது. இடையிடையே

மதிப்பெண் குறைந்தது, பின்பு சரி செய்தார், இவ்வாறு சரி செய்தவராக இல்லாமல் தொடக்கத்திலிருந்து நான்கு பாடங்களிலும் தந்தையின் மனதிற்குப் பிடித்தமானவராக இருக்கிறார் என்றால், அவர் தான் ஆசனத்தை அடைய முடியும். கூடவே யார் பிராமண உலகத்தில் அனைவரின் அன்பிற்குரியவர், அனைவரின் சகயோகியாக இருக்கிறார், பிராமண குடும்பத்தின் ஒவ்வொருவரும் உள்ளப்பூர்வமாக அவரை மரியாதை செய்கிறார் என்றால், அந்த மாதிரி மரியாதைக்குரியவர் ஆசனதாரியாக ஆக முடியும். ஒருவேளை இந்த விஷயத்தில் ஏதாவது ஒன்றில் குறை இருக்கிறது என்றால், அவர் வரிசைக்கிரமமாக ராஜ குடும்பத்தில் வர முடியும். முதலில் வந்தாலும் சரி அல்லது எட்டாவதில் வந்தாலும் சரி அல்லது திரேதாயுகத்தில் வந்தாலும் சரி, வரிசைக்கிரமமாக ராஜ குடும்பத்தில் வர முயும். அப்படி ஒருவேளை சிம்மாசனதாரியாக ஆக வேண்டும் என்றால், இந்த அனைத்து விஷயங்களையும் சோதனை செய்யுங்கள். ஒருவேளை சேவையில் 100-மதிப்பெண்கள் சேமிப்பாகியிருக்கிறது ஆனால் தாரணையில் 25-சதவிகிதம் என்றால் என்னவாகும்? அவர் அதிகாரியாக ஆக முடியமா? அனேக் குழந்தைகள் மற்ற பாடங்களில் முன்னுக்குச் சென்று விடுகிறார்கள் ஆனால் நடைமுறை தாரணையில் எப்படி நேரமோ அப்படி தன்னை வளைத்துக் கொள்வது தான் உண்மையான தங்கத்திற்குச் சமமாக உயர்ந்தவர் ஆவது. சில நேரங்களில் மாயா குழந்தைகளை விட புத்திசாலியாகி விடுகிறது அது உடனேயே நேரத்திற்குத் தகுந்தாற்போல் சொரூபத்தை தாரணை செய்து விடுகிறது. மேலும் குழந்தைகள் என்ன கூறுகிறார்கள்? தந்தையிடமோ அனைவரின் விஷயங்கள் வருகிறது தான் இல்லையா? உதாரணமாக ஒருவர் மேல் தவறு இருக்கிறது மற்றும் இன்னொருவர் சரியாக இருக்கிறார் சில நேரம் இரண்டு பக்கங்களிலும் ஏதாவது குறை இருக்கிறது அந்த மாதிரியும் ஆகிறது ஆனால் ஒருவேளை நீங்கள் முற்றிலும் உங்களை சரி மற்றும் மற்றவரை முற்றிலும் தவறு என்று நினைக்கிறீர்கள் என்றால், நீங்கள் உண்மையிலேயே சரியாக இருந்து அவர் மீது தவறு என்றாலும் எப்படி நேரமோ, எப்படி சூழ்நிலையோ அப்படியே தன்னை உள்ளடக்க வேண்டியதிருந்தாலும், அழிக்க வேண்டியதாக இருந்தாலும், தன்னை விலகியிருப்பவராக ஆக்கிக் கொள்ள வேண்டியதாக இருந்தாலும் அப்படியே தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும் ஆனால் குழந்தைகள் ஒவ்வொரு விஷயத்திலும்

ஒவ்வொரு நேரமும் நாங்கள் தான் இறக்க வேண்டுமா (கஷ்டத்தை அனுபவிக்க வேண்டுமா) என்று கூறுகிறார்கள். இறப்பதற்காக நாங்கள் இருக்கிறோம் மற்றும் மகிழ்ச்சியோடு இருப்பதற்கு அவர்கள் இருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள். எப்பொழுதுமே இறக்க வேண்டும். இவ்வாறு இறப்பகோ மிகக் கடினம். மர்ஜீவா (உடலிலிருந்து கொண்டே இறந்தவராகவோ) ஆகி விட்டீர்கள். அதுவோ சுலபம். பிரம்மா குமார் பிரம்மா குமாரி ஆகி விட்டீர்கள் என்றாலும் மர்ஜீவா ஆகி விட்டீர்கள் இல்லையா? அப்படி இவ்வாறு இறப்பது மிகவும் சுலபமாகி விட்டது. இறந்து விட்டீர்கள், பிரம்மாகுமாரி ஆகி விட்டீர்கள் ஆனால் அடிக்கடி இப்படி இறப்பது மிகவும் கடினம். கடினம் தான் இல்லையா? சிறியவர்கள் கூறுகிறார்கள், நாங்கள் தான் அதிகமாக இறக்க வேண்டியதாக இருக்கிறது, மேலும் பெரியவர்களோ நாங்கள் தான் அதிகமாகக் கேட்க வேண்டியதாக இருக்கிறது என்று கூறுகிறார்கள். அப்படி உங்களுக்கு சகித்துக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது, அவர்களுக்கு கேட்க வேண்டியதாக இருக்கிறது என்றால் இறப்பது யாருக்கு? யார் இறந்தார்கள்? ஒருவர் இறந்தாரா, இருவருமே இறந்தார்களா? இருவருமே இறந்து விட்டார்கள் என்றால் விஷயம் முடிந்தது. அனைத்துமே முடிந்தது. அப்படியானால் இறக்கத் தெரியுமா? அல்லது கொஞ்சம் கடினமாக இருக்கிறதா? கொஞ்சம் மூச்சு தினறுகிறதா, மூச்சு விடுவது கடினமாக இருக்கிறதா? கஷ்டமாக இருக்கிறதா? அந்த நேரம் நான் தான் இறக்க வேண்டுமா என்ன, நான் தான் மாற வேண்டுமா. மாற வேண்டிய பொறுப்பு என்னுடையது மட்டும் தானா. மற்றவர் களுடையதும் இருக்கிறது இல்லையா என்று கூறுகிறீர்கள் தான் இல்லையா. நீ இவ்வளவு சாகு மற்றும் நான் இவ்வளவு சாகிறேன் என்று பாதிப் பாதியாக ஆக்கி விடுங்கள். பாப்தாதாவிற்கோ அந்த நேரம் மிகவும் இரக்கம் வருகிறது ஆனால் இந்த இறப்பது, இறப்பது அல்ல. இந்த இறப்பது நிரந்தரமாக வாழ்வதாகும். மக்கள் இறக்காமல் சொர்க்கம் கிடைக்காது என்று கூறுகிறார்கள் தான் இல்லையா. அந்த இறப்பினால் சொர்க்கம் கிடைப்பதில்லை ஆனால் இந்த இறப்பினால் சொர்க்கத்தின் அதிகாரம் அவசியம் கிடைக்கும். எனவே இந்த இறப்பது என்றால் சொர்க்கத்தின் அதிகாரி ஆவது. இறக்க வேண்டும். இறக்க வேண்டும், சகித்துக் கொள்ள வேண்டும் என்று பயந்து விடுகிறீர்கள் இல்லையா, சிறிய விஷயம் பெரியதாகி விடுகிறது. எந்த திருடனும் கொள்ளைக்காரனும் இல்லை

ஆனால் உங்களிடம் கொள்ளைக்காரன் இருக்கிறான், திருடன் இருக்கிறான் என்று பயம் ஏற்பட்டு விட்டது என்றால் பயம் காரணமாக என்ன ஆகிறது? பயத்தினால் ஒன்றோ இதயத்துடிப்பு மேலே கீழே போகும் அல்லது இரத்த அழுத்தம் மேலே கீழே போகும். பயத்தினால் இப்படி ஆவது தான் இல்லையா. அப்படி பயந்து விடுகிறீர்கள். இறப்பது பெரிய விஷயம் இல்லை ஆனால் உங்களுடைய பயம் பெரிய விஷயம் ஆக்கி விடுகிறது. பின்பு தெரியவில்லை, எனக்கு என்ன ஆகி விட்டது என்று கூறுகிறீர்கள் ஆனால் எப்படி தைரியத்துடன் மர்ஜீவா ஆவதில் பயப்படவில்லை, குஷியோடு செய்தீர்கள், அந்த மாதிரி குஷியோடு பரிவர்த்தனை செய்ய வேண்டும். இறப்பது என்ற வார்த்தை இல்லை ஆனால் நீங்கள் இறப்பது, இறப்பது என்ற வார்த்தையை கூறி விட்டீர்கள். எனவே பயந்து விடுகிறார்கள். உண்மையில் இது இறப்பது இல்லை ஆனால் தன்னுடைய தாரணையின் பாடத்தில் வரிசை எண் முன்னுக்கு எடுப்பதாகும். சகித்துக் கொள்வதில் பயப்படாதீர்கள். ஏன் பயப்படுகிறீர்கள்? ஏனென்றால் பொய்யான விஷயத்தை நாம் ஏன் சகித்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறீர்கள் ஆனால் சகித்துக் கொள்வதற்கான கட்டளையை யார் கொடுத்தார்? பொய் பேசுபவர்கள் கொடுத்தார்களா? அனேக் குழந்தைகள் சகித்தும் கொள்கிறார்கள் ஆனால் வலுக்கட்டாயமாக சகித்துக் கொள்வது மற்றும் அன்போடு சகித்துக் கொள்வது இதில் வித்தியாசம் இருக்கிறது. விஷயத்தின் காரணமாக சகித்துக் கொள்வது இல்லை ஆனால் சகித்துக் கொள்பவராக ஆகுங்கள் என்று தந்தையின் கட்டளை இருக்கிறது. அப்படி தந்தையின் கட்டளையை ஏற்று நடக்கிறீர்கள் என்றால் பரமாத்மாவின் கட்டளைப்படி நடப்பது என்பது குஷிக்கான விஷயம் தான் இல்லையா அல்லது கட்டாயப்படுத்தப்படுகிறீர்களா? அனேக தடவைகள் சகித்தும் கொள்கிறீர்கள் ஆனால் கொஞ்சம் அன்பும் இருக்கிறது, கட்டாயமும் இருக்கிறது. இரண்டும் கலந்து விடுகிறது. எப்பொழுது சகித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்றால் அதை ஏன் குஷியோடு செய்யக்கூடாது. ஏன் கட்டாயத்தினால் செய்ய வேண்டும். அந்த நபர் எதிரில் வருகிறார் என்றால் கட்டாயம் செய்ய வேண்டும் என்று தோன்றுகிறது மேலும் தந்தை எதிரில் வந்தால் தந்தையின் கட்டளையைக் கடைப்பிடிக்கிறீர்கள் என்றால் அன்பு ஏற்படுமேயன்றி கட்டாயப்படுத்தப்பட்ட உணர்வு ஏற்படாது. எனவே இந்த வார்த்தையை நினைக்காதீர்கள். இன்றைய நாட்களிலோ இறக்க வேண்டும். இறக்க

வேண்டும், எதுவரை இறக்க வேண்டும். கடைசி வரையா? அல்லது இரண்டு வருடமா, ஒரு வருடமா? ஆக, இறந்து விட்டால் நல்லது ஆனால் எதுவரை இறப்பது? என்ற இதுவோ சாதாரணமாகி விட்டது ஆனால் இது இறப்பது அல்ல அதிகாரத்தை அடைவது. அப்படியானால் என்ன செய்வீர்கள்? இறப்பீர்களா? இந்த இறப்பது என்ற வார்த்தையை முடித்து விடுங்கள். இறப்பது என்பதை நினைக்கிறீர்கள் இல்லையா? அதனால் இறப்பதில் பயம் ஏற்படுகிறது. தன்னுடைய மரணத்தையோ விடுங்கள். சிலரோ மற்றவர்களின் மரணத்தைப் பார்த்தும் பயந்து விடுகிறார்கள். எனவே இந்த வார்த்தையை மாற்றம் செய்யுங்கள், அந்த மாதிரி வார்த்தைகளைப் பேசாதீர்கள். சுத்தமான பாஷையில் பேசுங்கள். பிராமணர்களின் அகராதியில் இந்த வார்த்தையே இல்லை. யார் தொடங்கினார் என்று தெரியவில்லை. செய்தது என்னவோ யாரோ உங்களில் ஒருவர் தான் இல்லையா? நீங்கள் என்றால் எதிரில் அமர்ந்திருக்கிறீர்கள் அவர்கள் இல்லை, பிராமணர்கள் தான் செய்தார்கள். பாப்தாதா இதை ஒரு உதாரணமாகக் கூறினார், ஆனால் முழு நாளில் அந்த மாதிரி வீணான வார்த்தைகள் அல்லது கேளிக்கையான வார்த்தைகள் அதிகம் கூறுகிறார்கள். நல்ல வார்த்தை கூற மாட்டார்கள். இது விளையாட்டாகக் கூறி விட்டேன், உண்மையிலேயே என்னுடைய நோக்கம் அதுவல்ல என்று கூறுவார்கள். அந்த மாதிரி பேசுவது உங்களுடைய பிராமண வாழ்க்கையின் நியமத்தில் இருக்கிறதா? எழுதப்பட்டிருக்கவில்லை. கிண்டல், கேலி செய்யலாம் என்று எப்பொழுதாவது படித்திருக்கிறீர்களா? கேலி செய்யுங்கள் ஆனால் ஞானம் நிறைந்த, யோகம் நிறைந்த நிலையோடு மற்றபடி வீணான கேலி எதை நீங்கள் கேலி என்று நினைக்கிறீர்களோ, அதனால் மற்றவர்களின் மனநிலை பாதிக்கப்படுகிறது என்றால் அது கேலியானதா அல்லது துக்கம் கொடுப்பதானதா?

அப்படி இன்று அனைவரும் பூர்வஜமானவர்கள் மற்றும் அனைவரையும் விட பெரியதிலும் பெரிய பூஜைக்குரிய ஆத்மாக்கள் நீங்கள் என்று பாப்தாதா பார்த்தார். உங்களுக்கு நடக்கும் பூஜை மாதிரி முழுக் கல்பத்தில் யாருக்கும் நடப்பதில்லை. அப்படி பூர்வஜமானவர்களாகவும் இருக்கிறீர்கள் மற்றும் பூஜைக்குரியவர்களாகவும் இருக்கிறீர்கள்.ஆனால்

பூஜைக்குரியவர்களிலும் வரிசைக்கிரமம் இருக்கிறது. யார் யார் பிராமணன் ஆகிறாரோ அவருடைய பூஜை அவசியம் நடக்கிறது ஆனால் சிலருக்கு விதிப்பூர்வமாக நடக்கிறது மற்றும் சிலருக்கு பெயரளவிற்கு நடக்கிறது. அப்படி எந்த பிராமணர்கள் இங்கேயும் யோகாவில் அமர்கிறார்கள், ஆனால் பெயரளவிற்கு, கொஞ்சம் தூங்கினார். கொஞ்சம் யோகா செய்தார், கொஞ்சம் வீணானதை நினைத்தார் மற்றும் கொஞ்சம் நல்லதை நினைத்தார். இதுவோ பெயரளவிற்கு யோகா செய்ததாக ஆனது இல்லையா? வெண்ணிற மின்விளக்கு எரிந்தது காரியம் முடிந்து விட்டது அந்த மாதிரி தாரணையிலும் பெயரளவிற்கு இருப்பவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஏதாவது சோதனை வந்தது என்றால் இப்பொழுதோ அப்படி செய்து ஓட்டி விடு பின்பு பார்த்துக் கொள்ளலாம் என்று கூறுவார்கள். அந்த மாதிரியானவர்களின் பூஜையும் பெயரளவிற்குத் தான் நடக்கிறது. பாருங்கள், லட்சக்கணக்கான சாலிகிராமங்களை உருவாக்கிறார்கள் ஆனால் என்ன நடக்கிறது? விதிப்பூர்வமாக பூஜை நடக்கிறதா? பெயரளவிற்குத் தான் நடக்கிறது இல்லையா? தண்ணீர் குழாய் மூலம் குளிப்பாட்டி விடுவார்கள் மற்றும் திலகமும் சின்னப் பாத்திரத்தில் நிரப்பி பூஜாரிகளும் மொத்தமாக அந்த மாதிரி தெளித்து விடுவார்கள். திலகம் இடப்பட்டதாகி விட்டது. அப்படியானால் இது என்னவானது? பெயரளவிற்குத் தான் நடந்தது இல்லையா? பூஜைக்குரியவர்களாக அனைவரும் ஆகிறீர்கள் ஆனால் எப்படி பூஜைக்குரியவராக ஆகிறீர்கள் என்பதில் வரிசைக்கிரமம் இருக்கிறது. சிலருக்கு ஒவ்வொரு செயலுக்கும் பூஜை நடக்கிறது. பல் தேய்ப்பதின் தரிசனமும் ஆகிறது. மதுரா சென்றீர்கள் என்றால் பல் தேய்ப்பதின் தரிசனத்தையும், இந்த நேரம் பல் தேய்க்கும் நேரம் என்று காண்பிப்பார்கள். எனவே பெயரளவிற்கு செய்பவர்களாக ஆகாதீர்கள். பின்பு பூஜையும் அந்த மாதிரி ஆகி விடும்.

டீச்சர்கள் என்ன நினைக்கிறீர்கள்? முன்னுக்கு அமர்ந்திருக்கிறீர்கள் என்றால் வரிசை எண்ணும் முன்னதாகப் பெற வேண்டும் இல்லையா? குறைந்த நிலையில் இருந்து விடாதீர்கள். நான் பூர்வஜமானவள் மற்றும் பூஜைக்குரியவள் என்ற போதையை வைத்துக் கொள்ளுங்கள். அப்படி எவ்வளவு பெரியவரோ அவ்வளவு பெரிய பொறுப்பு இருக்கிறது. பெரியவர் ஆவது என்பது குஷி அடைவதற்கான விஷயம் மட்டும்

இல்லை. பெயர் பெரியது என்றால் செய்ய வேண்டிய காரியமும் பெரியது. அனைத்து டீச்சர்களும் குஷியாக இருக்கிறீர்களா? அல்லது ஏதாவது ஆசை இன்னும் மனதில் இருக்கிறதா? ஏதாவது இச்சை இருக்கிறது என்றால் அச்சா (நல்லவர்) ஆகவிடாது. ஒன்று இச்சையை நிறைவேற்றுங்கள் அல்லது நல்லவராக ஆகுங்கள். இது உங்கள் கையில் இருக்கிறது. மேலும் இந்த இச்சை அந்த மாதிரியானது எப்படி நீங்கள் வெயிலில் நடந்து செல்கிறீர்கள் என்றால் உங்களுடைய நிழல் உங்கள் முன் சென்று கொண்டிருக்கும். மேலும் நீங்கள் அதைப் பிடிக்க முயற்சி செய்தால் பிடிக்க முடியுமா? மேலும் நீங்கள் பின்னால் திரும்பிச் சென்று விட்டீர்கள் என்றால் நிழல் எங்கே செல்லும்? உங்கள் பின்னாலேயே வரும். அப்படி இச்சை தன் பக்கம் கவர்ந்து அழ வைப்பது மற்றும் இச்சையை வீட்டு விட்டீர்கள் என்றால் அது உங்கள் பின்னாலேயே வரும். யாசிப்பவர் ஒருபொழுதும் சம்பன்னம் ஆக முடியாது. மேலும் எதையும் யாசிப்பதில்லை ஆனால் ராயல் யாசிப்பதோ மிக அதிகமாக இருக்கிறது. ராயல் யாசிப்பது என்னவென்று தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? அற்பகாலத்திற்கு கொஞ்சம் பெயர் கிடைத்து விடட்டும். கொஞ்சம் புகழ் கிடைத்து விடட்டும். எப்பொழுதாவது நம்முடைய பெயரும் விசேஷ ஆத்மாக்களுக்குள் வந்து விடட்டும். நாமும் பெரிய சகோதரர்களில் ஒருவராக எடுத்துக் கொள்ளப் பட வேண்டும், நாமும் பெரிய சகோதரிகளின் ஒருவராக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். கடைசியில் எங்களுக்கும் வாய்ப்பு கிடைக்க வேண்டும் ஆகியவை, ஆனால் எதுவரை யாசிப்பீர்களோ அதுவரை ஒருபொழுதும் குஷியின் பொக்கிஷத்தினால் நிரம்பியவர் ஆக முடியாது. இந்த யாசிப்பதின் பின்னால் அல்லது ஏதாவது எல்லைக்குட்பட்ட ஆசைகளின் பின்னால் ஓடுவது கானல் நீரைப் பார்த்து ஓடுவது என்று புரிந்து கொள்ளுங்கள். இதிலிருந்து எப்பொழுதும் பாதுகாப்பாக இருங்கள். சிறியவர்களாக இருப்பது ஒன்றும் மோசமான விஷயம் இல்லை. சிறியவர்கள் தந்தையால் மகிமை செய்யப்படுபவர்கள், ஏனென்றால் பாப்தாதாவின் இதயத்தில் வரிசை எண்ணில் முன்னுக்கு இருக்கிறார்கள். நல்லது,

நாலாபுறங்களிலுமுள்ள பூர்வஜமான ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் இந்த நிச்சயம் மற்றும் போதையில் இருக்கக்கூடிய உயர்ந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தந்தையின் ஸ்ரீமத்படி ஒவ்வொரு

காரியமும் செய்யக்கூடிய கர்மயோகி ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் திட எண்ணத்தினால் தந்தையின் ஒவ்வொரு அடி மேல் அடியெடுத்து வைக்கக்கூடிய தந்தையைப் பின்பற்றி நடக்கும் குழந்தைகளுக்கு மிகுந்த அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம். இரட்டை வெளிநாட்டினருக்கு இரட்டை நமஸ்காரம்.

வரதானம்: எப்பொழுதும் ஊக்கம் உற்சாகம் என்ற இறக்கைகள் மூலமாக பறக்கும் மற்றும் பறக்க வைக்கும் உறுதியான மற்றும் களைப்பற்றவர் ஆகுக!

நீங்கள் ஆத்மாக்கள் அனேக ஆத்மாக்களைப் பறக்க வைப்பதற்கு பொறுப்பாளராக இருக்கிறீர்கள். எனவே ஊக்கம் உற்சாகத்தின் இறக்கை உறுதியாக இருக்கட்டும். நான் பிராமணன் உலக நன்மைக்குப் பொறுப்பாளர் ஆவேன் என்ற இந்த நினைவு எப்பொழுதும் இருக்கட்டும். பின்பு அலட்சியம் மற்றும் சோம்பேறித்தனம் தானாகவே விலகி விடும். ஒருபொழுதும் களைப்படைய மாட்டீர்கள், யாரிடம் ஊக்கம் உற்சாகம் இருக்கிறதோ அவர் களைப்பற்றவராக இருக்கிறார். அவர் தன்னுடைய முகம் மற்றும் நடத்தையின் மூலம் எப்பொழுதும் மற்றவர்களுக்கும் ஊக்கம் உற்சாகத்தை அதிகரிப்பார்.

சுலோகன்: தந்தையின் தொடர்பின் பாதிப்பு (பிரபாவம்) ஏற்பட்டிருக்கிறது என்றால், அனைத்து தீயவைகளும் சுலபமாகவே பரிவர்த்தனை ஆகி விடும்!

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 22.12.1995 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அனைத்து பிராப்திகள் நிரம்பிய வாழ்க்கையின் விசேஷம் -மகிழ்ச்சியற்ற நிலையிலிருந்து விடுபட்டு மகிழ்ச்சி நிறைந்திருப்பது!

இன்று அன்புக்கடல் பாப்தாதா தன்னுடைய அன்பு சொரூப ஆத்மாக்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொருவரின் உள்ளத்தில் பரமாத்மாவின் அன்பு நிரம்பியிருக்கிறது, இந்த பரமாத்மாவின் அன்பின் பிராப்தியும் ஒரே ஒரு ஜென்மத்தில் தான் இருக்கிறது. 83-ஜென்மங்கள் தேவ ஆத்மாக்கள் மற்றும் சாதாரண ஆத்மாக்கள் மூலமாக அன்பு கிடைத்தது. யோசியுங்கள், நினைவு செய்யுங்கள், சுயதரிசன சக்கரதாரி தான் இல்லையா? எனவே முழுக் கல்பத்தை சுற்றி வாருங்கள். அப்படி ஒரு நொடியில் முழுக் கல்பத்தை சுற்றி வந்தீர்களா? 83-ஜென்மங்களில் பரமாத்மா அன்பு கிடைத்ததா? கிடைக்கவில்லை. இந்த சங்கமயுகத்தில் ஒரு ஜென்மத்தில் மட்டும் பரமாத்மா அன்பு கிடைத்திருக்கிறது. ஆத்மாக்களின் அன்பு மற்றும் பரமாத்மாவின் அன்பில் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது என்று அப்படி வித்தியாசத்தை தெரிந்து விட்டீர்கள் இல்லையா. சாதாரண ஆத்மாக்களின் அன்பு எங்கே கொண்டு சென்றது? என்ன பிராப்தி செய்வித்தது? என்ற இந்த அனுபவம் இருக்கிறது தான் இல்லையா? மேலும் பரமாத்மாவின் அன்பு எங்கே கொண்டு செல்கிறது. தன்னுடைய இனிமையான வீடு மற்றும் இனிமையான இராஜ்யத்தில் கொண்டு செல்கிறது. ஆத்மாவின் அன்பு இராஜ்ய பாக்கியத்தைக் இழக்க வைக்கிறது. மேலும் பரமாத்மாவின் அன்பு இராஜ்ய பாக்கியத்தை கொடுக்கிறது. மேலும் இதே ஜென்மத்தில் தான் எதிர்காலத்தின் ஆதாரத்தில் மட்டும் இருக்கிறீர்கள் என்று அப்படி இல்லை. நேரடியாக பரமாத்வின் பிராப்தியோ இப்பொழுது இருக்கிறது. நிகழ்காலத்தின்

எதிரில் எதிர்காலமும் ஒன்றுமே இல்லை. நீங்கள் சொர்க்கத்தில் என்ன இருக்கும் மற்றும் என்ன இருக்காது என்ற பாடல் பாடுகிறீர்கள் தான் இல்லையா? மேலும் இப் க்கான பாடல் எது? என்ன அடைய வேண்டுமோ அதை அடைந்தாகி விட்டது. அல்லது அடைய வேண்டுமா? அடைந்து விட்டீர்கள். பாண்டவர்கள் அடைந்து விட்டார்களா? பிராப்தியின்மை என்ற ஒரு பொருள் கூட பிராமணர்களின் பொக்கிஷத்தில் இல்லை என்பது இந்த நேரத்தின் மகிமை ஆகும். மேலும் கோபிகைகளின் மகிமையும் தான். இது தேவதைகளின் பொக்கிஷத்தின் விஷயம் இல்லை, பிராமணர்களின் பொக்கிஷமாகும். அப்படி இப்பொழுது நீங்கள் பிராமணர்கள் தான் இல்லையா? அப்படியானால் இல்லாத பொருள் ஒன்றும் இல்லை என்று அப்படி அனுபவம் செய்கிறீர்களா? மேலும் இந்த பிராப்திகள் அழியாதவை, அற்பகாலத்திற்கானது அல்ல. அப்படி யாருக்கு அனைத்து பிராப்திகளும் இருக்கின்றனவோ அவருடைய வாழ்க்கையில் என்ன விசேஷம் இருக்கும்? அனைத்து பிராப்திகளும் இருக்கின்றன. ஒன்று கூட குறைவில்லை என்றால் அவருடைய நடத்தை மற்றும் முகத்தில் என்ன விசேஷம் தென்படும்? எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்த நிலை. என்ன ஆனாலும் சரி அனைத்து பிராப்திகள் உள்ளவர் தன்னுடைய மகிழ்ச்சி நிறைந்த நிலையை விட முடியாது. மகிழ்ச்சியற்ற நிலை எப்பொழுதெல்லாம் இருக்கிறதோ அப்பொழுது இல்லை என்பதின் அனுபவம் ஆகிறதா அல்லது அனைத்து பிராப்திகளின் அனுபவம் ஆகிறதா என்று சோதனை செய்யுங்கள்.

இன்று பாப்தாதா அதிகமான சேவை நிலையங்கள் மற்றும் துணை சேவை நிலையங்களைப் பார்த்தார், வெளிநாட்டில் அல்ல பாரதத்தில் சேவை நிலையங்களைப் பார்த்தார். சேவை நிலையங்களில் விசேஷமாக சேவாதாரிகள் இருக்கிறார்கள். எனவே இன்று சுற்றி வந்து சேவாதாரி மற்றும் சேவை நிலையங்கள் இரண்டையும் பார்த்தோம். ஒவ்வொரு இடத்தில் அது சிரியதானாலும் அல்லது பெரிய தானாலும் சேவாதாரி உடலால், மனதால், பொருளால் மற்றும் சேவையின் உறவு நெருக்கத்தினால் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்று அனைவரிடமும் சோதனை செய்தோம். ஏனென்றால் முக்கியமானவையோ இந்த விஷயங்கள் தான் இல்லையா. அப்படி என்ன பார்த்தோம்? உடலோ அனைவருடையதும், இளைஞரானாலும்

அல்லது வே திகரான பழையதே தான். சில சிறியவர்கள் பெரியவர்களையும் விட பலஹீனமானவர்களாக இருக்கிறார்கள். பெரிய வியாதியாக இருந்தாலும், ஆனால் நான் பலஹீனமாக இருக்கிறேன். நான் நோயுற்று இருக்கிறேன் என்று நோயின் உணர்வுகள் நோயை அதிகரித்து விடுகிறது. ஏனென்றால் உடலின் பாதிப்பு மனதில் வந்து விட்டது என்றால் இரட்டை நோயுற்றவர் ஆகி விடுகிறார். உடல் மற்றும் மனம் இரண்டினால் இரட்டை நோய் ஆன காரணத்தினால் அடிக்கடி ஆத்ம உணர்விற்குப் பதிலாக நோயின் உணர்வுள்ளவராக ஆகி விடுகிறார். அப்படி என்ன பார்த்தோம்? பெரும்பான்மையோர் உடலாலோ, நோயென்று கூறினாலும் அல்லது கணக்கு வழக்கை முடிப்பது என்று கூறினாலும், செய்து கொண்டு தான் இருக்கிறார்கள் ஆனால் 50 சதவிகிதம் இரட்டை நோய் மற்றும் 50 சதவிகிதம் நோயுள்ளவர்களாக இருக்கிறார்கள். மற்றபடி என்ன இருக்க வேண்டும்? ஒருபொழுதும் மனதில் நோயின் எண்ணத்தை நான் நோயுற்று இருக்கிறேன், நான் நோயுற்று இருக்கிறேன் என்று கொண்டு வரக்கூடாது, ஆனால் நடப்பது என்ன? நான் நோயுற்று இருக்கிறேன் என்பது மிக உறுதியாகி விடுகிறது. சில நேரம் நோயுற்றவராக ஆவதில்லை ஆனால் மனதில் குஷி இல்லை என்றால் என் கழுத்தில் வலி இருக்கிறது என்று சாக்குபோக்கு கூறுவார்கள், ஏனென்றால் பெரும்பான்மையோருக்கு கால் வலி இருக்கும் அல்லது கழுத்து வலி இருக்கும், பல தடவைகள் வலி இருப்பதில்லை இருந்தும் என் கழுத்தில் வலி இருக்கிறது என்று கூறுவார்கள். இப்பொழுது அதனுடைய சோதனையை எப்படிச் செய்வது? டாக்டர்களிடம் கழுத்து வலி இருக்கிறதா அல்லது இல்லையா என்று சோதனை செய்யும் அளவிற்கு ஏதாவது தெர்மாமீட்டர் இருக்கிறதா? எக்ஸ்ரே எடுங்கள். இதைச் செய்யுங்கள் அதுவோ இன்னும் செலவு செய்வதாகும். விஷயமாக என்ன பார்த்தோம் என்று கூறினோம். அனேக சேவாதாரிகள் அந்த மாதிரி தென்பட்டார்கள். அப்படி உடல் நீங்கள் அனைவரும் சேவாதாரிகள் இது டீச்சர்களுடைய விஷயம் மட்டும் என்று அப்படி நினைக்காதீர்கள். இல்லறத்தில் இருக்கும் நீங்களும் சேவாதாரிகள் தான் இல்லையா? அல்லது சென்டரில் இருப்பவர்கள் மட்டும் தான் சேவாதாரியா? குடும்பத்தில் இருக்கும் நீங்களும் சேவாதாரிகள் தான். சில நேரம் உங்களுடைய வீடுகளையும் சுற்றி வலம் வருவோம். எப்படி தூங்குகிறார்கள். எப்படி எழுகிறார்கள்,

இரட்டை படுக்கை இருக்கிறதா, ஒற்றை படுக்கையா? என்று பார்ப்போம்.

தற்சமயத்து கணக்குப்படி மருந்துகள் சாப்பிடுவது பெரிய விஷயம் இல்லை என்று புரிந்து கொள்ளுங்கள். ஏனென்றால் கலியுகத்தின் தற்சமயத்து நேரத்தில் அனைத்தையும் விட சக்திசாலியான பழம் இந்த மருந்துகள். இந்த மருந்துகள் பல வண்ணங்களில் இருக்கும் இல்லையா? கலியுகத்தின் கடைசி காலத்தில் இது தான் ஒரே ஒரு பழம். எனவே மிக அன்போடு சாப்பிட்டு கொள்ளுங்கள். மருந்து சாப்பிடுவது என்பது நோயை நினைவூட்டுவதல்ல. ஒருவேளை மருந்தை கட்டாயத்தினால் அருந்துகிறீர்கள் என்றால் கட்டாயத்தின் மருந்து நோயை நினைவூட்டுகிறது மற்றும் உடலை நடத்துவிப்பதற்காக ஒரு சக்தியை நிரப்பிக் கொண்டிருக்கிறோம் என்று அந்த நினைவில் அருந்தினீர்கள் என்றால் மருந்து நோயை நினைவூட்டாது. இரண்டு, மூன்று நாட்களில் இந்த மருந்தினால் சரியாகி விடுவோம் என்ற குஷியைக் கொடுக்கும். இன்றைய நாட்களிலோ மிக அதிக புதிய நாகரீகம் இருக்கிறது. கலியுகத்தில் அனைத்தையும் விட அதிகமான கண்டுபிடிப்பு இன்றைய மருந்துகள் அல்லது விதவிதமான தெரபி வந்திருக்கின்றன, இன்று இந்த தெரபி, நாளை இது அப்படி இது கலியுக சீசனின் சக்திசாலியான பழமாகும். எனவே பயப்படாதீர்கள் ஆனால் மருந்தின் உணர்வோடு நோயின் உணர்வோடு அருந்தாதீர்கள். மேலும் உடலிற்கு நோய் வரத்தான் செய்யும். புதிய விஷயம் இல்லை. எனவே நோயைக் கண்டு ஒருபொழுதும் பயப்படாதீர்கள். நோய் வந்தது மற்றும் அதற்காக கொஞ்சம் பழத்தை அருந்தக் கொடுங்கள் மற்றும் விடை கொடுத்து விடுங்கள். அப்படி இது உடலிற்கான ரிசல்டாக இருந்தது. பின்பு வேறு என்ன பார்த்தோம்?

மனம். மனதில் என்ன பார்த்தோம்? குஷி நிறைந்த ஒரு விஷயத்தைப் பார்த்தோம். பெரும்பான்மை யான ஒவ்வொரு சேவாதாரியும் மனதில் தந்தையின் அன்பு மற்றும் சேவைக்கான ஊக்கம் இரண்டும் இருந்தது, மற்றபடி 25-சதவிகிதம் சிலர் கட்டாயத்தில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதை விட்டு விடுங்கள் ஆனால் பெரும்பான்மையோரின் மனதில்: இந்த இரண்டு விஷயங்களையும்

பார்த்தோம். மேலும் தந்தை மேல் அன்பு இருக்கும் காரணத்தினால் நினைவிலும் சக்திசாலியாக இருந்து அமர்வதற்கான, நடந்து கொள்வதற்கான, சேவை செய்வதற்கான கவனம் மிகவும் கொடுக்கிறார்கள் ஆனால் நினைவு என்ற ஆசனத்தில் மிகவும் நன்றாக அமர்ந்து விட வேண்டும் என்று விரும்புகிறார்கள் ஆனால் கொஞ்ச நேரம் இந்த மாதிரி செட் ஆகிறார்கள், பிறகு ஆட அசையத் தொடங்கி விடுகிறார்கள். எப்படி குழந்தை இருக்கிறது அதை அதிக நேரம் ஒரு இருக்கையில் அமர வைத்தீர்கள் என்றால் அவசியம் ஆடும். ஒருவேளை மனதும் கட்டுப்பாட்டில், ஆர்டரில் இல்லை என்றால் கொஞ்ச நேரம் மிக நன்றாக அமர்கிறார்கள். நடந்து கொள்கிறார்கள். சேவையும் செய்கிறார்கள், ஆனால் சில நேரம் செட் ஆகிறார்கள், சில நேரம் அப்செட் ஆகிறார்கள். இதற்கென்ன காரணம்? செட் ஆக விரும்புகிறார்கள் ஆனால் ஏன் அப்செட் ஆகிறார்கள்? என்ன காரணம்? ஒருமுகப்படுத்துவதின் சக்தி, திடத்தன்மையின் சக்தி, ஆகியவை குறைவாக உள்ளன. மிக நல்ல திட்டங்களை யோசிக்கிறார்கள், இதை அனுபவம் செய்வோம், பின்பு இந்த சேவை செய்வோம், பிறகு இந்த மாதிரி நடந்து கொள்வோம் என்று நன்றாக யோசிப்பார்கள் ஆனால் காரியம் செய்வதில் அல்லது அமர்ந்திருக்கும்பொழுதே திடத்தன்மையின் சக்தி குறைந்து விடுகிறது. மற்ற விஷயங்களில் மனம், புத்தி பிரித்து விடப்பட்டு விடுகிறது. வேலையில் ஒருவேளை பிஸியாக இல்லாவிட்டாலும், வீணான எண்ணம் இது அனைத்தையும் விட பெரிய வேலையாகும். அது தன் பக்கம் இழுத்து விடுகிறது. அப்படி ஸ்தூல வேலை இல்லாவிட்டாலும் ஆனால் திடத்தன்மையின் சக்தி பிரிக்கப்பட்டதின் காரணமாக மனம் மற்றும் புத்தி சீட்டில் செட் ஆவதற்குப் பதிலாக குழப்பத்தில் வந்து விடுகிறார்கள்.

பாப்தாதா உங்கள் அனைவருக்கும் என்ன வேலை கொடுத்திருந்தாரோ அதைப் பார்த்தீர்களா? பாப்தாதாவிடம் அனைத்து கடிதங்களும் வந்து சேர்ந்தன ஆனால் சில குழந்தைகள் மிக சாதரியமானவர்கள். என்ன சாதுர்யம் செய்கிறார்கள்? கடிதம் எழுதுகிறார்கள், ஆனால் பெயர் எழுதுவதில்லை. பாபாவோ தெரிந்திருக்கிறார் என்று அப்படி நினைத்து செய்கிறார்கள். தெரிந்திருக்கிறார். இருந்தாலும் கூட ஒருவேளை வேலை கொடுத்திருக்கிறார் என்றால் வேலையை முழுமையாகச் செய்யுங்களேன். இதை எழுதிக் கொண்டு வா என்று ஒருவேளை

# 1995 அவ்யக்த முரளி

ஆசிரியர் கூறுகிறார் மற்றும் நீங்களோ தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா என்று டீச்சருக்கு கூறினால் -எனக்கு இதை எழுதத் தெரியும் என்று சொன்னால் டீச்சர் ஏற்றுக் கொள்வாரா? அப்படி சிலர் பெயரையே எழுதுவதில்லை ஆனால் எந்த குரூப்பில் என்ன வேலை கொடுத்திருந்தோமோ. குஷிக்கான விஷயம் பெரும்பான்மையோரிடம் இதைத் தான் பார்த்தோம். அனைவரும் நாங்கள் வைர விழா வரை செய்து காண்பிப்போம் என்று அனைவரும் எழுதியிருக்கிறார்கள். இது பெரும்பான்மையோரின் விஷயம் ஆகும். உங்கள் அனைவரினுடையதும் தானா? ஜீவன்முக்தி அடைந்து விடுவீர்களா? ஒருவேளை அனைத்து விஷயங்களிலிருந்தும் விடுபட்டு விட்டீர்கள் என்றால் என்னவாகி விடுவீர்கள்? ஜீவன்முக்தி ஆகி விடுவீர்கள் இல்லையா? அப்படி அனைவரும் தங்களுடைய தைரியம், ஊக்கத்தை நன்றாக காண்பித்தார்கள். வெளிநாட்டினருக்கும் பாரதவாசிகளுக்கும் அனைவரின் ஊக்கம், உற்சாகம் நன்றாக இருந்தது. சிலர் வெகு குறைவானவர்கள் எங்களுக்கு காலம் எடுக்கும் என்று எழுதியிருக்கிறார்கள். நீங்களோ ஜீவன்முக்தி ஆகி விடுங்கள். அப்படி வைர விழாவில் ஏதாவது செய்து காண்பிக்க வேண்டும் என்று அனைவருக்கும் ஊக்கம் இருக்கிறது என்பதை ரிசல்ட்டில் பார்த்தோம் ஆனால் எவ்வளவு தன்னைத்தானே வைரமாக ஆக்குவதற்கான ஊக்கம், உற்சாகம் இருக்கிறதோ அதே அளவில் வைர விழா ஆண்டில் சேவையின் திட்டத்தையும் மிகத் துரிதமாக தயாரித்திருக்கிறீர்கள். துரிதமாக தயாரித்திருக்கிறீர்கள், இதில் பாப்தாதா குஷியடைகிறார் ஆனால் மிகுந்த சேவையின் சுமை இருந்தது இல்லையா? எனவே கொஞ்சம் மேலே கீழே சென்று விட்டது என்று அப்படி கூறாதீர்கள். இதை பாப்தாதா விரும்பவில்லை. எந்த சேவை தன்னையும் மற்றும் மற்றவர்களையும் தொந்தரவு செய்கிறதோ அது சேவை அல்ல, சுயநலம் ஆகும். மேலும் ஏதாவது சுயநலம் தாள் காரணமாக இருக்கிறது. எனவே மேலே கீழே ஆகிறது. தன்னுடையதோ அல்லது மற்றவர்களுடைய சுயநலம் எப்பொழுது நிறைவேறவில்லையோ அப்பொழுது சேவையில் குழப்பம் ஆகிறது எனவே சுயநலத்திலிருந்து விலகி மற்றும் அனைவரின் சம்மந்தத்தில் அன்பானவராக ஆகி சேவை செய்யுங்கள். அப்பொழுது வைர விழாவில், வைரமாகி, வைர விழாவைக் கொண்டாடுவோம் என்ற எண்ணம் நிறைவேறும். பாதியை நினைவு செய்யாதீர்கள், சிலர் அந்த மாதிரியும் பதில் கொடுக்கிறார்கள்.

விழாவையோ கொண்டாட வேண்டியதாக இருந்தது, எனவே கொண்டாடினோம். இதில் பிஸியாகி விட்டீர்கள் ஆனால் பாப்தாதாவின் இரண்டு வார்த்தைகளை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். பாதியை அல்ல. வைரமாகி, வைர விழாவைக் கொண்டாட வேண்டும். கொண்டாடுவது மட்டுமல்ல. அப்படிக் ஆகி கொண்டாட வேண்டும். கொண்டாடி விட்டோம் இல்லையா என்று அந்த மாதிரி அர்த்தத்தை எடுக்காதீர்கள் ஆனால் அப்படி ஆகிக் கொண்டாடினீர்களா? அப்படி ஆகிக் கொண்டாடுவது இது தான் வைர விழாவின் லட்சியம் ஆகும். அப்படி பாதி லட்சியத்தை நிறைவேற்றாதீர்கள். இரண்டு இருக்கிறது! ஆக வேண்டும் மற்றும் கொண்டாட வேண்டும். ஆவது மட்டுமல்ல, கொண்டாடுவது மட்டுமல்ல. இரண்டும் சேர்ந்தே இருக்கட்டும். மேலும் எப்பொழுது நீங்கள் வைர விழாவின் மற்றும் வைரம் ஆவதற்கான திட்டத்தை உருவாக்குகிறீர்கள் என்றால் உங்கள் அனைவரையும் விட முதலில் மாயாவும் திட்டத்தை உருவாக்குகிறது என்று உங்கள் அனைவருக்கும் தெரியும். எனவே என்ன செய்வது பாபா, தைரியம் குறைந்து விட்டது. மாயா மிகவும் சக்திசாலியாகி விட்டது, மாயாவை உங்களிடமே வையுங்கள் என்று அப்படி கூறாதீர்கள். நீங்கள் இராஜ்யம் செய்வீர்கள் மற்றும் மாயாவை பாபா கவனிக்க வேண்டுமா? இராஜ்யமோ நீங்கள் தான் செய்ய வேண்டும் இல்லையா. மாயாவை வென்று உலகை வென்றவர் ஆக வேண்டும் என்றால் மாயாவை வெற்றி அடையாமல் உலகை வென்றவர் எப்படி ஆவீர்கள்? எனவே தயவு செய்து நாலாபுறமும் கவனம் இருக்கட்டும். புரிந்ததா? நல்லது. சுற்றி வந்ததின் பாதி விஷயத்தைக் கூறினோம். மீதியை பின்பு கூறுவோம். சில சில சென்டர்களோ மிக நன்றாக அலங்கரிக்கப்பட்டதாக இருக்கின்றன. மேலும் சில சாதாரணமாக இருக்கிறது என்றால் சில மிகவும் ராயலாக இருக்கின்றன மற்றும் சில இந்த இரண்டிற்கும் இடைப்பட்டதாக இருக்கின்றன. ராயலாக இருக்க வேண்டும் என்று அதிகமானவர்கள் நினைக்கிறார்கள். யாராவது முக்கியமானவர்கள் வந்தார்கள் என்றால் அவர்களுக்கு சென்டர் நன்றாக இருக்கிறது என்று அனுபவம் ஆக வேண்டும் ஆனால் தொடக்கத்திலிருந்து இதுவரைக்கான நம்முடைய நியமம் மிகவும் சாதாரணமாகவும் இருக்க வேண்டாம் மேலும் மிகவும் ராயலாகவும் இருக்க வேண்டாம் என்பது தான். இரண்டிற்கும் இடைநிலை உள்ளதாக இருக்க வேண்டும். பிரம்மா மிக சாதாரண

நிலையைப் பார்த்தார் மற்றும் அதில் வாழ்ந்தார் ஆனால் இப்பொழுது சாதனம் இருக்கிறது. சாதனம் கொடுப்பவர்களும் இருக்கிறார்கள். இருந்தாலும் என்ன காரியம் செய்தாலும் மத்திய நிலையில் செய்யுங்கள். யாராவது இது என்ன இது, தெரியவில்லை என்று அப்படியும் கூற வேண்டாம், மேலும் யாராவது ராஜ போகமாக இருக்கிறதே என்றும் கூற வேண்டாம். அப்படி இன்றைய பாடமாக என்ன இருந்தது? அனைத்தில் இருந்துமோ விடுபட்டு விட்டீர்கள் தான் இல்லையா? அனைத்திலிருந்தும் விடுபடுவதற்கான உறுதிமொழியை எடுத்து விட்டீர்கள் தான் இல்லையா? உறுதியாக இருக்கிறதா அல்லது வீடு சென்ற பிறகு இது கடினம் என்று கூறுவீர்களா? உறுதியாக இருக்க வேண்டும். இந்த வைர விழாவில் நாங்கள் அதிகமாக மகிழ்ச்சி நிறைந்தவர்கன் என்று மாயாவிற்கு காண்பியுங்கள். நீங்கள் மாஸ்டர் சர்வ சக்திவான் ஆவீர்கள். குறைந்தவர்கள் அல்ல.

நல்லது. இரட்டை வெளிநாட்டினரும் அதிகமாக வந்திருக்கிறார்கள். ஸ்தாபனையின் காரியத்தின் இரட்டைப் பொலிவு இந்த இரட்டை வெளிநாட்டினர். எவ்வளவு கடின சூழ்நிலையிலும் யுக்தியாக இங்கே வந்து சேர்ந்திருக்கிறார்கள் என்று பாப்தாதா தெரிந்திருக்கிறார். ஒருவேளை ஆர்வம் குறைவு என்றால் வந்து சேருவதும் கடினமாக இருக்கும். ஒரு பக்கம் பணத்தின் மதிப்பு குறைந்து விட்டது என்று பாப்தாதா கேள்விப்படுகிறார் மற்றும் இரண்டாவது வருடம் இன்னும் அதிகமான வெளிநாட்டினர் வந்து விட்டார்கள் என்றும் பார்க்கிறார். அப்படி இது தைரியமாகும். ரஷியாவின் குரூப்பும் வந்திருக்கிறது தான் இல்லையா? ரஷியாவைச் சேர்ந்தவர்கள் எங்கிருந்து பயணச்சீட்டை பெற்றீர்கள்? இவர்களுடைய கதையும் கேட்பதற்கு மிக மிக நல்ல கதைகள் பயணச்சீட்டிற்காக எப்படி பணத்தை சேமிக்கிறார்கள் என்ற இவர்களுடைய கதை மிகவும் சுவாரஸ்யமானது. இவை அனைத்துமோ நடக்கத் தான் வேண்டும். எப்பொழுது பணம் அது டாலராக இருந்தாலும், பவுண்டாக இருந்தாலும் அனைத்துமே காகிதம் தான், காகிதம் எவ்வளவு காலம் தான் வரும். தங்கத்திற்கு மதிப்பு இருக்கிறது. வைரத்திற்கு மதிப்பு இருக்கிறது, காகிதத்திற்கு என்ன மதிப்பு இருக்கிறது? பணத்தின் மதிப்பு குறையத்தான் செய்யும். மேலும் உங்களுடைய பணம் அனைத்தையும் விட மிக மதிப்புள்ளது. எப்படி தொடக்கத்தில் ஓம் மண்டலி உலகத்திலேயே மிக செல்வம் நிறைந்தது

என்று செய்தித்தாள்களில் போட்டீர்கள் தான் இல்லையா? வருமானத்திற்கான வழி ஒன்றுமே இல்லாமல் இருந்தது. பிரம்மாபாபாவுடன் ஓரிருவர் சமர்ப்பணம் ஆனார்கள் மேலும் உலகத்திலேயே செல்வம் நிறைந்தது என்று செய்தித்தாள்களில் போட்டீர்கள். இப்பொழுது கூட நாலாபுறங்களிலும் இந்த ஸ்தூலமான ஏற்றம், இரக்கம் இருக்கும் பிறகு உங்களுக்கு செய்தித்தாளில் போட வேண்டியதாக இருக்காது. உங்களிடம் செய்தியாளர்கள் வருவார்கள், மேலும் பிரம்மா குமாரிகள் உலகிலேயே செல்வம் நிறைந்தவர்கள் என்று அவர்களே போடுவார்கள். தொலைகாட்சியில் காண்பிப்பார்கள். ஏனென்றால் என்ன தான் நடந்தாலும் உங்களுடைய முகம் பிரகாசித்துக் கொண்டிருக்கும். பகலில் அருந்துவதற்கு உணவு இல்லாவிட்டாலும் உங்களுடைய முகம் பிரகாசமாக இருக்கும். அப்படி நாலாபுறங்களிலும் துக்கம் இருக்கும் ஆனால் நீங்கள் குஷியில் ஆடிக் கொண்டே இருப்பீர்கள். இதைத் தான் மிருகங்களின் மரணத்தைப் பார்த்து வேட்டைக்காரன் குஷியடைகிறான்' என்று கூறுவது. எனவே பிராமணர்கள் யார் உண்மையானவர்களோ, பிராமண வாழ்க்கையில் உயர்ந்த வாழ்க்கையின் லட்சியத்தை வைத்திருப்பவர்களோ அவர்களுடைய விசேஷம், மகிழ்ச்சி நிறைந்த நிலை என்று பாபா இன்று கூறினார். யாராவது உங்களை தீய வார்த்தைகளினால் திட்டினாலும் கூட உங்களுடைய முகத்தில் துக்கத்தின் அலை வரக்கூடாது. மகிழ்ச்சி நிறைந்த நிலை இருக்க வேண்டும். திட்டுபவரும் களைப்படைந்து விடுவார் -இது முடியுமா? அவர் ஒரு மணி நேரம் பேசினார். நான் ஒரு விநாடி மட்டும் பேசினேன் என்று அப்படியும் இருக்க வேண்டாம். ஒரு விநாடி பேசினாலும் அல்லது நினைத்தாலும், முகத்தில் மகிழ்ச்சியின்மை வந்தது என்றால் தோற்று விட்டீர்கள். இவ்வளவு சகித்துக் கொண்டீர்கள் இல்லையா, ஒரு மணி நேரம் சகித்துக் கொண்டீர்கள் பின்பு பலூனிலிருந்து கேஸ் வெளியாகி விட்டது. எனவே கேஸ் நிரம்பிய பலூனாக ஆகாதீர்கள். மேலும் வேறு தேவையே என்ன இருக்கிறது? தந்தை கிடைத்தார், அனைத்தும் கிடைத்தது என்ற இந்த பாடலைத் தான் பாடுகிறீர்கள் இல்லையா. எனவே அந்த மாதிரி நேரத்தில் இந்த மாதிரியான விஷயங்களை நினைவு செய்தீர்கள் என்றால் முகம் மாறாது. அதற்காக அவர் எதிரில் சப்தமாக சிரிக்க ஆரம்பித்து விடுங்கள், அதனால் அவர் இன்னும் சூடாகி விடட்டும் என்று அப்படியும் இருக்க வேண்டாம். மகிழ்ச்சி நிறைந்த நிலை

என்றால் ஆத்மீக புன்சிரிப்பு. வெளிப்படையானது அல்ல, ஆத்மீகமானது. அப்படி இன்றைய பாடமாக என்ன இருந்தது? எப்பொழுதும் மகிழ்ச்சியின்மையிலிருந்து விடுபட்டு இரண்டு மடங்கு மகிழ்ச்சி நிறைந்த நிலையில் இருப்பது. புரிந்ததா? நல்லது.

நாலாபுறங்களிலுமுள்ள பாப்தாதாவின் அன்பு சொரூப ஆத்மாக்களுக்கு எப்பொழுதும் தன்னை மகிழ்ச்சியின்மையிலிருந்து விடுவிக்கக்கூடிய தீவிரமாக முயற்சி செய்யும் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் நினைவு மற்றும் சேவையின் சமநிலை மூலமாக சேவையின் வெற்றியை அடையக்கூடிய, பாக்கியம் நிறைந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தந்தையைப் பிரத்யக்ஷம் செய்ய வேண்டும் என்ற ஊக்கத்தை உற்சாகத்தில் இருக்கக்கூடிய, பாரதத்தில் மற்றும் வெளிநாட்டில் இருக்கும் அனைத்து குழந்தைகளுக்கு, தந்தைக்கு தன்னுடைய குஷி நிறைந்த செய்தியை எழுதக்கூடிய, தன்னுடைய சேவையின் ஊக்கம் வைத்திருக்கக்கூடிய, அந்த மாதிரி எப்பொழுதும் தந்தையின் அன்பிற்குரிய மற்றும் நெருக்கமான குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: ஒவ்வொரு ஆத்மாவிற்காக அன்பின் பார்வை, அன்பின் பாவனை வைக்கக்கூடிய தந்தைக்குச் சமமாளவர்கள் ஆகுக!

எப்படி துவாபர யுகத்திலிருந்து நீங்கள் தந்தையை அனேக வார்த்தைகளினால் திட்டினீர்கள். இருந்தும் தந்தை அன்பு வைத்தார். எனவே தந்தையைப் பின்பற்றி தந்தைக்குச் சமமானவர் ஆகுங்கள். எப்படிப்பட்ட ஆத்மாக்களாக இருந்தாலும் ஆனால் தன்னுடைய பார்வை, தன்னுடைய பாவனை அன்பானதாக இருக்கட்டும்.. இதைத் தான் அனைவருக்கும் பிரியமானவர் என்று கூறுவது. யாராவது இழிவு படுத்தினாலும் அல்லது வெறுப்பு அடைந்தாலும் அனைவர் மேலேயும் அன்பு இருக்கட்டும். உறவினர்கள் என்ன தான் கூறினாலும், என்ன தான் செய்தாலும், உங்களுடைய பாவனை சுத்தமானதாக இருக்கட்டும், அனைவருக்கும் நன்மை பயப்பதாக இருக்கட்டும். இதைத் தான் தந்தைக்குச் சமமான நிலை என்று கூறுவது.

சுலோகன்: யார் விசேஷங்களை மட்டும் பார்க்கிறாரோ மேலும் அவற்றைத் தான் வர்ணனை செய்கிறாரோ அவர் தான் விசேஷ ஆத்மா!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 31.12.1995 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வைர விழா ஆண்டில் பரிஷ்தாவாக பாப்தாதாவின் (பாதுகாப்பு) குடை நிழல் மற்றும் அன்பின் அனுபவத்தைச் செய்யுங்கள்!

இன்று உலகை உண்மையான வைரத்திற்குச் சமமாக ஜொலிக்க வைக்கும், இயற்கையையும் வைரத்திற்குச் சமமாக ஜொலிக்க வைக்கும் உலகிலுள்ள ஆத்மாக்களுக்குள் தன்னுடைய நேரடிக் குழந்தைகளை வைரமாக ஆக்கக்கூடிய, கூடவே புது வருடத்தையும் சேர்த்து புதுயுகம், புது உலகை ஸ்தாபனை செய்யக்கூடிய தந்தை, வைரமாக ஆகக்கூடிய குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். சாகார சொரூபத்திலும் பாப்தாதாவின் எதிரில் எத்தனை வைரங்கள் மின்னிக் கொண்டிருக்கின்றன. மேலும் உலகின் நாலாபுறங்களிலும் ஒவ்வொரு மூலையிலும் மின்னிக் கொண்டிருக்கும் வைரங்களையும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அனைவரின் நெற்றியில் மின்னிக் கொண்டிருக்கும் ஆத்மா வைரம் பார்ப்பதற்கு எவ்வளவு நன்றாக இருக்கிறது. எதிரில் மின்னிக் கொண்டிருக்கும் ஆத்மா வைரம் மேலும் இவ்வளவு ஒன்றாகக் கூடியிருக்கும் ரூபத்தில் நாலாபுறங்களிலும் வரமே வைரம் தான் பார்ப்பதற்குத் தென்படுகிறது. இந்தக் காட்சி எவ்வளவு பிடித்தமானதாக இருக்கிறது. அப்படியானால் இந்த சபை எதனுடைய சபை? வைரங்களின் சபை தான் இல்லையா? வரிசைக்கிரமமாக இருந்த போதிலும் பிரகாசமாக மின்னிக் கொண்டிருக்கிறார்கள். பிரகாசமாக மின்னிக் கொண்டிருக்கும் வைரங்களின் சபை தந்தையின் எதிரில் இருக்கிறது. நீங்களும் என்ன பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்? வைரத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் தான் இல்லையா அல்லது உடலைப் பார்க்கிறீர்களா? 63-ஜென்மங்களாக உடலைத் தான் பார்த்தீர்கள்,

ஆனால் இப்பொழுது உடலில் பிரகாசமாக இருக்கும் வைரம் தென்படுகிறதா? அல்லது மறைந்திருக்கிறது. எனவே சில நேரம் தென்படுகிற மம் சில நேரம் மறைந்து விடுகிறதா? இது வைர விழா ஆகும், அப்படி விழாவில் என்ன நடக்கிறது? அலங்காரம் என்ன செய்கிறீர்கள்? இன்றைய நாட்களில் வகை வகையான மின்சார விளக்குகளின் அலங்காரம் அதிகமாக இருக்கிறது. நீங்களும் மரத்தில் அங்கங்கே மின் விளக்குகள் போடுகிறீர்கள் தான் இல்லையா? அதுவோ ஒரு நாளுக்காக விழாக் கொண்டாடுவார்கள் அல்லது கிறிஸ்துமஸ் கொண்டாடுவார்கள் அல்லது ஏதாவது உற்சவத்தை கொண்டாடுவார்கள் ஆனால் நீங்கள் என்ன கொண்டாடுகிறீர்கள்? வைர விழா ஆண்டு என்று கூறுகிறீர்கள். அப்படியானால் வைர விழா ஆண்டை கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். அப்படித் தானே. உறுதியாகவா? ஒருவேளை நாங்கள் வைர விழா ஆண்டைக் கொண்டாடிக் கொண்டிருக் கிறோம் என்பது அனைவரின் உறுதியான எண்ணம் என்றால் உங்கள் அனைவரின் வாயில் குலோப் ஜாமுன் தான். அப்படி கொண்டாடுவது என்றால் வைரமாக ஆவது என்பதாகும். அப்படியானால் முழு வருடமும் வைரமாக ஆவீர்களா அல்லது கொஞ்சம் கொஞ்சம் கரை படியுமா? பாப்தாதாவோ குழந்தைகளின் ஊக்கம் உற்சாகத்தைப் பார்த்து பல மடங்கு இரட்டை வாழ்த்துக்கள் கொடுக்கிறார். இன்று ஒன்று புது வருடம் மற்றும் இன்னொன்று வைர விழா. அப்படி இரண்டும் இல்லையா, அந்த இரண்டின் சபை ஆகும். அப்படி இந்த வைர விழா ஆண்டில் ஒவ்வொரு குழந்தையையும் எப்பொழுது பார்க்கிறோமோ, யாரைப் பார்த்தாலும் மின்னிக் கொண்டிருக்கும் வைரமாகத் தான் பார்க்க வேண்டும். அப்படி விசேஷமாக பார்க்க விரும்புகிறோம். மண்ணில் புதைந்திருக்கும் வைரமாக அல்ல. பிரகாசித்துக் கொண்டிருக்கும் வைரமாக பார்க்க விரும்புகிறோம். அப்படியானால் முழு வருடத்திற்காக அந்த மாதிரி வைரமாக ஆகி விட்டீர்களா? ஏனென்றால் வைரமாகவும் ஆவோம், மேலும் பார்க்கவும் செய்வோம் என்ற எண்ணத்தையோ இன்று வைக்க வேண்டும் இல்லையா? மற்ற ஆத்மா கருப்பான கரியாக இருந்தாலும் கூட, முற்றிலும் கீழான குணங்கள் நிறைந்த ஆத்மாவாக இருந்தாலும் நீங்கள் என்னவென்று பார்ப்பீர்கள்? கரியைப் பார்ப்பீர்களா அல்லது வைரத்தையா? வைரத்தைப் பார்ப்பீர்கள், நல்லது தான். அப்படி உங்களுடைய பார்வை படுவதினால் அவருடைய கருமையும்

குறைந்து கொண்டே இருக்கும். வைர விழாவில் இந்த சேவை தான் செய்ய வேண்டும் இல்லையா? அமிர்தவேளையில் தொடங்கி இரவு வரை எத்தனை பேருடன் உறவு, தொடர்பில் வருகிறீர்களோ அவர்களை, தானும் வைரமாகி மற்றவர்களையும் வைரமாகப் பார்க்க வேண்டும். இதை உறுதி ஆக்கியிருக்கிறீர்களா அல்லது வைர விழா கொண்டாட வேண்டும் என்றால், ஒவ்வொரு இடத்திலும் இரண்டு மூன்று நிகழ்ச்சிகள் மட்டும் நடத்தினீர்கள், அதோடு வைர விழா முடிந்து விட்டது அப்படியா? நிகழ்ச்சிகளை நடத்துங்கள் அழைப்பிதழ் கொடுங்கள். எழுப்பி விடுங்கள் இதையோ செய்ய வேண்டும் மேலும் செய்து கொண்டும் இருக்கிறீர்கள் ஆனால் நிகழ்ச்சி மட்டும் செய்யக் கூடாது. இந்த வைர விழாவில் வைரம் ஆகி வைரத்தைப் பார்க்க வேண்டும். வைரமாக ஆக்க வேண்டும். இது தான் தினசரி நடக்கும் நிகழ்ச்சி ஆகும். அப்படி தினசரி நிகழ்ச்சிகளை வைத்திருப்பீர்களா அல்லது இரண்டு, நான்கு நாட்கள், ஒரு வாரம் மட்டும் வைப்பீர்களா?

இந்த வருடத்தில் அனைத்து குழந்தைகளுக்காக பாப்தாதாவின் விசேஷமான நல்ல விருப்பங்கள் என்று கூறினாலும் அல்லது உயர்ந்த ஸ்ரீமத் என்று கூறினாலும் சரி, வைரத்தைத் தவிர வேறு எதுவாகவும் ஆக வேண்டாம். என்ன ஆனாலும் சரி வைரத்தில் கறை ஏற்படுத்தக் கூடாது. ஒருவேளை ஏதாவது தடையின் வசமாகி விட்டீர்கள் அல்லது சுபாவத்தின் வசமாகி விட்டீர்கள் என்றால் கறை படிந்து விட்டது. தடையோ வர வேண்டும் தான் இல்லையா? விக்ன விநாஷக் (தடையை அழிப்பவர்) என்ற பட்டம் இருக்கிறது என்றால் தடை வரும் அப்பொழுது தான் அழிப்பீர்கள் இல்லையா? ஒருவேளை யாராவது நான் வெற்றியடைந்தவன் என்று கூறுகிறார், எதிரி வரவே இல்லை, ஆனால் நான் வெற்றி அடைந்தவன் என்று கூறினால் யாராவது ஏற்றுக் கொள்வார்களா? இல்லை தானே! அப்படி தடையோ இயற்கை மூலமாகவோ, ஆத்மாக்கள் மூலமாகவோ அல்லது அனேக விதமான சூழ்நிலைகள் மூலமாகவோ வரத்தான் செய்யும் ஆனால் நீங்கள் வைரம், கறையின் பாதிப்பு உங்கள் மேல் ஏற்படாத அளவிற்கு அந்த மாதிரி சக்திசாலி ஆகி விடுங்கள், இது சாத்தியமா?

இந்த வைர விழா வருடம் மஹான் வருடமாகும். ஏதாவது விசேஷமான மாதத்தைக் கொண்டாடு கிறீர்கள் இல்லையா? அதே

போல் இந்த வைர விழா வருடம் மஹான் வருடமாகும். இந்த வருடத்தில் அனைவரையும் காரியங்கள் செய்து கொண்டே போகும் பொழுதும், வரும்பொழுதும் ஃபரிஷ்தாவாக பாப்தாதா பார்க்க விரும்புகிறார். சிலர் நாங்கள் ஆத்மாவைப் பார்க்க முயற்சி செய்கிறோம், ஆனால் ஆத்மா மிகவும் சிறிய புள்ளி இல்லையா! அதனால் உடல் தென்படுகிறது என்று கூறுகிறார்கள். எனவே பாப்தாதாவும் கூறுகிறார், சரி புள்ளி வழுக்கிச் சென்று விடுகிறது, ஆனால் ஃபரிஷ்தா ரூபமோ பெரியது தான் இல்லையா? அதுவோ புள்ளி இல்லை தான் இல்லையா. ஃபரிஷ்தா என்றால் ஒளி வடிவமான உடல். எனவே ஃபரிஷ்தா சொரூபத்தில் நிலைத்திருந்து ஒவ்வொரு காரியம் செய்யுங்கள். ஃபரிஷ்தா ரூபத்தில் காரியம் செய்ய முடியாது என்று அப்படியில்லை. செய்ய முடியுமா அல்லது சாகார ஸ்தூல உடல் வேண்டுமா? ஏனென்றால் சாகார ஸ்தூல உடலின் மேல் பல ஜென்மங்களின் அன்பு இருக்கிறது. அதனால் மறக்க விரும்புகிறார்கள் ஆனால் மறக்க முடிவதில்லை. எனவே பாபாவோ நல்லது, ஒருவேளை உங்களுக்கு உடலையே பார்ப்பதற்கான பழக்கம் ஏற்பட்டுவிட்டது என்றால் ஒன்றும் பாதகமில்லை, இப்பொழுது ஒளியினாலான உடலைப் பாருங்கள் என்று கூறுகிறார். உடல் தான் வேண்டும் என்றால் ஃபரிஷ்தாவும் உடலில் உள்ளவர் தான். மேலும் நீங்கள் அனைவரும் சிவபாபா மற்றும் பிரம்மாபாபா மேல் மிகவும் அன்பு இருக்கிறது என்று கூறவும் செய்கிறீர்கள். அன்பின் அர்த்தமே அவ்வாறு சமமாக ஆவது. எப்படி பிரம்மாபாபா ஃபரிஷ்தா ரூபத்தில் இருக்கிறாரோ அதே போல் பிரம்மாபாபாவிற்குச் சமமாக ஃபரிஷ்தா சொரூபத்தில் நிலைத்திருந்து ஒவ்வொரு காரியத் தையும் செய்யுங்கள், ஏனென்றால் எப்பொழுது வைர விழாவைக் கொண்டாடுகிறீர்கள், ஸ்தாபனை காரியத்திற்கு 60-வருடங்கள் நிரம்பிவிட்டன. அப்படி விசேஷமாக ஸ்தாபனைக்கான பொறுப்பாளராக சிவபாபாவோ இருக்கிறார், ஆனால் கருவியாக அதாவது பொறுப்பாளராக பிரம்மாபாபா ஆனார். நீங்களும் உங்களை சிவகுமார் மற்றும் சிவகுமாரி என்று கூறுவதில்லை. பிரம்மா குமார் -பிரம்மா குமாரி என்று கூறுகிறீர்கள். அப்படி பிரம்மாபாபாவின் ஸ்தாபனையின் காரியத்தின் விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். அப்படி யாருடைய விழாவைக் கொண்டாடுகிறீர்களோ அவருக்கு என்ன கொடுக்கப்படுகிறது? (பரிசு). அப்படியானால் நீங்கள் அனைவரும் என்ன பரிசு கொடுப்பீர்கள்? இந்த

ரோஜா மலரைக் கொண்டு வந்து கொடுத்து இதுதான் பரிசு என்று கூறுவீர்களா? சிலர் யானையைக் கொண்டு வருவார்கள், சிலர் குதிரையைக் கொண்டு வருவார்கள், இந்தப் பரிசோ மனோரஞ்சிதமானது. மனோரஞ்சிதமோ நல்லது தான். அனைவரும் பார்த்து குஷி அடைகிறார்கள். இன்று குதிரை ஆடுகிறது. இன்று யாரோ ஒரு மனிதன் ஆடிக் கொண்டிருக்கிறார், பொம்மைகளைப் பார்த்து குஷி அடைகிறார்கள். பரவாயில்லை அதைக் கொண்டு வாருங்கள் ஆனால் பிரம்மாபாபாவின் மனதிற்கு விருப்பமான பரிசாக என்ன கொடுப்பீர்கள்? பாருங்கள், யாருக்காவது பரிசு கொடுக்கப்படுகிறது என்றால் இவருக்கு என்ன விருப்பம் என்று பார்க்கப்படுகிறது. இதை அவர் விரும்புவாரா அல்லது விரும்ப மாட்டாரா என்று பார்க்கப்படுகிறது. அப்படி பிரம்மாபாபாவிற்கு எது பிரியமானது? அவருக்கு எந்தப் பரிசு பிடித்தமானதாக இருக்கும்? தந்தையின் இதயத்தின் விருப்பமான பரிசு யாதெனில், காரியங்கள் செய்து கொண்டே போகும்பொழுதும், வரும்பொழுதும் ஃபரிஷ்தா சொரூபமாக இருப்பது. அப்படி ஃபரிஷ்தாவிற்குச் சமமாக ஆகி விடுங்கள், ஃபரிஷ்தா ரூபத்தில் எந்தவொரு தடையும் உங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாது. உங்களுடைய எண்ணம், உள்உணர்வு, பார்வை அனைத்தும் டபுள் லைட் ஆகி விடும். அப்படி பரிசு கொடுப்பதற்கு தயாராக இருக்கிறீர்களா? (ஆமாம்). நீங்கள் கூறுவது ஒலிநாடாவிலும் பதிந்து கொண்டிருக்கிறது என்றும் தெரிந்து கொள்ளுங்கள். நல்ல விஷயம் தான். பொன்னுலகத்தைக் கொண்டு வருவதற்காக ஃபரிஷ்தா ஆவீர்கள் என்றால், எப்படி வைரம் மின்னுகிறதோ அதே போல் உங்களுடைய ஃபரிஷ்தா ரூபமும் மின்னும். இந்தப் பயிற்சியை மிக நல்ல முறையில் செய்து கொண்டே இருங்கள்.

அமிர்தவேளை எழுந்தவுடனேயே நினைவில் கொண்டு வாருங்கள் நான் யார்? நான் ஃபரிஷ்தா ஆவேன். நினைக்கவும் செய்கிறீர்கள். மேலும் விரும்பவும் செய்கிறீர்கள், இருந்தும் எப்பொழுது தன்னுடைய ரிசல்ட்டைப் பார்க்கிறீர்கள் என்றால், எழுதியும் கொடுக்கிறீர்கள் என்றால் எவ்வளவு விரும்புகிறோமோ அந்த அளவு இல்லை என்றே பெரும்பான்மையோர் கூறுகிறீர்கள். 50-சதவிகிதம் ஆனது, 60-சதவிகிதம் ஆனது என்று இருக்கிறது, அப்படியானால் வைர விழா வருடத்திலும் சதவிகிதத்தில் இருக்குமா அல்லது முழுமையாக

இருக்குமா? என்னவாக இருக்கும்? இரட்டை வெளிநாட்டினர் கூறுங்கள் -சதவிகிதத்தில் இருக்குமா? ஆம் அல்லது இல்லை என்று கூறுங்கள். கொஞ்சம், கொஞ்சம் சலுகை கொடுக்க வேண்டுமா? சக்திகளிடம் சதவிகிதம் இருக்குமா? ஆம் என்று ஊக்கத்தோடு சொல்லாமல், யோசித்து சொல்கிறார்கள். இரட்டை வெளிநாட்டினர் அல்லது பாரதத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவேளை சதவிகிதம் இல்லாமல் முழுமையாக தேர்ச்சி அடைந்து விட்டார்கள் என்றால் பிரம்மாபாபா என்ன செய்வார் என்று தெரியுமா? சபாஷ் என்று பாராட்டுவார். சபாஷ் என்று மட்டும் பாராட்டுவாரா வேறு என்ன செய்வார்? தினசரி அமிர்தவேளையில் உங்களை அவருடைய கைகளுக்குள் அடக்கி விடுவார். பிரம்மாபாபாவின் கரங்களுக்குள் அதீந்திரிய சுகம் என்ற உஞ்சலில் ஆடிக் கொண்டிருக்கிறோம் என்ற உணர்வு உங்களுக்கு ஏற்படும். பெரிய பெரிய அரவணைப்பு கிடைக்கும். பிரம்மாபாபாவிற்கு குழந்தைகள் மேல் மிகுந்த அன்பு இருக்கிறது இல்லையா? எனவே அமிர்தவேளையில் அரவணைப்பு கிடைக்கும். மேலும் முழு நாளும் என்ன கிடைக்கும்? எப்படி எப்பொழுது புயல் வந்ததோ தண்ணீர் அதிகரித்தது. பின்பு பாம்பு பாதுகாப்பு குடைநிழலாக ஆனது என்று படங்களில் காண்பிக்கிறார்கள் இல்லையா? அவர்களோ ஸ்ரீகிருஷ்ணருக்காக ஸ்தூல விஷயத்தை காண்பித்திருக்கிறார்கள் ஆனால் உண்மையில் இது ஆத்மீக விஷயமாகும். அப்படி யார் ஃபரிஷ்தா ஆவாரோ அவர் எதிரில் ஒருவேளை ஏதாவது சூழ்நிலை வந்தது அல்லது ஏதாவது தடை வந்தது என்றால் தந்தை அவரே உங்களுடைய குடை நிழலாக ஆகி விடுவார். செய்து பாருங்கள், ஏனென்றால் பாப்தாதா வெறும் வாயளவில் அந்த மாதிரி எதையும் கூறுவதில்லை. நல்லது.

எந்தக் குழந்தைகளுக்கு வைர விழாவோ அவர்கள் கையை உயர்த்துங்கள். வைர விழா கொண்டாடுபவர்களுடன் பாப்தாதா பேசுகிறார். நீங்கள் 14-வருடங்கள் யோக தபஸ்யா செய்தீர்கள் எவ்வளவு தடைகள் வந்தன ஆனால் உங்களுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்பட்டதா? அப்படியானால் பாப்தாதா (பாதுகாப்பு) குடைநிழலாக ஆனார் இல்லையா? எவ்வளவு பெரிய பெரிய விஷயங்கள் நடந்தன. முழு உலகம், ஊர் தலைவர், அரசியல் தலைவர்கள், குருமார்கள் அனைவரும் எதிரியாகி இருந்தார்கள். ஒரே ஒரு பிரம்மாகுமாரிகள்

உறுதியாக இருந்தார்கள். நடைமுறையில் மிக ஏழ்மையான வாழ்க்கையையும் பார்த்தீர்கள். தபஸ்யாவின் காலத்தில் விதவிதமான தடையையும் பார்த்தீர்கள். துப்பாக்கியும் எதிரில் வந்தது என்றால், வாளும் வந்தது, அனைத்தும் வந்தன ஆனால் குடைநிழல் இருந்தது இல்லையா? ஏதாவது நஷ்டம் ஏற்பட்டதா? எப்பொழுது பாகிஸ்தான் உருவானதோ, அப்பொழுது ஏற்பட்ட சண்டையில் மக்கள் பயந்து அனைத்தையும் விட்டு விட்டு ஓடி விட்டார்கள். மேலும் உங்களுடைய டென்னிஸ் விளையாட்டு மைதானம் சாமான்களால் நிரம்பிவிட்டது. ஏனென்றால் எந்தப் பொருள் நல்லதாக இருந்ததோ அதை எப்படி விடுவது, அதன் மேல் அன்பு இருக்கும் இல்லையா? எனவே எந்த சிந்தி மனிதர்கள் யார் அந்த நேரம் எதிர்ப்பு தெரிவிப்பவர்களாக இருந்தார்களோ, தீய வார்த்தைகளால் திட்டுபவர்களாக இருந்தார்களோ அவர்கள் சாமானையும் கொடுத்தார்கள். எது மிக மிக நல்ல பொருட்களாக இருந்ததோ அவற்றை கையெடுத்து கும்பிட்டு நீங்கள் இதை உபயோகப் படுத்துங்கள் என்று கொடுத்துச் சென்றார்கள். அப்படி உலகத்தினருக்காக அது குழப்பமாக இருந்தது மற்றும் பிரம்மா குமாரிகளுக்காக 5-ரூபாய்க்கு மாட்டு வண்டி நிரம்பிய காய் கறிகள் வந்து சேர்ந்தன. ஐந்தே ரூபாயில் காய்கறிகள். நீங்கள் எவ்வளவு மகிழ்ச்சியாக சாப்பிட்டீர்கள். அப்படி உலகத்தினர் பயந்தார்கள் மற்றும் நீங்கள் நடனமாடினீர்கள். அப்படி பிரம்மாபாபா மற்றும் தாத்தா (சிவபாபா) இருவருமே குடைநிழலாக எவ்வளவு பாதுகாப்புடன் ஸ்தாபனையின் காரியம் செய்தார்கள் என்று நடைமுறையில் பார்த்தீர்கள். அப்படி இவர்களுக்கு அனுபவம் இருக்கிறது என்றால் நீங்கள் அனுபவம் செய்ய முடியாதா? உங்களில் முதலில் யார் விரும்புகிறாரோ, எவ்வளவு விரும்புகிறாரோ இந்த வைர விழா ஆண்டில் குடைநிழலை மற்றும் பிரம்மாபாபாவின் அன்பை நடைமுறையில் அனுபவம் செய்ய முடியும். அப்படி இந்த வருடத்திற்கு வரதானம் அதாவது சகஜ பிராப்தி. அதிகமாக முயற்சி செய்ய வேண்டியதாக இருக்காது. முயற்சி செய்வதில் களைப்படைந்து விடுகிறீர்கள் இல்லையா? எப்பொழுது யாராவது முயற்சி செய்து களைப்படைந்து விடுகிறாரோ அந்த நேரம் பாப்தாதா அவருடைய முகத்தைப் பார்க்கும் பொழுது இரக்கமும் வருகிறது. எனவே இப்பொழுது என்ன செய்வீர்கள்? என்ன ஆவீர்கள்? ஃபரிஷ்தா. ஃபரிஷ்தா ரூபத்தில் போவது, வருவது இது தான் வைரம் ஆவது. ஏனென்றால் எது

மிக விலை உயர்ந்த, மதிப்புள்ள கரையற்ற வைரமாக இருக்குமோ அதனுடைய அடையாளம் என்னவாக இருக்கும்? அதை லைட்டின் எதிரில் வைத்தீர்கள் என்றால் மின்னும், மேலும் எப்பொழுது மின்னுகிறதோ அதிலிருந்து கிரணங்கள் வெளிப்படும். அதில் வித விதமான வர்ணங்கள் தென்படும். எனவே எப்பொழுது நீங்கள் உண்மையான வைரமாக ஆவீரகளோ, ஃபரிஷ்தா ஆகி விடுவீர்கள் என்றால் உங்களுடைய ஃடரிஷ்தா சொரூபத்திலிருந்து இந்த அஷ்ட சக்திகள் தென்படும். எப்படி அந்த வர்ணங்கள், கிரணங்களின் ரூபத்தில் தென்படுகிறதோ. அதே போல் நீங்கள் வைரம் அதாவது ஃபரிஷ்தா ரூபம் ஆனீர்கள் என்றால் போகும்பொழுதும், வரும்பொழுதும் உங்கள் மூலமாக அஷ்ட சக்திகளின் கிரணங்கள் அனுபவம் ஆகும். சிலருக்கு, உங்களிடமிருந்து சகித்துக் கொள்ளும் சக்தியின் ஃபீலிங் வரும், சிலருக்கு, உங்களிடமிருந்து நிர்ணயம் செய்யும் சக்தியின் ஃபீலிங் வரும், அப்படி ஒவ்வொருவரிடமிருந்தும் வேறு வேறு சக்திகளின் ஃபீலிங் வரும். நீங்கள் எவ்வளவு அதிகமாக பயிற்சி செய்வீர்களோ. உதாரணமாக நாளையிலிருந்து புது வருடமும் தொடங்குகிறது மற்றும் வைர விழா ஆண்டும் தொடங்குகிறது என்றால் நாளையிலிருந்து அதாவது முதல் மாதம் ஜனவரியிலிருந்து ஒரு மாதத்தில் நீங்கள் ஃபரிஷ்தா ரூபத்தை பயிற்சி செய்வீர்கள் மற்றும் இரண்டாவது மாதம் வரும் அதில் உங்களுடைய பயிற்சி இன்னும் அதிகரிக்கும், மூன்றாவது மாதத்தில் இன்னும் அதிகரிக்கும். மேலும் அதிகரித்துக் கொண்டே இருக்கும் இல்லையா, அந்தளவு உங்கள் மூலமாக மற்றவர்களுக்கு உணர்வு ஏற்படும். புரிந்ததா? அப்படி இது தான் பிரம்மாபாபாவிற்கு கொடுக்கும் பரிசு. அனைவரும் கொடுப்பீர்களா அல்லது சிலர் தான் கொடுப்பீர்களா?

நல்லது. மதுபன்னைச் சேர்ந்தவர்கள் பரிசைக் கொடுப்பீர்களா? மதுபன்னைச் சேர்ந்தவர்களோ ஆம் என்று சொல்வதில் மிகவும் புத்திசாலிகள்! (ஞானசரோவரிலும் முரளி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்). ஞானசரோவரைச் சேர்ந்தவர்கள் ஃபரிஷ்தா ஆகி விடுவார்களா? மேலும் யார் மொழிபெயர்ப்பு செய்து கொண்டிருக்கிறார்களோ, மைக் சேவை செய்பவர்கள். லைட் சேவை செய்பவர்கள் அனைவருக்கும் டபுள் லைட் ஃபரிஷ்தா ஆக வேண்டும். கடினமாக அனுபவம் ஆகவில்லையே? 63-ஜென்மங்கள் இந்த உடல்

மேல் அன்பு இருக்கிறது என்றால் கடினமாக இருக்காதா? யார் உறுதியான நிச்சயம் வைக்கிறார்களோ அவர்களுக்கு நிச்சயத்தின் வெற்றியை ஒருபொழுதும் தடுக்க முடியாது. 5-தத்துவங்களும் அல்லது மனித ஆத்மாக்கள் எவ்வளவு தான் எதிர்ப்பு செய்தாலும் அவர்கள் எதிர்ப்பு செய்வார்கள். மேலும் நீங்கள் எதிர்கொள்ளும் சக்தியினால் அந்த எதிர்ப்பை உள்ளடக்கி விடுவீர்கள். ஏனென்றால், உறுதியான நிச்சயம் உள்ளவர்கள். இந்த 60 வருடங்கள் எது ஸ்தாபனைக்காக இருந்ததோ இதில் கூட தொடக்கத்திலிருந்து அதிசயக்காரியம் பிரம்மாபாபா மற்றும் நெருக்கமான குழந்தைகளுடையதாக இருந்தது. ஒருபொழுதும் நிச்சயத்தில் நிலை குலைந்து போகவில்லை. வெற்றி நிச்சயிக்கப்பட்டது. இது தான் பிரம்மாபாபாவின் வார்த்தைகளாக எப்பொழுதும் இருந்தது.

அப்படி இன்று விசேஷமாக பிரம்மாபாபா அனைத்து குழந்தைகளுக்கும் விசேஷமாக வாழ்த்துக்கள் மற்றும் மிகுந்த அன்பு கொடுத்தார். எத்தனை பேர் இருந்தாலும் அது 4-லட்சமானாலும் அல்லது 14-லட்சமானாலும், பிரம்மாபாபாவின் புஜங்கள் இவ்வளவு பெரியதாக இருக்கிறது. அந்த 14-லட்சத்தையும் ஒன்றாக புஜங்களில் அடக்கிக் கொள்ள முடியும். எனவே பரமாத்மாவிற்கு பக்தி மார்க்கத்தில் அனைத்தும் நிரம்பியிருப்பதாக விராட ரூபம் காண்பிக்கிறார்கள். அப்படி அனைவரும் பிரம்மாபாபாவின் புஜங்களில் அடங்கியிருக்கிறீர்கள்! என்ன ஆனாலும் சரி, சிறு குழந்தை பொதுவாக என்ன செய்கிறது? ஒருவேளை யாராவது அதை ஏதாவது கூறுகிறார்கள் அல்லது ஏதாவது நடக்கிறது என்றால் அது தாய் தந்தையின் கைகளுக்குள் சென்று அடங்கி விடும். அந்த மாதிரி ஆகும் இல்லையா? எனவே நீங்களும் அந்த மாதிரி செய்யுங்கள். குழந்தைகள் தான் இல்லையா அல்லது பெரியவர்கள் ஆகி விட்டீர்களா? 100-வயது உள்ளவரும் தந்தையின் எதிரிலோ சிறு குழந்தை தான். எனவே உங்களுக்கும் ஏதாவது நடந்தது என்றால் பிரம்மாபாபாவின் கைகளுக்குள் வந்து விடுங்கள் அவ்வளவு தான். இது சுலபம் தான் இல்லையா? நல்லது.

பின்பு டைமன்ட் ஜூப்ளி பற்றிய விஷயங்களைக் கூறினார். ... ... அதன் பின், பாப்தாதா அனைவரது சார்ட்'டையும் சோதித்ததில் மொத்தம் 50-சதவீதக் குழந்தைகள் மற்றவர்களைப் பார்த்து அலட்சியமாகி

விடுகின்றனர். மிக நல்ல நல்ல குழந்தைகள் கூட அலட்சியத்தில் அதிகம் வருகின்றனர். ... ... இந்த அலட்சியத்தின் பச்சாதாபம் மிக மிக மிகப் பெரியது! ... ... பச்சாதபத்தின் நேரம் மிகக் கஷ்டமாக இருக்கும் என்பதைப் பார்த்து பாப்தாதாவிற்கு இரக்கம் வருகிறது. எனவே அலட்சியம் மற்றும் பிறரைப் பார்ப்பது -இவற்றிற்கு இந்த வருஷம் மனதிலிருந்து விடையளித்து விடுங்கள். ... ...

நல்லது, நாலா புறம் இருந்தும் சேவையின் செய்திகள் நிறைய நன்றாக வந்து கொண்டிருக்கின்றன. பாரதத்தில் அவர்களது நிகழ்ச்சி, வெளிநாட்டில் அவர்களது நிகழ்ச்சி எனில் சேவையில் தன்னை பிஸி ஆக வைத்துள்ளீர்கள் மற்றும் சதா இவ்வாறு இருக்க வேண்டும். சேவை தான் பாதுகாப்பிற்கான சாதனம் ஆகும். எந்தளவு சேவையில் பிஸியோ அந்தளவு பாதுகாப்பாக இருப்பீர்கள். புரிந்ததா?

பின்பு வெளிநாட்டு சிந்தி சகோதர-சகோதரிகளின் குழுவை அழைத்து, முன்னால் அமர வைத்து ஆன்மீக உரையாடல் செய்தார். பின்பு பாரதவாசிகள், இளைஞர் குழுவுடன் ஆன்மீக உரையாடல் செய்தார்.

நாலாபுறங்களில் மின்னிக் கொண்டிருக்கும் உண்மையான வைரங்களுக்கு, எப்பொழுதும் நிச்சயம் மற்றும் உறுதியான எண்ணம் மூலமாக தன்னை உண்மையான வைரமாக்கி மற்றவர்களை ஆக்கக்கூடிய, எப்பொழுதும் பாப்தாதாவிற்குச் சமமாக டபுள் லைட் ஃபரிஷ்தா சொரூபத்தில் நிலைத்திருக்கக்கூடிய உயர்ந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தந்தை மற்றும் சேவை இரண்டில் பிஸியாக இருக்கும் மாயாவை வென்றவரிலிருந்து உலகத்தின் இராஜ்ய பாக்கியத்தை வென்றவர்களுக்கு அந்த மாதிரி சங்கமயுகத்து வைரங்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

பாருங்கள், இது இங்குள்ள முறை 12-மணிக்கு மணி அடிக்கும் எனில் பாப்தாதாவுக்கு குழந்தைகளின் விஷயங்களை வைக்கத் தான் வேண்டியுள்ளது. 11-மணிக்கு மணி அடித்து விடலாமா அல்லது 12-மணிக்கா? பிராமணர்கள் கொண்டாடவில்லையேல் வேறு யார் கொண்டாடுவார்கள். (டைமன்ட் ஜூப்ளியை முன்னிட்டு குழந்தைகள் பாட்டுப் பாடினார்கள், புத்தாண்டு வாழ்த்துக்களை கூறினர், வாழ்த்து

அட்டை முதலானவற்றைப் பாப்தாதாவிற்கு அளித்தனர், அதன் பின் புதிய வருடம் சுபமாக ஆரம்பமானதும் பாப்தாதா அனைவருக்கும் வாழ்த்துக்களை அளித்தார்!). இன்றைய நாளுக்காக இரட்டை வாழ்த்துக்கள் -புத்தாண்டிற்கு மற்றும் டைமன்ட் ஜூப்ளிக்கு! எனவே இந்த வருஷம் சதா தனது இரண்டு சொரூபங்கள் -ஒன்று டபுள் லைட் ஃபரிஷ்தா மற்றும் இன்னொன்று உண்மையான வைரம், குறையற்ற வைரம், விலைமதிக்க முடியாத வைரம். ஆகவே வைரமாகி அநேக ஆத்மாக்களை வைரமாக்க வேண்டும் -இதுவே இந்த வருஷத்தின் லக்ஷியம்! மேலும் பாப்தாதாவிற்குத் தெரியும் பிராமணக் குழந்தைகள் லக்ஷியம் மற்றும் லக்ஷணம் இரண்டையும் சேர்த்தே காட்டுவார்கள் என்பது. எனில் இந்த டைமன்ட் ஜூப்ளி அநேக ஆத்மாக்கள் தந்தையின் அருகில் வரக்கூடிய வருஷமாகும். மேலும் கூடவே இந்த வருஷம் சகஜமாக தந்தை உடன் இருப்பதால் சகஜமான பிராப்தி பெறும் வருஷமாகும். எனவே நாலா புறமும் உள்ள குழந்தைகள் இந்த சகஜ வரதானத்தினால் முழுமையாக பயனடைவார்கள் மற்றும் பிறருக்கும் அளிப்பார்கள். டைமன்ட் குட் நைட் மற்றும் குட் மார்னிங் இரண்டுமே!

நாலா புறமும் உள்ள குழந்தைகளுடைய மிக்க குஷி மற்றும் ஊக்கம் உற்சாகத்தின் வாழ்த்து அட்டைகள் கிடைத்தன, கடிதங்களும் கிடைத்தன மற்றும் அனைவருக்கும் பிரதிபலனாக இரட்டை அன்பு மற்றும் வாழ்த்துக்கள்!

(ஜனவரி 4- அன்று தல்ஹடி'யில் மிகப் பெரிய ஹாலுக்கான அடிக்கல் இடப்போகின்றோம் என்ற இந்த செய்தி பாப்தாதாவிடம் கூறப்பட்டது!).

வரதானம்: தன்னுடைய சகயோகத்தின் சக்தி மூலமாக பலமற்ற ஆத்மாக்களை சக்திசாலியாக ஆக்கக்கூடிய வரதானி மூர்த்தி ஆகுக!

வரதானி மூர்த்தி குழந்தைகள் தன்னால் சேமிக்கப்பட்ட பொக்கிஷங்கள் மூலமாக, தன்னுடைய குணங்கள் மூலமாக, தன்னுடைய ஞான பொக்கிஷம் மூலமாக, வரமளிக்கும் திருஷ்டி மூலமாக, தைரியம் உற்சாகத்தின் சக்தி மற்றும் குஷியின் பொக்கிஷத்தினால், தன்னுடைய சகயோகத்தின் சக்தி மூலமாக கொடுத்து, பலமற்ற மற்றும் பலஹீனமான ஆத்மாக்களை சக்திசாலி ஆக்கி விடுகிறார்கள்.

அவர்களுடைய ஒவ்வொரு எண்ணம் ஒவ்வொரு ஆத்மாவிற்காக நன்மை பயப்பதாக இருக்கும்.

சுலோகன்: ஒரு நொடியில் வியக்கத்திலிருந்து (உடலிலிருந்து) அவ்யக்தம் (உடலற்ற நிலை) ஆவதற்கான முயற்சி செய்தீர்கள் என்றால் வரதானி மூர்த்தி ஆகி விடுவீர்கள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂